வரு.74 இல. 04 ★

www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI

2022 ஜனவரி 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை

January 23 Sunday, 2022

32 பக்கங்கள் 40/-




06 சு.கவினர் தனியாகச் செல்ல முடியும்!





11 போதிய படகுச்சேவையின்றி தவிக்கும் நெடுந்தீவு மக்கள்

18 சமந்தாவின் பாடலின் 2ஆம் பாகம் வருமா?



24 ஓய்வு முடிவை அறிவித்தார் சானியா



## தொலைநோக்குடன் சிந்தித்து செயற்படும் தலைவர் ஜனாதிபதி



பொறுமையுடனும் நன்கு திட்டமிடப் பட்ட வகையிலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களின் பிரதிபலன்கள் 04

பௌத்த ஆலோசனை சபையின் மஹா சங்கத்தினர் பாராட்டு

## யாழ்.சர்வதேச வர்த்தக சந்தைக்கு பெரு வரவேற்பு



வடக்கு ஆளுநர் ஜீவன் ஆரம்பித்து வைப்பு

2022 ஆம் ஆண்டுக்கான 12 ஆவது யாழ்.சர்வதேச வர்த்தகச் சந்தை பெரு வரவேற்பை பெற்றுள் ளதாக தெரிவிக்கப்படுகிறது. வர்த்தக மன்றம் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சு, 04

## கொழும்பு றோயலுக்கு பிரதமரினால் புதிய பஸ்



பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் (21) அலரி மாளிகை யில் வைத்து கொழும்பு றோயல் கல்லூரிக்கு 04

கீர்த்தி மந்திரிரத்ன என்பவரினால் அன்பளிப்பு

### சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பக வருடாந்த அறிக்கை;

# இலங்கையின் மனித உரிமை நிலவரத்தை மிகைப்படுத்தி எதிர்மறையான சித்தரிப்பு



மனித உரிமைகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எடுத்துவரும் முன்னேற்றகரமான செயற்பாடுகள் கவனத்திலெடுக்கப்படவில்லை என அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவிப்பு

## இலங்கை வெளிவிவகார அமைச்சு வருத்தத்துடன் அறிக்கை

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் இலங்கைப் பிரிவான 'உலக அறிக்கை 2022' நாட்டின் தற்போதைய மனித உரிமைகள் நிலைமையை மிகைப்படுத்தப்பட்ட மற்றும் தேவையற்ற எதிர்மறையான வகையில் சித்தரிப்பதாக வெளிநாட்டு அமைச்சு வருத்தத்துடன் தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சு சர்வதேச மனித உரிமை கண்காணிப்பகத்தின் வருடாந்த அறிக்கை குறித்து மேலும் தெரிவித்துள்ளதாவது.

மனித உரிமைகள் தொடர்பான விடயங்களில் மனித உரிமைகள் கண்காணிப்பகம் போன்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் உட்பட சர்வதேச சமூகத்துடன் ஆக்கபூர்வமாக ஈடுபடுவதற்கான கொள்கையை இலங்கை பின்பற்றுகின்றது. எவ்வாறாயினும், குறிப்பாக சவாலான உலகளாவிய பொருளாதார மற்றும் சமூக சூழலின் போது பரபரப்பான மற்றும் பக்கச் சார்பான அறிக்கையிடல் உள்நாட்டு முரண்பாடுகளை தீவிரப்படுத்தி மோசமான நிலைமையைத் தோற்றுவிக்கின்றது. பொறுப்பான, சமநிலையான மற்றும் 04

### எங்கள் கருத்து...

## ஏட்டிக்குப் போட்டியாக அரசியல் நடத்த உகந்த காலம் இதுவல்ல

ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் ஏட்டிக்குப் போட்டியாக அரசியல் நடத்துகின்ற காலகட்டம் இதுவல்ல என கடந்த வாரம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்திருந்தார்.

அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்த கருத்து சிந்திக்க வேண்டிய ஒரு விடயம். அவர் எதிர்க்கட்சியினரை மட்டும் கை நீட்டி குற்றம் சாட்டவில்லை, தான் சார்ந்திருக்கும் ஆளும் தரப்பினரையும் அந்த தரப்பில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைமைகளையும் சேர்த்தே தனது கருத்தை தெரிவித்திருக்கிறார்.

நாடு கொரோனா வைரஸ் தாக்கத்திற்கு கடந்த இரண்டு வருடங்களாக முகங்கொடுத்து வருகின்றது.அதன் காரணமாக நாடு பொருளாதார ரீதியாகப் பெரும் பாதிப்பிற்குள்ளாகி உள்ளது.

நாட்டு மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை கொண்டு நடத்துவதற்கே கஷ்டப்படுகிற ஒரு காலகட்டமே காணப்படுகிறது.அதுவே யதார்த்தமாகும்.இதில் மறைப்பதற்கு எதுவுமில்லை.

ஒரு இக்கட்டான நிலையில் நாடும், நாட்டு மக்களும் இருக்கையில் அரசியல்வாதிகள் சிலர் தமது சுயநலப் அரசியல் செயற்பாடுகளை எவ்விதக் கூச்சமுமின்றி 04

### அரச ஊழியர்களுக்கு வழங்கும் அதே சலுகையில்

## அரசு சார் நிறுவனங்களின் ஊழியர்களுக்கும் ரூ.5000

அரசு தீர்மானம்;ஜன.01 முதல் வழங்கப்படும்

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்ட 5,000 ரூபா மாதாந்த கொடுப்பனவை அரச சார் நிறுவன ஊழியர்களுக்கும் வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குறிப்பாக கூட்டுத்தாபனங்கள், அதிகார சபைகள், அரச நிறுவன ஊழியர்கள் உள்ளிட்ட அரச சார்பு ஊழியர்களுக்கும் இக் கொடுப்பனவை வழங்க தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஜனவரி 01 ஆம் திகதி முதல் இத்தீர்மானத்தை 04

## மாகாண சபைத் தேர்தல் இந்த வருடம் நடைபெறும்

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா நம்பிக்கை தெரிவிப்பு



மாகாண சபைத் தேர்தலை விரைவில் நடத்தி ஜனநாயக உரிமைகளை வெளிப்படுத்துவதற்கான தளம் மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உறுதியளித்துள்ளார். இந்த ஆண்டு மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். 04

### சுயநல அரசியல் இல்லாது செயற்படும்

## சித்தார்த்தன் எம்.பி ஏனைய எம்.பி மாருக்கு முன்னுதாரணம்

கலாநிதி பாபுசர்மா குருக்கள் பாராட்டு

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், அரசாங்கம் நடைமுறைப்படுத்திவரும் கொரோனா தடுப்பூசி 04





## அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகளுக்கும் ஆவணம்

அனுப்ப தமிழ் கட்சிகள் தீர்மானம்

தமிழ் கட்சிகளின் தலைவர்கள் ஒப்பமிட்டு இந்தியப் பிரதமருக்கு அனுப்பி வைத்த ஆவணம் அமெரிக்கா, மேற்கு நாடுகள் உள்ளிட்ட அனைத்து நாடுகளின் தூதரகங்களிடமும் கையளிக்கப்படவுள்ளது என்று தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) பேச்சாளர் கு. சுரேந்திரன் தெரிவித்தார். 04



## G.C.E.(O/L) பரீட்சை விண்ணப்ப திகதி பெப்.03 வரை நீடிப்பு

கல்விப் பொதுதராதர சாதாரணதரப் பரீட்சைக்கான விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். அதன்படி, விண்ணப்பங்களுக்கான இறுதி திகதி இம்மாதம் 20ஆம் திகதி முதல் 04

### விக்கல் வீராச்சாமி



தலைவர் என்ன சோகமாக இருக்–கிறார், அவருக்கு கொரோனா எண்டு கேள்விப்பட்டேன், அதுதான் கவலையா இருக்கிறாரோ....

நீங்க வேற, அவர் தனக்கு கொரோனா எண்டு பேஸ்புக்ல போட்டதுக்கு 1243 லைக்குகளும், 656 வாழ்த்தும் வந்திருக்–காம், அதுதான்...!!!

TRIPLE BLASTER இப்போது புதுப்பொழிவுடன்!

Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு

எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS

Anytime Data 1.5GB

மாதத்திற்கு ரூ.498/- (மேலதிக வரிகள் இல்லை)

செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்

*உள்நாட்டு அழைப்புகளுக்கு மட்டுமே I நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/21/09

Dialog எதிர்காலம் இன்றே.

# உலக கலாசாரங்களுக்கு இடையிலான புத்தாக்க விருதினை பெற்ற கிஷோத் நவரெட்ணராஜா

**வ. சக்திவேல்**

டுபாய் எக்ஸ்போ 2020 இன் ஜேர்மன் பெவிலியனில் 2021, சகிப்புத்தன்மை மற்றும் உள்ளீர்ப்பு எனும் கருப்பொருளில் நடைபெற்ற சர்வதேச விருது வழங்கும் விழாவில், உலகளாவிய ரீதியில் அடிமட்ட சமூகங்களோடு (Grass root communities) செயற்படும் பத்து செயற்றிட்டங்கள், பெரும் மதிப்புடைய கலாசாரங்களுக்கு இடையிலான புதுமை (Intercultural Innovation) விருதுக்கான இறுதி வெற்றியாளர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன.




கடந்தாண்டு, 120 நாடுகளிலிருந்து 1,100 இற்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்ட நிலையில், தேர்வு செயல்முறை மிகவும் போட்டித்தன்மையுடன் இருந்ததுடன் விருது பெற்ற பத்து அமைப்புக்கள் 200,000 டொலர் நிதி மானியத்தை பகிர்ந்து கொண்டன.

குறித்த விருதுகளில் இரண்டினை ஆசியா கண்டத்தில் இருந்து இலங்கை மற்றும் இந்திய நாடுகள் பெற்றுக்கொண்டன.

இலங்கையிலிருந்து இளையோர் தலைமைத்துவத்தினை வலுப்படுத்தும் ஒன்றியம் (SYLC) மற்றும் ட்றீம்ஸ் பேஸ் அக்கடமியினர் பெரு மதிப்புடைய, கலாசாரங்களுக்கு இடையிலான புதுமை விருதினை சர்வதேச அரங்கில் தன்னகத்தே பெற்று எமது மண்ணிற்கு பெருமை ஈட்டித் தந்துள்ளனர்.

இளையோர் தலைமைத்துவத்தினை வலுப்படுத்தும் ஒன்றியம், ட்றீம்ஸ் பேஸ் அக்கடமியின் இணை நிறுவுனர் கிஷோத் நவரெட்ணராஜா இவ்விருதினை அமைப்பின் சார்பாக பெற்றுக்கொண்டார். அவரிடம் இது பற்றி வினவியபோது "இலங்கையில் அடிமட்ட சமூகங்களுக்கு இடையே காணப்படும் முரண்பாட்டு பிரச்சினைகளை தீர்ப்பதற்கான இந்த பொறிமுறை, தொழினுட்பத்தின் உதவியுடன் அடிமட்ட சமூகங்களுக்கும் உரிய தரப்பினருக்கும் இடையிலான இடைவெளியினை நிவர்த்தி செய்து அப்பிரச்சினை தீர்வை நோக்கி பொறிமுறை தொழிற்படுவதன் மூலம் வன்முறையான முரண்பாட்டினை தவிர்க்க முடியும்" எனத் தெரிவித்தார்.

விருதுகள் வழங்கும் விழாவில் நாகரிகங்களுக்கான ஐக்கிய நாடுகளின் கூட்டணியின் உயர் பிரதிநிதியும் ஸ்பெயினின் முன்னாள் வெளியுறவு அமைச்சருமான எச்.இ.மிகுவல் ஏஞ்சல் மொரடினோஸ் மற்றும் பி.எம்.டப்ளியூ குழுமத்தில் மனித வளங்களுக்குப் பொறுப்பான பி.எம்.டப்ளியூ குரூப் இன் நிர்வாகக் குழு உறுப்பினர் திருமதி இகா ஹோர்ஸ்ட்மேயர், இந்த விழாவின் சர்வதேச ஒத்துழைப்புக்கான மாநில அமைச்சர், எக்ஸ்போ 2020 துபாய் பீரோவின் நிர்வாக இயக்குநர் மற்றும் துபாய் எக்ஸ்போ 2020 இன் உயர் குழுவின் உறுப்பினரான ரீம் இப்ராஹிம் அல் ஹாஷிமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

எமது நாட்டின் அடிமட்ட சமூகங்களுக்கு இடையே காணப்படும் முரண்பாட்டு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக இளைய தலைமுறையினர் இச்செயல் திட்டத்தில் கலந்து கொள்ள விரும்பினால் www.sylcsl.org என்னும் இணைய தளத்திற்கு செல்வதன் மூலம் இணைந்து கொள்ளலாம்.



கொழும்பு சிற்றி சென்டர் மண்டபத்தில் கடந்த 21ஆம் திகதியன்று மாலை நடைபெற்ற இசை சங்கமம் நிகழ்வில் விழா. நாயகன் பொத்துவில் அஸ்மினுக்கு சமூகஜோதி ரபீக் பொன்னாடை போர்த்தி மகிழ்வையும் நவமணி பிரதம ஆசிரியர் என்.எம். அமீன், பல்கலைவேந்தன் மொழிவாணன் மனிதநேயன் இர்ஷாத் ஏ.காதர் ஆகியோர் உடனிருப்பதையும் படத்தில் காணலாம்.

# அவுஸ்திரேலியாவில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற இலங்கை மாணவன்

**ருசெயிக் பாரூக்**



அவுஸ்திரேலியாவில் விக்டோரியா வெரிபீ மேல்நிலைக் கல்லூரியில் கல்வி கற்கும் இலங்கை மாணவன் அஹ்மத் இஹ்சான் விக்டோரியன் கல்விச் சான்றிதழ் பரீட்சையில் 100 புள்ளிகளில் 99.35 அதிகூடிய பெறுபேறுகளைப் பெற்றுள்ளார். அஹ்மத் இஷான் சவுதி அரேபியா ஜெட்டாவில் இலங்கை சர்வதேச பாடசாலையில் தரம் 1 முதல் 3 வரை கற்றவர். அவுஸ்திரேலியா கார்வத்தா கல்லூரியிலும் தரம் 4 இருந்து நோபல் பார்க் கேம்பிரிட்ஜ் ஆரம்பப் கல்லூரியிலும் தரம் 5 முதல் 6 வரை இறுதியாக தரம் 7 12 வரை வெர்ரிபீ மேல்நிலைக் கல்லூரியிலும் கற்றவர்.

கல்வி கற்றார். இவர் மெல்போர்னில் உள்ள ஹேறிஸ் டெக்னாலோஜி குரூப் லிமிடெட்டின் நிதித்துறையின் தலைவர் மொஹிதீன் இம்ரான் லாபிரின் மகன் என்பது குறிப்பிடத்தக்கது.





மர்ஹூம் கலீபதுல் குலபா மௌலவி அப்துல் ஹமீத் பஹ்ஜியின் பேரில் கதமுல் குர்ஆன், ஹழரா மஜ்லிஸ் கடந்த 21ஆம் திகதியன்று தர்ஹா நகர் ஸாவியா வீதி இப்றாஹிமிய்யா ஸாவியாவில் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் ரபீக் பஹ்ஜி தலைமையில் நடைபெற்றது. உலமாக்கள், முகத்தமீன்கள், சீனன்கோட்டை ஹழரா ஜெமாஅத் ஆசிகுர் ரஸூல் குழுவினர், மற்றும் ஜமாஅத்தார்களும் கலந்து கொண்டனர். கலீபதுஷ் ஷாதுலி மௌலவி அல்ஹாஜ் ரபீக் பஹ்ஜி உரை நிகழ்த்துவதையும் பங்குகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். படங்கள் : பேருவளை பீ.எம். முக்தார்

# இலங்கையின் முதலாவது அரபு மொழி பேராசிரியராக கலாநிதி எம்.எஸ்.எம். சலீம்

**நூருல்ஹுதா உமர்**



பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அரபு மொழி மற்றும் இஸ்லாமிய நாகரீகத்துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எம்.எஸ்.எம். சலீம் அரபு மொழி பேராசிரியராகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளார். இப்பதவியுயர்வு அரபு மொழியில் இவர்களுக்குள்ள புலமைத்துவத்துக்குக் கிடைத்த கௌரவமாக கொள்ளப்படுகின்றது.

இலங்கையின் கிழக்கு மாகாணம் அம்பாறை மாவட்டத்தின் மாவடிப்பள்ளி கிராமத்தை சேர்ந்த பேராசிரியர் எம்.எஸ்.எம். சலீம் மாவடிப்பள்ளி முஸ்லிம் கலவன் பாடசாலையில் (தற்போதய கமு/ அல் அஸ்ரப் மஹா வித்தியாலயம்) தனது கல்விப் பயணத்தை ஆரம்பித்து அங்கேயே ஆரம்பக் கல்வியை நிறைவு செய்து.

பின்னர் கல்முனை அல் ஹாமியா அரபுக் கல்லுளரியில் கற்றதன் பின்னர் இந்தியாவின் லக்னோ தாருள் உலூம் நத்வதுல் உலமா அரபுக் கல்லாசாயின் அரபு மொழி மற்றும் இலக்கிய பீடத்தில் கற்று முதலாம் நிலை அதிவிஷேட சித்தியுடன் தனது இஸ்லாமிய கற்கையை நிறைவு செய்தார்.

20 ஆம் நூற்றாண்டின் தலைசிறந்த இஸ்லாமிய அறிஞர்களுள் ஒருவரும் சீர்திருத்தவாதியுமான அல்லாமா அபுல் ஹஸன் நத்வி அவர்களின் நேரடி மாணவராக பேராசிரியர் இருந்துள்ளமை விஷேட அம்சமாகும்.

1999ஆம் ஆண்டு பேராதனை பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட பேராசிரியர் எம்.எஸ்.எம். சலீம் அவர்கள் 2002 இல் அரபு மொழியில் விஷேட இளங்கலைமானிப் பட்டத்தை பெற்றார்.

2004 ஆம் ஆண்டு அரபு மொழியில் முதுகலைமானிப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதோடு, 2012 ஆம் ஆண்டு உலகின் முன்னணிப் பல்கலைக்கழகங்களுள் ஒன்றான மலேசியாவின் மலாயாப் பல்கலைக்கழகத்தில் அரபு மொழியியலில் கலாநிதிப் பட்டத்தையும் நிறைவு செய்தார்.

பேராசிரியரின் கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வுக்கு விஷேட திறமையை வெளிப்படுத்தியதற்கான திறமை விருது பல்கலைக்கழகத்தால் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பாடுவோர் பாடலாம்': இசை நிகழ்ச்சி இன்று

கலைஸ்ரீ கலை மன்றத்தின் ஏற்பாட்டில் கவியும் கலையும் இணைந்து வழங்கும் 'பாடுவோர் பாடலாம்' புதிய பாடக, பாடகிகளுக்கான இசை நிகழ்ச்சி இன்று மாலை 05:30 மணிக்கு கொழும்பு விகாரமகாதேவி பூங்கா அருகில் உள்ள குளிரூட்டப்பட்ட புதிய நகர மண்டபத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மத விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளரும் சர்வதேச இசைக் கல்விக்கான பயிற்சி நிலையத்தின் இலங்கைத் தூதுவருமான அதிவண.பிதா அருட்கலாநிதி எஸ். சந்ரு பெர்னாண்டோ முன்னிலை கௌரவ அதிதியாகக் கலந்து கொள்கிறார்.

இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், தயான் லங்காவின் தலைவர் கேசவன் பத்மநாதன் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வதோடு, தினகரன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், வீரகேசரி பிரதம ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன், தமிழன் பிரதம ஆசிரியர் சிவராஜா, ஸ்டார் தமிழ் வானொலி தொலைக்காட்சி ஊடகவியலாளரும் ஒலிபரப்பாளருமான எஸ்.நவநீதன்







ஆகியோர் ஊடக அதிதிகளாகவும் கலந்து சிறப்பிக்கின்றனர்.

இலங்கையின் பிரபல திரையிசை, மெல்லிசைப்பாடகி எஸ்.கலாவதி கௌரவ அதிதியாகக் கலந்து கொள்ளும் இந்நிகழ்வில், இசையமைப்பாளர் கருப்பையாப் பிள்ளை பிரபாகரன், இசையமைப்பாளர் பசால் ஜின்னா, பிரபல தபேலா கலைஞர் ஹரிதாஸ் கண்ணா, பிரபல பாடகர் நவகம்புர கணேஷ், பிரபல பாடகி மொறின் ஜெனற், இசையமைப்பாளர் தவராஜா எஸ்.ரி. தேவா ஆகியோர் 'பாடுவோர் பாடலாம்' போட்டியின் நடுவர்களாகவும் கலந்து கொள்கின்றனர்.

நிகழ்வை பிரபல சிரேஷ்ட அறிவிப்பாளர் கலைநிலா உவைஸ் செரீப் மற்றும் அமுதா ஆகியோர் தொகுத்து வழங்குகின்றனர்.

கலைஞர்களான ராதா மேத்தா, கே. செல்வராஜன், ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன், மொஹமட் நசார், கலாச்சார உத்தியோகத்தகர் கிறிஸ்டி ரோஸ், பிரபல பாடகர் என் பாசில் ஆகியோர் கலை அதிதிகளாக கலந்து கொள்ளவார்கள்.

சினிமா தயாரிப்பாளர், துரைராசா சுரேஷ், கலைஞர்களான ஏ. ரவீந்திரன், பொன் பத்மநாதன், டிஸ்கோ ராஜா, பீ.எம். நந்தகுமார், தேவர் முனிவர், எஸ். சரவணா, சண்மு, பன்னீர் செல்வம், கே. ஈஸ்வரலிங்கம், சிரேஷ்ட அறிவிப்பாளர் உவைஸ் செரீப், குருசாமி ஜெய வீரமூர்த்தி, எஸ். ஆனந்தகுமார், வீ. கணேசன், பா. தங்கவேல், மா. யோகேஸ்வரன் ஆகியோர் இங்கு கௌரவிக்கப்படவுள்ளார்கள்.

# நுவரெலியா ஸ்ரீ ஓம்கார கலைமன்றத்தின் பரதநாட்டியம்















நுவரெலியா ஸ்ரீ ஓம்கார கலைமன்றத்தின் ஏற்பாட்டில் நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மண்டபத்தில் தைப்பூச நாட்டிய உற்சவத்தை முன்னிட்டு கடந்த செவ்வாயன்று மாலை நடைபெற்ற பரதநாட்டியம் நிழ்வுகளை படங்களில் காணலாம். நுண்கலைமாணி தனபாலசிங்கம் சசிகரன் வர்களின் மாணவர்களின் நடன நிகழ்விற்கு பிரதம அதிதியாக கொழும்பு மாரகம தேசிய கல்விவ நிறுவகத்தின் விரிவுரையாளர் கலாநிதி ராகினி திருகுமரன், சிறப்பு அதிதிகளாக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையின் சுவாச நோய்ப்பிரின் விசேட வைத்திய நிபுணர் சதுர வீரசிங்க, நுவரெலியா பொலிஸ் சுற்றுலாப்பிரிவு பொறுப்பதிகாரி நிஷாந்த பிரதீப்குமார ஆகியோர் கலந்துகொண்டனர். நுவரெலியோ தினகரன் நிருபர்

# சுய விருப்ப அடிப்படையில் சிசேரியன் செய்வது நல்லதல்ல

## சிசேரியனிலேயே பல தாய்மார் மரணத்தைத் தழுவுகின்றனர்



**போக்கு குறைபாடும் பதின்மவயது கருத்தரிப்பும் குறைப் பிரசவங்களுக்குக் காரணம் என்கிறார் கல்முனை வழக்கு வடக்கு ஆதார வைத்தியசாலையின் விசேட சிறுவர் வைத்திய நிபுணர் சோமசுந்தரம் நோமன் றொஷாந்த்.**

**கே: குறைமாத, குறைப் பிரசவங்கள் அதிகரிப்பதன் பின்னணி என்ன?**

பதில் : தாயின் போசாக்குக் குறைபாடும் பதின்ம வயதுக் கருத்தரிதலுமே குறைப் பிரசவங்கள் ஏற்பட பின்னணியாகின்றன. இவ்விரண்டிற்கும் தாயின் குடும்ப பொருளாதார சமூக சூழ்நிலை தாழ்ந்த மட்டத்தில் இருப்பது முக்கிய காரணமாகும். அடுத்து தாய்க்கு கர்ப்பத்தின் போது அதிக குருதி அழுத்தம் ஏற்படுவதால் அல்லது குழந்தையின் வளர்ச்சி கர்ப்பத்தில் குன்றிக் காணப்பட்டால் குழந்தையை குறை மாதத்தில் பிரசவிக்கப் பண்ண நேரிடுகிறது. இவ்வாறு செய்யாவிட்டால் தாய்க்கு அல்லது குழந்தைக்கு ஆபத்து ஏற்படலாம். தாய்க்கு கர்ப்பத்தின் போது நீரிழிவு நோய் ஏற்படுவதும் குறைமாத பிரசவத்துக்கு காரணமாக அமைகிறது.

மேலும் அண்மைக் காலங்களில் கர்ப்பந்தரிக்கக் கஷ்டப்படும் கணவன் மனைவி ஆகியோருக்கு சிகிச்சை அளிப்பதில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இச்சிகிச்சையின் போது ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் கர்ப்பம் தரித்தல் அதிகமாக காணப்படுகிறது. இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட குழந்தைகள் கர்ப்பம் தரிக்கும் போது அவை குறைமாத பிரசவமாக நடக்கின்றன. இதனாலும் குறைமாத பிரசவங்கள் அதிகரிக்கின்றன.

**கே: குறைமாத குழந்தைகளைப் பாதுகாக்க எவ்வாறானவற்றைச் செய்ய வேண்டும் ?**

பதில் : இது ஒரு பெரிய கேள்வி. சுருக்கமாக சொல்வதானால் குறைமாதக் குழந்தைகளை பாதுகாக்க பிரசவத்திற்கு முன்னரே ஆயத்தமாக இருத்தல் முக்கியம்.

பிரசவத்தின் போது குழந்தை சுவாசிக்கிறதா, இதயத் துடிப்பு நன்றாக இருக்கிறதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அதே நேரத்தில் குழந்தை குளிர்ந்து விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். நுரையீரல் முதிர்ச்சி அடையாமல் சுவசிப்பதில் பிரச்சினைகள் இருப்பின் நுரையீரலுக்குள் சேபக்டன்ட் (surfactant) எனும் பதார்த்ததை செலுத்தி செயற்கைச் சுவாச கருவியில் பொருத்த வேண்டும். சுவாசப் பிரச்சினை குறைவாக காணப்பட்டால் அதற்கேற்ற விதத்தில் சுவாசிப்பதற்கு உதவ வேண்டும்.

அதே வேளையில் தொப்புள் கொடிக்குள் அல்லது ஒரு நாளத்தில் ஊசியை (Cannula) செலுத்தி அதனூடாக குளுக்கோஸ் (Dextrose) மற்றும் கிருமி கொல்லி மருந்துகளை (antibiotics) கொடுக்க வேண்டும். இவைகளைச் செய்யும் அதே நேரத்தில் குழந்தையை கண்ணாடிப் பெட்டியில் வைத்து குழந்தையை சூடாக வைத்திருக்க வேண்டும்.

தொடர்ந்து குழந்தையை கவனமாக அவதானிக்க வேண்டும். இதயத் துடிப்பு வேகம், சுவாச வேகம், இரத்தத்தில் ஒட்சிசனின் அளவு, குருதி அழுத்தம் போன்றவை அவதானிக்கப்படும். சிறிது சிறிதாக தாய்ப்பாலூட்டுதல் ஆரம்பிக்கப்படும். பிரச்சினைகள் ஏற்பட்டால் அவற்றிற்கு ஏற்ற விதமாக சிகிச்சைகள் அளிக்கப்படும். இவை எல்லாவற்றிலும் கிருமி தொற்று ஏற்படாமல் தடுப்பதற்குரிய எல்லா முறைகளும் கையாளப்படும். கை கழுவுதல் மிக முக்கியம்.

**கே: தலைப் பிரசவம் குறைப்பிரசவமாக இருந்தால் அடுத்தடுத்த குழந்தையும் குறைப்பிரசவமாகவே பிறக்க வாய்ப்புள்ளதென்று கூறப்படுகிறதே ?**

பதில் : ஆம், அவ்வாறு அடுத்த குழந்தைகளும் குறைப் பிரசவமாக பிறக்க வாய்ப்புள்ளது. ஆனால் மகப்பேற்று மருத்துவ நிபுணரின் ஆலோசனையுடன் செயற்பட்டால் பெரும்பாலும் பிரச்சினைகளைத் தவிர்த்துக்கொள்ளலாம். ஒரு தாய், தான் குறை மாதமாகப் பிறந்திருந்தாலும் இவ்வாறாக குறைமாதத்தில் குழந்தைகளைப் பிரசவிக்க முடியும். ஆகவே இவ்வாறான சரித்திரம் தனக்கு உள்ளதென்பதை மகப்பேற்று மருத்துவ நிபுணருக்கு முன்கூட்டியே தெரியப்படுத்துவதன் மூலம் பிரச்சினை ஏற்படாமல் பார்த்துக்கொள்ளலாம்.

**கே: 25 வாரங்களில் பிறக்கும் சிசுக்களை காப்பாற்ற சிகிச்சை வசதிகள் கிழக்குப் பிராந்தியத்தில் இருக்கிறதா ?**

பதில் : ஆம். மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் இவ்வாறான மிகவும் குறை மாதத்தில் பிறக்கும் சிசுக்களை காப்பாற்றுவதற்கான வசதிகள் உள்ளன. அண்மைக் காலத்திலேயே இவ்வாறான வசதிகள் எங்களுடைய பிராந்தியத்தில் கிடைக்கப் பெற்றன. இவ்வாறான குழந்தைகளைக் காப்பாற்ற வசதிகள் மட்டுமன்றி நன்கு பயிற்றப்பட்ட அணி ஒன்று மிக முக்கியமாகும். அணி என்று சொல்வதற்கு காரணம் அதன் ஒவ்வொரு அங்கத்தினரும் சிறப்பாக செயல்படுவது மிக முக்கியமாகும்.

**கே: மகப்பேறு நிலையில் சிசு மற்றும் தாய் மரணத்தை தழுவுவதற்கான பின்னணி ?**

பதில் : சிசு மற்றும் தாய் மரணம் சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்பினருக்கும் மிகவும் கடினமான அநுபவமாகும். பல்வேறு காரணங்களால் இவை நடக்கின்றன. இவற்றில் பல தடுக்க முடியாதவை. சில தடுக்கக்கூடியவை. சில நோய் நிலைமைகளில் தாயைக் காப்பாற்ற சிசுவை குறை மாதத்திலேயே பிரசவிக்க நேரிடுகிறது. இதனால் சிசுவின் உயிருக்கு அபத்து ஏற்படலாம்.

சிசேரியன் சத்திர சிகிச்சை தற்போது எங்களுடைய சமூகத்தில் விரும்பி செய்யப்படுகிற ஒன்றாக மாறியுள்ளது. ஆனால் சுகப்பிரசவத்தைக் காட்டிலும் சிசேரியன் சிகிச்சையிலேயே அதிக தாய்மார்கள் மரணங்களை தழுவுகின்றனர். சரியான காரணமில்லாமல் சிசேரியன் சத்திரசிகிச்சையை தாயாரின் விருப்பத்துக்காக செய்வது தாய்க்கு ஆபத்தை ஏற்படுத்தலாம். ஆனால் சில வேளைகளில் சிசுவைக் காப்பாற்றவும் தாயைக் காப்பாற்றவும் சிசேரியன் சத்திரசிகிச்சை தேவைப்படுகிறது.

**கே: இவ்வாறான நிலையில் பெண் நோயியல் மகப்பேற்று மருத்துவ நிபுணரும் விசேட குழந்தை நல மருத்துவ நிபுணரும் மகப்பேறு நிலையின்போது எவ்வாறு செயற்பட வேண்டும் ?**

பதில் : தொடர்பாடல் முக்கியம். இருவரும் ஆலோசித்து தாய்க்கும் சேய்க்கும் பாதுகாப்பான சிறந்த பிரசவ முறையையும் நேரத்தையும் தீர்மானித்து செயற்பட வேண்டும். குழந்தை பிரசவிக்கும்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளை முன்கூட்டியே அனுமானித்து அவற்றிற்கு ஆயத்தத்துடன் இருந்து குழந்தை பிறந்ததும் தேவைப்படின் தீவிரமாகச் செயற்பட்டு சிகிச்சையளிக்க வேண்டும்.

**கே: மழலைகளின் நோய் நிலையை அறிந்து சிகிச்சைளிப்பதென்பது மிகப்பெரும் சவால். இந்நிலையில் சவால்களை வெற்றிகொள்ள எவ்வாறான விடயங்களை கடைப்பிடிக்க வேண்டும் ?**

பதில் : குழந்தைகள் அவர்களுக்குள்ள பிரச்சினைகளை கூற மாட்டார்கள். ஆகவே அவதனிப்பு முக்கியம். பெற்றோர் குழந்தைகளை கூர்ந்து அவதானிப்பார்கள். குழந்தைகள் வெளிக்காட்டும் ஒவ்வொரு சிறு மாற்றங்களையும் பெற்றோர் அறிவார்கள். பெற்றோர் கூறுபவற்றை வைத்தியர்களாகிய நாங்கள் கவனமாகக் கேட்க வேண்டும். பெற்றோர்கள் கூறுபவற்றை நாங்கள் எங்கள் வைத்திய அறிவை வைத்து வியக்கியானம் செய்வோம். அதன் பின்னர் நாங்களும் குழந்தைகளை அவதானிப்போம். தேவைப்பட்டால் தொடர்ச்சியாக அவதானிப்போம். எங்களுடைய ஊகங்களை சரி, பிழை பார்க்க பரிசோதனைகளைச் செய்வோம். தேவைப்பட்டால் பரிசோதனை முடிவுகள் வரு முன்னரே சிகிச்சையை ஊகத்தினடிப்படையில் அரம்பித்து விடுவோம். பின்னர் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் தேவையான சிகிச்சைகளைத் தொடர்வதோடு தேவையற்றவற்றை நிறுத்தி விடுவோம் என்றார்.

மண்டூர்
பாக்கியராஜா மோகனதாஸ்...

---

தனுஷ்–ஐஸ்வர்யா

# உறவில் சிக்கல்






தனுஷ் ஐஸ்வர்யா திருமண உறவில் சிக்கல் ஏற்பட்ட போது ஐஸ்வர்யாவின் தந்தை என்ற ஸ்தானத்தில் நடிகர் ரஜினிகாந்த் சமாதான பேச்சுவார்த்தை நடத்தியதாக கூறப்படுகிறது. இது தொடர்பாக சினிமா வட்டாரங்கள் சில நம்மிடம் தகவல்கள் தெரிவித்துள்ளன.

தனது மனைவியும், இயக்குனருமான ஐஸ்வர்யாவை பிரிவதாக நடிகர் தனுஷ் அறிவித்துள்ளார். இது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் அவர் அறிக்கை வெளியிட்டார். 18 வருட திருமண வாழ்க்கையை முடித்துக்கொள்வதாக அவர் அறிவித்துள்ளார்.

தனுஷை தொடர்ந்து ஐஸ்வர்யாவும் இதே அறிவிப்பை வெளியிட்டு இருக்கிறார். இந்த அறிவிப்பு அண்மையில் வந்திருந்தாலும் 2 வாரத்திற்கு முன்பே இந்த முடிவு எடுக்கப்பட்டு விட்டதாக கூறப்படுகிறது.

இது தொடர்பாக சினிமா வட்டாரத்தில் சிலரிடம் விசாரித்ததில், இவர்கள் இருவரும் பிரிவதாக 2 வாரங்களுக்கு முன்பே முடிவு செய்துவிட்டனர். நிறைய கருத்து வேறுபாடுகள் காரணமாக முடிவு செய்துள்ளனர். இதுதான் காரணம் என்று குறிப்பிட்டு சொல்லும் அளவிற்கு ஒரு காரணம் இல்லை. இவர்களுக்கு இடையிலான பிரச்சினை பல வருடங்களுக்கு முன்பே ஒரு விஷயத்தில் எழுந்துவிட்டது. இணையத்தில் வெளியான சில புகைப்படங்கள் காரணமாக அப்போதே இவர்களுக்கு இடையில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

ஆனால் அப்போது இரண்டு தரப்பில் இருந்தும் மூத்தவர்கள் பேசி அதை சரி செய்தனர். இது 78 வருடங்களுக்கு முன் ஏற்பட்ட பிளவு. அதன்பின் இருவரும் நெருக்கமாகவே இருந்தனர். ஆனால் சமீபத்தில் கடந்த ஒரு வருடமாக இவர்கள் இருவருக்கும் மீண்டும் பல விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு இருக்கிறது. அதோடு தனுஷ் பற்றி சில புகார்கள் நேரடியாக ஐஸ்வர்யா காதுக்கே சென்று இருக்கிறது. அதில் வாக்குவாதம் ஏற்படவே இருவருக்கும்




சண்டை முற்றி இருக்கிறது என்று அந்த சினிமா வட்டார தகவல்கள் நம்மிடம் தெரிவித்தன.

ரஜினி இந்த விவகாரம் தெரிந்தும் தொடக்கத்தில் அதை பற்றி பெரிதாக கருத்து எதையும் தெரிவிக்கவில்லை என்று கூறப்படுகிறது. ஆனால் தொடர்ந்து தனுஷை சில நடிகைகளுடன் ஒப்பிட்டு நிறைய கிசு கிசுக்கள் வெளியே வந்தன. முக்கியமாக தெலுங்கு, மலையாள திரை உலகில் தனுஷ் குறித்த சில சர்ச்சைக்குரிய கிசுகிசுக்கள் வெளியே வந்ததாக கூறப்படுகிறது. இது தொடர்பாக ஐஸ்வர்யாவே நேரடியாக ஒரு நடிகையிடம் கோபமாக விசாரித்ததாக கூறப்படுகிறது.

அதாவது கிசுகிசுக்கள் உண்மையா என்று தனுஷ் பற்றி ஒரு நடிகையிடம் ஐஸ்வர்யா கேட்டதாக கூறப்படுகிறது. தன்னிடம் ஐஸ்வர்யா வந்து பேசியதைப் பற்றி அந்த நடிகை தனுஷிடம் புகார் கொடுத்துள்ளாராம். அதனால் தனுஷுக்கும் ஐஸ்வர்யாவிற்கும் மேலும் மோதல் ஏற்பட்டதாக சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது பெரிய வாக்குவாதமாக ஆகியுள்ளது. இப்படிப்பட்ட நிலையில்தான் தொடர் மோதல்களால் பிரிந்துவிடலாம் என்ற முடிவை தனுஷ் ஐஸ்வர்யா இருவரும் எடுத்துள்ளனர். இதை இரண்டு பேருமே குடும்பத்தினர் முன்னிலையில் தெரிவித்துள்ளனர். அப்போது இவர்களை சமரசம் செய்ய ரஜினி தரப்பு முயன்றதாக கூறப்படுகிறது.

(15ஆம் பக்கம் பார்க்க)

---



மலரும் யுகத்திற்கு புதியதோர் வடிவம்

மிலிந்த மொரகொட

# அரசியல் தலைமையும் கலாச்சார ஆர்வத்தை கேள்விக்குட்படுத்தலும்

பிரித்தானிய பிரதமர் பொரிஸ் ஜோன்ஸன் உடனடியாக பதவி விலக வேண்டுமென கூறப்படும் எதிர்ப்புகள் சூடுபிடித்துள்ளன. அவரின் பணி குழாமுக்காக பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடத்தப்பட்ட விருந்துபசாரம் கடுமையான குற்றம் என கூறப்பட்டுள்ளது. கொவிட் அச்சுறுத்தலுக்கு மத்தியில், சுகாதார விதிமுறைகளை பின்பற்றாது, அந்த விருந்துபசாரத்தை ஏற்பாடு செய்திருந்தது பற்றி விமர்சிக்கப்பட்டுள்ளது. தமது கட்சித் தலைவரான பிரதமரின் இந்த செயல் தவறு என கூறும் பிரித்தானிய கொன்ஸவேர்டிவ் கட்சி உறுப்பினர்கள் ஐம்பதிரண்டு பேர் அவர் நம்பிக்கையை மீறியுள்ளதாக குற்றம் சுமத்தி கடிதமொன்றை பிரித்தானிய பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்துள்ளார்கள். இந்த விருந்துபசாரம் சமூக இடைவெளியை பின்பற்றி பணி குழுவினருக்காக நடத்தப்பட்டது என ஏற்றுக் கொண்டுள்ள பிரதமர், அதற்கு மன்னிப்பையும் கோரியுள்ளார். ஆனாலும் அவரது செயல் சரியல்ல என கூறும் எதிர்ப்புகளுக்கும் குறைவில்லை.

பிரதமர் பொரிஸுக்கு இணைந்ததாக உலகில் ஏனைய அதிகாரமிக்க தலைவர்கள் பலரினதும் செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளது. இந்திய பிரதமர் நரேந்திர மோடி, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், பிரெஞ்சு பிரதமர் எம்மானுவேல் மெக்ரோன் என குறிப்பிடலாம். உயர்ந்த இடத்தில் இருந்த தலைவர்கள் பலர் மக்களின் அதிருப்திக்கு ஆளாகியுள்ளார்கள். கொவிட் தொற்றை கட்டுப்படுத்த எடுத்த நடவடிக்கை, அதனால் ஏற்பட்ட பொருளாதார சிக்கல்கள் மற்றும் எதிர் கட்சிகளின் விமர்சனங்கள் அதற்கு காரணமென தெரிகிறது. எவ்வாறாயினும் பிரதமர் பொரிஸ் ஜோன்ஸனுக்கு அவரது கட்சிக்குள்ளேயே ஏற்படுத்தப்பட்டுள்ள அழுத்தம் விசேடமானது.

பிரித்தானியாவின் ஜனநாயக பண்புகளுக்கு அமைய, தலைவர்களின் பிரபல்யம் குறைவடையும்போது கட்சி அங்கத்தவர்கள் அனுதாபமின்றி செயல்படுவார்கள். உலக மக்களிடையேஇரும்பு பெண்மணி என பெயர்பெற்ற மார்கிரெட் தட்சர் கட்சியிலிருந்து அகற்றப்பட்ட சம்பவம் அதற்கு சிறந்த உதாரணமாகும். வெற்றியை நோக்கி கொண்டு சென்ற அளவுக்கு பாராட்டு தலைவர் குறித்து நாட்டில் காணப்படுவதில்லை என சமூக கருத்துக்களால் நிரூபிக்கப்படும் சந்தர்ப்பத்தில் தட்சர் விலக வேண்டுமென கட்டாயப்படுத்தியது அவரின் நெருங்கிய அணியினர் என்பதை குறிப்பிட்டாக வேண்டும். தொழிற் கட்சியை அதிகாரத்துக்கு கொண்டு வருவதற்காக பெரும் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட அக்கட்சியின் தலைவர் டோனி பிளேயருக்கும் அவ்வாறான நிலைமைக்கே முகம்கொடுக்க நேரிட்டது.

வெஸ்மினிஸ்டர் ஜனநாயகம் இருதயமில்லாத அரசியல் முறை என தெரிவதோடு கட்சியை பாதுகாக்க உட்சீரமைப்பினை செய்ய எவ்வித தயக்கமுமின்றி செயல்படுவது விசேட அம்சமாகும். ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரித்தானியா வெளியேறியது. அதற்கு தீர்வுகண்டு முன்னேறி வரும்போது கொவிட் தொற்று பிரித்தானியாவை செயலிழக்கச் செய்தது. நாட்டை மீட்டெடுத்த பிரதமர் பொரிஸுக்கு கட்சியிடமிருந்து மன்னிப்பு கிடைக்காது என்பது தெளிவாகிறது.

ஆசியாவின் ஜனநாயகம் இந்த பண்புகளிலிருந்து மாறுபட்டது எனபதை குறிப்பிட வேண்டும். இந்திய பிரதமரின் செல்வாக்கும் குறைந்து வருகிறது. உத்தர பிரதேசம், பஞ்சாப் உள்ளிட்ட ஐந்து பிராந்தியங்களின் தேர்தல் இந்த வருட முதல் காலாண்டு பகுதியில் நடத்தப்படவுள்ளது. இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பாரதீய ஜனதா கட்சியின் செல்வாக்கும் குறைந்து வருகிறது. வெற்றி எவ்வாறாயினும் கட்சித்தலைமை மீதான ஆர்வம் இந்திய தேர்தலில் நன்கு அறியப்பட்ட அம்சமாகும். கட்சியின் மீதான மக்களின் கருத்து குறைந்து வரும் சந்தர்ப்பத்தில்கூட கட்சி தலைமையுடன் இணைவது ஆசிய கலாசாரம் என தெரிகிறது. பிராந்திய நாடுகளில் ஜனநாயகத்தில் காணக்கூடிய இந்த அம்சம் குறித்து விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

கொழும்பு தேர்தல் காரியாலயத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளின் எண்ணிக்கையை பார்க்கும்போது இந்த கலாசாரத்தின் ஒருபக்கம் நன்றாகத் தெரிகிறது. கட்சி தலைவரின் செல்வாக்கு குறைவதை பொறுக்க முடியாதவர்கள் இறுதியில் வேறொரு கட்சியை பதிவு செய்கிறார்கள். கட்சிகள் அதிகரிப்பது ஜனநாயகத்துக்கு நன்றாகும். கட்சியினுள் காணாமற் போகும் ஜனநாயகம் நாட்டிற்கும் மக்களுக்கும் ஏற்படுத்தும் ஜனநாயகமாக இல்லை.

இந்நாட்டின் அரசியலில் பெரும் பங்குதாரர்கள் என கூறிக்கொள்ளும் பெருமளவு சிறுகட்சிகள் மக்கள் சமூகத்தின் இருப்புக்கு செய்யும் உதவி என்ன? சிறிய மாற்றங்களைத் தவிர பெரும்பான்மையான கட்சிகளின் நோக்கம் மற்றும் இலக்குகள் மாறாது. கட்சி உருவாக அடிப்படை காரணி கட்சி தலைமை மாத்திரமே. அது முதலாளித்துவ கட்சிகளில் மாத்திரமல்ல சோசலிச கட்சிகளிலும் காணக்கூடிய அம்சமாகும். செல்வாக்கு குறையும் வேளையில் கட்சியைப் பாதுகாக்க தலைவரை நீக்கமுடிவு எடுப்பது மனிதாபிமானமற்ற செயலாக தெரிகிறது. தலைவரொருவர் நாட்டுக்கும் சமூகத்துக்கும் ஆற்றிய பணியை கருத்தில் கொள்ளாது, புறக்கணித்து அலட்சியம் செய்வது நன்றியற்ற செயலாகும். தெரேசா மேயை நீக்கி ஆடசிக்கு வந்த பொரிஸ் ஜோன்ஸனும் பிரித்தானியாவின் பிரபலமான பாத்திரம் அல்ல. அவர் முகம் கொடுத்துள்ள பிரச்சினை பிரித்தானிய மக்கள் சமூகத்தின் கட்சி கட்டமைப்பு தொடர்பான உள்ளடக்கத்தை எமக்கு எடுத்தியம்புகிறது.

தமிழில்: வீ.ஆர். வயலட்

# தொடர் வழிப்பறியில் ஈடுபட்ட ஐவர் கைது

## யாழ்.CIDயினர் அதிரடி நடவடிக்கை

யாழ்.விசேட நிருபர்



சுன்னாகம் மற்றும் இளவாலையில் பட்டப்பகலில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் மூவரும், அவர்களிடம் நகைகளை கொள்வனவு செய்த இருவருமாக ஐவர் யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து திருட்டு நகைகள் 7 பவுண் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வீதிகளில் செல்லும் பெண்களிடம் நகைகள் அபகரிக்கப்படுவது தொடர்பில் அண்மையில் சுன்னாகம் மற்றும் இளவாலை பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழான மாவட்டக் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்தது.

பிரிவின் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்சிஸ் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் புத்தூரைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து 7 பவுண் தங்க நகைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களிடமிருந்து நகைகளை கொள்வனவு செய்த சுன்னாகம் மற்றும் யாழ்ப்பாணம் நகர நகைக்கடை உரிமையாளர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர்.

# கிழக்கு பல்கலையின் புதிய உபவேந்தர் பதவியேற்பு

ஏறாவூர் தினகரன் நிருபர்



இலங்கை கிழக்குப் பல்கலைக் கழகத்தின் புதிய உபவேந்தராக நியமிக்கப்பட்டுள்ள பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் நேற்று காலை கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் மட்டக்களப்பு வந்தாறுமூலை பிரதேசத்திலுள்ள அலுவலகத்தில் சர்வமத ஆசீர்வாதத்துடன் கடமையேற்பு நிகழ்வு நடைபெற்றது.

பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

சுமார் 25 வருடகால வரலாற்றைக் கொண்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பத்தாவது உபவேந்தராக மட்டக்களப்பு கிரான்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முகாமைத்துவப் பேராசிரியரான வல்லிபுரம் கனகசிங்கம் இதற்கு முன்னர் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் திருகோணமலை வளாகத்தின் முதல்வராகப் பணியாற்றியவராவார்.

# ஜெய்கா 400 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் அன்பளிப்பு

நாட்டின் சுகாதாரத்துறையை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் (ஜெய்கா) நாட்டிலுள்ள 09 ஆஸ்பத்திரிகளுக்கு 400 மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை சுகாதார அமைச்சிடம் (19) கையளித்துள்ளது.

இலங்கையிலுள்ள ஜப்பான் தூதுவர் Mizukoshi Hideaki, சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்லவிடம் அண்மையில் உத்தியோகபூர்வமாக கையளித்தார்.

தெல்தெனிய, வரக்காபொல, மணலாறு, பிம்புற, கரவனெல்ல, அவிஸ்சாவெல்ல, நாவலப்பிட்டி, ஹிங்குரங்கொட, போன்ற தள வைத்தியசாலைகளுக்கும் ஹம்பாந்தோட்டை மாவட்ட வைத்திசாலையின் பீ.சி.ஆர் பிரிசோதனைக்கூடத்துக்கு தேவையான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

பீ.சி.ஆர். உபகரணங்கள், அவசர சிகிச்சைப்பிரிவு கட்டில்கள், அவசர சிகிச்சை பிரிவு உபகரணங்கள், வெண்டிலேட்டர்கள் போன்றனவாகும்.

# பாடசாலைகளுக்கு ஆய்வுகூட உபகரணங்கள் வழங்கல்

## செந்தில் தொண்டமான் ஏற்பாடு





தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளுக்கு ஆய்வுகூட உபகரணங்களை விநியோகிக்க இ.தொ.காவின் உப தலைவர் செந்தில் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

ஆய்வு கூட உபகரணங்கள் இல்லாத மாணவர்களின் பயன்பாட்டிற்காக ஆய்வு கூட உபகரணங்களை விநியோகிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் ஆறு இலட்சத்தை கடந்த கொவிட் தொற்றாளர்

## வெள்ளியன்று 840 பேருக்கு தொற்று

நாட்டில் மொத்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்தினை கடந்துள்ளது.

வெள்ளிக்கிழமை மேலும் 840 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், இலங்கையில் நாளாந்த கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை தொடர்ந்து இரண்டாவது நாளாகவும் 800ஐ கடந்துள்ளது.

இதன் காரணமாக நாட்டில் கொரோனா தொற்றுக்குள்ளானவர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 203 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், நேற்று முன்தினம் 17 பேர் கொரோனா தொற்றினால் உயிரிழந்துள்ளனர். இதற்கமைய நாட்டில் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 15 ஆயிரத்து 272 ஆக அதிகரித்துள்ளது.

இந்தப் பின்னணியில், நாட்டில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் அபாய நிலை குறித்து சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது என சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையினை கட்டுப்படுத்தும் வகையில் அனைவரும் சுகாதார வழிகாட்டல்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், பூஸ்டர் டோஸினை அனைவரும் கட்டாயமாக பெற்றுக்கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

## G.C.E.(O/L) பரீட்சை விண்ணப்ப திகதி...

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 3ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத் தளத்தில் (www.doenets.lk) அல்லது www.onlineexams.gov.lk/eic அல்லது திணைக்களத்தின் உத்தியோகபூர்வ கைப்பேசி செயலி ஊடாக (Mobile App 'Exams) விண்ணப்பங்களை இணையத்தளத்தில் சமர்ப்பிக்க முடியும். அரச பாடசாலை மாணவர்கள், சம்பந்தப்பட்ட பாடசாலைகளின் தலைமையாசிரியர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள பயனர் பெயர் மற்றும் கடவுச் சொல்லைப் பயன்படுத்தி தேர்வுக்கு விண்ணப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பம் பூர்த்தி செய்யப்பட்டவுடன், அதன் நகலைப் பெற்று, தேவைப்படும் போது சமர்ப்பிப்பதற்காக விண்ணப்பதாரரின் பாதுகாப்பில் கவனமாக வைத்திருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# எங்கள் கருத்து...

## ஏட்டிக்குப் போட்டியாக அரசியல் நடத்த உகந்த காலகம் இதுவல்ல

முன்னெடுத்து செல்வது மிகவும் கவலை தரும் விடயமாகும்.பொது மக்களின் வாழ்க்கை நிலையை இயன்றளவு வழமைக்கு கொண்டு வருவதற்காக அரசாங்கம் தன்னாலான சகல முயற்சிகளையும் முன்னெடுத்து வருகின்றது.

வெளிநாட்டுக் கடன்கள் நாட்டை அச்சுறுத்தும் சூழலில் தனது வெளிநாட்டு பொருளாதாரக் கொள்கைகளை மாற்றியமைத்து அவற்றுக்கு உரிய தீர்வு கண்டு வருகின்ற வேளையில் உள்நாட்டில் அரசியல் செய்கின்ற சில அரசியல் கட்சிகளும் மக்கள் பிரதிநிதிகளும் தமக்கு வாக்களித்த மக்களின் கஷ்டத்தை அறிந்தும் அறியாதவர்களாக சுயநல போக்கு அரசியல் செய்து வருகின்றமை கவலைக்கும் கண்டனத்துக்குமுரிய விடயமாகும்.

பிரதான எதிர்க்கட்சி ஆட்சியைப் கைப்பற்றுவதகாக நாட்டு நிலைமையை கருத்தில் கொள்ளாது ஆளும் தரப்பை குறைகூறும் செயற்பாட்டில் ஈடுபட்டு வருகிறது. அதற்காக ஆர்ப்பாட்டங்களையும், தீப்பந்த போராட்டங்களையும் நடத்தி மக்களை குழப்பும் ஒரு கீழ்த்தரமான சந்தர்ப்பவாத அரசியலை பிரதான எதிர்க்கட்சி நடத்தி வருகின்றமை இதற்கு சாட்சிகளாக உள்ளன.

அதேபோன்று தமிழ் கட்சிகளும் அரசாங்கத்திற்கு நெருக்கடியை ஏற்படுத்தி வெளிநாடுகளுக்கு அரசாங்கத்தைக் காட்டிக் கொடுக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றமை அருவருக்கத்தக்க செயலாக உள்ளது.

இதேபோன்று ஏனைய பல எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ளி அதில் குளிர் காய முயன்று வருகின்றன. முஸ்லிம் கட்சிகள் பலவற்றின் உறுப்பினர்கள் அரசாங்கத்திற்கு இந்த ஒரு இக்கட்டான சந்தர்ப்பத்தில் உதவி நல்க முன்வந்த போதும் அதன் தலைமைகளால் நெருக்கடிக்கு உள்ளாக்கப்படுகின்றனர். அதேபோன்று ஆளும் தரப்பு கட்சியில் அங்கம் வகிக்கும் சிலரும் சில தூண்டுதல்கள் காரணமாக தாம் சார்ந்திருக்கும் அரசாங்கத்தையே விமர்சிக்கும் அளவிற்கு தம்மை மாற்றி அரசியல் செய்து வருகின்றனர்.

பாராளுமன்றத்தில் நடக்கின்ற விவாதங்களை பார்த்தால் இவர்களின் சிலர் மக்கள் பிரதிநிதிகளா என்ற சந்தேகம் எழுகிறது.

மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக நடத்தப்படுகின்ற இரங்கல் உரைகளில் கூட அவர்களை ஞாபகப்படுத்தி உரை நிகழ்த்தாது அரசாங்கத்தை வசை பாடுவதில் ஆர்வமாக உள்ளனர். இவ் விடயத்தில் எதிர்க் கட்சியில் உள்ள தமிழ் பேசுகின்ற தமிழ், முஸ்லிம் கட்சிகள் நடந்து கொள்ளும் விதம் அவர்கள் சார்ந்த சமூகத்தை தலைகுனிய வைக்கிறது.

எனவே அமைச்சர் நாமல் ராஜபக்ச தெரிவித்தது போன்று மக்கள் பிரதிநிதிகளான ஆளும் மற்றும் எதிர்த் தரப்பு அரசியல்வாதிகள் தமக்கிடையே ஏட்டிக்குப் போட்டியான விவாதங்களை நடத்தாது, ஆட்சி அதிகாரங்களை கைப்பற்றுவதில் மட்டுமே குறியாக இருக்காது தமக்கு வாக்களித்த மக்களையும் நாட்டின் முன்னேற்றத்தையும் கருத்தில் கொண்டு ஒன்றிணைந்து செயற்பட்டு நாட்டை மீளவும் உறுதியான நிலைக்கு கொண்டுவர இன, மத, கட்சி, மொழி பேதம் பாராது செயற்பட முன்வரவேண்டும். அதுவே தாய்நாட்டின் முன்னேற்றத்திற்கும் மக்கள் இயல்பு வாழ்க்கையில் திரும்புவதற்கும் திடமான செயற்பாடாக அமையும் என்பதே எமது கருத்தாகும்.

## இலங்கையின் மனித உரிமை...

பாரபட்சமற்ற அறிக்கையிடலின் முக்கியத்துவத்தை நாங்கள் முன்னிலைப்படுத்துகின்றோம்.

உள்நாட்டில் வடிவமைக்கப்பட்ட மற்றும் நிறைவேற்றப்பட்ட நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் செயன்முறையின் மூலம் நிலையான சமாதானத்தை நிலைநாட்டுவதில் இலங்கை ஈடுபட்டுள்ளதாக கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் ஜெனீவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையில் வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார். எமது சொந்த அரசியலமைப்பு மற்றும் எமது சர்வதேசக் கடமைகளுக்கு இணங்க மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் இலங்கை தனது நீண்டகால அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

2022 ஜனவரி 18ஆந் திகதி இலங்கைப் பாராளுமன்றத்தின் 9ஆவது கூட்டத் தொடரின் தொடக்கத்தில் ஜனாதிபதியினால் அண்மையில் இந்தச் செய்தி மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

## அமெரிக்கா உட்பட மேற்கு...

13ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், நாட்டின் இனப் பிரச்சினைக்கான இறுதித் தீர்வு கூட்டு சமஷ்டி முறைமையே, இதன் மூலமே தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை நிலைநிறுத்தப்படும் என்ற விடயங்களை வலியுத்தி இந்தியப் பிரதமருக்கு எழுதப்பட்ட அந்தப் பொது ஆவணம் கடந்த 18 ஆம் திகதி இந்தியத் தூதரகத்திடம் கையளிக்கப்பட்டது.

தமிழ் மக்களின் அபிலாசைகளை வெளிப்படுத்தும் இந்தப் பொது ஆவணமே அமெரிக்கா, மேற்கு நாடுகள் உள்ளிட்ட அனைத்து நாடுகளின் தூதரகங்களுக்கும் வடக்கு, கிழக்கு தமிழ் கட்சிகளின் தலைவர்களே நேரில் சென்று கையளிக்கவுள்ளனர். இந்த நடவடிக்கை அடுத்த வாரத்திலிருந்து ஆரம்பமாகும் என்றும் அவர் கூறினார்.

## மாகாண சபைத் தேர்தல்...

நேற்று பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கை அறிக்கை மீதான ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தேர்தல் சீர்திருத்தங்கள் தொடர்பான பாராளுமன்றக் குழுக் கூட்டத்தின் போது நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றதாக அவர் கூறினார்.

தேர்தல்கள் ஆணைக்குழு, சிவில் சமூக அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் குறிப்பிட்ட சில சரத்துக்களை உள்ளடக்குமாறு கோரியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். மேலும் கடந்த சந்திப்பின் போது தேர்தல் செலவினங்களைக் குறைப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாகவும் அமைச்சர் நிமல் சிறிபாலடி சில்வா தெரிவித்தார். சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

## தொலைநோக்குடன் சிந்தித்து...

தற்போது யதார்த்தமாகி வருகின்றன. தொலைநோக்குப் பார்வையும் நடைமுறைச் சிந்தனையும் கொண்ட தலைவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மீது நம்பிக்கை வைத்து, மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்ற ஒன்றிணைவது அனைத்துத் தரப்பினரினதும் பொறுப்பு என மஹா சங்கத்தினர் சுட்டிக்காட்டினர்.

ஜனாதிபதி அலுவலகத்தில் (21) நடைபெற்ற பௌத்த ஆலோசனை சபையின் 12ஆவது கூட்டத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

கொவிட்19 தொற்றிலிருந்து மக்களை மீட்டெடுக்கவும் சவால்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கும், ஜனாதிபதியின் பங்களிப்பைப் பாராட்டி மஹா சங்கத்தினர் பௌத்த ஆலோசனைச் சபையில் தமது கருத்துக்களைத் தெரிவித்தனர்.

அதலபாதாளத்துக்கு சென்றுகொண்டிருந்த நாட்டையும் தேசத்தையும், பாரம்பரியத்தையும் காப்பாற்றக் கூடிய ஒரே தலைவர் என்ற வகையில் கோட்டாபய ராஜபக்ஷ மீது வைத்திருந்த நம்பிக்கை வீணாகவில்லை எனவும், கூரகலை புனித பிரதேசம், முஹுது மஹா விஹாரை உள்ளிட்ட வடக்கு, கிழக்கில் உள்ள விஹாரைகளைப் பாதுகாத்து, நாட்டுக்கு உரிமையாக்குவதற்கு கடந்த இரண்டு வருடங்களில் ஜனாதிபதி மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டும் என, மஹா சங்கத்தினர் சுட்டிக்காட்டினர்.

அதேபோன்று, நாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பிலான உண்மைத் தகவல்களை வழங்குவதும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதில் ஜனாதிபதிக்கு ஒத்துழைப்பு வழங்குவதும், பௌத்த ஆலோசனைச் சபையின் பொறுப்பாகும்.

சட்டங்கள் மற்றும் கலந்துரையாடல்களை நிறைவேற்றுவதற்கு மஹா சங்கத்தினரின் வழிகாட்டலை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அழியும் தருவாயில் இருந்த சிங்கள பௌத்த பாரம்பரியத்தை கொவிட் தடைகளுக்கு மத்தியிலும் பாதுகாத்து, பெரும்பான்மை மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றபட்டதைப் போன்று, அந்த வரலாற்றுச் சிறப்புமிக்கத் தலங்களை அபிவிருத்தி செய்வதற்கு தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி தெரிவித்தார்.

## கொழும்பு றோயலுக்கு...

புதிய பஸ்சொன்று வழங்கப்பட்டது.

கீர்த்தி மந்த்ரிரத்னவினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இந்த பஸ் ஜப்பானில் தயாரிக்கப்பட்ட 54 ஆசனங்களை கொண்ட சொகுசு பஸ்சாகும்.பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கொழும்பு றோயல் கல்லூரியின் அதிபர் எம்.வீ.எஸ்.குணதிலக்கவிடம் பஸ்சின் சாவியை வழங்கி வைத்தார்.

இப் பஸசை அன்பளிப்பாக வழங்கிய கீர்த்தி மந்த்ரிரத்னக்கு பிரதமர் நினைவு சின்னமொன்றை வழங்கியதுடன், கொழும்பு றோயல் கல்லூரியின் அதிபர் எம்.வீ.எஸ்.குணதிலக்கவினால் பிரதமருக்கும் நினைவு பரிசொன்று வழங்கப்பட்டது.

பிரதமர் நிதியமைச்சராக பணியாற்றிய காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் பிரேமனாத் சீ தொலவத்தவின் தலையீட்டின் கீழ் இப் பஸ்சுக்கான வரி நிவாரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தன. ஓய்வுபெற்ற உதவி அதிபர் அஷோக கலஹிடியாவ இத்திட்டத்திற்கான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்தார்.

## யாழ்.சர்வதேச வர்த்தக சந்தைக்கு...

யாழ்.வர்த்தக மற்றும் கைத்தொழில் சம்மேளனம், யாழ்.இந்திய உதவித்துணைத் தூதரகம் ஆகியவற்றின் எற்பாட்டில் 2022 ஆம் ஆண்டுக்கான 12 வது சர்வதேச வர்த்தகச் சந்தையின் இரண்டாம் நாள் நிகழ்வுகள் யாழ். மாநகர திறந்தவெளி மைதானத்தில் நேற்றும் இடம்பெற்றது.

47 விற்பனைக்காட்சிக்கான நுகர்வோர்பொருட்களும்,இதரஉள்ளிட்ட பொருட்களும் உழவு இயந்திர வாகனம், நெல் அறுவடை இயந்திரம் உள்ளிட்ட பாகங்களின் வாகனங்களும் தொழில் முயற்சியினை தேடும் இளைஞர், யுவதிகளுக்கான தொழில் வழிகாட்டல் கூடாரங்களும் இதன்போது காட்சிப்படுத்தப் பட்டுள்ளன.

இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா கலந்துகொண்டு உத்தியபூர்வமாக சர்வதேச வர்த்தகச் சந்தையினை அங்குராப்பண நாடாவினை வெட்டி ஆரம்பித்து வைத்தார்.

## அரசாங்க சார் நிறுவன...

நடைமுறைப்படுத்தும் வகையில் நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல அமைச்சுக்களின் செயலாளர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு சுற்றுநிருபம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, அரசாங்க ஊழியர்களுக்கு மாதாந்தம் 5,000 ரூபா கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் என்ற அறிவிப்பை அண்மையில் வெளியிட்டிருந்தார்.

தற்போது அரச மற்றும் அரச சார்பு நிறுவனங்களில் 18 இலட்சம் ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர். இவர்களில் 14 இலட்சம் பேருக்கு வரவு செலவு திட்டத்தில் நிதி அமைச்சரால் அறிவிக்கப்பட்டவாறு 5,000 ரூபா கொடுப்பனவு கிடைக்கும். அதேவேளை நிதி அமைச்சின் செயலாளர் விடுத்துள்ள சுற்றுநிருபத்தின் பிரகாரம் எஞ்சியுள்ள சுமார் 04 இலட்சம் பேருக்கும் இந்த 5,000 ரூபா கிடைக்கும்.

அரச சார்பு நிறுவனங்களில் கடமைபுரியும் நிரந்தர, ஒப்பந்த மற்றும் தினக் கொடுப்பனவில் கடமைபுரியும் அனைத்து ஊழியர்களுக்கும் இந்த 5,000 ரூபா கொடுப்பனவு கிடைக்குமென்றும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

## சித்தார்த்தன் எம்.பி ஏனைய...

திட்டம் குறித்து தனது பாராட்டை தெரிவித்திருந்தார்.

தனது கருத்தை வெளிப்படையாக கூறிய தர்மலிங்கம் சித்தார்த்தன் எம்.பி யை நான் பாராட்டுகிறேன். அவரை முன்னுதாரணமாக கொண்டு ஏனைய தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அரசாங்கத்துடன் ஒத்துழைத்து தமது உண்மையான மக்கள் பயணத்தை முன்னெடுக்க வேண்டும் என பிரதமரின் இந்து மத விவகார இணைப்பாளர் கலாநிதி சிவஸ்ரீ பாபு சர்மா ராமச்சந்திர குருக்கள் தெரிவித்துள்ளார்..

நாட்டினையும் நாட்டு மக்களினது முன்னேற்றத்தையும் கருத்திற் கொண்டு அரசாங்கம் முன்னெடுத்து வரும் திட்டமிட்ட செயற்பாடுகளை வரவேற்கும் விதத்தில் தமிழ் அரசியல்வாதிகள் சிலர் அண்மைக்காலமாக தெரிவித்து வரும் கருத்துக்கள் உண்மையில் பாராட்டுக்குரியது,

உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கை முன்னிலை வகிப்பதாக அவரது கருத்து அமைந்திருந்தது. இந்த உண்மை தமிழ் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் உட்பட தமிழ் பேசும் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்கள் எல்லோருக்கும் தெரிந்திருந்தும் அதனை பாராட்டி கூற அவர்கள் தயக்கம் காட்டி வருகிறார்கள். அதற்கு அரசாங்கத்தை எதிர்க்க வேண்டும் என்ற ஒரு வீம்புப் பிடிவாதம் அவர்களிடையே காணப்படுகிறது.



அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்கள்

அதிமேதகு பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள்

கௌரவ அமைச்சர் ரமேஷ் பதிரண அவர்கள்

இராஜாங்க அமைச்சர் அருந்திக்க பர்னாந்து அவர்கள்

தலைவர் கீர்த்தி சிறி வீரசிங்க அவர்கள்

அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அவர்களின் கோட்பாட்டுக்கமைவாக செயல்படுத்தப்பட்ட விசேட திட்டம்

# உயர்தரத்திலான சிறந்த தேங்காய் எண்ணெய் தயாரிப்புகளுக்கு ஐந்து நட்சத்திரத் சான்றிதழ்




## 5 நட்சத்திர சான்றிதழை பெறுவதற்கான அளவுகோல்கள்

- 100% தேங்காய் எண்ணெய்
- இரசாயண பொருட்கள் முழுமையாக அற்றது
- சிறந்த மூலப்பொருட்களை பயன்படுத்துவதால் ஆரோக்கியம் மற்றும் சுகாதாரம்மிக்கது
- உற்பத்தி செயன்முறையின் தரக்கட்டுப்பாடு பொறிமுறையை உறுதி செய்தல்.
- அஃப்லோடொக்சின் அற்றது



18.09.2020 அன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி இல: 2194 மற்றும் தேசிய அறிவுசார் சொத்துப்பதிவு இல: 240630

CERTIFIED
Coconut Development Authority Sri Lanka

இலங்கை வாழ் மக்களின் ஆரோக்கியமான வாழ்வு மற்றும் பாதுகாப்பை கருத்திற்கொண்டு உயர்தரத்திலான சிறந்த தேங்காய் எண்ணெய்களுக்கு விசேட சான்றிதழ் அடையாளம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. விசேட நிபுணர் குழுவின் பரிந்துரையின்படி, இத்தரச்சான்றிதல் உள்ள தேங்காய் எண்ணெயை பயன்படுத்துவதன் மூலம் ஆரோக்கியமான வாழ்வை பேணிப்பாதுகாக்க முடியுமென தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை இலங்கை மக்களுக்கு வலியுறுத்துகின்றது.

**BSJ Products White Coconut Oil**
Certified Product: White Coconut Oil
BSJ Products

**Carmel**
Certified Product: White Coconut Oil
Ingrain (Pvt) Ltd

**COCOMA**
Certified Product: "COCOMA" White Coconut Oil
Coco Ceylon Exports (Pvt) Ltd

**Dasa Cocos White Coconut Oil**
Certified Product: White Coconut Oil
Dasa Cocos (Pvt) Ltd

**Deegayu Coconut Oil**
Certified Product: White Coconut Oil
Coco Lanka Agro Export (Pvt) Ltd

**Food Mate**
Certified Product: Paring Coconut Oil & Virgin Coconut Oil
NDC Exports (Pvt) Ltd "Food Mate"

**Lion Coco**
Certified Product: White Coconut Oil
Wanasingha Holdings (Pvt) Ltd

**LSP Pure Coconut Oil**
Certified Product: Limaro whole kernel White Coconut Oil
LSP Natural Food Products (Pvt) Ltd

**MAP**
Certified Product: White Coconut Oil
Micro Agro Products

**Natural COCOS**
Certified Product: "Bandara Stores - White Coconut Oil"
Bandara Stores, Galigamuwa

**Peter Brand and Neraluma**
Certified Products: White Coconut Oil & Virgin Coconut Oil
Wewelwala Mills (Pvt) Ltd

**Silvermill Pure Coconut Oil**
Certified Product: Paring Coconut Oil
S. A. Silva & Sons Lanka (PVT) Ltd

**Smith Natural White Coconut Oil**
Certified Product: White Coconut Oil
Smith Foods (Pvt) Ltd

**SNF Organics**
Certified Product: White Coconut Oil
Samanala Natural Foods (Pvt) Ltd

பரிந்துரை வழங்கிய நிபுணர் குழு

**வைத்தியர் திலக் சிறிவர்தன**
MBBS (ருஹுனு), MSc (PGIM – கொழும்பு பல்கலைக்கழகம்)
துணை இயக்குநர் ஜெனரல் (சுற்றுச்சூழல், தொழில்சார் ஆரோக்கியம் மற்றும் உணவுப் பாதுகாப்புப் பிரிவு – சுகாதார அமைச்சு)

**வைத்தியர் எச்.வி.பி.எஸ். விஜயதிலக்க**
MBBS, MSc, MD
வைத்திய ஆலோசகர் (உணவு பாதுகாப்பு, சுற்றுச்சூழல், தொழில் மற்றும் உணவு பாதுகாப்புப் பிரிவு சுகாதார அமைச்சு)

**வைத்தியர். திருமதி ஜயந்திமாலா ஜயவர்தன**
(MBBS, MSc, MD கொழும்பு)
இலங்கை மருத்துவ சங்கத்தின் முன்னாள் தலைவர்
துணைக்குழு – தொற்றா நோய்
நிபுணர் குழு – இலங்கை வைத்தியர் சங்கம்

**திரு. தாரக்க விதானகமாச்சி**
LLB (திறந்த), BBA (ருஹுனு), MBA (ஐக்கிய ராஜ்ஜியம்)
பிரதான தலைவர் - நுகர்வோர் புகார் பிரிவு
துணை உதவி இயக்குநர் - வட மத்திய மாகாணம்
நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை

**மற்றும் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள்.**

Lab Tested | Cholesterol Free | Healthy | 100% Natural

அழையுங்கள் 0112502502-4

## தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

தேங்காய், கித்துல் மற்றும் பனை சாகுபடி ஊக்குவிப்பு சார்ந்த தொழில்துறை தயாரிப்பு உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு பெருந்தோட்ட அமைச்சு.



வெளிநாட்டு பணம் உங்கள் கைகளில்

# அரசியல் அரங்கம்

அர்ஜுன்

**நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல அனைவரும் ஒரு குழுவாகச் செயற்பட வேண்டும். சுதந்திரக் கட்சியினரால் அரசாங்கத்துக்குள் இருக்க முடியாவிட்டால் அவர்கள் தனியாகச் செல்ல முடியும் என விமான சேவைகள் மற்றும் ஏற்றுமதி வலயங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டி.வீ.சானக்க தெரிவித்தார். 'நாடு சரியான பாதையில் பயணித்து வருகிறது. இன்னும் ஓராண்டு காலத்துக்குள் நாட்டில் இயல்பு வாழ்க்கை திரும்பி விடும்' என்றும் அவர் குறிப்பிட்டார். எமக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே இராஜாங்க அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார்.**



# அரசுடன் இணைந்திருக்க முடியாவிடின் சு.கவினர் தனியாகச் செல்ல முடியும்!

## இராஜாங்க அமைச்சர் டி.வீ.சானக்க கூறுகின்றார்

## அடுத்த தேர்தலில் சு.கட்சி எவ்வாறு போட்டியிட்டாலும் பொதுஜன பெரமுனவுக்கு பாதிப்பு கிடையாது! அவர்கள்-தான் முடிவு செய்ய வேண்டும்!

**கே: நாட்டின் முன்னேற்றத்திற்காக அனைத்து அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் வலியுறுத்தியிருந்தார். இது பற்றி உங்கள் கருத்து யாது?**

பதில்: உண்மையில், இது கட்டாயம் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும். அமைச்சர்கள் மட்டுமல்ல, அதிகாரிகளும் இணைந்து செயற்பட வேண்டும். ஒரு அரசாங்கம் அமைந்தவுடன் அதற்கு முழு நாடும் ஆதரவளிக்க வேண்டும். அரசாங்கம் கொள்கைகளை வகுத்தே அமைச்சுக்களின் செயற்பாடுகளை கையாளுகிறது. இந்த முடிவைப் பொறுத்தே மக்களுக்கு நல்லது, கெட்டது நடக்கும். எனவே, அரசு, அமைச்சர்கள், அதிகாரிகள் என அனைத்துத் தரப்பினருடன் நாடு ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். இதன் ஊடாகவே நல்ல பலன்களை பெற்று வளர்ச்சியை நோக்கி முன்னேற முடியும். இரண்டு ஆண்டுகளாக கொவிட்19 தொற்றுநோயையும், அதன் விளைவாக பொருளாதார நெருக்கடியையும் சந்தித்து வருகிறோம். நாம் இப்போது சரியான பாதையில் செல்கிறோம் என்று நினைக்கிறேன். குறைந்த பட்சம் இன்னும் ஒரு வருடத்திற்குள் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியும். நாங்கள் தொடர்ந்து உள்கட்டமைப்பு அபிவிருத்திகளை மேற்கொண்டு வருகின்றோம். இன்னும் ஓராண்டுக்குள் அனைத்தும் இயல்பு நிலைக்குத் திரும்புமென நம்புகிறோம். ஒரு குழுவாகவே நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டுமே தவிர, தனியாகச் செல்ல முடியாது. ஒரு குழுவாக இணைந்து பணியாற்றுவது அவசியம். அபிவிருத்தி தொடர்பானது என்றால் குறைந்தது ஆறு, ஏழு அமைச்சுக்கள் ஒன்றுகூடி இணைந்து செயற்பட வேண்டும். கூட்டுப் பொறுப்புடன் குழுவாகச் செயல்பட வேண்டும். அதைத்தான் ஜனாதிபதியும் அண்மையில் வலியுறுத்தினார்.

யாராக இருந்தாலும் இணைந்து பணியாற்ற விரும்பாதவர்கள், அரசாங்கத்தில் இருந்து விலகி, நாட்டின் முன்னேற்றத்திற்காக மற்றவர்களை ஒற்றுமையாகச் செயல்பட வைப்பதற்கு இதுவே நல்ல தருணம்.

**கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணியில் இருந்து வெளியேறி புதிய அரசியல் கூட்டணியாக எதிர்வரும் தேர்தலில் போட்டியிடப் போவதாக சுதந்திரக் கட்சி சூட்சுமமாகத் தெரிவித்துள்ளது. சுதந்திரக் கட்சி விலகினால் அரசாங்கத்தின் ஸ்திரத்தன்மைக்கு சவால் ஏற்படுமா?**

பதில்: உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் சுதந்திரக் கட்சி தனித்துப் போட்டியிட்டது. எவ்வாறாயினும், எங்களின் ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ இல்லாமல் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரும்பான்மையைப் பெற்று பலவற்றில் அதிகாரத்தை உறுதிப்படுத்த எங்களால் முடிந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி களுத்துறை மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் தனித்து போட்டியிட்ட போதிலும் அவர்களால் 10,000 வாக்குகளையோ அல்லது ஒரு பாராளுமன்ற உறுப்பினரையோ கூட பெற முடியவில்லை. அதுதான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான நிலைமை. எங்களுடன் இணைந்து போட்டியிட்டமையாலேயே அவர்களால் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான உறுப்பினர்களைப் பெற முடிந்தது. தனித்துப் போக வேண்டும் என்றால் அது அவர்களைப் பொறுத்தது. அடுத்த தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்முடன் இணைந்து போட்டியிட்டாலும் இல்லாவிட்டாலும் அது எமக்கு எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தாது.

**கே: சுதந்திரக் கட்சியின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பில் தீர்மானம் எடுக்குமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை உறுப்பினர்கள் கட்சித் தலைமைத்துவத்திடம் வலியுறுத்தியிருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இது பற்றி உங்கள் பார்வை என்ன?**

(15ஆம் பக்கம் பார்க்க)

# ஆட்சி கவிழ்ந்து விடுமென்ற பகல் கனவில் எதிர்க் கட்சி!

**பிரதான கட்சிகளுடன் பல கட்சிகள் இணைந்து கூட்டணி அரசாங்கம் அமைப்பதும், பின்னர் கூட்டணிக் கட்சிகளுக்கிடையில் இடையிடையே கருத்து மோதல்கள் உருவாவதும் ஜனநாயக அரசியலின் பண்புகளில் ஒன்றாகும். 'ஆசியாவின் பழைமையான ஜனநாயகம்' எனக் கருதப்படும் இலங்கையில், இதுபோன்ற கூட்டணி அரசுகள் பல தடவை அமைந்துள்ளன.**



குறிப்பாக சுதந்திர இலங்கையில் பல தசாப்தங்களாக மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பன பெரும்பாலும் கூட்டணி உருவாக்கியே மத்தியில் ஆட்சி நடத்தியுள்ளன. இந்த வரிசையில் கடந்த பொதுத் தேர்தலில் முதன் முறையாக ஆட்சியைக் கைப்பற்றிய ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியும் கூட்டணி அமைத்திருந்தது.

குறுகிய காலத்துக்குள் கட்சியை உருவாக்கி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி அதிகாரத்துக்கு வர முடிந்த பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்கி வரும் கட்சிகளில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றாகும். அண்மைக் காலமாக இவ்விரு கட்சிகளுக்கும் இடையிலான நல்லுறவில் விரிசல் ஏற்பட்டுள்ளமை அவ்வப்போது இடம்பெறுகின்ற கருத்துப் பரிமாற்றங்களின் ஊடாகத் தெரிகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன, ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டணி அமைத்திருந்தாலும் தேர்தல் பிரசாரங்களில் கூட இரு கட்சிகளுக்கும் இடையிலான வேறுபாடுகள் புலப்பட்டிருந்தன. குறிப்பாக பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர்கள் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களை விமர்சிக்கும் வகையில் தேர்தல் பிரசார மேடைகளில் உரையாற்றியிருந்தனர்.

சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் குறிப்பாக கடந்த நல்லாட்சி அரசாங்கத்தில் அமைச்சுப் பொறுப்புக்களை வகித்தவர்கள் கலந்து கொண்ட தேர்தல் பிரசாரங்களில் மக்கள் கூச்சலிட்டு குழப்பங்களை ஏற்படுத்தியிருந்த சம்பவங்களும் பதிவாகியிருந்தன.

இவ்வாறான பின்னணியில் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் எவரையும் தேவையற்ற விதத்தில் விமர்சிக்கக் கூடாது என பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவம் திட்டவட்டமாகக் கூறியிருந்தது. இந்த நிலையில் பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்றதுடன், சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த 14 உறுப்பினர்கள் அதாவது தேசியப் பட்டியல் உறுப்பினர் கலாநிதி சுரேன் ராகவன் உள்ளடங்கலானவர்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கின்றனர். தற்போதைய அரசாங்கம் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பலத்துடன் இருப்பதற்கு சுதந்திரக் கட்சியின் பங்களிப்பும் கணிசமாகக் காணப்படுகிறது.

இருந்த போதும், அமைச்சுப் பதவிகளை வழங்கும் விடயத்தில் சுதந்திரக் கட்சி திருப்தி கொள்ளவில்லை என்பது ஆரம்பத்திலிருந்து தெரியவந்தது. ஒரு சில கபினட் அமைச்சுப் பொறுப்புக்கள் மாத்திரமே சுதந்திரக் கட்சியினருக்கு வழங்கப்பட்டது. ஏனையவர்களுக்கு இராஜாங்க அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட்டிருந்த போதும், பலர் அவை தொடர்பில் திருப்தி கொண்டிருக்கவில்லை. கடந்த காலங்களில் பலம் பொருந்திய அமைச்சுப் பொறுப்புக்களை வகித்த பலருக்கு இம்முறை அரசாங்கத்தில் எவ்வித அமைச்சுப் பதவிகளும் வழங்கப்படாமை அவர்களை அதிருப்திக்கு உள்ளாக்கியிருந்தது. இருந்த போதும் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கித் தொடர்ந்தும் அவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் அண்மைக் காலமாக சுதந்திரக் கட்சிக்கும், பொதுஜன பெரமுனவுக்கும் இடையிலான கருத்து வேறுபாடுகள் அதிகரித்து வருவதைக் காணக் கூடியதாகவுள்ளது. குறிப்பாக சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தொடர்ச்சியாக அரசாங்கத்தை நேரடியாகக் குற்றஞ்சாட்டி வருகின்றார். அரசாங்கம் முன்னெடுத்துள்ள கொள்கைத் திட்டங்களைப் பகிரங்கமாக விமர்சித்து வரும் அவர், பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை அரசாங்கம் கொண்டிருப்பதற்கு தமது கட்சியின் பங்களிப்பின் முக்கியத்துவத்தையும் சுட்டிக் காட்டியிருந்தார்.



சுதந்திரக் கட்சியின் இந்த செயற்பாடுகளினால் பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பலரும் அதிருப்தியடைந்திருப்பதுடன், சுதந்திரக் கட்சிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தொடர்ச்சியாக தமது கட்சியின் தலைமைத்துவத்தை வலியுறுத்தி வருகின்றனர். அரசாங்கத்துக்குள் இருந்து கொண்டு, அமைச்சுப் பதவிகளை வகித்துக் கொண்டு அரசையே விமர்சிக்காமல் தேவையாயின் வெளியேறிச் செல்ல முடியும் என பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

கூட்டுப் பொறுப்பு உள்ள கூட்டணியின் உறுப்பினர்கள் என்ற வகையில் அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்கள் மற்றும் அரசின் செயற்றிட்டங்களை அரசுக்குள் இருந்து கொண்டே விமர்சிக்க முடியாது. அரசை விமர்சிப்பதாயின் உடனடியாக வெளியேற வேண்டும் என்ற கருத்துகள் வலுத்து வருகின்றன.

அதேவேளை, அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சித்து வந்தாலும் அரசை விட்டு வெளியேறுவது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் எவரும் கருத்துகளை முன்வைக்கவில்லை. அரசாங்கம் வீழ்ச்சியுறுவதற்கு தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லையென்றே அவர்கள் தொடர்ந்தும் கூறி வருகின்றனர்.

குறிப்பாக சுதந்திரக் கட்சியின் முன்னாள் உறுப்பினரும், தற்போது பொதுஜன பெரமுன உறுப்பினருமான சுசில் பிரேமஜயந்த அரசை விமர்சித்தமைக்காக இராஜாங்க அமைச்சுப் பதவியிலிருந்து ஜனாதிபதியினால் நீக்கப்பட்டிருந்தார். இருந்த போதும் அரசாங்கத்தின் சில செயற்பாடுகளை விமர்சித்த அமைச்சர்களான விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார மற்றும் உதய கம்மன்பில ஆகியோருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### அரசுடன் முரண்பாடுகள் தொடருகின்ற போதிலும், ஆதரவளிப்பதில் பின்வாங்கப் போவதில்லையென்பதே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு

இந்த அமைச்சர்கள் யுகதனவி மின்நிலைய ஒப்பந்தத்துக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ள போதும், அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இந்த விடயங்களும் சுதந்திரக் கட்சியை அதிருப்திக்குள்ளாக்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

எதுவாக இருந்த போதும், சுதந்திரக் கட்சி கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் போதும் ஐ.தே.கவுடன் ஆட்சியமைத்து பின்னர் கூட்டணியில் குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது. குறிப்பாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக் காலத்திலேயே பாரிய குழப்பம் ஏற்பட்டிருந்தது. இவ்வாறான பின்னணியைக் கொண்ட சுதந்திரக் கட்சி மீண்டும் கூட்டணி அரசாங்கத்துக்குள் முரண்பாடுகளைத் தோற்றுவித்திருப்பதாக அரசியல் அவதானிகள் சுட்டிக் காட்டுகின்றனர்.

சுதந்திரக் கட்சி கூட்டணியிலிருந்து விலகுவதற்கு முடிவு எடுத்தாலும் சில அதன் உறுப்பினர்கள் அரசுக்கு ஆதரவாக இருப்பார்கள் என்றும், பாராளுமன்றத்தில் உள்ள மூன்றில் இரண்டு பெரும்பான்மையைத் தக்கவைப்பதற்கு முஸ்லிம் உறுப்பினர்களின் ஒத்துழைப்பை அரசாங்கம் ஏற்கனவே பெற்றிருப்பதாகவும் கூறப்படுகிறது. அதேநேரம், அரசாங்கம் பிளவுபடும் என்ற எதிர்க்கட்சியின் எதிர்பார்ப்பு வெறும் கனவாகவே அமையும்.

அரசு பலமிழந்து விட வேண்டுமென்பதுதான் எதிரணியின் கனவாக இருக்கின்றது. ஆனாலும் அரசு கவிழ்ந்து விடுவதற்கு இடமளிக்கப் போவதில்லையென்ற நிலைப்பாட்டில் ஶ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உள்ளதனால் எதிரணியின் கனவானது தொடர்ந்தும் கனவாகவே இருக்கப் போகின்றது என்பதுதான் உண்மை.

பி.ஹர்ஷன்...

# வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் அரசு பின்னிற்கப் போவதில்லை!






சம்யுக்தன்

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கூட்டணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து இரண்டு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், 2022ஆம் ஆண்டில் புதியதொரு பயணத்தை ஆரம்பித்துள்ளது என்றே கூற வேண்டியுள்ளது.**

கொவிட்19 சவால்களுக்கு உலக நாடுகள் அனைத்தும் முகம் கொடுத்திருக்கும் நிலையில், நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்லும் குறிக்கோளுடன் அரசாங்கம் கடும் பிரயத்தனங்களை மேற்கொண்டு வருகின்றது. 2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போதும், அதன் பின்னரான பொதுத் தேர்தலின் போதும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ முன்வைத்த 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கைத் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதில் அரசாங்கத்தின் உறுதிப்பாடு வெளிப்படுத்தப்பட்டது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடரை கடந்த செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார். இவ்வைபவம் எவ்வித ஆடம்பரமும் இன்றி எளிமையான முறையில் நடத்தப்பட்டது.

அன்றைய தினம் முற்பகல் 10.00 மணிக்கு பாராளுமன்றத்தின் அக்கிராசனத்தில் அமர்ந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்து உரையாற்றினார். ஏற்கனவே குறிப்பிடப்பட்டதைப் போன்று சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கான வழிவகைகள் பற்றியே ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடன உரையில் அதிகம் பேசியிருந்தார்.

## உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகியது ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத் தொடர்

நாடு தற்பொழுது எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பின்னடைவுகளின் களயதார்த்தம் உள்ளிட்ட விடயங்கள் பற்றியும் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி தொடர்பாகவும் தனது உரையில் ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். நாட்டை அனைவரும் ஒன்றிணைந்து முன்னேற்றிச் செல்வதற்கு அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பையும் அவர் கோரியிருந்தார்.

'இந்த உயர் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் மத்தியில் அரசியல் ரீதியிலான பல்வேறு கருத்து வேறுபாடுகள் மற்றும் கொள்கை வேறுபாடுகள் இருக்கின்றன. எனினும், நாங்கள் அனைவரும் நாட்டின் நன்மையையே பிரார்த்திக்கின்றோம். உலகளாவிய தொற்று நோயினால் பாதிக்கப்பட்டுள்ள இந்த கடினமான சந்தர்ப்பத்தில் நாட்டைக் கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றாக இணைந்து செயற்படும் பாரிய பொறுப்பு மக்கள் பிரதிநிதிகளாகிய உங்கள் அனைவருக்கும் உள்ளது. அந்தப் பொறுப்பினை நிறைவேற்ற எம்முடன் இணைந்து செயற்படுமாறு உங்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன்' என ஜனாதிபதி தனது உரையில் சுட்டிக் காட்டியிருந்தார்.

பொருளாதாரப் பிரச்சினைகள் ஒருபுறமிருக்க, நாட்டின் மனித உரிமைகள் விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி கூறியிருந்த கருத்து ஊடகங்களின் கவனத்தைப் பெற்றிருந்தது. எதிர்காலத்தில் மனித உரிமை மீறல்களுக்கு இடமளிக்கப் போவதில்லையென்ற அவருடைய கருத்தே இதற்குக் காரணமாக அமைந்தது.

ஜனாதிபதி தனது உரையில் 'நாங்கள் சர்வதேச சட்டதிட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகள் என்பவற்றை மதிக்கும் ஓர் நாடாக விளங்குகின்றோம். கடந்த காலங்களில் எமது நாட்டில் மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேச ரீதியில் எடுத்துச் செல்லப்பட்ட தவறான கருத்துகளை சீர்செய்யும் பொறுப்பு எங்களுக்கு உள்ளது. எனது ஆட்சிக் காலத்தில் எந்தவொரு விதத்திலும் மனித உரிமை மீறல்களுக்கு எமது அரசு உடந்தையாக இருக்கவில்லை.

அதேபோன்று எதிர்காலத்திலும் அவ்வாறான நிலைமைகள் ஏற்பட இடமளிக்கப் போவதில்லை. அவ்வாறான செயற்பாடுகளை நாங்கள் அங்கீகரிப்பதும் இல்லை' எனக் கூறியிருந்தார்.

**இரு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ள நிலையில், அரசாங்கத்தின் புதியதொரு பயணத்தை உறுதிப்படுத்தியிருக்கும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை விளக்க உரை**



## “நாட்டில் இனவாதத்துக்கு இடமில்லை; அனைத்து பிரஜைகளும் கௌரவத்துடன் வாழும் சூழல் ஏற்படுத்தப்படும்; மனித உரிமைகள் பேணப்படும்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளமை குறித்தும் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையில் பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

'யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மக்களின் வாழ்க்கையை வழமை நிலைமைக்கு கொண்டு வருவதற்கு நாங்கள் பாரிய முதலீடுகளைச் செய்துள்ளோம். யுத்தம் நிலவிய காலத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இராணுவத்தினரின் பயன்பாட்டிற்காக கையேற்கப்பட்டிருந்த காணிகளில் 90 வீதமானவற்றை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை நான் பாதுகாப்புச் செயலாளராக இருந்த போது ஆரம்பித்திருந்தேன். அந்தப் பிரதேசங்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தி, அமைதியான சூழலொன்றை ஏற்படுத்த எம்மால் முடிந்துள்ளதனால் எதிர்வரும் நாட்களில் மீதியாகவுள்ள காணிகளையும் விடுவிக்க எங்களால் இயலும்.

யுத்தத்தினால் காணாமற் போனவர்கள் தொடர்பான பிரச்சினை ஒரு தரப்பினருக்கு மாத்திரம் பொதுவானதல்ல. அனைவருக்கும் எம்மால் முடிந்தளவில் நீதி, நியாயம் வழங்க நாங்கள் நடவடிக்கை எடுப்போம். நாங்கள் இனவாதத்தை நிராகரிக்கின்றோம். நாட்டில் வாழும் அனைத்து பிரசைகளும் கௌரவத்துடன் வாழ்வதற்கும் அவர்களது அனைத்து உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் நாங்கள் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். இதனால் குறுகிய அரசியல் நோக்கங்கள் அடிப்படையில் மக்களை ஒருவர் மீது ஒருவரை ஏவி விடுவதை தற்போதாவதுநிறுத்துமாறு,அவ்வாறான அரசியல்வாதிகளிடம் வேண்டுகோள் விடுகின்றோம்' என ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

"நாட்டின் எதிர்காலத்தையும், நோயற்ற எதிர்கால சந்ததியையும் கருத்தில் கொண்டு அரசாங்கம் ஆரம்பித்த சேதன உரக் கொள்கை உள்ளிட்ட பல விடயங்கள் எதிர்க் கட்சியினரால் வேண்டுமென்றே விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்டன. இது பற்றி ஜனாதிபதி குறிப்பிடுகையில், 'நச்சுத்தன்மையற்ற பசுமை விவசாயத்திற்காக நாங்கள் எடுத்த கொள்கையை செயற்படுத்தும் போது, சில சிக்கல்களுக்கு முகம்கொடுக்க வேண்டியிருந்தது. எமது நோக்கம் மற்றும் திட்டம் தொடர்பாக சரியாக அறிவூட்டப்படாமையினாலும், திட்டத்தை அறிமுகப்படுத்துவதில் ஏற்பட்ட சில நடைமுறைச் சிக்கல்கள் அரசியல்மயமாக்கப்பட்டதாலும் இது தொடர்பாக தவறான புரிதல் ஏற்பட்டது. பசுமை விவசாயம் தொடர்பான பரந்த கருத்து பரப்பெல்லை சில நேரங்களில் சேதனப் பசளை என பொறுப்பானவர்களால் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டமை தவறான கருத்துக்கள் மக்கள் மயமாகுவதற்கு வழிவகுத்தது. அதற்கேற்ப சில முடிவுகள் பொதுமக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தியதால் அவற்றில் சில மாற்றங்களைச் செய்ய வேண்டியிருந்தது.

ஆனால், பசுமை விவசாயம் தொடர்பான நமது அரசின் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை. எனவே, குறைபாடுகளை நிவர்த்தி செய்து இக்கொள்கைகளை மிகவும் பயனுள்ள வகையில் முன்னோக்கி கொண்டு செல்ல நாம் எதிர்பார்க்கின்றோம். விவசாயத்தில் அதிக உற்பத்தித்திறனை அடைய நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதும், உயிரின பசளைப் பயன்பாட்டை ஊக்குவிப்பது மற்றும் நச்சுத்தன்மையற்ற விவசாய உற்பத்திகளுக்கான சர்வதேச சந்தையை உருவாக்குவதும் எங்கள் இறுதி இலக்காகும். அதனூடாக விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மற்றும் அதனை சார்ந்த சேவைகளை வழங்கும் மக்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும். இதன் மூலம் இலங்கையின் எதிர்கால பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டிற்கு வலுவான பங்களிப்பை பெற்றுக் கொள்ள நாம் எதிர்பார்க்கின்றோம்' என்றார் ஜனாதிபதி.

இவ்விடயத்தில் முன்வைத்த காலைப் பின்வைப்பதற்கு அரசாங்கம் தயாராக இல்லையென்பதை ஜனாதிபதி தனது உரையின் மூலம் தெளிவாகக் கூறியுள்ளார். நாட்டின் எதிர்காலம் குறித்த தொலைநோக்குப் பார்வையில் இதனை நோக்கினால் சேதன உரப் பயன்பாடு என்பது அனைவருக்கும் நன்மையளிக்கும் ஒரு விடயம் என்பது புரியும். இருந்த போதும் இரசாயன உரங்களின் பின்னணியில் உள்ள பெருநிறுவனங்கள் மற்றும் அவற்றின் பிடியில் சிக்கியுள்ள ஒரு சில சக்திகளே அரசாங்கத்தின் சேதன உரப் பயன்பாட்டைக் குழப்பியடித்து வருகின்றன. இருந்த போதும் அரசு உறுதியான நிலைப்பாட்டில் உள்ளது.

## தவறாக அர்த்தம் கொள்ளப்பட்ட பசுமை விவசாயம்



கொவிட்19 தொற்றுநோய் சூழலினால் தோன்றியிருக்கும் புதிய வாழ்க்கை முறையுடன் ஒன்றிப்போயுள்ள டிஜிட்டல் தொழில்நுட்பத்தை அபிவிருத்தி செய்வது பற்றியும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. அனைத்துத் தரப்பினருக்கும் டிஜிட்டல் தொழில்நுட்பம் சென்றடையும் வகையில் இணைய வசதிவாய்ப்புக்கள் அதிகரிக்கப்படும் என்பதும் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை எதிர்க் கட்சியினர் விமர்சிக்கின்ற போதும் தொலைநோக்குப் பார்வையில் நாட்டின் எதிர்காலம் பற்றி சிந்தித்து ஜனாதிபதி இந்த உரையை நிகழ்த்தியிருந்தார்.



# தோட்டக் கட்டமைப்பிலிருந்து மலையக சமூகம் முற்றாக விடுவிக்கப்பட வேண்டும்

கடந்த வாரம் புலம் பெயர்தல் சமூக மாற்றத்துக்கு அடையாளமாக இருக்க முடியாது. அது இருப்பையே கேள்விக்குறியாக்கும்' என்பதை பதிவிட்டிருந்தோம். இது பற்றி ஊடகத்துறைசார் நண்பரொருவர் சில சந்தேகங்களை அலைபேசி வாயிலாக எழுப்பினார். அதனையொட்டி புலம் பெயர்வதற்கான பின்புலமானது எந்தெந்த வகையில் சமூக மற்றத்துக்கான அடிப்படை அம்சங்களை ஆட்டம்காண வைக்கிறது என்பதை இங்கு பதிவிட விழைகின்றோம்.

மலையக சமூகம் இன்று பின்னடைவு கண்டிருப்பது ஒன்றும் புதிய தகவல் அல்ல. அயல் நாட்டு உள்நாட்டு சமூக பரிமாணங்ளோடு ஒப்பீடு செய்யும்போது இந்த யதார்த்த நிலைமை தெளிவாகப் புரியும். சமூக ரீதியிலான ஆய்வுகளை உள்வாங்கிக் கொண்டு ஏற்ற இறக்கங்களை இனம் கண்டு அதற்கேற்புடையதான சமூக அபிவிருத்தித் திட்டங்கள் எதனையும் முதன்மைப்படுத்தாமை மலையகத் தலைமைகள் கடந்த காலங்களில் விட்ட தவறுகளாகும். ஏனெனில் அன்றாடப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வகையில் தொழிற்சங்க அரசியல் முன்னெடுக்கப்பட்டமையே இதற்கு அடிப்படையாக அமைகின்றது. இதனால் சமூக கௌரவங்களுக்கான தேடல்கள் இடம்பெறவில்லை. இதுபற்றிப் பொ'தாக யாரும் அலட்டிக் கொள்ளவும் இல்லை. இதற்கு இன்னுமொரு பிரதான காரணமாக அமைந்ததுதான் பெருந்தோட்டக் கட்டமைப்பு. இலங்கையைப் பொறுத்தவரை பெருந்தோட்டத் தொழிலாளர்களது சமூக நலன் பாதுகாப்பு என்பன ஆரம்ப காலந் தொட்டே தொழிற் சட்டத்துக்குக் கீழேயே இருந்து வருகின்றது. இதனை செயற்படுத்த வேண்டிய பொறுப்பு பெருந்தோட்ட முகாமைத்துவத்திடம் உள்ளது. ஆனால் பெருந்தோட்ட முகாமைத்துவம் தோட்டத் தொழிலாளரின் நலனைவிட தமது ஆதாயத்தில் மட்டுமே அக்கறை காட்டி இயங்குவதால் தோட்ட மக்களுக்கான சேவையை மிக அடிமட்ட ரீதியிலேயே மேற்கொண்டு வருகின்றது. பெருந்தோட்ட முறைமைக்கான ஆட்சேர்ப்பு என்பதும் இப்படித்தான் அமைந்தது.

இலங்கை போன்ற நாடுகளில் பெருந்தோட்ட முறைமை நடைமுறைக்கு வருவதற்கு முன்பு அமெரிக்காவின் சில இடங்களிலும் கரீபியன் தீவுகளிலும் தான் ஆரம்பிக்கப்பட்டது என்பது ஆய்வாளர்களது குறிப்பு. ஆபிரிக்காவில் இருந்து அடிமைகளை விலைக்கு வாங்கி கப்பல் மூலமாக இந்நாடுகளுக்கு கொண்டு வரப்பட்டுக் குடியேற்றப்பட்டதே வரலாறு. இவ்வாறு குடியேற்றப்பட்டவர்கள் அடிமைத் தொழிலாளர்களாக நடத்தப்பட்டார்கள். பிற்பட்ட காலத்தில் அடிமைநிலை வர்த்தகத்துக்கு எதிரான சட்டங்கள் இயற்றப்பட்டு அடிமை முறை முற்றாக ஒழிக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் தோன்றியது. அதனாலேயே ஆங்கிலேயே அரசாங்கம் அண்மை நாடான இந்தியாவில் இருந்து ஆட்களைத் திரட்ட வேண்டியேற்பட்டது. ஏனெனில் இலங்கையில் பெருந்தோட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டபோது இத்தோட்டங்கள் அடிமை தொழிலாளர்களை நம்பியிருக்கவில்லை என்பர் வரலாற்றாய்வாளர்.

ஒப்பந்தத் தொழிலாளர்களாகவே இவர்கள் உள்வாங்கப்பட்டனர். இந்த ஒப்பந்தமானது ஐந்தாண்டு வரையறையைக் கொண்டிருந்தது. கங்காணிமார்களின் பொறுப்பில் வந்தவர்களும் இவர்களுக்குள் அடங்கினார்கள். குறிப்பிட்டகாலம் பெருந்தோட்டங்களில் வேலை செய்த பின்னர் மீண்டும் தங்கள் தாய்நாடு திரும்பலாம் என்ற அடிப்படையிலேயே இவர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டனர். ஆனால் இவ்வாறு வந்தவர்



கள் பிற்காலத்தில் தாம் குடியேறிய புதிய நாடுகளிலேயே வாழத் தலைப்பட்டமை ஒரு திருப்பமாக அமைந்தது. இதனால் இலங்கை போன்ற நாடுகளில் இது சமூக அரசியல் ரீதியிலான பிரச்சினைகளை உருவாக்கவே செய்தது. தவிர புதிதாக ஒரு தேசிய இனமாக இவர்களை அங்கீகரிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தையும் தோற்றுவித்தது. ஆரம்ப காலத்தில் இவ்வாறு வேலைக்கு அமர்த்தப்பட்டவர்கள் தோட்டங்களில் இருந்து மாறி வேறு தோட்டங்களுக்கோ வேறு இடங்களுக்கோ சென்றால் அவா'களுக்கு எதிராக வழக்குக் தொடா'ந்து மறுபடியும் அவா'களை அதே தோட்டத்திற்குக் கொண்டு வரலாம் என்ற சட்டம் நடைமுறையில் இருந்தது. இதை 20ஆம் நூற்றாண்டின் அடிமைத்துவம் என்று வர்ணிப்பார் மலையக ஆய்வாளர் பி.பி. தேவராஜ்.

மலையக சமூகம் 1820 முதல் 1840 வரையிலான காலப்பகுதியில் இவ்வாறு குடியேற்றம் கண்டதால் நீண்ட வரலாற்றுப் பதிவினை கொண்டதாகக் காணப்படுகின்றது. இதனால் பிற சமூகங்களிலிருந்து வேறுபட்டதும் தனித்துவமானதுமான பாரம்பரிய, பண்பட்ட கலை, கலாசார பண்பியல்புகளின் நீட்சியினை நிலை நிறுத்திக்கொள்ள முடிந்திருக்கின்றது. மண்வாசனையுடன் கூடிய சொல்லாடல் வழக்கு, சரித்திரம் சார்ந்த இலக்கியங்கள், வாழ்வியல் பேசும் நாட்டாரியல் பாடல்கள். இங்கு மரபோச்சிக் கொண்டிருக்கின்றன. அரசியல் பொருளாதார ரீதியாக தனித்துவமான உட்கட்டமைப்பு வாழ்க்கை முறை இங்கு இம் மக்களை அடையாளப்படுத்துகின்றன.

இத்தனை அம்சங்களும் இங்கு சிறப்புப் பெற்றிருக்கும் பின்புலத்தில் அடிமைத்தனம் எப்படி அங்கு அதிகாரம் செய்ய முடியும்?' பின்னடைவு கண்ட சமூகம் என்று அடையாளப்படுத்துவது தகுமா? என்னும சந்தேகம் எழுவது சகஜமே

இங்குதான் பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையை அறிமுகப்படுத்திய ஆங்கிலேயரின் நிர்வாக கட்டமைப்பின் சாதுரியம் மறைந்திருக்கிறது. இந்திய வம்சாவளித் தமிழா'கள் செறிந்து வாழ்கின்ற மாவட்டங்களாக கண்டி, மாத்தளை, நுவரெலியா, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, கொழும்பு ஆகிய மாவட்டங்கள் காணப்படுகின்றன. இது தவிர களுத்துறை, கம்பஹா, காலி, மாத்தறை ஆகிய மாவட்டங்களில் குறைவான தொகையினர் வாழ்ந்து வருகின்றார்கள். அத்துடன் வட மாகாண மாவட்டங்களான வவுனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களிலும் மலையகத்தவர்கள் வாழ்ந்து வருகின்றாரா'கள்.

பெருந்தோட்டப் பிரதேசங்களுக்கு உள்ளும் புறமும் வெளிமாவட்டங்கள் வாழும் மலையக சமூகம் பெரும் மாற்றங்கள் ஏதும் ஏற்படாத நிலையிலேயே வாழ்ந்து கொண்டிருப்பதாக அங்கலாய்ப்புகள் எழாமல் இல்லை. அடிமைத்தன சிந்தனையில் இருந்து விடுபடாத ஒரு சமூக கட்டமைப்பு இங்கு காணப்படுவதை மறுக்க முடியாது. ஆசிரியா' தொழிலும், மோட்டாா' சைக்கிள், முச்சக்கர, வண்டி, வீட்டு வசதி மட்டும் சமூக மாற்றத்துக்கான வித்திடல் ஆகிவிடுமா என்னும் கேள்வி எழுகின்றது. புத்திஜீவிகளின் பங்களிப்பு சமூகமாற்றம் குறித்து எந்தளவு பிரயோகிக்கப்படுகின்றது என்பதில் சர்ச்சைகள் இருக்கின்றன. கல்வியிலும் தொழில் மட்டத்திலும் உயர்ச்சி கண்டோரில் எத்தனை பேர் சமூக பிரக்ஞையுடன் சேர்ந்தியங்குகிறார்கள் என்பது ஆய்வுக்குரிய சங்கதி.

பெருந்'தோட்டக் கட்டமைப்ப ஆரம்பத்தில் இருந்தே சிங்கள கிராமங்களோடு திட்டமிட்ட இடைவெளியை ஏற்படுத்தியதன் பயனடைந்தே வந்துள்ளது. சிங்கள கிராமத்தவர்கள் போல காணியுரிமை வீட்டுரிமை வேண்டும் என்ற அகவுணர்வு வந்து விடாதபடி தொழில் ரீதியான ஒரு வாழ்விட பின்புலத்தைக் கொண்டதே மலையக சமூகம் என்று சுய விமர்சனம் செய்து கொள்ளும்படியான ஒரு நிலைமையத் தோற்றுவிப்பதில் பெருந்தோட்டக் கட்டமைப்பு எதிர்பார்த்த வெற்றியைத் தக்கவைத்தே வந்துள்ளது. தோட்டம் கிராமங்களுக்கு இடையிலான ஒட்டுறவின்மை, தோட்டக் குடியிருப்புகள் சாதீய ரீதியில் பகிரப்பட்டமை கூட திட்டமிடப்பட்ட நடவடிக்கைகளேயாகும். பெருந்தோட்ட மக்களின் சகல தேவைகளும் தோட்ட நிர்வாகங்களாலேயே நிறைவேற்றப்பட்டன. தேவைகளை அவைகளே தீர்மானித்தன. தேவையானவற்றை தோட்ட நிர்வாகங்களே வழங்கும். அவைகளால் மட்டுமே தம்மைப் பராமரிக்க முடியும் என்ற நம்பிக்கை விதைக்கப்பட்டு அமோகமாக அறுவடையும் பெறப்பட்டது. ஒரு வகையில் இது எழுதப்படாத அடிமைசாசனம். 1930களில் பெருந்தோட்ட மக்களின் நிலையை அரை அடிமை நிலையென கணித்து கண்டனம் வெளியிட்டது இந்திய அரசு.

ஆனால் அதிலிருந்து இம்மக்களை விடுக்க எதையும் செய்யவில்லை. இதனாலலேயே வெளிநாட்டுக் கம்பனிகள் வெளியேறிய பின்னும் சுதேசிய நிர்வாகம் அதே அடிமை நிலை போக்கிலேயே இம்மக்களை நடத்த ஆரம்பித்தது. இன்று நாட்டில் கல்வி இலவசம், மருத்துவ சேவை இலவசம் என்பது பொதுவான வரப்பிரசாதங்களாகும். ஆனால் மலையக சமூகம் அந்த வாய்ப்புகளைப் பெறுகின்றதா என்றால் யோசிக்க வேண்டியுள்ளது.

கல்வி, சுகாதாரம், போஷாக்கு நிலைகளில் மலையகம் பின்தங்கியே காணப்படுகின்றது. பெருந்தோட்டக் கட்டமைப்பு இவ்வளவு காலமும் இவற்றை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததாலேயே இந்நிலைமை. வீடமைப்பு, வீதி போக்குவரத்து, சுகாதாரம் அனைத்தும் தோட்ட நிர்வாகங்களின் பொறுப்பில் இருந்ததால் தோட்ட மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படாமலே போயுள்ளன. பொது நிர்வாக செயற்பாடுகளுக்குக் கீழ் பெருந்தோட்ட மக்கள் முற்றுமுழுதாக உள்வாங்கப்பட்டால் மட்டுமே தமது அபிலாஷைகளைப் பெறக்கூடியதாக இருக்கும். இம்மாற்றம் ஏற்படாத பட்சத்தில் பிற சமூகத்திடம் இருந்து ஒப்பீட்டளவில் மட்டுப்படுத்தப்பட்ட வளர்ச்சியை மட்டுமே கொண்டிருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் என்பதே பலரதும் அபிப்பிராயமாகும். தோட்ட நிர்வாகங்கள், தொழில் வழங்குனர்கள் என்ற வட்டத்துக்குள் முடக்கப்

பன்.பாலா...

பட்டால் மட்டுமே பொது நிர்வாக சேவைகள் பெருந்தோட்டப் பிரதேசங்களையும் சென்றடைய முடியும்.

இன்று பிரதேச சபைகளின் அபிவிருத்திப் பணிகளை பெருந்தோட்ட மக்கள் பெறக்கூடிய வாய்ப்பு எற்பட்டுள்ளது. தனித்தனிவீடுகள் அமைக்கும் வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்திய அரசாங்கம் 14 ஆயிரம் வீடுகளை அமைத்துக்கொள்ள நிதி வழங்கியுள்ளது சொந்தமாக காணி உரிமை இல்லாத காரணத்தால் இந்திய வீடமைப்பு திட்டம் சற்று வேகம் குன்றியே இடம் பெறவேண்டியுள்ளது. பெருந்தோட்ட தொழில் கௌரவமான தொழில்தானா என்னும் கேள்வி மலையக இளைய தலைமுறையினர் மத்தியில் நீண்ட நாட்களாகவே இருந்து வருகின்றது.

தேயிலைத் தோட்டத் தொழிலைக் கைவிடுவதே பெருந்தோட்டக் கட்டமைப்பலிருந்து வெளியேறுவதற்கான மார்க்கம் என்று சிலர் எண்ணுகிறார்கள். பெருந்தோட்ட நிா'வாக கட்டமைப்பு தடைபோடுகின்றதே தவிர அத்துறைசார் தொழில் அல்ல. எனவேதான் அத்தொழிக் கூலித்தொழில் என்ற நிலைமையில் இருந்து விடுவிக்கப்பட்டு கௌரவமான தொழில் என்ற உணர்வை உருவாக்க வேண்டியது அவசியமானது.

மலையகத்தில் புதிய கிராமங்கள் அமைப்பதும் ஆசிரியர் தொழில் பெற்றுக்கொடுப்பதும் அடிப்படை ரீதியிலான சமூக மாற்றத்துக்கு வழி வகுத்துவிடப் போவதில்லை. இவை ஆரம்பம் மட்டுமே. வாழ்விட உரிமை, வேலை வாய்ப்பின்மை இரண்டும் மட்டுமே பின்னடைவுக்கான காரணங்களல்ல. இவை காரணிகளில் இரு அம்சங்களே தோட்டத் தொழிலையும் ஆசிரியர் தொழிலையும் விட்டால் வேறு தொழில் வாய்ப்புகள் கிடையாது. பொருளாதார வளத்துக்கான ஊக்கிகள் எதுவும் காணப்படவில்லை. இதனால் ஆயிரக் கணக்கானோர் தோட்டங்களைவிட்டு வெளியேறியுள்ளார்கள். இவா'கள் மீண்டும் மலையகம் திரும்புவதற்கான வகையில் தொழில் பேட்டைகள் ஏற்படுத்தியாக வேண்டும.' மலையக இளைய தலைமுறையினரைக் கருத்திற்கொண்டு வேலைத்திட்டங்கள் உருவாக்கப்படுவது தவிர்க்க முடியாத விடயம்.

ஏனைய சமூகங்களோடு ஒப்பிடுகையில் 30 வருடங்கள் முழுமைபெறாத கல்வி நிலை பின்டைவு மலையக சமூகத்துக்கு உண்டு. சகல தோட்டப் பாடசாலைகளும் அரசுடைமை ஆக்கப்பட்டதன் பின்னரே இலவசக் கல்வியின் பயன்பாடுகள் இங்கு கிட்ட ஆரம்பித்தன.

ஆரம்பக் கல்வி நிலை அண்மைக் காலங்களில் நல்ல நிலையை எய்துள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 2ஆம் நிலைக் கல்வி ஓரளவு நல்ல வளர்ச்சியை கண்டிருக்கும் அதேவேளை 3 ஆம் நிலைக்கல்வி உயர் கல்வி குறைந்த வளர்ச்சியைக் காட்டி (2017) நிற்கின்றது. இதன்படி தோட்டக் கட்டமைப்பின் தாக்கமானது தொழிலாளர்களை மட்டுமின்றி அவர்களின் பிள்ளைகளையும் பாதிக்கவே செய்கின்றது என்கிறார்கள் கல்வி இயலாளர்கள். இதனாலேயே பாடசாலை இடைவிலகல் என்பது மலையகத்தின் கல்வி அபிவிருத்தியில் பாரிய அச்சுறுத்தலாக மாறி வருகின்றது. சமூக அபிவிருத்தி என்பது வெளித் தோற்றங்களை வைத்து எடைபோடும் சமாச்சாரமல்ல.

அதன் அடையாளங்கள் இதர சமூகங்களுடனான ஒப்பீட்டின் பேரில் தீர்மானிக்கப்பட வேண்டியவை. அதனால் மாற்றம் காணமுடியாத சமூகம் என்று மட்டமாக யாரும் தீர்மானித்துவிட முடியாது. மாற்றங்களை மடக்கி நிற்கும் ஏதுக்கள் களைந்தெறியப்பட வேண்டியுள்ளது. அதில் முக்கியமான ஒன்றுதான் வாழ்வாதாரப் போராட்டத்துக்கான தீர்வு. இதனைப் பெற்றுத்தர வேண்டியது மலையகத் தலைமைகளின் கடப்பாடு.

தன்னுணர்வு பெறும் சமூகம் பின்னடைவைக் கடந்து பேரேழுச்சிக் கொள்ளும் என்பதே பன்னாட்டுச் சமூக சரித்திரங்கள் சொல்லும் பாடம்.

# காட்டு வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட புசல்லாவ ஆமனிகம பாலம்

## துயவு செய்து திருத்திக் கொடுங்கள்!



மலையக தோட்டப்பகுதிகள் கிராமங்களாகி மக்களின் வாழ்வாதாரம் கணிசமான அளவு உயர்வடைந்துள்ளது. கண்டி மாவட்டத்தில் 50 இற்கும் அதிகமான தோட்டங்கள் மூடப்பட்டுள்ளன. இங்கு வாழ்ந்த தோட்ட மக்களுக்கு காணிகள் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் சிங்கள கிராம மக்களுக்கு நிகராக வாழ்கின்றனர்.

சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களாகவும் சுயதொழில் புரிபவர்களாகவும் விளங்கும் இவர்கள், தமது காணியில் மிளகு, கராம்பு, மரக்கறி விவசாயம் என நல்ல வருமானம் தரும் விவசாயத்தை தாமே உருவாக்கிக் கொண்டுள்ளனர். தோட்ட வாழ்க்கை முறையை விட கிராம வாழ்க்கை முறை பலமடங்கு மேலானது.

தான் உண்டு தன்கடமை உண்டு என காலத்தையும் நேரத்தையும் வீணாக்காது பயன்தரும் விதத்தில் பயன்படுத்த கிராம வாழ்க்கை இவர்களுக்கு கற்றுக்கொடுத்துள்ளது.

கூலிக்காரன் அல்ல, நான் சிறுதேயிலை தோட்ட உரிமையாளன் என்ற கௌரவம் கொண்டவர்களாக கடைகளிலும் கட்டுமானப் பணிகளிலும் இளைஞர்கள் வாகனம் திருத்தும் கரேஜ்களிலும் வேல்டிங் பில்டிங்ஸ் என பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த கிராமங்களாக மாறிய தோட்டங்கள் தோட்டங்களாகவே இருந்திருந்தால் இவர்களும் தோட்டத்தில் கூலிவேலைக்கு தான் சென்றிருப்பார்கள்.

இப்படி ஒருபக்கம் முன்னேற்றகரமாக இருந்த போதும் தோட்டங்களாக இருந்த போது தொழிற்சங்கங்களில் மாதாமாதம் சந்தா செலுத்தும் போது இருந்த அரசியல் தொடர்புகள் தற்போது அற்றுப்போய்விட்டன. தோட்டமாக இருக்கும்போது தோட்டப் பாதைகள் போன்ற போக்குவரத்து செய்யக் கூடியதாக தோட்ட நிர்வாகம் அவ்வப்போது பாதைகளை பராமரித்து வந்தன.

கிராமங்களாக மாறிய பிறகு இவ்வாறான கிராமங்களின் அபிவிருத்தி பற்றி அரசோ அரசியல்வாதிகளோ கண்டுகொள்வதில்லை. தேர்தல் காலங்களில் மட்டும் வருகின்றனர். அக்காலகட்டத்தில் மட்டும் வாக்குறுதிகளை அள்ளி குதிக்கின்றனர். நீங்கள் தமிழன்தானே தமிழனுக்கு வாக்கு கொடுங்கள் என இனவுணர்வைத் தூண்டி வாக்குகளை பெற்றுக் கொள்கின்றனர். கிராமங்களைக் கண்டுகொள்ளாமைக்கு சந்தாப்பணம் இல்லை என்பது தான் ஒரே காரணமாகும். இவ்வாறு கவனிப்பாரற்ற தமிழ்க்கிராமங்கள் பல உள்ளன.

கண்டி மாவட்டம் உடபலாத்த பிரதேசத்திற்கு உட்பட்ட புஸ்ஸலாவ இரட்டை பாதை செல்வகந்தை ஆமனிகம கிராமத்திற்கு செல்லும் பிரதான பாதையில் உள்ள பாலம் இரண்டு மாதங்களுக்கு முன் பெய்த மழை

ஆர். நவராஜா ...

வெள்ளத்தில் பாலத்தின் மூன்றில் ஒருபகுதி அடித்து செல்லப்பட்டுள்ளது. இப்பகுதியில் வாழும் சுமார் 150 குடும்பங்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 40 அடி நீளமான பாலமே அடித்து செல்லப்பட்டுள்ளது.

இரட்டைப்பாதையின் ஊடாக பயணிக்க வேண்டுமெனில் மேலதிகமாக 3 கிலோ மீற்றர் தூரம் அதிகபணம் செலவு செய்து பயணிக்க வேண்டும். வாகனங்கள் மட்டுமல்லாது நடைப்பயணமாக கூட ஆற்றை கடக்க முடியாது உள்ளது. மழைக்காலத்தில் பாலத்திற்கு மேல் வெள்ளம் பாய்கின்றது. இங்கு வாழ்பவர்கள் சிறுதேயிலை தோட்ட உரிமையாளர்கள். தமது உற்பத்தி பொருட்களை எடுத்து செல்ல முடியாதுள்ளது. பாடசாலை மாணவர்கள், நோயாளிகள், கர்ப்பிணிகள் இப்பாலத்தின் ஊடாக பயணிப்பதில் பெரும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளன. மழைக்காலத்தில் பெரும் காற்றாட்டு வெள்ளம் பாயும் ஆறு இது. இவ்விடத்தில் புதிய பாலமொன்றை அமைத்து தரவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.









(படங்கள் : தெல்தோட்டை தினகரன் நிருபர்)

# தமிழ்த்தரப்பு ஒத்துழைப்பு அரசியலின் யதார்த்தங்களை புரிந்து கொள்ளாதிருப்பது ஏன்?

சுஜப் எம். காசிம்

அபிவிருத்தி இலக்குகளில் தஞ்சமடைவது மக்கள் ஆணையை மீறுவதாகக் கருதும் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, இனப்பிரச்சினையை மூடிமறைக்கும் எந்த யுக்திகளிலும் சிக்காமல் பயணிப்பதாகவே கூறுகிறது. ஒன்பதாவது பாராளுமன்றத்தின், இரண்டாவது கூட்டத்தொடரில் விடுக்கப்பட்ட அழைப்பையும் இதற்காகவே பொருட்படுத்தாமலும் உள்ளது இக்கட்சி. எனினும், ஜனாதிபதியின் அழைப்பிலிருந்து ஒரு புதிய பயணத்துக்கு தயாராகியிருக்கலாமென்ற கருத்துக்களும் தமிழர் தரப்பில் இருக்கின்றனதான். எதிர்ப்போக்குகளால், அடைந்தவை எதுவுமின்றி இருக்கையில், இணக்கப் பயணம் பற்றி யோசிக்கலாம்தானே! இந்த நிலைப்பாடுகளிலுள்ளோர்தா ன், ஜனாதிபதியின் உரையிலும் நியாயம் காண்கின்றனர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்திகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவது, இவர்களை எந்தளவில் தரம் குறைக்கும்? உரிமைக்காக குரலெழுப்ப வந்த எம்.பிக்கள், தங்களது பன்முகப்படுத்தப்பட்ட நிதிகளில் வேலைத்திட்டங்களை முன்னெடுக்காமலா இருக்கின்றனர்? இல்லையே! இதைப்போல, அரசாங்கத்தின் அபிவிருத்தி, வாழ்வாதார மற்றும் புரட்சித்திட்டங்களுக்கு ஒத்துழைக்கவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒத்துழைப்புக்கள் அரசாங்கத்துக்கு ஒத்தூதுவதாக அமையும் என்றுதானா, தமிழ்கட்சிகள் ஒதுங்கினவோ தெரியாது!

அரசாங்கத் தலைவரின் உரையில், இனப்பிரச்சினை பற்றியோ அல்லது தீர்வுக்கான எத்தனங்கள் குறித்தோ எதுவுமில்லை. இதனால், ஒத்துழைத்து அல்லது ஒன்றித்து இயங்குவது, ஒற்றையாட்சிக்கான அங்கீகாரமாக சர்வதேசத்தில் அடையாளப்படலாமென தமிழ் கட்சிகள் ஒதுங்கி நிற்கின்றன.

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த அழுத்தம் வழங்குமாறு இந்தியாவுக்கு கடிதமனுப்பியுள்ள இந்தச் சூழலில், இது ராஜதந்திரம் இல்லையென்பதுதான் தமிழ் தலைமைகளின் ராஜதந்திரம். அதுவும் ஜெனீவா அமர்வுகள், பெப்ரவரி 28 இல் ஆரம்பமாகி, ஏப்ரல் ஒன்றுவரை நடைபெறவுமுள்ளன. இதற்குள் மார்ச் 03 இலங்கை விவகாரத்துக்கென ஒதுக்கப்பட்டுமுள்ளதே!

கடந்த வருடத்தைப் போன்று கடுமையாக உழைத்தால், இந்த முறையும் சாதகம் என்பதுதான் இவர்களிடமுள்ள வியூகம்.இதே, ராஜதந்திரம் அரசாங்கத்துக்கும் உள்ளதெனச் சிலர் சிந்திக்கின்றனர். ஆனாலும், வெளிநாட்டு அழுத்தங்களைப் பொருட்படுத்தாதுள்ள போக்குகள், ஜெனீவா அமர்வில் இதற்கு முன்னர் வெற்றி, தோல்வியென இரண்டையும் சந்தித்த அனுபவங்கள் எல்லாம் களத்தின் கனதியை உணர்த்தாமலாயிருக்கும்! எனவே, ஒத்துழைக்குமாறு விடுக்கப்பட்ட அழைப்பிலுள்ள பிரதானம், பீதியாக இருக்காது என்பது உண்மையே!



ஆனால், ராஜதந்திரம் இல்லாமலில்லை.

எனவே, இவ்விரு ராஜதந்திரங்கள் பற்றிய அல்லது இந்த தந்திரங்கள் ஏன் எழுகின்றன? என்ற புரிதல்களில் பயணிப்பதற்கு தயாராக வேண்டியுள்ளது.

“இருப்போர் எல்லோரும் இலங்கையர்தான். சிறுபான்மை மற்றும் பெரும்பான்மை என்று எவருமில்லை“ என்கிறது இந்த அரசு. மொழிகளுக்காக அல்லது மதத்துக்காக சிந்திக்கும் மனநிலைகளிலிருந்து விடுபட்ட இலங்கைக்குள் வாழத்தான் அழைக்கிறோம். ஜனாதிபதியின் இந்த அழைப்பால், அரசியலுக்காகப் பேசுவோர் அதிர்ச்சியடைந்திருப்பர். உரிமைகளுக்காகப் பேசுவோர் உணர்ச்சிவசப்பட்டிருப்பர்.

தனிப்பட்ட ஆளுகை மாத்திரம் தான் உரிமை என்பதில்லையே! பாதைகள், பல்கலைக்கழகங்கள், பொருளாதார மேம்பாடுகள் மற்றும் வாழிடங்களின் பாதுகாப்புக்களும் உரிமைகளிலுள்ளவைதான். ஆனால், இவை பாரபட்சமின்றி வழங்கப்பட வேண்டும். வாழும் உரிமையைத்தான் தமிழர்கள் கேட்பதாக குரல்கொடுப்போர், “இவைகளைப் பெற்று தமிழர்களை வாழவிடுங்கள், பலிக்கடாக்களாக்காதீர்கள்“ என்ற விவாதப் பொறியைத்தான் அரசாங்கம் முன்வைத்துள்ளது.

இவை அனைத்தையும் பிறரிடமிருந்து பெறாமல், தமிழர்கள் சுயமாகப் பெற்று வாழும் அரசியல் அதிகாரமே எங்களுக்கு அவசியமென்கிறது தமிழர் தரப்பு.

இவற்றைப் பெறுவதில் கடந்த காலங்களில் காட்டப்பட்ட பாரபட்சங்களே அதிகார மோதலாகப் பரிணமித்ததென்பதுதான் இவர்களது வாதம்.

என்னவோ, இவை எல்லாம் இப்போது வன்முறைகளல்லாது வாதங்களாக மாறியிருப்பதால்தான், அழிவுகளிலில்லாது நமக்கு வாழக் கிடைக்கிறது. அந்தளவில் இது நிம்மதிதான்!

## நுவரெலியாவில் புதிய பிரதேச செயலகங்களை நிறுவுக

# கையெழுத்து வேட்டையில் மலையக அரசியல் அரங்கம்



நுவரெலிய மாவட்டத்தில் ஐந்து பிரதேச புதிய செயலகங்களை உருவாக்குவதற்கு பிரகடனம் செய்யப்பட்ட அதே வர்த்தமானியில் தான் காலி மாவட்ட மூன்று புதிய பிரதேச செயலகங்களுக்கான அறிவி`த்தலும் வெளியானது.

ஆம் மூன்று முழுமையாக நடைமுறைக்கு வந்துள்ள நிலையில் நுவரெலியாவில் அது மறுக்கப்பட்டு ஒரு உபபிரதேச செயலகம் மாத்திரமே திறக்கப்பட்டுள்ளது. எனவே வர்த்தமானியில் பிரகடனம் செய்தவாறு 5 புதிய பிரதேச செயலகங்களையும் அமைக்க வேண்டும் எனவும் வலியுறுத்தி மலையக அரசியல் அரங்கம் பொதுமக்கள் மனுவில் கையொப்பமிடும் இயக்கத்தை ஆரம்பித்துள்ளது.

கடந்த டிசம்பர் 29ம் திகதி கொழும்பில் இடம்பெற்ற மலையக அரசியல் அரங்கத்தின் தலைநகர் செயற்பாடுகளுக்கான அங்குரார்ப்பண கூட்டத்தில் முன்னாள் நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் உள்ளிட்ட அரங்கத்தின் தலைநகர் செயற்பாட்டாளர்கள் மக்கள் மனுவில் கையொப்பமிட்டு இயக்கத்தை ஆரம்பித்து வைத்தனர்.

நுவரெலிய மாவட்டத்திற்கு என வர்த்தமானி பிரகடனம் செய்யப்பட்ட ஐந்து புதிய பிரதேச செயலகங்களை அமைப்பதற்கான பொது மக்கள் மனு

எனும் இந்த கையெழுத்து இயக்கமானது நுவரெலிய மாவட்டம் முழுவதும் வாழும் சகல சமூக ஆர்வலர்களிடம் கொண்டு செல்லப்படுவதுடன், நுவரெலிய மாவட்டத்துக்கு வெளியே வாழும் ஆர்வலர்களின் ஒருமைப்பாட்டை பெறும் பொருட்டு இலத்திரனியல் மனு வடிவிலும் தமிழ் சிங்களம் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் விநியோகம் செய்யப்பட்டு கையொப்பங்கள் பெறப்பட உள்ளன.

மனுவின் பிரதிகள் தேவைப்படுவோர் அரங்கத்தின் பிரதான அமைப்பாளர் ஆர். செந்தூரனைத் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் கையொப்பத்தை இட்டு அதில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கலாம். இலத்திரனியல் மனுவை செயலாளர் நா. கிருஷ்ணகுமாரைத் தொடர்பு கொண்டு மின்னஞ்சல் வழியாக பெற முடியும.` தலைமை ஒருங்கிணைப்பாளர் மயில்வாகனம் திலகராஜ் இத் தகவலை ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

**மக்கள் மனுவின் உள்ளடக்கம் பின்வருமாறு :**

2016 ஆம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றில் இந்தக் கோரிக்கையை அப்போதைய நுவரெலிய மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜா சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையாக முன்வைத்ததை அடுத்து, பிரேரணைக்கு பதில் அளித்த அப்போதைய உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன நுவரெலிய மாவட்ட பிரதேச செயலகங்களை ஐந்தில் இருந்து பத்தாக உயர்த்துவதற்கு உறுதியளித்தார்.

2018 ஆம் ஆண்டு நுவரெலிய மாவட்ட அனைத்துக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட செயலாளர், பிரதேச செயலாளர்கள் உள்ளிட்டவர்களை பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் உள்ள தனது அலுவலகத்தில் சந்தித்த அமைச்சர் வஜிர அபேவர்தன ஐந்து புதிய பிரதேச செயலகங்களை அமைப்பதற்கு உத்தரவாதம் அளித்ததுடன் அதற்கான அமைச்சரவைப் பத்திரத்தையும் சமர்ப்பித்து அமைச்சரவை அனுமதியைப் பெற்றுக் கொண்டார்.

அந்த அமைச்சரவைப் பத்திரத்தில் நுவரெலியாவுக்கு மேலதிகமாக காலி மாவட்டத்திலும் (அமைச்சரின் மாவட்டம்) மேலதிக மூன்று பிரதேச செயலகங்களை அமைக்க அனுமதி பெறப்பட்டு இருந்தது.

2019 ஒக்டோபர் 30 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் நுவரெலிய மாவட்டத்தில் புதிய ஐந்து பிரதேச செயலகங்களும், காலி மாவட்டத்தில் புதிய மூன்று பிரதேச செயலகங்களும் உருவாக்கப்படுவதற்கான பிரகடனம் வெளியானது.

2020 மார்ச் முதலாம் திகதி முதல் நுவரெலிய மாவட்டத்தில் புதிய ஐந்து பிரதேச செயலகங்களை திறப்பதற்கும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

2021 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் ஆகும்போது காலி மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மூன்று பிரதேச செயலகங்கள் பத்தேகம இரண்டாகப் பிரிக்கப்பட்டு வந்துரம்ப என்ற புதிய பிரதேச செயலகமும், ஹிக்கடுவை பிரதேச செயலகம் மூன்றாகப் பிரிக்கப்பட்டு மேலதிகமாக ரத்கம, மாதம்பாகம ஆகிய புதிய பிரதேச செயலகங்களும் அமைக்கப்படுள்ளன. ஆனால் அதே வர்த்தமானியில் பிரகடனம் செய்யப்பட்ட நுவரெலிய மாவட்டத்தின் (அம்பகமுவ) நோர்வூட், (நுவரெலிய) தலவாக்கலை, (வலப்பன) ராகலை, (கொத்மலை) திஸ்பனை, (ஹங்குரங்கெத்த) மத்துரட்ட புதிய ஐந்து பிரதேச செயலகங்லகளும் நடைமுறைக்கு வரவில்லை.

2021 நவம்பர் மாதம் நுவரெலிய மாவட்டச் செயலாளர் நந்தன வைச்சந்தித்து கலந்துரையாடி, பாராளுமன்ற பிரேரணையை முன் வைத்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் மலையக அரசியல் அரங்கத்தின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான மயில்வாகனம் திலகராஜ் தனது உறுப்பினர்களின் கையொப்பத்துடன் கோரிக்கை மனு ஒன்றையும் கையளித்து இருந்தார்.

2021 டிசம்பரில் தலவாக்கலை நகரில் புதிய பிரதேச செயலகத்துக்குப் பதிலாக “உப பிரதேச செயலகம்“ ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இது உயர் தீர்மானங்களை எடுக்கும் பாராளுமன்ற உறுதிப்பாட்டுக்கும் அமைச்சரவையின் கூட்டுத் தீர்மானத்துக்கும் வர்த்தமானிப் பிரகடனத்துக்கும் எதிரானது என்பதை வலியுறுத்துகிறோம். காலி மாவட்டத்திற்கும் நுவரெலிய மாவட்டத்திற்கும் பாரபட்சமான முறையில் தீர்மானமெடுத்து செயல்படுவதாகவும் மாவட்ட மக்கள் உணர்கிறார்கள் என்றும் இந்த பாரபட்சத்தை நிவர்த்தி செய்து நாட்டில் ஏனைய மாவட்ட மக்களைப் போன்று நுவரெலிய மாவட்ட மக்களுக்கும் நிர்வாகத்தில் சமவாய்ப்பு வழங்குமாறும் கோருகிறோம் என்றும் இந்த மனுவில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய மாசிமக மகோற்சவ கொடியேறுது



கவிதை: சியாமளா வடிவேலன்

தெருவெல்லாம் மாவிலை தோரணங்கள்
தென்னங்குறுத் ஓலை வாழை மரப்பந்தல்கள்
மங்களமாய் பூரண கும்பங்கள் விளங்கிட
அன்னைமுத்துமாரியின் ஆலய வாசலில்
அராகஹரா கோக்ஷத்துடன் பக்தர்கள் புடைசூழ
சிம்மக் கொடியேறு தம்மா

அண்ட சராசங்களையும் ஆளும்
அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியே
ஆன்மாக்களின் துயர் துடைத்து அருளிட
பஞ்ச ரத பவனியை வரவேற்று
அரிமா கொடியேறு தம்மா

விண்ணோரும் மண்ணோரும் உனைத் துதித்திட
மேளதாளங்கள் முழங்கிட
நாதஸ்வரத்துடன் சங்கு நாதம் ஒலித்திட
மங்கள இசையுடன் அன்னைமுத்துமாரியின்
கோளரி கொடியேறு தம்மா
அணுவிற்குள் அணுவாக கரும்புக்குள் சுவையாக
கருணைக்கு எல்லையாக காருண்ய தாயாக
கருணை மழை பொழிந்தே காட்சி தந்தருளிட
முன்னம் கொடியேறு தம்மா

ஈரேழு புவனம் ஆளும் ஈஸ்வரியே தாயே
இன்னல்கள் துயரங்கள் அணுகாதிருக்க
ஆண்டு தோறும் எமக்கருள் புரிந்திட
வாட்புலி கொடியேறு தம்மா

மாத்தளை முத்துமாரியே உன்
தாழ் பணிந்தே வணங்குகின்றோம்

# சமூகத்திற்கு சரியானதை நெற்றிப் பொட்டில் ஓங்கி அடித்து சொன்னவர்



இவரை போல ஒரு துணிச்சல்காரரை இந்திய வரலாறு இதுவரை பார்த்ததில்லை.. இனியும் பார்க்கப் போவதில்லை..

மக்களுக்கு ஆதரவான பகுத்தறிவு கருத்துகளை துணிந்து தைரியமாக சொன்னவர் ராதா. இவரின் நடிப்பு சாலையும் பகுத்தறிவு கொள்களையும் சத்யராஜ், மணிவண்ணன்,விவேக் போன்ற கலைஞர்கள் பின்னாளில் பின் பற்றினர்.

எவ்வளவு பெரிய மேடையிலும் யார் எவர் என்று பார்க்காமல் தன் கருத்துக்கள துணிந்து சொன்னவர் ராதா ஒருவர் தான். மலேஷிய விஜயத்தின் போது இடம்பெற்ற சொற்பொழிவின் போது "நடிகர்கள் எல்லாம் பிச்சைக்கார வம்சம்... அவன் எவ்வளவு பெரிய நடிகனாயிருந்தாலும் சரி... பிச்சைக்கார வம்சமே.. பிச்சைக்காரன் ரோட்ல பிச்ச எடுக்குறான் நடிகன் மேடையில நடிச்சி பிச்ச எடுக்குறான் ...இதான் வித்தியாசம் என அப்பட்டமாக சொன்னவர் நடிகவேள் எம்.ஆர். ராதா.

பல படங்களில் இவரின் காட்சிகள் வேறு பாதையில் பயணிக்கும். அநேகமாக அவையெல்லாம் மூடநம்பிக்கை கொள்கைகளை எதிர்ப்பதாகவே இருக்கும். ஹலோ மிஸ்டர் ஜமீன்தார், ரத்தக்கண்ணீர், பாகப்பிரிவினை, பாவமன்னிப்பு, கவலை இல்லாத மனிதன், ஆலயமணி, மணியோசை, சந்திரோதயம், தாயைக் காத்த தனயன், தாய் சொல்லைத் தட்டாதே போன்ற படங்களில் ராதாவின் பகுத்தறிவு கருத்துகள் நிறைந்த காட்சியமைப்புகளை காணலாம். ராதாவிற்கென ஓர் பெரிய ரசிகர்கள் பட்டாளமே இருந்தது. இப்போதும் தொலைக்காட்சிகளில் சில படங்களில் எம்.ஆர்.ராதா தோன்றும் போது ஒரு வித கலகலப்பு நிறைந்திருக்கும்."உங்களுக்கு பிடித்த இந்திய நடிகர் யார்" என்று மோகன்லாலிடம் கேட்ட போது டக்கென சொன்னது எம்ஆர். ராதாவின் பெயரைதான்!

அந்த காலத்தில், சாமி படத்தை காட்டி சாம்பிராணி புகை போட்டு தான், நாடகங்களை ஆரம்பிப்பது வழக்கம்..! ஆனால் முதன்முதலில் 'தமிழ்த்தாய்" வாழ்த்து பாடி ஆரம்பித்து வைத்தவர் எம்.ஆர். ராதாதான்!

நாடகம் என்பது வெறும்பக்தி, காதல், புராணம் என்றிருந்ததை, பகுத்தறிவு, சீர்திருத்தம் என்ற திடீர் திருப்பத்தை அள்ளி தெளித்தது ராதாதான்..!

"நாட்டிலே அதிகமா உழைக்கிறவனுக்கு கொஞ்சமா கூலி கொடுக்கிறான்... சினிமாவில கொஞ்சமா உழைக்கிறவனுக்கு அள்ளி அள்ளி கொடுக்கிறான்... உலகத்தில் அசமத்துவம் ஒழிக்க முடியாதபடி சபிக்கப்பட்ட கொள்ளை பிரதேசம்னா அது



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**

சினிமா ஒன்னுதான்" என்று பொதுமேடையிலேயே முழங்கியவர்..!

ஒரு முறை ராதாவின் நாடகத்திற்கு ஜஸ்டிஸ் எஸ்ஏபி "ஐயர்" என்பவர் தலைமை தாங்கியிருந்தார்... முன்வரிசையில் உட்கார்ந்து நாடகத்தையும் பார்த்து கொண்டிருந்தார்..!

அதில் ஒரு காட்சியில், "உன் நாடகத்தை எல்லாம் எவண்டா பார்ப்பான்?" என்று ராதாவை பார்த்து ஒருவர் டயலாக் பேசுவார். அதற்கு ராதா, "பார்ப்பான் பார்ப்பான்" என்றாராம் சத்தமாக. அதேபோல, கம்பர் விழாவில் பேச, ராதாவுக்கு அழைப்பு வந்தது. அதில் பேசிய ராதா, "பெரியவங்களே, சின்னவங்களே, பொம்பளைங்களே... நீங்கள் எல்லாம் இப்ப எதுக்கு வந்திருக்கீங்கன்னு தெரியும். இந்த கம்ப நாடாரின் விழாவிலே..." என்று ஆரம்பித்தார்.

அப்போது, ஒருவர் குறுக்கிட்டு, 'அய்யா... கம்பர் நாடாரு இல்ல..' என்றார்.

'நாடார் இல்லயா... நம்மாளு போலிருக்கு, இந்த கம்ப முதலியாராகப்பட்டவர்...'

'அய்யா... அவரு முதலியாரும் இல்ல...' என்றார்.

'முதலியாரும் இல்லயா சரி... என்னன்னு புரிஞ்சு போச்சு; இந்த கம்பர் அய்யர் ஆனவர்...'

'அய்யா... அவரு அய்யரும் இல்ல...'

'என்னது நாடார் இல்ல, முதலியார் இல்ல, அய்யரும் இல்லயா... அப்போ, இப்ப தான் ஜாதிகளை சொல்லிக்கிட்டிருக்கோமா... அப்ப ஜாதி கிடையாதா... சரி தான், இந்த ஜாதியில்லாத கம்பன் விழாவிலே..." என, ராதாவின் அந்த பேச்சு தொடர்ந்தது..!

இப்படி எம்.ஆர்.ராதா முற்றிலும் முரண்பாடுகளால் நிறைந்தவர்.. ஆனால் வாழ்வின் மறுபக்கமோ நெகிழ்ச்சியாலும் பேரன்பாலும் பெருங்கருணையாலும் நிறைந்தது..!

"பார்த்தியா, ரசிச்சியா அதோட கூத்தாடிய விட்டு போய்ட்டே இரு.. அவன் அடுத்த கூத்துக்கு ரெடியாகிட்டே இருப்பான்.. அவன் உலகத்துக்குள்ள நுழைஞ்சி பாக்காதே.. அது ரொம்ப அசிங்கம்.. அவனை அரசியல்ல கூப்பிட்டு அழிஞ்சி போகாதே.. நீ அவனுக்கு காசு கொடுக்குற, அவன் நடிக்கிறான் அவ்வளவு தான். உன் வேலைக்காரன் அவன்.. அந்த வேலைக்காரனை தலைவன்னு கொண்டாடாதே.. அசிங்கம் அவமானம்" என்றார்.

பெரியாரின் இயல்புக்கும், ராதாவின் இயல்புக்கும் பெரிய வித்தியாசம் இல்லை.. பெரியார் சுமந்த அத்தனை பழி, பாவங்களும் இவர் மீதும் சுமத்தப்பட்டன.

ராதாவின் நாடகங்கள் லட்சக் கணக்கான மக்களை தட்டியெழுப்பின.. அவற்றின் காட்சிகளும் கூரான அம்பு போன்ற வசனங்களும் இந்தியாவுக்கு அப்பாலும் பாய்ந்து சென்று விழுந்தன..!!

சமூகத்திற்கு எது சரியோ அதனை நெற்றிப் பொட்டில் ஓங்கி அடித்து சொன்னவர் ராதா..!

திராவிட இயக்கத்தின் உறுதி வாய்ந்த பிரம்மாண்டமான இந்த தூணை தவிர்த்து விட்டு, தமிழக வரலாற்றை யாரும் எழுத முடியாது.. அப்படி மீறி எழுதவும் யாருக்கும் துணிச்சல் வராது..!




# முத்தமிழின் மொத்தமாய் வாழ்ந்த கவிஞன்



காலத்தால் அழியாத வெகு சில கலைஞர்கள் தெய்வத்தால் அனுப்பப்படுவார்கள், முதலில் தாங்கள் யாரென தெரியாமல் தடுமாறுவார்கள், உலகின் நகைப்புக்கும் பழிப்புக்கும் ஆளாவார்கள், தடுமாறுவார்கள்.

எப்பொழுது தெய்வத்திடம் சரணடைவார்களோ அப்பொழுது அவர்களின் அறிவுகண் திறக்கபடும், காலத்தால் அழியா கலைகளை கொடுப்பார்கள் வடக்கே அப்படி காளிதேவியால் உருவானான் காளிதாசன்.

தெற்கே சரஸ்வதியினை வணங்கி உருவானான் கம்பன். அபிராமி அன்னையினை வணங்கி பெரும் உயரம் பெற்றான் அபிராமி பட்டன், அவன் வழியே அழியா புகழ்பெற்றன் ஒட்ட கூத்தன். காளி என வணங்கி உயரம் பெற்றான் பாரதி அவ்வரிசையில் செட்டிநாட்டின் சிறுகூடற்பட்டியில் மலையரசி அம்மன் ஆலயத்தில் ஒருகாலத்தில் அழுது கொண்டிருந்த முத்தையா பின்னாளில் கண்ணதாசனாக தமிழ் இலக்கிய உலகை பாடல் உலகை ஆண்டு கொண்டிருந்தான்.

தெய்வாம்சம் பெற்ற கவிஞர்களுக்கு தனி தன்மை வாய்க்கும்.

அவர்களிடம் தமிழ் பொங்கும், அருவியாய் கொட்டும், வர்ணணைகளும் உவமையும் வார்த்தைகளும் காவேரி வெள்ளமாய் கொட்டும், அதில் தத்துவமும் ஆன்மீகமும் வாழ்வியல் விஷயமும் இன்னும் ஏகபட்ட உணர்ச்சிகளும் அழகு தமிழில் குற்றால அருவியாய் வழிந்தோடும்.

எதையுமே அழகாகவும் உருக்கமாகவும் பொருத்தமாகவும் அவர்களால் பாட முடியும். அப்படி வள்ளுவன், இளங்கோ, கம்பன், பாரதிக்கு பின் தமிழகம் தந்த மாபெரும் கவிஞன் கண்ணதாசன். முத்தமிழ் அறிஞர் எனும் அடையாளம் பொருந்தும். மூன்று தமிழும் அவரிடம் கொஞ்சியது. ஆம் அவன் வாழ்ந்த காலத்தில் அவனே முத்தமிழின் மொத்த அறிஞன்.

பாடல், எழுத்து, பேச்சு என எல்லாவற்றிலும் அவரின் தமிழ் அப்படி இருந்தது, அதிலும் உண்மை மட்டும் பேசிய உத்தம கவிஞன் அவன்.

கடவுள், காதல், இயற்கை, மதம், தத்துவம், அரசியல் பாசம், காதல், கடமை, நட்பு, தாய்மை, நன்றி, சோகம், பிரிவு, நேசம், மோசம், நம்பிக்கை என எல்லாவகை உணர்வுகளுக்கும் அற்புதமாக வரிகள் கொடுத்த அபூர்வ கவிஞன்.

அவ்வளவு எளிமையாக சந்தத்தோடு ஒட்டி, ராகத்தோடு இணைந்து உணர்ச்சிகளை மொழியாக கொட்டும் கலை அவருக்கு மிக மிக எளிதாக வந்தது.

எல்லா வகையிலும், எல்லா நிலையிலும், எச்சூழலுக்கும் அவரால் மிக மிக பொருத்தமான வரிகளை எழுத முடியும்.

குளிர்ந்த தென்றல் பூக்களையும் சேர்த்து வீசுவது போன்ற தமிழ் அவருடையது, வாழ்வின் அனைத்து பக்கங்களுக்கும் பாடியவர், எல்லா மதங்களுக்கும் செய்யுள் அமைத்தவர்.

இன்றும் மலேசிய சிங்கப்பூர் நாடுகளை காணுங்கள், உங்கள் காதில் "அக்கறை சீமை அழகினிலே மனம் ஆடகண்டேனே.." பாடல் தானாக ஒலிக்கும்.

அரசியலநிலையினை பாருங்கள் "ஊதுபத்திக்கும் பீடிகளுக்கும் பேதம் புரியல" எனும் வரிகள் காதில் மோதும்.

ஒட்டுமொத்த இந்தியபிரச்சினைகளையும் ஒரே பாடலில் விளக்கிய பெருமை அவருக்கு உண்டு.

கோகுலாஷ்டமி என்றால் அவரின் கிருஷ்ணகானம் பாடல்கள் நினைவில் வராமல் போகாது.

இந்து மதத்திற்கு கண்ணன் அருளியது பகவத் கீதை என்றால், கண்ணதாசன் கொடுத்தது அர்த்தமுள்ள இந்துமதம். இரண்டும் இந்து மதத்தின் மாபெரும் அடையாளங்கள்.

பத்திரிகை,மோசடி அரசியல், அவமானம், துரோகங்கள், தீராத கடன் தொல்லை என பல துன்பங்களும் அவரே தேடிகொண்ட போதை பழக்கத்தின் பாதிப்புகளும் தாண்டியே இவ்வளவு பிரகாசித்திருக்கின்றார் என்றால், அவரது மொத்த திறமை எவ்வளவு இருந்திருக்கும்.

எல்லாம் வெறுத்து, ஆன்மீகத்தில் கலந்து எல்லா பிரச்சினை சூழலுக்கு மிக அற்புதமான பாடல்களை எழுதிய ஒரு கவிஞன் உண்டென்றால் சந்தேகமே இல்லாமல் சொல்லலாம் அது கவியரசர் மட்டுமே.

தமிழகத்தின் மிக சிறந்த கவிஞர் என்றவகையில் அவருக்கு அழியா இடமுண்டு, ஒரு காலமும் மறைந்துபோகாத கவிதை கல்வெட்டு அவர்.

அவர் மிகவும் நேசித்த கண்ணனுக்கு அவர் பாடிய பாடலை ஒரு முறை கேளுங்கள், அக்கவிஞன் தேனில் குழைத்து தந்த பலாப்பழத்தின் ஒரு சுளை

"ஆயர்பாடி மாளிகையில் தாய்மடியில் கன்றினைபோல்" எந்த மதத்தவராயினும் உருகவேண்டிய காலமும் வந்தது. அம்மனிதன் அனுபவம் பெற்றபின் அவனை அந்த தெய்வம் ஆன்மீக பாதைக்கு இழுத்து வந்தது.

அவன் கவிஞனானதும், அரசியல்வாதியாக அனுபவம் பெற்றதும், எல்லா வகை நன்மை, தீமை, ரோகம், போகம் என எல்லாவற்றிலும் விழுந்து எழுந்ததும் அனுபவம் பெறவே.

அந்த அனுபவத்தை கொட்டித்தான் அவன் "அர்த்தமுள்ள இந்துமதம் எழுதினான்", இந்துமதத்தின் பொக்கிஷம் அது. தெய்வம் அவன்மூலம் கொடுத்த வரம் அது.

எம்மை பொறுத்தவரை பாரதிக்கும் அவனுக்கும் பல ஒற்றுமைகளை காட்டமுடியும். ஆனால் பாரதி பெரும் வட்டம் ஞான தீ.

கண்ணதாசன் ஆடி களைத்து ஆன்மீகத்தில் இளைப்பாறிய பத்ருஹரி சித்தர் சாயல்

இருவருமே கண்ணன் பக்தர்கள்.

இருவருமே தேசியவாதிகள், பாரதிக்கு பிரிட்டானியர் எதிரி. கண்ணதாசனுக்கு திமுகவினர் எதிரி.

கடைசி காலங்கள் இருவருக்கும் ஒன்றாய் இருந்தன, இருவரும் தங்கள் கடைசி காலத்தில் உடல் நலத்துக்காய் ஏங்கினர், பாரதி நலம்பெற்று இன்னும் எழுதமுடியும் என நம்பினான், கண்ணதாசனும் ஆழ்வார்கள் அடியார்கள் வரலாறை எல்லாம் எழுதுவேன் என சொல்லிகொண்டிருந்தார்.

இன்னும் ஒரு ஒற்றுமை உண்டு, பொதுவாக கவிஞர்கள் என்பவர்கள் இளகிய மனம் கொண்டவர்கள், சிரிப்பவனுடன் சிரிப்பார்கள், அழுபவனோடு அழுவார்கள்.

கொண்டாடும் இடத்தில் இருக்கும் குழந்தை மனம் அவர்களுடையது, ஆனால் எங்கிருந்தாலும் அங்கீகாரத்துக்கும் அரவணைப்புக்கும் ஏங்குவார்கள்.

உண்மையே பேசும் அவர்கள் மனம் அப்படி ஏங்கும், அழும், ஒரு அரவணைப்பை தேடி ஓடும்.

இதை பக்குவமாக கையாளும் வஞ்சக கூட்டம் உண்டு, அவர்களின் பலவீனத்தை பயன்படுத்தி வளைக்கப் பார்ப்பார்கள், அப்படித்தான் பாரதிக்கும் கடைசி காலத்தில் சோகங்கள் வந்தன, அவன் அகப்படவில்லை, இதனால் அவன் அஞ்சலிக்கு கூட யாரும் வரவில்லை.

பாரதி தன் தேசத்து விடுதலையினை பார்க்காமலே மறைந்தான், கண்ணதாசன் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் இந்து எழுச்சியினை காணாமலே மறைந்தான், இருவருமே அவ்வகையில் பரிதாபத்துகுரியவர்கள்.

ஆனால் தேசபற்றுக்கும் இந்துமத சிறப்பான வரிகளுக்கும் இவர்கள் ஆதார சக்திகள், எக்காலமும் நினைவில் நிற்கும் தூண்கள்.

இனி என் வாழ்வு எழுத்துலகமே என அவர் புத்துணர்ச்சி பெற்றபொழுது பாவம் உடல்நிலை இடம்கொடுக்கவில்லை, அந்த சூரியனின் சில கதிர்கள் மட்டுமே உலகிற்கு தெரிந்தது.

மதுப்பழக்கமும்,போதை பழக்கமும் எப்படியெல்லாம் ஒரு மனிதனை அழிக்கும் என்பதற்கு அவரது வாழ்வு பெரும் எடுத்துகாட்டு.

அவரே சொன்னது போல "ஒரு மனிதன் எப்படியெல்லாம் வாழக் கூடாது என்பதற்கு எனது வாழ்வு பெரும் உதாரணம்"

வனவாசமும் மன்வாசமும் அக்கால மோசடி அரசியலை அப்படியே படம்பிடித்து காட்டும் வரலாற்று கல்வெட்டுக்கள்.

தனது வாழ்வினை திறந்த புத்தகமாக்கி, தான் கண்ட நல்லவர்களையும், துரோகிகளையும் அப்படியே புட்டுவைத்த ஒரே தமிழக திரை, அரசியல் பிரபலம் கண்ணதாசன் மட்டுமே.

பெரும் ஞானிகளுக்கும் யோகிகளுக்கும் மட்டும் வரும் பக்குவம் இது.

தமிழ்சாதியில் "நல்ல தமிழ்" கவிஞர்களுக்கு மட்டும் ஆயுள் குறைவு,

பாரதி, பட்டுகோட்டை கல்யாணசுந்தரம் வரிசையில் கண்ணதாசனும் இடம்பிடித்ததுதான் கொடுமை.

கவிதையோ, பாடலோ அவை அழகுணர்ச்சியோடு அமையவேண்டும், விஷயத்தை மறைமுகமாக புரியவைக்கவேண்டும், மொழியை கையாளும் வார்த்தை ஜாலங்களும், வர்ணனைகளும் மிக அவசியம், அதாவது கேட்பவர்கள் புரிந்துகொண்டு மனதால் ஒன்றி, கவிஞன் காட்டும் சூழ்நிலைக்கு அப்படியே செல்லவேண்டும்.

வெகு சிலருக்கு மட்டுமே அந்த வரம் சாத்தியம், கண்ணதாசனும் அவர்களில் ஒருவர்.

இன்று தமிழக கவிதை உலகம் உலகிற்கே தெரியும் முற்போக்கு, பிற்போக்கு, வயிற்றுபோக்கு என என்னவெல்லாமோ சொல்லிகொண்டு, நவீனத்துவம், முன் நவீனத்துவம், பின் நவீனத்துவம், இடையநவீனம் இன்னும் என்ன இம்சைகள் எல்லாமோ கவிதை என சொல்லப்படுகின்றது.

வாழ்வின் எல்லா நிலைகளுக்கும் அல்லது வார்கள், ஏன் கம்சனுக்கே தமிழ்தெரிந்தால் அப்பாடலுக்காக கண்ணனை கொண்டாடுவான்.

எப்படிபட்ட கவிஞன் அவர்? இனி அப்படி ஒரு கவிதை மேகம் இனி தமிழில் சாத்தியமில்லை.

"ஆனந்தமானது அற்புதமானது" என்பதெல்லாம் மானிடன் பாடகூடிய பாடல் அல்ல, சித்தர்களால் மட்டுமே சாத்தியம்.

சாகாவரம் பெற்ற கவிஞன் அவர். எல்லாவற்றிற்கும் மேல் அவரின் நாட்டுபற்று வாழ்த்துக்குரியது.

திராவிடத்தின் சில பொய் முகங்களை அவர் உரித்துகாட்டிய அளவு இன்னொரு நாட்டுபற்றாளன் செய்யமுடியாது.

திராவிட அழிச்சாட்டியம் அரசியல் உள்நோக்கம் கொண்டது, மாயமானை பிடிக்க ஓடுவது என முதலில் எச்சரித்தது அவனே..

கிட்டதட்ட 30 ஆண்டுகள் அற்புத பாடல்களை கொடுத்து செங்கோல் ஆட்சி செலுத்திய கவிஞர் அவர். திரையில் கவிஞர் பெயரினை கண்டவுடன் தமிழகம் கைதட்டிய காலமும் இருந்தது.

எமனுக்கும் தமிழ் தெரிந்திருக்கும், ஆனால் விதிக்கு தெரிந்திருக்காது. தெரிந்திருந்தால் இவ்வளவு விரைவில் அழகிய தமிழ்கவிதையை கொண்டுசென்றிருக்காது.

அவரின் பிறந்த நாளில் அவரை நினைவுகூர்வதில் தமிழ் அறிந்தவர்கள் எல்லோரும் பெரும் மகிழ்ச்சிகொள்வதில் வியப்பு ஏதுமில்லை.

எம்மை பொறுத்தவரை ஒரு விஷயம் உறுதியாக சொல்லமுடியும், அந்த சிறுகூடல்பட்டி செட்டி ஒரு தெய்வீக கவிஞன், அந்த கிராமத்தில் இருந்து சிகாகோ வரை ஒரு தேவதை அவரை நடத்தியது.

வாழ்வின் ஒவ்வொரு நிலைபாட்டையும் அவரை அனுபவிக்க வைத்தது. சூது, வஞ்சகம்,மோசடி, ஏமாற்றம் , அவமானம் என எல்லாவற்றையும் அவர் தெரிந்து புரிந்து கொள்ள வாய்ப்புகளை வழங்கியது.

அதில்தான் அவர் திமுகவில் இருக்க

ஆனால் கண்ணதாசனை கடைசியில் கிறிஸ்தவ மிஷனரிகள் வளைத்தன. தன்னை யாரும் கண்டுகொள்ளா நிலையில் தனக்கான அங்கீகாரம் கிடைக்கா நிலையில் மன வேதனையில் இருந்த அவரை அந்த சக்திகள் வளைத்தன.

(இது திமுக, காங்கிரஸ் , தமிழக அரசின் புலவர் என பல இடங்களில் இருந்தபொழுதும் அவருக்கு கிடைக்கவில்லை.

இந்துக்கள் அவரை கொண்டாடினார்கள், ஆனால் இன்றுள்ள இந்து எழுச்சி அன்று இல்லை. அவருக்கான அங்கீகாரம் கிடைக்கவில்லை).

"இயேசு காவியம்" தயாரானது, அடுத்து 100 கிறிஸ்தவ பாடல்கள் வர இருந்தன, அவருக்குள் கிறிஸ்துவ மிஷநரி ஊசி செலுத்தபட்டு கொண்டே இருந்தது, கண்ணதாசனின் போக்கு மாறிற்று.

இத்தோடு அவரின் விதி சிகாகோவில் முடிந்தது, இல்லாவிடில் அவரின் கடைசி வாழ்க்கை மாறியிருக்கக் கூடும்.

ஆம் எத்தனையோ விபத்து, ஏமாற்றம், கடன், குடி, பெத்தடின் என அவரை மீட்டு வந்த அந்த வழிகாட்டும் தெய்வம், அவர் "அர்த்தமுள்ள இந்துமதம்" எழுதும் பொழுதும் கிருஷ்ணகானம் எழுதும் பொழுதும் துணையிருந்த தெய்வம், அவரின் போக்கு மாறிய பின் கைவிட்டது.

பிறந்த கடனை அத்தோடு முடிக்க அவருக்கு விதி வழிசெய்தது, இயேசு காவியம் புத்தகத்தை பிரமாண்டமாக வெளியிடுவேன் என சொல்லி அமெரிக்கா சென்ற கண்ணதாசனின் உடல் மட்டும் திரும்பியது.

ஆம் சித்தர்கோலத்துக்கு வந்துவிட்ட அவர், மறுபடி தடுமாறி சில வலையில் வீழ்ந்தார்.

கண்ணனை தவிர வேறு தெய்வத்தை பாடுவது எந்த பெரும் சக்திக்கோ பிடிக்கவில்லை என்பது அவர் வாழ்வில் உண்மையாயிற்று.



# போதிய படகுசேவையின்றி தவிக்கும் நெடுந்தீவு மக்கள்

நெடுந்தீவானது இலங்கையின் வட பகுதியில் யாழ்ப்பாணக் குடா நாட்டுக்குத் தென் மேற்கே அமைந்துள்ள ஏழு தீவுகளுள் ஒன்றாகும் அதிக சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய விதத்தில் தொல்லியல் வரலாற்று பாரம்பரியம் கொண்ட இத் தீவு விவசாயம், கால்நடை, கடல் வளங்களுக்கான வாழ்வாதரமாக கானப்படுகின்றது.

இப்புகழ் மிக்க நெடுந்தீவின் அமைவிடமானது யாழ்ப்பாணத்திலிருந்து மற்றெல்லா தீவுகளிலிலும் கூடிய தொலைவில் அமைந்துள்ளது. அதாவது, யாழ்பாணத்திலிருந்து 45கிலோ மீற்றர் தொலைவில் தரைத் தொடர்பு கொண்ட புங்குடுதீவு குறிகட்டுவானிலிருந்து ஏறத்தாழ 10கடல் மைல் தொலைவில் அமைந்துள்ளது.

இத் தீவானது சப்த தீவுகளிலே மிகத்தூரத்தில் அமைந்துள்ள மிகச் சிறப்பான ஒன்றாக விளங்குகின்றது. அதாவது இலங்கையின் வட மாகாணத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தின் தென் மேற்குத் திசையில் அமைந்துள்ள ஏழு தீவுகளே ஆகும். 'சப்த' என்னும் சொல் சமஸ்கிருத மொழியில் ஏழு என்னும் பொருளைக் கொண்டது.

சுற்றுலா பயணிகளை கவரக்கூடிய ஆறுக்கும் மேற்பட்ட தொல்லியல் அடையாளங்களைக் கொண்ட இந்தத் தீவில் தற்போது 1500 க்கும் மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 4500 பேர் வரையில் வசித்து வருகின்றார்கள். இந்த மக்களுக்கான போக்குவரத்து கடல் மார்க்க போக்குவதற்காகவே காணப்படுகின்றது.

அதாவது சுமார் ஒரு மணிநேரம் படகில் கடல் பயணம் செய்து யாழ்ப்பாணத்தில் இருந்து நெடுந்தீவுக்கு செல்ல வேண்டிய நிலைமை காணப்படுகின்றது.

இந்த நிலையில் இந்த போக்குவரத்து வசதி என்பது ஒரு பாரிய பிரச்சினையாக தொடர்ந்த வண்ணமேயுள்ளது. காலத்துக்கு காலம் அரசியல் மாற்றங்கள் ஏற்படும் போது இந்த மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதாக வாக்குறுதிகள் வழங்கப்படும். ஆனால் வழங்கப்படுகின்ற வாக்குறுதிகள் காற்றில் பறந்து விடுவதே வழமையாகியுள்ளது.

எனவே இந்த பிரதேசத்தில் இருக்கின்ற மக்கள் தொடர்ந்தும் போக்குவரத்தில் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்இதேவேளைபிரதேச செயலகம், பொலிஸ் நிலையம், பிரதேசசபை, பாடசாலைகள், பிரதான தபாலகம் எனப் பல்வேறுபட்ட அரச மற்றும் அரச சார்பற்ற நிர்வாக கட்டமைப்புகளையும் கொண்டு இயங்குகின்ற ஒரு பிரதேசமாகவும் நெடுந்தீவு காணப்படுகின்றது.






## 'குமுதினி படகு முற்றாக பழுதடைந்துள்ளது நெடுந்தோகைப் படகும் பழுதடைந்து நிற்கிறது நெடுந்தாரகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது எழுதாரகையும் சேவையில் இல்லை'

ஜது பாஸ்கரன்...

நெடுந்தீவில் பாடசாலைகளுக்கான ஆசிரியர்கள், பிரதேச செயலகத்தின் பணியாளர்கள், வைத்தியசாலை வைத்தியர்மார் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள் அனைவருமே இந்தப் படகு மூலம் பயணம் செய்தே அந்த மக்களுக்கான சேவையை வழங்க வேண்டிய நிலை கானப்படுகின்றது.

நெடுந்தீவுக்கான போக்குவரத்துக்களில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான குமுதினி படகு மற்றும் வட தாரகை படகு என்பனவும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு சொந்தமான படகு மற்றும் தனியார் படகு எனப் பல்வேறுபட்ட படகுச் சேவைகளும் உள்ளன.

இதில் பாதுகாப்பான பொதுப் போக்குவரத்திற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான குமுதினி படகு மற்றும் வட தாரகை என்பன இலவசமாக போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன. இதில் குமுதினி படகு முழுமையாக பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றது. திருத்தப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் மாவிலித்துறையில் இப் படகு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

தற்போது பொதுமக்களுக்கான போக்குவரத்துச் சேவையில் வடதாரகை மட்டுமே நாளாந்தம் இரண்டு சேவைகளை நடத்தி வருகின்றது. அதாவது காலை 7 மணிக்கு நெடுந்தீவில் இருந்து குறிகட்டுவானுக்கும் பின்னர் காலை 8 மணிக்கு குறிகாட்டுவானிலிருந்து நெடுந்தீவுக்கும் பிற்பகல் 03.மணிக்கு நெடுந்தீவில் இருந்து குறிகட்டுவான் என நாளொன்றுக்கு இரண்டு சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

வடதாரகை ஏதாவது பழுதடையுமாக இருந்தால் நெடுந்தீவுக்கான போக்குவரத்துகள் இருக்காது. ஆனால் தனியார் படகுகள் கடந்த காலங்களில் சேவைகளில் ஈடுபட்டு வந்த போதும் இப்போது குறிஞ்சாக் கேணியில் இடம்பெற்ற படகு விபத்துக்கு பின்னர் தனியார் படகு போக்குவரத்து நிறுத்தப்பட்டுள்ளதாக பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் நெடுந்தீவுக்கான போக்குவரத்துக்கு வடமாகாண சபையினால் நெடுந்தோகை என்ற படகு கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டிருந்த போதும் மிக குறுகிய காலத்தில் பழுதடைந்த நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றது.

வடமாகாண சபையினால் வழங்கப்பட்டு நெடுந்தீவு பிரதேச சபையினால் பராமரிக்கப்பட்டு வந்த நெடுந்தாரகை பயணிகள் படகு ஒரு தடைவை குறிகட்டுவானில் இருந்து நெடுந்தீவிற்கு சென்று வருவதற்கு சுமார் 110 லீற்றர் டீசல் தேவை என்பதும் மற்றைய படகுகளைவிட அதிக செலவு ஏற்படுவதும் குறிப்பிடத்தக்கது.

உலக வங்கியின் நிதிப் பங்களிப்பில் நெல்சிப் திட்டத்தின் கீழ் 150 மில்லியன் ரூபா செலவில் இந்த நெடுந்தாரகை படகு கட்டப்பட்டது. 80 பயணிகள் பயணிக்கக்கூடிய போதிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இப்படகுக்கான இயந்திரமும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டு படகினில் பொருத்தப்பட்டுள்ளதுடன் கடந்த 2017ம் ஆண்டு சேவைக்காக விடப்பட்டது. ஆனால் இப்போது பழுதடைந்த நிலையில் நீண்ட நாளாக இவ்வாறு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதே போல வடமாகான சபையால் வழங்கப்பட்டு யாழ் ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்குதுறையில் இருந்து அனலைதீவு மற்றும் எழுவைதீவிற்கான சேவையில் ஈடுபட்டு வந்த எழுதாரகை பயணிகள் படகு சேவையும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதால் தாங்கள்பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாக தீவக மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் வடமாகாண சபையின் வினைதிறனற்ற செயற்பாடுகளுக்கு இந்த படகு சேவைகள் சான்றாகின்றன என தீவக மக்கள் குறிப்பிடுகின்றனர்.

அதாவது யாழ்ப்பாண மாவட்டத்தின் தென்மேற்கு பகுதியில் அமைந்துள்ள தீவுகளுக்கான கடற்போக்குவரத்துக்கள் தினமும் தீர்க்கப்படாத பிரச்சினைகளாக அல்லது ஆபத்தான பயணங்களாகவே காணப்படுகின்றன.



## 'ஊர்காவற்றுரை கண்ணகை அம்மன் இறங்குதுறையில் இருந்து அனலைதீவு மற்றும் எழுவைதீவிற்கான சேவையில் ஈடுபட்டு வந்த எழுதாரகை பயணிகள் படகு சேவையும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளதால் தாங்கள்பெரும் சிரமங்களை எதிர் கொள்வதாக தீவக மக்கள் தெரிவித்துள்ளனர்.'



பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்

## ஓய்வு பெறும் வயதெல்லை அதிகரிப்பு :

# சேவைகளில் மந்தநிலையை உருவாக்குமா, இளைஞரிடையே விரக்தியை ஏற்படுத்துமா?

**இலங்கையில் அரசாங்க ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லையை 65 வயதாக அதிகரிக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளிவந்திருக்கிறது. இந்த விடயம் தொடர்பிலே மேற்கொள்ளப்படும் சமூகக் கருத்தாடல்களில் இந்நடவடிக்கைக்கு ஆதரவாகவும் எதிராகவும் கருத்துக்கள் பரிமாறப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.**

ஊழியப்பொருளியல் Labour Economics என்னும் பாடப்பரப்பினுள் இவ்விடயம் உள் வருவதனாலும் அரசியற் பரப்பில் ஊழியர்களும் தொழிற்சங்கங்களும் பிரிக்க முடியாத கூறுகளாக இருப்பதனாலும் இவ்விடயம் நமது கரிசனைக்குரிய விடயமாகவும் இருக்கிறது. தனியார்துறை ஊழியர்கள் ஓய்வு பெறும் வயதெல்லையையயும் உயர்த்து மாறு ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

நாட்டு மக்களின் ஆயுள் எதிர்பார்க்கை கடந்த காலங்களில் அதிகரித்துள்ள நிலையில் முன்பு ஐம்பத்தைந்து வயதாக இருந்த ஓய்வுபெறும் வயதெல்லை உயர்த்தப்பட்டு 65 வயது வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு நபர் தொழிலில் இணைந்து பணியாற்றும் போது தமது பணியை மேலும் விளைதிறனுடனும் வினைத்திறனுடனும் மேற்கொள்ள வயது ஒரு தடையாக அமைந்து அவரது பங்களிப்பைக் குறைத்துவிடும் என்ற நோக்கிலும் நாட்டின் தொழிற்படையில் புதிதாக இணையும் நபர்களுக்கு தொழில்வாய்ப்புகளைப் பெற்றுத்தரும் நோக்கிலும் தொழில்புரியும் காலத்தில் செய்த பங்களிப்புக்கு மாற்றீடாக பணியாளர் ஒருவர் ஓய்வாக இருந்து தமது அந்திம காலத்தை நிம்மதியுடன் கழிக்கவேண்டும் என்ற நோக்கிலும் ஓய்வு பெறும் வயதெல்லைகள் நிர்ணயிக்கப்படுகின்றன.

நாட்டுக்கு நாடு இவ்வயதெல்லைகள் வேறுபடுவதையும் காணமுடிகிறது. இலங்கையைப் பொறுத்தமட்டில் சில தொழில்களுக்கு ஓய்வுபெறும் வயதெல்லை வேறுபட்டிருந்தமையையும் நாம் காணலாம். உதாரணமாக, அரச ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 55 வருடங்களாக இருந்தபோது பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் கல்வியாளர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை பத்து வருடங்கள் உயர்வாக 65 வருடங்களாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

நாட்டில் பேராசியர் ஒருவரை உருவாக்குவதற்கான முதலீட்டுச் செலவுகள் உயர்வாக இருந்தமையும் தமது வாழ்நாளில் அவர் கணிசமான நேரத்தை கற்பதிலே செலவிட நேர்வதாலும் அனுபவமுதிர்ச்சி அறிவு சார் சமூகத்திற்கு அவரது பங்களிப்பை அதிகரிப்பதனாலும் உடலுழைப்பை வழங்குபவரைப் போலன்றி உடல் நலிவடைந்த போதிலும் தாம் பெற்ற அறிவை ஒருவரால் சமூகத்திற்கு பகிர்ந்தளிக்க முடியும்.

சக்கரநாற்காலியில் அமர்ந்தவாறே கழுத்தைக் கூட அசைக்க முடியாத நிலையிலும் இயற்பியல் துறையில் சாதனைகள் பலபுரிந்த இயற்பியல் பேராசிரியர் ஸ்டீபன் ஹோகிங் Stephen Howking இதற்கு ஒரு நல்ல உதாரணம். பேராசிரியர் என்பதன் உள்ளார்ந்த அர்த்தமே நுண்மான் நுழைபுலம் மேவிய அறிவும் மனப்பாங்கும் நல்ல நடத்தையும் சமூகத்தின் மீதான அக்கறையும் கொண்ட ஒருவர் என்பதாகும். மாறாக வெறுமனே காகிதங்களால் நிரப்பப்படும் தகுதியினால் (paper qualifications) அது வந்துவிடாது. அத்தகைய ஒருவர் தாம் சுயநினைவின்றி வீழ்ந்து இறக்கும்வரை தமது அறிவைப் பயன்படுத்த முடியும். நம்நாட்டிலும் அத்தகைய பலரை நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் இது போன்ற ஓய்வுபெறும் வயதெல்லைக் கட்டுப்பாடுகள் ஏதும் அற்ற தொழிற் தகைமைகள் ஏதும் அவசியமற்ற ஒரு துறையும் இருக்கிறது. அதுதான் அரசியல் துறை! ஏனைய எல்லாத்துறைகளையும் கட்டுப்படுத்தி அடக்கியாளும் அரசியல் தொழிலுக்கு தொழிற் தகுதியோ ஓய்வு பெறும் வயதெல்லைக் கட்டுப்பாடுகளோ இல்லாமை வினோதமான விடயம் தான்.

இந்த நாட்டின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அப்பதவிக்கு வந்தபோது அவருக்கு வயது 78. தமக்கு நெருக்கமான நம்பிக்கைக்குரிய நான்கைந்து பேரை துணைக்கு வைத்துக்கொண்டு நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பையே மாற்றியமைக்க அவரால் முடிந்தது. ஆனால் அவரது பேரினவாத சிந்தனையும் மமதையும் சிறுபான்மையை மிதித்து வைக்க எடுத்த முடிவுகளும் நாட்டை அரசியல் ரீதியில் கொதிநிலைக்குத் தள்ளியமையையும் நாம் மறுப்பதற்கில்லை. இந்த முடிவுகள் வயசுபோன காரணத்தால் சிந்திக்காமல் எடுக்கப்பட்ட முடிவுகளாக ஒரு போதும் கருத முடியாது. மறுபுறம் இன்றைய உலகில் இளைஞர்கள் அரசியல் தலைமை தாங்கும் நாடுகளில் அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகள் சிறப்பாகக் கையாளப்பட்டு வருவதையும் நாம் காணமுடிகிறது. கனடா நியூசிலாந்து நெதர்லாந்து மற்றும் சில நாகரிகமடைந்த மத்தியகிழக்கு நாடுகளில் இந்நிலைமையினை நாம் அவதானிக்கலாம்.

ஓய்வுபெறும் வயதெல்லையை அதிகரிப்பதால் ஏற்படும் உடனடிப் பாதிப்புகள் என்ன? குறித்த ஊழியரின் பதவியைக் குறிவைத்துக் காத்திருக்கும் அவருக்கு அடுத்த பதவிநிலையில் உள்ளவரின் இரத்தக்கொதிப்பு முதலாவது பாதிப்பு.



**இந்த நாட்டின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன அப்பதவிக்கு வந்தபோது அவருக்கு வயது 78. தமக்கு நெருக்கமான நம்பிக்கைக்குரிய நான்கைந்து பேரை துணைக்கு வைத்துக்கொண்டு நாட்டின் பொருளாதாரக் கட்டமைப்பையே மாற்றியமைக்க அவரால் முடிந்தது. ஆனால் அவரது பேரினவாத சிந்தனையும் மமதையும் சிறுபான்மையை மிதித்து வைக்க எடுத்த முடிவுகளும் நாட்டை அரசியல் ரீதியில் கொதிநிலைக்குத் தள்ளியமையையும் நாம் மறுப்பதற்கில்லை.**

ஐயோ இவன் இந்த வருடத்தோடு போய்த்தொலைவான் என்று பார்த்தோமே இன்னுமொரு ஐந்து வருடம் இருந்து கழுத்தறுக்கப் போகிறானே என்ற மனக்கடுப்பு மற்றுமொரு பாதிப்பு. இதுகள் வெளியே போனால் தானே வெற்றிடம் ஏற்பட்டு எங்களுக்கு அரசாங்கத்தில் வேலை கிடைக்கும் என்ற வேலையற்ற இளைஞர்களின் அங்கலாய்ப்பு இன்னொரு பாதிப்பு. அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் இதனால் ஏற்படும் நன்மையான விளைவு புதிதாக அரசாங்க வேலை வாய்ப்புகளை வழங்க வேண்டியதில்லை. தொழிலற்றிருப்போரை தனியார்துறைக்கு தள்ளிடலாம். அல்லது டொலர் பெருக்கும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளை நோக்கி நகர்த்தலாம் அத்துடன் ஓய்வூதியத்திற்காக செலவிடும் நிதியிலும் கணிசமான சேமிப்புகளை மேற்கொள்ளலாம்.

(15ஆம் பக்கம் பார்க்க)



கலாநிதி
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

# ரஷ்ய–உக்ரைன் மோதல் நிலை யுத்தமாக உருவெடுக்கலாம்!

## போரை உள்ளூர விரும்பும் அமெரிக்காவும், ரஷ்யாவும் தனித்தனி நோக்கங்களை கொண்டுள்ளன

**சர்வதேச அரசியலில் ரஷ்ய உக்ரைன் விவகாரமே முதன்மையானதாக காணப்படுகிறது. அமெரிக்க வெளியுறவுச் செயலாளரான அந்தோனியோ பிளிங்டனின் உக்ரைனுக்கான விஜயம் அதிக இராணுவ முக்கியத்துவத்தை ஏற்படுத்தியுள்ளது. ரஷ்யத் துருப்புக்கள் உக்ரையின் எல்லையில் குவிக்கப்பட்டதிலிருந்து ஆரம்பித்த நெருக்கடி நேட்டோ அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் என விரிவடைந்து செல்கிறது.**

நேட்டோவின் விஸ்தரிப்பு மத்திய ஆசிய நாடுகளையும் ஈரோசிய பிராந்தியத்தையும் நோக்கியதாக நகரும் நிலையை தடுக்கும் நோக்குடனேயே ரஷ்யாவின் இராணுவ நகர்வுகள் முக்கியமானதாக மாறியுள்ளன. அது மட்டுமன்றி அமெரிக்க ஆட்சித்துறையில் ஏற்பட்ட மாற்றமும் அந்த அணியின் இந்தோ பசுபிக்கை நோக்கிய நகர்வுகளையும் கருத்தில் கொண்டு ரஷ்யா இராணுவ நடவடிக்கையை உபாயமாக கையாள ஆரம்பித்துள்ளது. இக்கட்டுரையும் ரஷ்ய உக்ரைன் போரை அமெரிக்கா உட்பட்ட நேட்டோ நாடுகள் தூண்டுகின்றனவா என்பதை தேடுவதாக அமையவுள்ளது.

அமெரிக்க வெளியுறவுச் செயலாளரது உக்ரையின் விஜயம் அரசியல் பொருளாதார இராணுவ ரீதியில் அதிக முக்கியத்துவம் உடையதாக உள்ளது. குறிப்பாக கடந்த 18.01.2022 உக்ரைன் விஜயத்திற்கு முன்பாக ஜேர்மனி பிரான்ஸ் மற்றும் பிரிட்டன் ஆகிய ஐரோப்பிய வல்லரசு நாடுகளின் இராஜதந்திரிகளுடன் பெர்லினில் உரையாடினார். அவரது உக்ரைன் விஜயத்தைப்பற்றி அமெரிக்க வெளியுறவு துறையின் பேச்சாளர் நீட் பிறின்ஸ் குறிப்பிடும் போது, உக்ரையின் இறைமையினையும் பிரதேச ஒருமைப்பாட்டையும் பேணுவதற்கான தொடர்ச்சியான நடவடிக்கையை அமெரிக்கா மேற்கொண்டு வருகிறது என்றும் நான்கு வழி உரையாடலை ஐரோப்பிய வல்லரசுகளுடன் அமெரிக்கா மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் நீட் குறிப்பிடும் போது, மேற்படி நான்கு வல்லரசுகளும் ரஷ்யா மீது பாரிய விளைவுகளையும் பொருளாதார தாக்கங்களையும் ஏற்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபடப் போவதாகவும் அதற்கான உரையாடல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.



அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் மற்றும் உக்ரைன் வெளியுறவு அமைச்சர் டிமிற்றோ குலிபா ஊடகங்களை சந்தித்து உரையாடிய போது இரு நாட்டுக்குமான நெருக்கத்தை உணர முடிந்தது. அது மட்டுமன்றி இரு நாட்டு வெளியுறவு தரப்பினரது உரையாடலும் நான்கு வழி பேச்சுக்களும் அதிக இராஜதந்திர நகர்வாக அமைந்தாலும் அடிப்படையில் ரஷ்யா மீதான அழுத்தத்தை அதிகரிப்பதாகவும் போருக்கான தூண்டலை ஏற்படுத்துவதாகவும் அமைந்துள்ள இதனை விரிவாக நோக்குவது அவசியமானது.

உக்ரைன் வெளிவிவகார அமைச்சர் தெரிவிக்கும்போது அமெரிக்காவுடனான உறவென்பது வெறும் இராஜதந்திர உறவு மட்டும் கிடையாது அதனையும் கடந்த நட்புறவின் அடிப்படையோடு பாதுகாப்பு விடயங்களில் அதிக நெருக்கத்தைக் கொண்டது எனத் தெரிவித்தார். அது மட்டுமன்றி இரு தரப்பும் உரையாடிய முக்கிய விடயமாக பாதுகாப்பு நிலைமையுடன் உக்ரைனின் எல்லைப்பகுதியான டொன்பாஸ்ஸை (Donbas) தற்காலிகமாக ரஷ்யா கைப்பற்றியுள்ளதை பற்றியதாகவே அமைந்துள்ளது என்றார்.

ரஷ்யா 2014 ஆண்டு முதலே உக்ரைனுக்கு எதிரான போரை ஆரம்பித்துவிட்டது. ரஷ்யாவின் பிரதான நோக்கம் ரஷ்யக் கூட்டமைப்பை ஏற்படுத்துவதாகும். அவ்வாறாயின் உக்ரைன் என்றொரு நாடு இனி இருப்பதற்கான வாய்ப்பில்லை என்றார். ஆனால் உக்ரைன் 2014 காலத்தைப் போன்றல்ல தற்போது உக்ரைன் வலுவாக உள்ளது. உக்ரைனிடம் வலுவான இராணுவம் உள்ளது. உக்ரைனிடம் வலுவான இராஜதந்திரமும் உள்ளது. வலுவான பங்காளிகள் உள்ளனர். அனைத்து அபாயங்களையும் புரிந்துள்ள போதிலும் இத்தகைய இக்கட்டான காலத்தை கடந்து செல்ல உக்ரைனால் முடியும் என்றார்.

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் குறிப்பிடும் போது இரு நாட்டுக்குமான பாதுகாப்பு உறவினை அதிகப்படுத்தும் நடவடிக்கையில் அமெரிக்காவும் நேட்டோவும் ஈடுபட்டுள்ளன என்கிறார். உக்ரைனின் இறைமையும் ஒருமைப்பாடும் பாதுகாக்கப்படுவதோடு ரஷ்யா மீதான பொருளாதாரத் தடையை பெரியளவில் அமுல்படுத்தும் உத்தியை உருவாக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக ஐரோப்பிய யூனியன் ஜி7 நாடுகள் மற்றும் நேட்டோ நாடுகள் ரஷ்யாவுக்கு எதிராக பொருளாதாரத் தடையை அமுல்படுத்தப் போவதாகவும் அதற்கான தயார்படுத்தலை மேற்கொண்டுள்ளதாகவும் பிளிங்டன் தெரிவித்துள்ளார். ஐரோப்பிய நாடுகளின் ஒத்துழைப்புடன் ரஷ்யாவுக்கு எதிரான நடவடிக்கையை அமெரிக்கா தீவிரப்படுத்தியுள்ளதை அவதானிக்க முடிகிறது.

மூன்றாவது உக்ரைனுக்குள் ரஷ்யா நுழையும் என தாம் கருதுவதாக அமெரிக்க ஜனாதிபதி பைடன் தெரிவித்துள்ளார். புட்டின் தொடர்ந்து கருத்துக் கூறும்போது அவர் உள்ளே நுழைவார் என்பது என் கணிப்பு அவர் ஏதாவது செய்தாக வேண்டியுள்ளது என்றார். அதே கருத்தை கடந்த 15.01.2022 ஜெனீவாவில் ரஷ்யத் தரப்புடனான இராஜதந்திர உரையாடலின் பின்னர் அமெரிக்க வெளிவிவகார செயலாளர் பிளிங்டன் 'ரஷ்யா மிகக் குறுகிய அறிவித்தலில் உக்ரைன் மீது தாக்குதல் நடத்தக் கூடும்" எனத் தெரிவித்துள்ளார். இவ்வாறு ஊடகங்களும் புலனாய்வாளர்களும் அரசியல் தலைமைகளும் அதிகாரிகளும் கருதுகின்றனர். ஆனால் ரஷ்ய ஜனாதிபதி பற்றிய மதிப்பீட்டை அமெரிக்கா சரியாக செய்துள்ளதா என்ற கேள்வியும் அத்தகைய தாக்குதலை மறைமுகமாக அமெரிக்கா விரும்புகிறதா என்பதையும் ஜோபைடனின் கருத்து உறுதிப்படுத்துகிறது. பைடனும் பிளிங்டனும் உக்ரைனின் இராணுவத்தை வலுவாக்குவதுடன் ரஷ்யாவுக்கான நெருக்கடியை அதிகரிக்க ஐரோப்பிய நாடுகளை தூண்டுவதையும் காணமுடிகிறது.

அது மட்டுமல்ல; ஐரோப்பாவின் நடவடிக்கையை பிளிங்டன் நோர்மண்டித தரையிறக்கத்துடன் ஒப்பிட்டுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏறக்குறைய ஐரோப்பாவை ஒரு உலகளாவிய யுத்தத்திற்கு தயாராக்குவது போலவே அமெரிக்கத் தரப்பின் நடவடிக்கைகள் காணப்படுகிறது.

நான்காவதாக ரஷ்யாவைப் பொறுத்தவரை உக்ரைனுக்கு எதிரான போரை ஆரம்பித்துள்ளதாகவே தெரிகிறது. அதாவது அதன் நகர்வுகளும் படையிறக்கமும் எல்லையில் குவிக்கப்படும் ஆயுததளபாடங்களது திறனையும் அவதானிக்கும் போது முழு நீளப் போருக்கு ரஷ்யா தயாராகிவிட்டதை காட்டுகிறது. அதே நேரம் கிழக்கு ஐரோப்பாவுக்குள்ளும் மத்திய ஆசியக் குடியரக்குள்ளும் பால்கன் நாடுகளுக்குள்ளும் அமெரிக்காவின் தலைமையிலான நேட்டோவின தலையீடு அதிகரித்துள்ளதென்பதை உணர்கிறது.

(15ஆம் பக்கம் பார்க்க)

**'உக்ரைனின் இராணுவத்தை வலுவாக்குவதுடன் ரஷ்யாவுக்கான நெருக்கடியை அதிகரிக்க ஐரோப்பிய நாடுகளை தூண்டுவதையும் காணமுடிகிறது. அது மட்டுமல்ல; ஐரோப்பாவின் நடவடிக்கையை பிளிங்டன் நோர்மண்டித தரையிறக்கத்துடன் ஒப்பிட்டுள்ளதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். ஏறக்குறைய ஐரோப்பாவை ஒரு உலகளாவிய யுத்தத்திற்கு தயாராக்குவது போலவே அமெரிக்கத் தரப்பின் நடவடிக்கைகள் காணப்படுகிறது'**

தினகரன் வாரமஞ்சரி

# மஞ்சரி மாருதம்



# சர்வதேச தர பால் உற்பத்திகளை தரும் பெலவத்த நிறுவனம்

## இலக்கு வைத்து முயற்சித்தால் தன்னிறைவு சாத்தியம் என்பதை புலப்படுத்தும் பெலவத்த

பி. வீரசிங்கம்



உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பெல்வத்த பால்மாவிற்கு சந்தையில் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. தனியாருக்குச் சொந்தமான பெல்வத்த நிறுவனத்தினால் பெல்வத்த முழு ஆடைப் பால்மா, வெண்ணெய், யோகட், நெய் மற்றும் பல்வேறு சுவைகளிலான ஐஸ்கிறீம் வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. பெல்வத்தை பால்மாவை "அபேம கிரி" எனக் கூறி வாடிக்கையாளர்கள் வாங்குவதை கண்டிருக்கிறேன். பெலவத்த பாலைப்பருகும்போது அதன் சுவை அதன் உற்பத்தி தரத்தை உறுதி செய்யக்கூடியதாக இருக்கும். இந்த பால்மா உற்பத்தி தொழிற்சாலையை பார்வையிட எமக்கு சந்தர்ப்பம் கிடைத்தது. மொனராகலை மாவட்டத்தில் அமைந்துள்ள பெலவத்த கிராமத்தின் பெயரிலேயே பால்உற்பத்தி தொழிற்சாலையும் அமைந்துள்ளது. இலங்கையில் பால்மாவிற்கு தட்டுப்பாடு வந்த தன் பின்னரே பெல்வத்தை பால்மாவின் அருமையை நம்மவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.





இலங்கையைத் தளமாகக் கொண்ட இரண்டு பால்மா உற்பத்தி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அவற்றில் பெல்வத்தை நிறுவனம் நாட்டின் அந்நியச் செலாவணியைச் சேமித்து பல்வேறு வகையான பால் உற்பத்திகளை மேற்கொண்டு வருகிறது. 2006ம் ஆண்டு பால் உற்பத்தி பொருட்களை உற்பத்தி செய்ய ஆரம்பித்தது. 2011இல் பால்மா உற்பத்தியை தொடக்கி தற்போது பெல்வத்த முழு ஆடைப் பால்மா, வெண்ணெய், யோகட், நெய் மற்றும் பல்வேறு சுவைகளிலான ஐஸ்கிறீம் வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த தொழிற்சாலையில் 400 பேர் பணியாற்றுகிறார்கள். இதில் உற்பத்தி, பொதிசெய்தல் மற்றும் விநியோகப் பிரிவினரும் உள்ளடங்குகிறார்கள்.

"நியூஸிலாந்து போன்ற மேற்கு நாடுகளிலிருந்து மட்டுமே பால்மா உற்பத்தி செய்யமுடியும் என்ற மரபை மாற்றி பெல்வத்தையில் பால் உற்பத்தி தொழிற்சாலையை தொடக்கியவர் தலைவர் ஆரியசீலி விக்ரமநாயக்க. பெல்வத்த பால் விநியோகச் சங்கிலியானது மிகவிரிவானதாகும். அண்மையில் சந்தையில் ஏற்பட்ட விலை ஏற்ற இறக்கங்களுக்கு மத்தியிலும் பெல்வத்த தொழிற்சாலையில் இருந்து எவ்விதத் தடங்கலுமின்றி பால்மா விநியோகத்தை மேற்கொண்டு வருகிறோம்" என்கிறார் பிரபாஷ் லியனபத்திரன.

"நாட்டில் 250 மெட்ரிக் தொன் பால்மா நாளொன்றுக்கு தேவைப்படுகிறது. ஆனால் எம்மால் மாதத்திற்கு 400 மெட்ரிக் தொன் பால்மாவையே உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கிறது. இலங்கையில் பால் உற்பத்தியானது மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருக்கிறது. நாட்டில் தற்போது நாளொன்றுக்கு 12 லட்சம் லீற்றர் பால் உற்பத்தியாகிறது. அவற்றில் 2 லட்சம் லீற்றர் பாலையே எம்மால் கொள்வனவு செய்ய முடிகிறது. இந்த



பாலில் இருந்தே நாளொன்றுக்கு 35 மெட்ரிக் தொன் வெண்ணெயும், 14 மெட்ரிக் தொன் ஐஸ்கிறீமும் உற்பத்தி செய்யப்படுகிறது. நாட்டில் பால்மா தேவையை பூர்த்தி செய்வதானால் பால் பண்ணையாளர்களின் எண்ணிக்கை பல மடங்காக அதிகரிக்க வேண்டும். இதனை தனியே அரசினால் மட்டும் செய்ய முடியாது தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்பும் அவசியமாகும்" என்று கூறுகிறார் பிரபாஷ்.

பெல்வத்தை தொழிற்சாலை மூன்று பால்மா உற்பத்தி ஆலைகளைக் கொண்டுள்ளது, ஒவ்வொன்றும் ஒரு மணி நேரத்திற்கு 80,000 லீற்றர் பாலை பதனிடக்கூடிய திறன் கொண்டவை. மணித்தியாலத்திற்கு 550 கிலோ ஆடைப் பால்மாவை உற்பத்தி செய்யக்கூடியவை. உலர்த்திகள் மூலம் தினமும் 30 தொன் பால்மாவை உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு கிலோ பால்மாவை உற்பத்தி செய்ய 8.4 லீற்றர் திரவபால் தேவைப்படுகிறது. பால் உற்பத்திக்கான செலவுகள் அதிகரித்துள்ள இவ்வேளையில் பால்மா உற்பத்தியை பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்கிறது இந்த நிறுவனம் என்றார் பிரபாஷ்.

பெல்வத்தை தொழிற்சாலை புத்தம் புதிய பாலை மாத்திரம் பயன்படுத்துவதால், அவை மலிவானதாக அமைவதில்லை. சிறந்த பால்பொருட்களை சிறந்த மூலப் பொருளானபாலில்இருந்துமட்டுமே தயாரிக்க முடியும். அந்தவகையில் பெல்வத்தவும் அதன் பால் உற்பத்திச் சங்கிலியில் மிகச்சிறந்ததையே தெரிவுசெய்து வழங்குகின்றது. பால் மிகவும் போஷனை நிறைந்த ஆகாரம். பிறந்த குழந்தைகள் முதல் பெரியோர் வரைக்கும் பால் மிகவும் அவசியமானது. அதுபோல தூய பாலானது விரைவில் பழுதடையும் தன்மையைக் கொண்டுள்ளது.

பெல்வத்தை உற்பத்திப் பொருட்களுக்கான மூலாதாரமே பால் விநியோகச் சங்கிலி, இலங்கையில் உள்ள வலுவான 6,500 பால் பண்ணையாளர்களை இச்சங்கிலி உள்ளடக்கியுள்ளது. அவர்களின் வாழ்வாதாரமும் பெல்வத்தை நிறுவனத்தை நேரடியாக நம்பியுள்ளது. ஊவா, கிழக்கு, மத்திய, வடமேல், மாகாணங்களில் 50 பால் சேகரிப்பு



மையங்களின் வலையமைப்பை நிறுவனம் கொண்டுள்ளது. இதன்மூலம் மாதாந்தம் 4.5 மில்லியன் லீற்றர் புத்தம்புதிய பால் கிடைக்கிறது. கொவிட் நெருக்கடிக்கு மத்தியிலும் நிறுவனம் பாலை விநியோகிக்கும் விவசாயிகளுக்கு ரூ. 3.18 பில்லியன் ரூபாவை கொடுப்பனவாக செலுத்தி வந்துள்ளது

கிராமப்புறங்களிலுள்ள விவசாயிகளிடமிருந்து தினசரி கொள்வனவு செய்யப்படும் பாலானது, கிராம சங்கங்களால் சேகரிக்கப்பட்டு, அவை பாலின் புத்துணர்ச்சி மற்றும் சுகாதா நிலையில் பேணப்படும் திறன்கொண்ட, பால்பவுசர்களில் நிரப்பப்பட்டு, அவை PDIL குளிர்விக்கும் மையங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.

பால் சேகரிப்பு மையங்களிலிருந்து பெறப்படும் பாலானது, குளிர்வித்தல் விநியோகச்சங்கிலி தொழில்நுட்பம் மற்றும் வெப்ப பாதுகாப்பு தொகுதிகளுக்கு கிடைத்தவுடன், அது நான்கு பாகை செல்சியஸிற்கு உடனடியாக குளிர்விக்கின்றன. பால் சேகரிப்பு மையங்களில் இருந்து, விசேட பாதுகாப்பு அம்சங்களுடனான பால் பவுசர்கள், குளிரூட்டப்பட்ட பாலை புத்தளவில் உள்ள தொழிற்சாலைக்கு கொண்டு செல்கின்றன. அதனைத் தொடர்ந்து குளிர்விக்கப்பட்ட பால் குளிர்ந்த பால், தொழிற்சாலையின் சிலிண்டர் தொட்டிக்குள் சேகரிக்கப்படுகிறது. அதன்பிறகு, பால்பவுடரை உருவாக்குவதை உறுதிசெய்யும் அளவிலான கொழுப்பு மற்றும் திண்ம கொழுப்பு அற்ற (SolidNotFat) SNF மட்டத்தை பேணி அது "தரப்படுத்தப்படும்". தொட்டியிலுள்ள பாலை தரப்படுத்திய பின்னர், விசிறி உலர்த்தும் ஆலையானது பாலிலுள்ள நீர்த்தன்மையை ஆவியாக்கி, பால்மாவை பிரித்தெடுக்கிறது. இந்த உற்பத்திச் சங்கிலி முழுவதும், உயர் தரத்தில் பேணப்படுகிறது. பெல்வத்தவினால் நூறுவீத தர உத்தரவாதம் பேணப்பட்டு கடைப்பிடிக்கப்படுகிறது.

சுய கைத்தொழில் முயற்சிகள் உரியமுறையில் முன்னெடுக்கப்படாமையே நாடு அபிவிருத்தியில் இன்னமும் பின்தங்கியிருப்பதற்கான பிரதான காரணமாகும். கால்நடை வளர்ப்பில் நீண்டகாலத் திட்டங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாமையால் அனைத்து வளங்களும் நிறைந்த இந்நாட்டில் பால்மாவிற்காக வெளிநாடுகளை நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. நாட்டில் பால்மா தேவையைப் பூர்த்திசெய்வதற்கு நீண்டகாலத் திட்டம் அவசியம். படித்த இளைஞர்கள் மத்தியில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிக்க வேண்டும். ஆர்வமுள்ள வர்களுக்கு கடன் உதவிகளை வழங்கி அவர்களை ஊக்குவிக்க வேண்டும். நாட்டின் அபிவிருத்தியில் இளைஞர் யுவதிகளின் பங்களிப்பு இல்லாமல் எவ்வித அபிவிருத்தியையும் எதிர் பார்க்க முடியாது.

பெலவத்தையைப் பார்த்து திரும்பிய என்னில் உதித்த உண்மை இது.

# ஹைபொரஸ்ட் மக்களுக்கு புதிய பொலிஸ் நிலையம் இனி இராகலைக்கு செல்ல வேண்டியதில்லை










ஆ.ரமேஸ் ஆறுமுகம்

நுவரெலியா மாவட்டம் இராகலை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஹைபொரஸ்ட் பிரதேசத்தில் புதிய பொலிஸ் நிலையம் உத்தியோகப்பூர்வமாக கடந்த 21ம் திகதி காலை திறந்து வைக்கப்பட்டது.

நாட்டில் புதிய பொலிஸ் நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு திறந்து வைக்கும் வேலைத்திட்டத்திற்கு அமைவாக இந்த பொலிஸ் நிலையம் ஹைபொரஸ்ட் பிரதேச மக்கள் நலன்கருதி திறந்து வைக்கப்பட்டது.

பொலிஸ்மா அதிபர் டி.ஜி.விக்கிரமரத்தினவின் ஆலோசனைக்கு அமைய நுவரெலியா மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் புத்தி.யூ. உடுகமசூரியவின் அழைப்பின் பேரில் மத்திய மாகாண பொலிஸ்மா அதிபர் பிரசாத் ரணசிங்கவின் வழிகாட்டலில் கலந்து கொண்ட மத்திய மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜயவர்தன புதிய பொலிஸ் நிலையத்தை உத்தியோகப்பூர்வமாக திறந்து வைத்தார்.

ஹைபொரஸ்ட் கோனப்பிட்டிய பிரதான வீதிக்கு அருகில் ஹைபொரஸ்ட் முதலாம் பிரிவு தோட்டத்தில் 1928 ஆம் ஆண்டு கட்டப்பட்ட கட்டடம் ஒன்று திருத்தப்பட்டு பொலிஸ் நிலையமாக அமைக்கப்பட்டுள்ளது. ஹைபொரஸ்ட் இலக்கம் ஒன்று முதல் மூன்று வரையான தோட்டப்பகுதிகள், குருந்து ஓயா, பிங்கந்தலாவை, கோனக்கலை, மெரிகோல்ட் மற்றும் கோனப்பிட்டியவில் ஒரு பகுதி அடங்களாக வாழும் மக்கள் பயன் பெரும் வகையில் இந்த பொலிஸ் நிலையம் மத்திய பகுதியில் போக்குவரத்துக்கு இலகுவாக அமைக்கப்பட்டுள்ளது.

இப்புதிய பொலிஸ் நிலையத்தில் பொறுப்பதிகாரியாக சுமந்த ஜயரட்ண மத்திய மாகாண பிரதி பொலிஸ்மா அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளார். இராகலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.செல்வகுமார் பொலிஸ் நிலைய திறப்பு விழாவுக்கான பூரண ஒழுங்குகளை செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்வின் போது பொலிஸ் மரியாதை அணிவகுப்பு இடம்பெற்று பிரதம அதிதியாக கலந்து கொண்ட மத்திய மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் நிலந்த ஜெயவர்தன ஹைபொரஸ்ட் பொலிஸ் நிலைய உத்தியோகபூர்வ பெயர் பலகையை சமய அனுஸ்டானங்களின் பின் திறை நீக்கம் செய்து வைத்தார்.

பின் நிலையத்தை நாடாவெட்டி திறப்புவிழா செய்யப்பட்டு குத்து விளக்கேற்றி கடமைகளை ஆரம்பித்து வைத்ததுடன், இப் புதிய பொலிஸ் நிலையத்துக்கு போக்குவரத்து பொலிஸ் பிரிவுக்கு வாகனங்களும் கையளிக்கப்பட்டதுடன் ஞாபகார்த்த நிகழ்வாக மரக்கன்றுகள் நாட்டிவைக்கப்பட்டது. மிக நீண்ட காலமாகவே தமது தேவைகளுக்காக இப் பகுதி மக்கள் சுமார் 20 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள இராகலை நகரத்திற்கே செல்லவேண்டியிருந்தது.

# கவிதை மஞ்சரி

கிருஷா

## ஆதலால் நான் இங்கு நலம்

இணுவில் வாகீசன்

கடந்தமாதம் மீதி இல்லைஅம்மா
கடனாகி விட்டதால்
கடன் கழித்து மீதிச்சம்பளம்
உங்கள் கணக்கில்
வைப்புச்செய்துள்ளேன்
ஆதலால் நான் இங்கு நலம்

இந்த மாதம் கலண்டரில்
சிவப்புத் தேதிகளை
தேடியும் காணவில்லை
சனி ஞாயிறே பொது விடுமுறையும்
வருவதால் இம்மாத பயணத்தை
ஒத்தி வைத்துள்ளேன்

அதில் புது சேர்ட் வாங்குவதாக
உத்தேசம்
ஆதலால் நான் இங்கு நலம்

விடுமுறைநாட்களை
எண்ணியிருந்தேன்
இடமாற்றக்கடிதங்கள்
தவணைமுறையில்
வந்துகொண்டிருக்கின்றன
இன்னும் ஒரு கடிதம் மீதி உண்டு
அடுத்த தவணை
வீட்டிலிருந்தே பாடசாலை செல்வேன்
ஆதலால் நான் இங்கு நலம்

## காக்கைகள்

கவிக்கிறுக்கன்

அநாதை இல்லங்கள்
வாசலில் கத்தும்
காக்கைகளுக்கு அறிவு கிடையாது
அங்கே இனி யார் வரப்போகின்றார்கள்



## வெற்றியில் சாய்ந்து உறங்கு

இக்பால் அலி

மழைபெய்தால் ஒழுகி நனையும்
பழைய கரல் பிடித்த உக்கிப்போன
லயத்தின் கூரைத் தகடுகள்
தூரப்பறந்திட
களிமண்ணிலான லயக் காம்பராக்கள்
புதுக்கோலம் பூண்டு
சொந்தக் காணி நிலத்தில்
அழகிய கல் வீடுகள் கட்டி
பேரானந்தம் கொண்டாடி
மலை முகடுகளில் எழுந்து நிற்கும்

மலையின் உடம்பில்
புதைந்து கிடந்த
பழைய பள்ளிக் கூடங்கள்
அடியோடு அழிக்கப்பட்டு
புதிய புரட்சிப் புன்னகைகளின் மின்னல்கள்
அறிவொளி பரப்பி வான் நட்சத்திரங்களாய்
வீறு நடை போடுகின்றன

புதிய பள்ளிக் கூடங்கள் மலிந்து
நவீன ஸ்மாட் வகுப்பறைகளுடன்
பட்டுத் தெறிக்கும்
கல்வியின் நீர் ஊற்று மின்னொளிபாய்ச்சி
மலையின் உச்சி ,பள்ளம், மூலை முடுக்கெங்கும்
பேரிரைச்சலுடன்
பெருக்கெடுத்துப் பேரறாறாய் ஓடும் பூமியாய்
ஒளிரும்

இருளில் குன்றிலும் குழியிலும்
தடுக்கி விழுந்து
கால்கள் உரசிப்பட்டு

இரத்தம் கசிந்து உறைய
வலிகளுடன் நடந்து
காயங்கள் ஆறின தளும்புகள்
துயில்கள்; கலைந்து
மலைநெடுக பிரதிவிம்பங்கள்
கொங்கீரட் வீதிகளாய் காபட் வீதிகளாய்
மின் விளக்குகளுடன்
முழு இரவையும் ஒளிமயமாக்கி பிராகசிக்கும்

மருத்துவமனையோ சுகாதார வசதியோ
இருண்டு கிடந்த பனிகளின் தரையில்
சிறகு முளைத்த வசதி வாய்ப்புகள்
பிரசவ தாய்மார்களுக்குச் சொப்பனமாய்
மிதந்து நிற்கும் இலவசக் காற்று
மலையகமெங்கும் வீசும்

தேயிலைக் கொழுந்து பறித்து
கடும் குளிரில் உடல் நடுங்கி
கை கால்கள் திமிர்த்து
மூச்சயர்ந்து
படுக்கையில் கிடந்தாலும்
காலடியில் நிற்கிறது அம்பியூலன்ஸ்

இனி நாங்கள்
சேற்றில் வழுக்கி விழவோ
மனம் நொந்து கொள்ளவோ தேவையில்லை.
மண்சரிவு வந்தாலும்
அதற்கு அணை கட்ட
உறுதியாய் நில்
எழுந்து நில் உதய சூரியானாய்!

## என் அணைப்பில் இனியவளே நீ



உங்க மொழி

இனியவளே,
உன்னைப்பற்றி,
ஒரு கவிதை,
எழுத வேண்டுமென்ற ஆவலில்,
கையில் போனாவும் பேப்பருமாக,
வந்து அமர்ந்து கொண்டேன்
ஆனால்,
வார்த்தைகளே வரவில்லை!
என்னால் முடிந்த வரை முயற்சி செய்தேன்
ம்..ஹும்...
தோற்றுதான் போனேன்
இறுதியில்,
ஒன்று செய்தேன்
விழிகளை மூடிக்கொண்டு,
உன் அணைப்பில்,
நான் இருப்பதாக,
கொஞ்சம் கற்பனை செய்தேன்!
அடடா...!
நடந்ததே அதிசயம்
நயாகரா நீர் விழ்ச்சியைப்போல்...
துள்ளிப்பாய்ந்தனவே வார்தைகள்!
ம்...ம்...பிறகென்ன....
சூடாக...சுவையாக
உன் இதயத்தைக் கிள்ளும் விதமாக...
விறு விறுப்பாக....
துடி துடிப்பாக...
காதல் ரசம் ததும்பும் விதமாக
அமைந்தது அந்தக் கவிதை!
இப்போதே,
அதை படிக்கவேண்டும் என்ற ஆவலில்,
நீ இருப்பாய் என்பதும் எனக்குத் தெரியும்!
என்னை மன்னிக்க வேண்டுகிறேன்!
விரைவில் உன் விழிகளுக்கு விருந்தாக்குகிறேன்!
பார்வைக்கு பகிர்ந்தளிக்கிறேன்!
அதுவரை...!!!

## புதுமை கொண்டு வா!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

புத்தூக்கமாய் புதிய அர்த்தமாய்
புவியில் அனைவர் மனதில் சொர்க்கமாய்
சித்தமும் பாட சிந்தனைகள் மிளிர
உத்வேகமாய் உழைப்போர் களிக்கவே
புத்தாண்டே நீ புதுமை கொண்டுவா!

## என் மரணம்

சி. மேகவர்னன் (மார்க்கோணி)
கனடா

எழுதுகரம் ஒடிந்து
எண்ணங்கள் சிதைந்தது
எழுத்துக்கள் மாலையாக
என் பேரு மறைந்து
பிணம் என் பெயராச்சு
எதுகை மோனை தொலைந்தது
என் பேனா அழுகிறது
என்ரை மோனே என்று
அம்மாவின் குரல் ஒலிக்கிறது

பச்சையோலை ஒன்று
பாதி வயதில் அறுந்து
விழுந்து கிடக்க
என்ர ராசா என்று
மனைவியின் ஓலம் ஒலிக்கிறது

பச்சை ஓலை பாடையாய்
பாய் விரித்துப் படுத்திருக்க
பாக்கு வெத்திலைப் பெட்டியோ
ஆறிலிருந்து அறுபதுவரை
என்னைப் பற்றி பஞ்சாயத்து
நடக்கிறது

என்னைப் பற்றி பற்ற வைக்க
சுருட்டு ஒன்று சுங்கானைத் தேடுகிறது
சும்மா சொல்லக் கூடாது
மனிதனை விட பிணம் தான்
அதிகம் பேசுகிறது

நான் உழுத வயல் எல்லாம்
தரிசாய்க் கிடக்க என்
உடல் பிணமாய் கிடக்கிறது

கொள்ளி வைப்பவன்
கண்களில் கண்ணீர் கசிகிறது
கொள்ளிக் குடம் சுமப்பவன்
கண்களில் கண்ணீர் சொரிகிறது
வள்ளி பெத்தவன் என்றாலும்
வஞ்சம் இல்லா என் ஆச்சியின்
பார்வையில் அவனும்
தன் பிள்ளை தான்

பலாவிலையில்
குழைத்து வைத்த பழஞ்சோற்றின்
மேலே வைத்த சூடை மீன்
எனக்கும் அவனுக்கும்
ஒன்று தான் அவன்
கண்களில் கண்ணீர் சொரிகிறது

தீயவள் வேள்வியில் சங்கமமாக
நாலு நடைப் பிணம்
தோளில் என் பிணம்
ஊர்வலம் போகுது
மெய் ஒன்று தீ தின்ன
நெய் கொண்டு போகுது

## வறுமையின் கோர தாண்டவம்



குப்பிழான் பாலா நோர்வே

நல்லபண்டங்களை
கண்டறியோம்
ஒரு நாளும் வயிறு ஆற
உண்டறியோம்
அல்லும் பகலும்
உலைந்திடுவோம்
ஆற வழி இன்றி
அலைந்திடுவோம்

என்னப்பா யாம் படும்
பாட்டை எல்லாம்
யாரிடம் சொல்லி
அழுவோம் அம்மா, ?
அன்னப்பால்
(சிறு சோறு ஊறிய நீர்)
காணாத ஏழைகளுக்கு நல்ல
ஆவின் பால் எங்கே
கிடைக்கும் அம்மா?

பசி இல்லா சிலைக்கு
பால் ஊற்றும் பக்தா!
பசித்தீயில் கருகும் ஏழைக்கு
ஈய்ந்தால் அதர்மமாகுமா?
பிறந்தாலும் பால் ஊட்டும்,
இறந்தாலும் பால் ஊற்றும்
மனித இனமே! நாம்
பிறந்தாலும், இறந்தாலும்
சிறந்தது எதுவுமில்லையே!

## எழுந்திடு மனிதா

அகீலா ஜவுபர், ஏத்தாளை புத்தளம்

நினைப்பதெல்லாம் நடந்து விட்டால்
வாழ்வின் அர்தம் புரியாது

மறைந்தது அனைத்தும் நினைவிருந்தால்
வெற்றியின் படிகள் மறையாது

தோற்ற தோல்விகள் தோல்கொடுக்கும்
வெற்றி கொடிமேல் வீற்றவைக்கும்

கோர்த்த கைகள் கழன்றுவிழும்
உன்கையே உன்னை வாழவைக்கும்

சோர்வு என்றும் தொலைந்து போகும்
தேடல் ஒன்றே தேற்றிவிடும்

நீ பார்த்த எதிர்பார்ப்பு எதிராகும்
நீ சேர்த்த தன்நம்பிக்கை துணையாகும்

முயன்று நீ போராட
முயற்சி என்பதே முன்னேற்றம்

இவற்றை உணர்ந்து
வாழ்வை வரைந்து
வரலாறு படைக்க
எழுந்திடு மனிதா !



## இவள் என் அவள்

நல்லை அமிழ்தன்

கண் வெட்டில் மின்னும் கவிதை அவள் – என்
கவி மெட்டில் துள்ளும் தேவதை இவள்
விண் தட்டில் உண்ணும் தேனிசை அவர் – என்
விசை எழுத்தை எண்ணும் குயிலிசை இவள்

தேன் நதியில் பாயும் ஓடம் அவள் – என்
தேசிய விழியில் ஆயும் பாடம் இவள்
பொன் மணியில் பூக்கும் பழம் அவள் – என
புது வழியில் கேட்கும் பலம் இவள்

கடல் மலையில் அளக்கும் அவள் – என்
காவின் மலரில் பணி அழைக்கும் இவள்
உடல் மறைத்து உலகம் சுற்றும் அவள் – என்
உயிர் நரம்பில் துடிக்கும் தமிழ் இவள்





## மகள்

ரதிதேவி, மானிப்பாய்

மழை தூரும் நேரம்
மனம் மாறுமோ
உன் மனம் மாறுமோ

ஈர மண் மேல்
பொன் பாதம் படுமோ
தன்னாலே பூச்செடி–
பூக்காதோடி
பூக்காதோடி

குடை கொண்டு
தோள் மேலே
விடை பெறும்
பெண்மானே
நடை போதும் நில்லடி
தோள் மீது சாயடி

உதிர்ந்த மழைத்துளி
மண்ணை முத்தமிடும் முன்னே
உன் கோபம் கண்டதடி
பொய்த்து ஆவியானதடி

கோபம் உடைந்து துளித் துளியாய்
விழி கண்ணீர் சுரக்கையிலே
அவை ஏந்தி வைத்திருப்பேன்
முத்தாய் மாத்திப் பரிசளிப்பேன்

## மாற்றம்

ஷப்ரா இல்முத்தீன், அட்டாளைச்சேனை

மாறவே மாட்டேன்
என்றவர்கள் தான்
மாறிப் போகிறார்கள்..

எப்போதுமே
இடைவிடாது பேசுவேன்
என்றவர்கள் தான்
இன்றைக்கு
பேச்சற்று மௌனித்துப்
போயிருக்கிறார்கள்

எதுவாயினும்
என்னோடு பகிர்ந்து கொள்
என்றவர்கள் தான்
இன்றைக்கு நேரமில்லை எனும்
ஒற்றை வார்த்தையில்
விலகிப் போகிறார்கள்

என்னை புரிந்து கொள்ளாமல்
விட்டு விடாதே
என்றவர்கள் தான்
இன்றைக்கு புரியாதவர்களாக இருக்கிறார்கள்

உனக்கு
உறுதுணையாக இருப்பேன்
என்றவர்கள் தான்
இன்றைக்கு உயிருடன் இருப்பதையே
மறந்து போகிறார்கள்...

உன் கண்ணீர்
எனக்கு வலிக்கிறது என்றவர்கள் தான்
இப்போது கதறிக் கதறி
அழ வைக்கிறார்கள்...

உன்னை பிடிக்காத எவரையும்
எனக்குப் பிடிக்காது
என்றவர்கள் தான் இன்றைக்கு
முதலாவதாக வெறுக்கவே ஆரம்பிக்கிறார்கள்

உன்னை ஏன்
தாமதமாக சந்தித்தேன் என்றவர்கள் தான்
உன்னை ஏன் சந்தித்தேனோ என்கிறார்கள்..

உன் பேச்சில் கவலை மறக்கிறது
என்றவர்கள் தான்
தூரப் போ என்று
சொல்லாமல் சொல்கிறார்கள்...

இத்தனை பேரைப் பார்த்தாயிற்று..
இனிமேலும் யாரும்
அப்படி இருப்பேன்
இப்படி இருப்பேன்
என்று வந்தால்
அதையும் மறுப்பின்றி
இந்த மனது நம்பி விடுமோ
என நினைக்கையில்
கொஞ்சம் வலியுடன் அதிக பயமும்
தொற்றிக் கொள்கிறது ஆழமாக...

## அருளவேண்டும்!

கவிமணி அ. கௌரிதாசன்,
ஆலங்கேணி கிழக்கு

பாயினிலே நான்படுக்க மற்றவர்கள் பணிசெய்யும்
படியாக விட்டிடாமல்
நோயினிலே தான் சிக்கி நொந்துபோய் அழுகின்ற
நிலைமையெனைத் தோட்டிடாமல்,
பார், வந்த பழிபாவம் படைத்தவனின் செயலென்று
வார்த்தைகளைக் கொட்டிடாமல்
ஊர்ப்பணத்தைக் கொள்ளையிட்டு வாயினிலே போட்டதென்று
ஊரவர்கள் திட்டிடாமல்,
நட்டநிசி வேளையிலென் நயனங்கள் தூங்காமல்
நான் விழிக்கும் நிலைவராமல்;
கன்னியர்கள் கற்பினுக்கு உலைவைத்த பாவியென்று
காசினியே தூற்றிடாமல்
பொன்பொருளில் பேராசை தான் கொண்ட பெருச்சாளி
என்றெவரும் உரைத்திடாமல்,
இயற்கை அழைப்புகளை இனிதேநான் நிறைவேற்ற
எழுந்துநட மாடுகின்ற–
முயல்வில் தோற்காமல் பெற்றிபெறும் உடல்வலிமை
முதல்வனேநீ, அருள வேண்டும்!

## மனிதருள் மாணிக்கம்

# மக்களால் நேசிக்கப்பட்ட மக்கள் நேசன் மருத்துவர் அமரர் சிதம்பரநாதன்

மு. தமிழ்ச்செல்வன்

ஐயாவிடம் காட்டினால் வருத்தம் சுகமாகும் என நீண்ட வரிசையில் காத்திருந்து நோயை கூறி ஐயாவின் வார்த்தைகளை கேட்டு செல்வதற்கு என்றே வைத்தியசாலைக்கு ஒரு கூட்டம் வரும். ஐயா எழுதி வழங்கும் குளிசைகளை விட ஐயாவின் வார்த்தைகள் அவர்களின் நோயின் அரைவாசியை குணப்படுத்தியது என்று கூறுமளவுக்கு ஐயா மக்களை நேசித்தார். அதனால்தான் அவர் அதிகளவான மக்களால் நேசிக்கப்பட்ட மருத்துவராக இருந்தார். இதனால் தான் சட்ட ரீதியாக ஓய்வுப்பெற்றாலும் இறுதிவரை ஓய்வுபெறாது மக்களுக்காக பணியாற்றி மருத்துவராக மாறினார் அமரர் சிதரம்பரநாதன்.

கிளிநொச்சியின் மருத்துவத்துறை வரலாற்றில் இடப்பெயர்விற்கு (2009ற்கு) முன்னர் என்று இடப்பெயர்விற்குப் (2009 இற்குப்) பின்னர் என்று இரண்டு பிரதான காலப் பகுதிகள் உள்ளன. மக்களுக்காகவே வாழ்ந்து மக்களைப் பற்றியே சிந்தித்து மக்களோடு மக்களாக நின்று சேவையாற்றிய மகான்கள் நிறைந்த காலப்பகுதியாகவே இடப்பெயர்விற்கு முன்னரான வன்னி மண் காணப்பட்டது.



இந்த இரண்டு காலப்பகுதிகளிலும் மக்கள் மனதில் சிம்மாசனம் இட்டு அமர்ந்திருந்த மருத்துவர்களில் ஒருவர்தான் தான் அமரர் வைத்தியர் சிதம்பரநாதன் அய்யா அவர்கள்.

10.11.1931 ஆண்டில் யாழ்ப்பாண மாவட்டத்தில் பிறந்த இவர், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லுளரியின் பழைய மாணவர். கல்லுளரிக் காலத்தில் சகல துறைகளிலும் சிறந்து விளங்கியவர்.

வைத்தியத்துறையில் நுழைந்ததும் அக்காலப்பகுதியில் இலங்கை இராணுவத்தில் கடமையாற்றிய தனது மாமனார் மேஜர் தர்மலிங்கத்தைப் பின்பற்றி இலங்கை இராணுவத்தின் மருத்துவ அணியில் தொண்டர் படை அதிகாரியாக வாழ்வினை ஆரம்பித்தார்.

பதினாறு ஆண்டுகள் இலங்கை இராணுவ மருத்துவ அணியில் கடமையாற்றிய வைத்தியர் சிதம்பரநாதன், பின்னர் அதில் இருந்து விலகி இலங்கையின் பல பாகங்களில் கடமையாற்றினார். இரத்தினபுரி மாவட்டத்தின் பலாங்கொடை வைத்தியசாலை, மன்னாரின் மடு மற்றும் அடம்பன் வைத்தியசாலைகள், திருகோணமலையின் கந்தளாய் வைத்தியசாலை, குருநாகல் மாவட்டத்தின் கண்டாவ வைத்தியசாலை, ஆகியவற்றில் கடமையாற்றிய வைத்தியர் சிதம்பரநாதன் பின்னாளில் கிளிநொச்சி மருத்துவத் துறையின் உயிர்நாடியாக விளங்கினார்.

1995 ஆம் ஆண்டில் தாம் இளைப்பாறிய பின்னரும் யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்பட்ட வைத்தியர் பற்றாக்குறையினை மனத்தில் கொண்டு வட்டுக்கோட்டை மற்றும் மருதங்கேணி வைத்தியசாலைகளில் தொடர்ந்து தமது பணியினைச் ஆற்றி வந்தார்.

இறுதியாக கிளிநொச்சி மண்ணின் மகிமையால் நிரந்தரமாக கிளிநொச்சி மாவட்டத்திலேயே தங்கியிருந்து தமது மக்கள் தொண்டினை வைத்தியர் சிதம்பரநாதன் ஆற்றி வந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இவரது கால் படாத வைத்தியசாலைகளே இல்லை எனும் அளவிற்கு எங்கெல்லாம் மக்களுக்கு வைத்திய உதவி தேவைப்படுகிறதோ அங்கெல்லாம் அவர் சென்று சேவை வழங்கினார்.

அவர் தற்போதைய கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலை பிரதேச வைத்தியசாலையாக இருந்தபோது அதன் பொறுப்பதிகாரியாக கடமையாற்றினார். 90ம் ஆண்டுகளில் கிளிநொச்சி வைத்தியசாலை இடம்பெயர்ந்து அக்கராயன் வைத்தியசாலையில் இயங்கிய காலப்பகுதியில் அன்னாரது சேவைகள் காரணமாக கடவுளுக்கு நிகராக மக்களால் கொண்டாடப்பட்டார்.

பின்னாளில் கிளிநொச்சி வைத்தியசாலை தரம் உயர்த்தப்பட்டு மாவட்டப் பொது வைத்தியசாலையாக மாறிய காலப்பகுதியில் அவ் வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவின் பொறுப்பு வைத்தியராக பணிபுரிந்தார்.

2008 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கிளிநொச்சி வைத்தியசாலை இடம்பெயர்ந்த காலப்பகுதியிலும், பின்னர் 2009 ல் ஆரம்பித்த மீள் குடியேற்ற காலத்திலும் வன்னிப் பிரதேசத்தின் பல வைத்தியசாலைகளில் வெளிநோயாளர பிரிவுகளில் கடமை செய்து மக்களைக் காத்தார்.

மீள்குடியேற்ற காலப்பகுதியில் தமது நண்பரான காலஞ்சென்ற வைத்தியர் கோபாலபிள்ளை அவர்களுக்கு உதவியாக மல்லாவியிலிருந்து உருத்திரபுரம் வரை நோயாளர்களைப் பார்வையிட்ட வைத்தியர் சிதம்பரநாதன் வன்னிப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அனைத்து நடமாடும் மருத்துவ சேவைகளிலும் தமது சேவையினை வழங்கி வந்தவர்.





மீள் குடியேற்றத்தின் பின்னர் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் வைத்தியர்களது எண்ணிக்கை கூடினாலும் வைத்தியர் சிதம்பரநாதனிடம் மருந்து எடுப்பதற்காக தனியாக ஒரு சனத்திரள் காத்திருப்பதை பலரும் கண்டிருப்பார்கள். நோயாளர்களது மனதுக்கு உகந்தவாறு அன்பு, ஆதரவு, கண்டிப்பு என கலவையான தொனியில் உரையாடும் வைத்தியரை மக்கள் நாடிச் சென்றதில் வியப்பில்லை தான்! கிளிநொச்சி வைத்தியசாலை சுவரில் தொங்கிய ஒரு அஞ்சலிக் குறிப்பைப் பாருங்கள்.

கிளிநொச்சியைச் சேர்ந்த கொழும்பு பல்கலைக்கழக இறுதியாண்டு மருத்துவ மாணவர் ஒருவரால் வரையப்பட்டிருந்த அஞ்சலிக்குறிப்பு பின்வருமாறு இருந்தது நான் அவரை எனது சிறுவயது முதல் அறிவேன். 2005 ஆம் ஆண்டிலும் அதற்குப் பின்னரும் அவரிடம் சிகிச்சை பெறுவது வழக்கம். தனிப்பட்டமுறையில் அவரே எனக்கு ஒரு முன்னுதாரணமாகவும் ஊக்கியாகவும் இருந்தார்.

நோயாளர்களுடன் மிக அன்பாகவும் அவர்களுக்கு அர்ப்பணிப்புடனும் சேவை செய்யும் ஒரு ஆன்மா அவர். எனது தந்தையார் எப்போதும் அவரை ஒரு கடவுள் என வர்ணிப்பதுடன், 90களில் இடம்பெயர்ந்த காலப்பகுதிகள் மற்றும் யுத்தம் இடம்பெற்ற நாட்களில் அவரது சேவைகள் குறித்த பலகதைகளை எங்களுக்கு கூறுவார். சிறுவர்களாக இருந்த எங்களுக்கு அந்தக் கதைகள் ஊக்கம் அளிப்பவையாகவே இருந்தன. அவருக்கு பின்னால் வரும் தலைமுறைகள் அவரை நினைவு கொள்வதற்கு உரிய தகுதியைக் கொண்டவர் அவர் என்று அக்குறிப்பில் காணப்பட்டது.

இல்வாழ்க்கையில் மனத்திற்கு உகந்த மனையாளாக வாய்ந்த அம்மையாரும் வைத்தியரின் மனம் அறிந்து வாழ்ந்தமை இக்கால இணையர்களுக்கு ஒரு முன்னுதாரணம்.

ஆண் மகவு ஒன்றும் பெண் மகவுகள் இரண்டுமாக நிறைவாக இருந்த குடும்பத்தில் இரண்டு பெண் மக்களும் திடீரென மறைந்தபோதும் கலங்காது தமது பேரப்பிள்ளைகளை தாயாக இருந்து காத்த பண்பு அவரது மன ஓர்மத்திற்கும் எதையும் தாங்கும் இதயத்திற்கும் ஒரு உதாரணமாகும். தமது இறுதிக் காலப்பகுதியில் யாழப்பாணத்தில் இருந்த தமது பூர்வீக இல்லத்தில் தங்கியிருந்த வைத்தியர் சிதம்பரநாதன் தமக்கு சுவாசிப்பதற்கு சிரமம் ஏற்பட்டதும் தேடி வந்தது கிளிநொச்சி வைத்தியசாலையையே.

தந்தையின் சுகவீனச் செய்தி கேட்டு கடல் கடந்து ஓடி வந்த மகனுடனும் தம்மோடு கூடவே வந்த மனையாளுடனும் கடைசி இரண்டு தினங்களைக் கழிக்க அவரால் முடிந்தது.

13.01.2021 அன்று இரவு மனைவியை அருகில் அழைத்த வைத்தியர் சிதம்பரநாதன், அம்மா ஒரு பத்து நிமிசம் என்னோட கதையுங்கோ என்று சொல்லியிருக்கிறார்.

ஏனப்பா திடீரெண்டு பத்து நிமிசம் கதைக்க சொல்லுறியள் என்று கேட்ட மனையாளுக்கு அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா? இந்தப் பத்து நிமிசமும்தான் நான் உங்களோட கதைக்கலாம். பிறகு நான் தில்லையில நடனமிடும் அம்பலத்தானிடம் போய்விடுவேன் என்பதாகும். அதன்பின்னர் நோயாளர் காவு வண்டியை அழைக்கும்படி மகனாருக்கு கூறிய வைத்தியர் சிதம்பரநாதன், தாம் இறுதிவரை நேசித்த கிளிநொச்சி வைத்தியசாலையில் 15.01.2022 காலை 6.30 மணியளவில் அமைதியாக இவ்வுலகை விட்டுச் சென்றார்.

கிளிநொச்சியில் பல மருத்துவர்களுக்கும் மருத்துவ மாணவர்களுக்கும் உதாரண புருசராக விளங்கிய கிளிநொச்சியின் மூத்த வைத்தியர் சிதம்பரநாதன் அவர்கள் தமது 91வது வயதில் அமரத்துவம் அடைந்தாலும் கிளிநொச்சி வைத்தியசாலை இருக்கும் வரை அவரது நினைவுகளும் நீண்டு நிலைத்து நிற்கும்.

நோயாளர்களுக்கான உங்களது கடமையைச் செய்யுங்கள் ஆனால் பலனை எதிர்பாராதீர்கள் என்ற வைத்தியர் சிதம்பரநாதனது அறிவுரையின்படி கிளிநொச்சி மாவட்டத்தின் சுகாதாரப் பணிக்குழாம் செயற்படுவதே அவர்கள் அன்னாருக்கு செலுத்தக்கூடிய உச்சபட்ச கௌரவமாகும்.

## தனுஷ்-ஐஸ்வர்யா... (03ஆம் பக்கத் தொடர்)

அதாவது இவர்களிடம் ரஜினிகாந்த் தனி தனியாக பேசி சமாதானம் செய்ய முயன்று இருக்கிறார். பேசி பாருங்கள்.. குழந்தைகள் இருக்கிறார்கள் என்று கூறியுள்ளாராம். ஆனால் இரண்டு பேருமே மீண்டும் சேர்ந்து வாழும் எண்ணத்தில் இல்லை. 7 வருடங்களுக்கு முன் இதே போன்ற பிரச்சனையில் சமரசம் செய்து அது வெற்றிபெற்றது.. ஆனால் இந்த முறை இரண்டு பேரையும் குடும்பத்தினரால் சமாதானம் செய்ய முடியவில்லை என்று கூறப்படுகிறது.

இந்த சமாதான முயற்சி தோல்வி அடையவே தனுஷ் வெளி மாநிலம் சென்று அங்கு தனியாக தங்கி இருக்கிறார். இரண்டு வாரங்கள் சமாதானம் முயற்சி செய்துவிட்டு.. ரஜினி தரப்பும் இனி நாம் சொல்ல ஒன்றும் இல்லை என்று ஒதுங்கிக்கொண்டதாக கூறப்படுகிறது. 2 வாரமாக தனுஷ் தனியாக தங்கிய நிலையில் ஐஸ்வர்யாவும் பிரியும் முடிவை அறிவித்துவிடலாம் என்ற நிலைப்பாட்டிற்கு வந்து இருக்கிறாராம். இதன் பின்பே பிரியும் முடிவை அறிவிக்கலாம் என்று இருவரும் முடிவு செய்துள்ளனராம். அதன்பின் இரவு நேரத்தில் இருவரும் ஒன்றாக இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர். இதன்பின் சட்ட ரீதியாக இருவரும் பிரிவதற்கான முயற்சிகளை செய்வார்கள் என்று கூறப்படுகிறது. இருவரும் பிரிந்தது குறித்து அறிவித்த நிலையில் அதை பற்றி நடிகர் ரஜினிகாந்த் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. அவர் அமைதியாக இதை ஏற்றுக்கொண்டார் என்று கூறப்படுகிறது.

## அரசுடன் இணைந்திருக்க முடியாவிடின்... (06ஆம் பக்கத் தொடர்)

பதில்: நான் ஏற்கனவே குறிப்பிட்டது போன்று, எமது முன்னேற்றம் ஒரு குழு முயற்சியாக இருக்க வேண்டும். அவர்கள் அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதாக இருந்தால் அரசுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். அப்படியல்லாமல் எதிர்க்கட்சி வேடம் போடுகின்றார்களாயின் ஆட்சியிலிருப்பதை விட எதிர்க்கட்சியில் இருப்பதே சிறந்தது. நல்லாட்சி எனக் கூறிக் கொண்ட கடந்த அரசாங்கத்துக்கும் இதுவே நடந்தது.

அவர்களுக்கு அமைச்சுப் பொறுப்புக்கள் மற்றும் ஏனைய சலுகைகள் கிடைத்துள்ளன. இருந்தபோதும் அரசாங்கத்தைத் தொடர்ந்தும் விமர்சிக்கின்றனர். அரசாங்கம் செய்யும் அனைத்து நல்ல செயல்களுக்கும் அவர்கள் மார்தட்டிக் கொள்கின்றனர், ஏதாவது கெட்டது நடந்தால் உடனடியாக எம்மீது விமர்சனத்தை முன்வைக்கின்றனர். அவர்கள் எங்களுடன் இணைந்து பணியாற்றத் தயாராக இருந்தால், நாங்கள் அதற்குத் தயாராக இருக்கிறோம். அவர்களுக்கு சில அமைச்சுப் பதவிகளை வழங்கி, இணைந்து செயற்படுகின்றோம். ஆனால் அவர்கள் எங்களுடன் இணைந்து பணியாற்ற விரும்பவில்லை என்றால், அரசாங்கத்தில் இருக்கும் போது விமர்சிப்பதை விட அவர்கள்தான் முடிவெடுக்க வேண்டும்.

**கே: பொதுஜன பெரமுனவின் அதிருப்தி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை பதவியில் இருந்து நீக்குவது ஊடாக மாத்திரம் பிளவுகள் ஏற்படுவதைத் தடுக்க முடியாது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியுள்ளார். இதுபற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**

பதில்: சில அரசாங்கப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு குழுப்பணி என்றால் என்ன என்று தெரியவில்லையா? அதேசமயம் பேசுவதற்கு நிறைய வாய்ப்புகள் உள்ளன. நீங்கள் உங்கள் கருத்துக்களை தெரிவிக்க விரும்பினால், அரசாங்கத்தின் பாராளுமன்றக் குழுக் கூட்டம், அமைச்சரவைக் கூட்டம் மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் சந்திப்புகள் உள்ளன. இங்கு எது பற்றியும் கதைக்காமல் ஊடகங்கள் ஒலிவாங்கியைக் கொடுத்ததும் சிலரை மகிழ்விப்பதற்கு அரசை விமர்சிக்கின்றனர்.

குழுக் கூட்டங்களில் அந்தப் பிரச்சினைகளை எழுப்பி, அனைவரும் கேட்கும் வகையில் செய்ய வேண்டிய மாற்றங்களைச் சுட்டிக் காட்டியிருக்கலாம். அரசாங்கக் கூட்டங்களில் சில உறுப்பினர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள்? வெளியே வந்து வேறு ஏதாவது பேசுவதைப் பார்த்து நாங்கள் ஆச்சரியப்பட்டோம். நாங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து செயற்படுவதால் அரசாங்கம் தொடர்பில் பல விமர்சனங்கள் வந்துள்ளன. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீது நடவடிக்கை எடுக்காததால் எங்களை விமர்சிக்கின்றனர்.

**கே: உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகளை துரிதப்படுத்தாதது அரசாங்கத்தின் மீதான முக்கிய குற்றச்சாட்டுகளில் ஒன்றாகும். அரசாங்கத்தின் பங்குதாரராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதால் அரசாங்கத்தின் மீது இந்தக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அரசாங்கத்தின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர். இது பற்றி என்ன கூற விரும்புகிறீர்கள்?**

பதில்: குண்டுத் தாக்குதல்கள் குறித்த விசாரணைகள் தொடர்ந்து வருகின்றன. உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பின்னரும், முன்னாள் நல்லாட்சி அரசாங்கம் எட்டு மாதங்களுக்கும் மேலாக ஆட்சியில் இருந்தது. குற்றம் சாட்டப்பட்டவர்களும் அந்த அரசில் இருந்தனர். விசாரணையின் சில தகவல்கள் காணாமல் போயுள்ளன. தற்போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தாடர்பான விசாரணைகள் துல்லியமான முறையில் நடத்தப்படுகின்றன. சில நீதிமன்ற நடவடிக்கைகள் ஏற்கனவே தொடங்கப்பட்டுள்ளன, மேலும் சில குற்றவாளிகள் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் 50 சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். விசாரணைகள் சுமுகமாக நடந்து வருகின்றன. வெகுவிரைவில் முடிவுகளை மக்கள் பார்ப்பார்கள். மிகவும் சுதந்திரமான விசாரணைகள் நடந்து வருவதால் உண்மையில் என்ன நடக்கிறது என்பது எங்களுக்குத் தெரியாது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குப் பொறுப்பானவர்கள் அரசாங்கத்தில் இருந்தாலும் எதிர்க்கட்சியாக இருந்தாலும் அவர்கள் முடிவுகளை வழங்குவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம்.

## ரஷ்ய-உக்ரைன் மோதல் நிலை... (12ஆம் பக்கத் தொடர்)

அது மட்டுமல்ல, பைடன் போன்ற தலைமைகளதும் குடியரசுக் கட்சி அல்லாத சூழலிலும் ஒரு போரை மேற்கொள்ளலாம் என்றே ரஷ்யாவின் ஆளும் தரப்பு கருதுகிறது. அவ்வகைப் போரைத் தொடக்கினால் பாரிய இழப்பின்றி நிகழ்த்தி முடிக்க முடியும் என கருதும் ரஷ்ய மறுபக்கத்தில் படையையும் ஆயுத தளபாடங்களையும் எல்லையில் குவித்துவிட்டு இலகுவாக நேட்டோவையும் ஐரோப்பாவையும் கையாளலாம் எனக் கணக்குப் போட்டு செயல்படுவதாகவும் தெரிகிறது. ரஷ்யாவைப் பொறுத்தவரை போருக்கு போவதை விடுத்து போருக்கான கொதிநிலையை வைத்துக்கொண்டு அரசியல் நகர்வுகளை மேற்கொள்ள முடியுமொன கருதுகிறது. இயலாத சூழலில் போரை தெரிவாகக் கொள்ள புட்டின் திட்டமிடுவதனைக் காணமுடிகிறது.

ஐந்தாவது, மேற்குலகத்தைப் பொறுத்தவரை ரஷ்யாவை முழுநீள போருக்குள் இழுப்பதன் மூலம் அதன் பொருளாதாரத்தை சிதைத்து ரஷ்யாவின் உலகளாவிய அணுகுமுறையை கையாளலாம் என்றொரு கருத்து ஐரோப்பிய அரசியலில் உண்டு. அத்துடன் சீனாவுடனான கூட்டை தகர்ப்பதன் மூலம் சீனாவை தனிமைப்படுத்த முடியுமொனவும் கருதுகின்றது. ரஷ்யாவின் உலகளாவிய கூட்டுக்களையும் அவற்றின் பலத்தையும் முடிவுக்கு கொண்டுவர மேற்குலகம் முனைகிறது. அதாவது ஈரான், வடகொரியா, சிரியா, துருக்கி போன்ற நாடுகளின் ரஷ்யாவுடனான ஒத்துழைப்பினை முடிவுக்கு கொண்டுவருவதுடன் அந்த நாடுகள் மீதான ஆதிக்கத்தை செலுத்த முடியுமென மேற்குலகம் கருதுகிறது.

எனவே அமெரிக்கா உட்பட்ட நேட்டோ தரப்புக்கு ரஷ்ய உக்ரைன் போர் அவசியமானதாக உள்ளது. அத்தகைய போர் ஏற்படுவதன் மூலம் ரஷ்யாவை பலவீனப்படுத்துவது மட்டுமல்லாது சீனாவையும் மேற்குக்கு எதிரான அணியையும் முடிவுக்கு கொண்டுவர முடியும். அதே நேரம், இப்போரை இரு நாட்டுக்குமான போராக கையாள்வதைக் கடந்து நேட்டோவின் விஸ்தரிப்பினை முடிவுக்கு கொண்டுவரும் நோக்குடன் ரஷ்யா நகர்கின்றது. ரஷ்யாவுக்கு இப்போர் அவசியமானதாக காணப்பட்டாலும் அதன் விளைவு நேட்டோ விஸ்தரிப்பினை முடிவிக்கு கொண்டுவருவதுடன் ரஷ்யாவின் விஸ்தரிப்பையும் அதன் விளிம்பு மற்றும் மையநிலங்களைப் பாதுகாப்பதாக அமைய வேண்டும். அதற்கான நகர்வாகவே போரை ரஷ்ய தெரிவாகக் கொள்ளும். ஆனால் அதற்கு முன்பே போரை நிகழ்த்தி அதில் ரஷ்யாவைத் தோற்கடிக்க வேண்டும் என்பதே மேற்குலகத்தின் திட்மிடலாக அமைந்துள்ளது.

## சேவைகளில் மந்தநிலையை உருவாக்குமா... (12ஆம் பக்கத் தொடர்)

கொள்கைரீதியில் ஓய்பெறும் வயதெல்லை நீடிக்கப்படுவதை எதிர்ப்பவர்கள் கூறும் தர்க்கங்களில் முக்கியமானது, சிரேஷ்டப் பிரஜைகள் நவீன தொழில்நுட்ப பயன்பாட்டை இலகுவில் கற்றுக்கொள்ள முடியாது. அவர்களது மனோபாவங்களும் அதற்கு இலகுவில் இடந்தராது என்பதாகும். அதேவேளை இவ்விடயம் இளைஞர்களால் இலகுவில் சாத்தியப்படும். மாறிவரும் உலகில் அடுத்துவருகின்ற காலப்பகுதிகள் மீயுயர் தொழில் நுட்பப்பாய்ச்சலுடன் சவால்மிக்க போட்டித்தன்மை கொண்டதாக அமையும். எனவே ஏற்கெனவே விளைதிறனும் வினைத்திறனும் குன்றிப்போயுள்ள அரசாங்கத்துறையில் ஓய்வூதிய வயதெல்லை நீடிப்பு நாட்டின் பொருளாதாரத்தில் காத்திரமான விளைவுகள் எதையும் ஈட்டித்தராது என்பதாகும். ஆனால் நாட்டில் ஓய்வு பெற்ற அரச நிருவாக சேவை உத்தியோகத்தர்கள் ஓய்வுபெற்ற நீதிபதிகள் மற்றும் பாதுகாப்புப்படை உத்தியோகத்தர்கள் போன்ற சில தரப்பினர் ஓய்வின் பின்னரும் பல்வேறு பதவி நிலைகளில் அமர்த்தப்பட்டதையும் நாம் காணலாம். மத்தியவங்கியின் முன்னாள் ஆளுநா் கூட நாட்டின் பல்கலைக்கழகமொன்றின் உப வேந்தராக இருந்து ஓய்வுபெற்ற ஒரு தகைநிலைப் பேராசியராவார். ஆனால் அத்தகைய நிகழ்வுகளை எல்லாப் பணிநிலைகளுக்கும் பொருத்திப்பார்க்க முடியுமா என்றால் அது சந்தேகத்திற்கு இடமானதுதான்.

இப்போது பேசுபொருளாக மாறியிருக்கும் இதனோடு தொடர்படைய விடயம் பல்கலைக்கழகங்களிலும் உயர்கல்வி நிறுவனங்களிலும் பணி புரியும் கல்விசார் ஊழியர்களின் வயதெல்லையை மேலும் அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையாகும். முன்னர் ஏனைய அரசு துறை ஊழியர்களின் ஓய்வு பெறும் வயதெல்லை 55 வயதாக இருந்தபோது 65 வயதாக நிர்ணயிக்கப்பட்ட கல்வியாளர்களின் வயதெல்லை இப்போது ஏனைய தரப்பினரின் வயதெல்லைக்கு சமமாக மாறிவிட்டது. அதனால் கல்வியாளர்களின் ஓய்வுபெறும் வயதெல்லை 70 வயது வரை அதிகரிக்கப்படவேண்டும் என்ற கோரிக்கை வலுப்பெற்று வருகிறது. இப்போது 65 வயதில் ஓய்வு பெறும் கல்வியாளர்கள் தனியார் துறையிலோ அரசுசாராத துறையிலோ அடுத்த ஒரு ரவுண்ட் தொழில் புரிந்த கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால் அவர்களது ஓய்வு பெறும் வயதை நீடித்தால் அடுத்த நிலையில் உள்ளவர்களுக்கு பதவிகள் கிடைக்காது. சேவை நீடிப்பு ஒட்டுமொத்தமாக எல்லோருக்கும் வழங்கப்படக்கூடாது. தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மட்டுமே வழங்கப்படவேண்டும் என்றவாறு பல்வேறு தர்க்கங்கள் பல்கலைக்கழக மட்டத்திலே தற்போது உலாவி வருகின்றன. அரச சேவையிலே ஒரே தரத்தில் உள்ளவர்களில் சிலருக்கு ஓய்வூதிய வயதெல்லையை நீடித்து வேறுசிலருக்கு அவ்வாறு செய்யப் படாமல் விடமுடியாது என்ற அடிப்படை விடயம் கூட விளங்காத நிலையில் பேராசிரியர்கள் உள்ளார்களா என்று புருவங்களை உயர்த்தாமல் இருக்க முடியவில்லை.

கல்விசார் ஆளணியினரின் ஓய்வு பெறும் வயதெல்லை மேலும் நீடிக்கப்படுகிறதா இல்லையா என்பதை விட அறிவுசார் சமூகத்தை உருவாக்க பங்காற்றிய ஒருவர் தமது அந்திம காலத்தை மகிழ்ச்சியாகக் கழித்து மறைந்து போகிறாரா அல்லது தமது கடைசிக்காலத்தில் பொருளாதார பலமின்றி கவனிப்பாரற்று வேதனையுடன் போய்சேர்கிறாரா என்பதே முக்கியமானது. பல்கலைக்கழக கல்விச் சமூகத்திலே ஓய்வூதியம் பெறாத ஒரு பிரிவினர் இன்னும் இருக்கின்றனர். ஓய்வின்போது அவர்கள் பெறும் சேமலாப நிதி வயோதிபத்தின்போது வரும் மருத்துவ செலவுகளின்போது ஒரேயடியாகத் தீர்ந்துபோய் வாழ்வதற்கு சிரமங்களை எதிர்நோக்கி மற்றவரிடம் கையேந்துவதை வேதனையடன் பலதடவைகள் பார்த்திருக்கிறோம். ஓய்வின் பின்னர் அவர்கள் பெரும்பாலும் சமூகத்தால் மறக்கப்பட்டவர்களாகவும் ஆகிவிடுகின்றனர். எனவே இவ்விடயமே முக்கியமாகப் பார்க்கப்பட வேண்டும்.

## மருத்துவ அதிகாரி (பகுதி நேர அடிப்படையிலான தற்காலிக) பதவிக்கான விண்ணப்பக்கோரல்

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதுடன்

அது தொடர்பான பத்திரிகை விளம்பரமானது

2022 ஜனவரி மாதம் 23 ம் திகதி (Sunday observer) சன்டே ஒப்சேர்வர் பத்திரிகையில் பிரசுரமாகவுள்ளது.

தொலைபேசி : 011-2630730
தொலைநகல் : 011-2630725

---

### மூடப்படும் திகதியை நீடித்தல்

## முன்மொழிவுகளுக்கான விண்ணப்பம் (RFP)

### ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு

ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சிற்காக மருத்துவ வழங்குகைகளின் முகாமைத்துவத்திற்காக 'சுவஸ்த' இன் அபிவிருத்திக்காக முழுமையான தகவல் முகாமைத்துவ முறைமையொன்றை பெற்றுக்கொள்வதற்கான உசாத்துணை சேவை

SM/PSRP/07/2021/0

சொல்லப்பட்ட RFP இற்கான முழுமையான பூர்த்தி செய்யப்பட்ட RFP ஆவணங்களுடன் ஏனைய ஆவணங்கள் (முன்மொழிவுகள்) சமர்ப்பிக்கப்படுதல் மூடப்படும் திகதி 2022 ஜனவரி 31 மு.ப. 10.00 மணிவரை நீடிக்கப்படுகின்றது. RFP ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டல்களின் அடிப்படையில் RFP மூடப்பட்ட பின்னர் உடனடியாக கிடைக்கப் பெற்றுள்ள முன்மொழிவுகள் திறக்கப்படும்.

2022.01.02ம் திகதிய பத்திரிகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மாற்றமின்றி காணப்படும்.

**செயலாளர்,**
**ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு,**
**இல. 464/ஏ, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10**
**(5 ஆம் மாடி - தலைமையக கட்டிடம்)**

---

## மக்கள் வங்கி

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### கொழும்பு 02, நவம் மாவத்தையில் தற்போதுள்ள பழைய கட்டிடத்தை தகர்த்தல் மற்றும் இடிபாடுகளை அப்புறப்படுத்துதல்

### கேள்வி இல. 004/2022

01. கொழும்பு-02, இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, மக்கள் வங்கி தலைமை அலுவலகம், பிரதான முகாமையாளர் (பொறியியல் சேவைகள்) பின்வருமாறு விபரிக்கப்பட்டுள்ள கொழும்பு 02, நவம் மாவத்தையில் தற்போதுள்ள பழைய கட்டிடத்தைத் தகர்த்தல் மற்றும் இடிபாடுகளை அப்புறப்படுத்துதல் எனும் பணிக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

    இந்த செயற்றிட்டத்தில் சுமார் 13,179.0 சதுர அடி பரப்பளவைக் கொண்ட இரண்டு ஒற்றை மாடிக் கட்டிடங்கள் மற்றும் சுமார் 1516 சதுர அடி பரப்பளவைக் கொண்ட இரண்டு மாடிக் கட்டிடங்கள் என்பன உள்ளடங்குகின்றன. இந்த வேலைகளில் வரையறையில்லாத தற்போதுள்ள வலுவேற்றப்பட்ட கட்டமைப்புகளைத் தகர்த்தல், மேசன்வேலை சுவர்கள், பகுதிபிரிப்புகள், கதவுகள் மற்றும் யன்னல்கள், சீலிங் முடிவுறுத்தல்கள், மின்சார பொருத்துகள் மற்றும் துணைப்பாகங்கள், கதவு மற்றும் யன்னல், கூரைக் கட்டமைப்பு என இன்னும் பல இந்த வேலைகளில் உள்ளடங்குகின்றன. கட்டிடத்தை தகர்ப்பதற்கு முன் சகல பெறுமதியான மற்றும் மீள் பாவனைப் பொருட்கள் மற்றும் பொருத்தல்கள் என்பவற்றை ஒப்பந்தக்காரர் கொள்வனவு செய்து மற்றும் அப்புறப்படுத்துதல் வேண்டும் என்பதுடன் சகல இடிபாடுகளையும் வளவிலிருந்து வெளிக்கொணர்தல் வேண்டும்.
02. ஒப்பந்தம் கையளிக்கப்படும் நாள் முதல் 45 நாட்கள் பூர்த்தி செய்வதற்கான காலமாகும்.
03. தேசிய போட்டி ரீதியான விலைமனு முறையின் கீழ் விலைக்கோரல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படும்.
04. கடந்த ஐந்து வருட காலத்தில் இதனையொத்த அல்லது இதற்கும் அதிக அளவிலான கட்டிட தகர்த்தல் அல்லது இது சார்ந்த கடந்தகால அனுபவங்கள் பற்றிய விபரங்களை விலைமனுக்களுடன் சமர்ப்பிக்குமாறு விலைமனுதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
05. தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர் பழைய கட்டிடத்தை தகர்த்து அப்புறப்படுத்துகையில் கட்டிடத்திற்கு அருகிலுள்ள ஆதனங்களுக்கு மற்றும் பொதுமக்களுக்கு தொந்தரவு மற்றும் பாதிப்பு ஏற்படாத வகையில் மேற்கொள்வதற்கு சகல செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.
06. தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர் கட்டிடத்தை தகர்த்து அப்புறப்படுத்துவதற்குத் தேவையான சகல வாகனங்கள், இயந்திரோபகரணங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதுடன் தகர்த்து அப்புறப்படுத்திய பொருட்களை போக்குவரத்து செய்து தேவையான ஒப்புதல் சகிதம் பொருத்தமான இடத்தில் கொட்டுவதற்கு வேலைத் திட்டமொன்றை அமைத்துக்கொள்ளல் வேண்டும்.
07. கட்டிடத்தை தகர்த்து அப்புறப்படுத்துவதற்கான இயைபான ஒப்பந்தத்திற்காக சகல ஆதனங்கள் மற்றும் உயர்கள் உள்ளடங்கும் வகையில் (மூன்றாம் தரப்பினர் உட்பட) காப்புறுதியொன்றைக் ஒப்பந்தக்காரரால் பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.
08. ஒப்பந்தக்காரர் கட்டிடத்தை தகர்த்து அப்புறப்படுத்துவதற்கு முன் சகல பெறுமதியான மற்றும் மீள்பாவனை செய்யக்கூடிய பொருட்கள் மற்றும் துணைப்பாகங்களை கொள்வனவு செய்வதற்கு இயைபுடைய வங்கிக்கு குறித்த தொகையை செலுத்துதல் வேண்டும்.
09. தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர் இந்த வேலையை 45 நாட்களுக்குள் முடிவுறுத்துவதற்கு தவறுவாறானால் தாமதிக்கும் ஒவ்வொரு நாளுக்கும் 6,000.00 ரூபா வீதம் தண்டப் பணம் அறவிடப்படும்.
10. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு முன் சகல விலைமனுதாரர்களும் குறித்த கட்டிடத்தை பரீட்சித்துப் பார்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுவதோடு 2022-01-31ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை அந்த வளவிற்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.
11. இது தொடர்பாக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, தலைமையகக் கட்டிடம், மக்கள் வங்கி, 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் பிரதான முகாமையாளரிடமிருந்து (பொறியியல் சேவைகள்) பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 0112481373, தொலைநகல் 0112341591) மற்றும் 2022-01-25ஆம் திகதி முதல் 2022-02-08ஆம் திகதி வரையில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான சாதாரண வேலை நேரங்களில் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
12. மீளளிக்கப்படாத ஐம்பதாயிரம் ரூபா (ரூ. 50000.00) கட்டணத்தை செலுத்திய பின் 2022-01-25ஆம் திகதி முதல் 2022-02-08ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 3.00 மணிக்கிடையே மேற்கூறப்பட்ட முகவரியிலுள்ள பிரதான முகாமையாளர் (பொறியியல் சேவைகள்) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றினைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விமைனுதாரர்கள் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றினை கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகள் ரொக்கப் பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
13. முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட இரு பிரதிகளிலான விலைமனுக்களை உறையின் இடது பக்க மேல் மூலையில் ''கொழும்பு 02, நவம் மாவத்தையில் தற்போதுள்ள பழைய கட்டிடத்தைத் தகர்த்தல் மற்றும் இடிபாடுகளை அப்புறப்படுத்துதல்'' எனக் குறிப்பிட்டு 2022-02-09ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு அல்லது அதன் முன் கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம், 6ஆம் மாடியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் பிரதான முகாமையாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ அல்லது மேற்கூறப்பட்ட முகவரியில் பொறியியல் சேவைகள் திணைக்களத்தின் பிரதான முகாமையாளர் (பொறியியல் சேவைகள்) அவர்களுக்கு பதிவுத் தபால் மூலம் கிடைக்கச் செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிந்தவுடன், அத்தருணத்தில் சமுகந்தர தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
14. விலைமனுக்கள் 2022-05-11ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.
15. அனைத்து விலைமனுக்களுடனும் மக்கள் வங்கியைத் தவிர்ந்த இலங்கை மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற இலங்கையில் இயங்கும் பிரசித்தி பெற்ற வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட இருபத்தையாயிரம் ரூபா (ரூ. 25,000.00) பெறுமதியான விலைமனுப் பிணையொன்றை கொழும்பு-02, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை, இல. 75, மக்கள் வங்கி எனும் பெயரில் இணைத்து அனுப்புதல் வேண்டும். விலைமனுப் பிணை 2022-06-08ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

**பிரதான முகாமையாளர் (பொறியியல் சேவைகள்),**
**பொறியியல் சேவைகள் திணைக்களம்,**
**6ஆம் மாடி, மக்கள் வங்கி தலைமையகக் கட்டிடம்,**
**இல. 75, சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு-02.**

மக்கள் வங்கி PEOPLE'S BANK
www.peoplesbank.lk

---

## பெறுகை அறிவித்தல்

### புகைப்படப் பிரதி இயந்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான விலைமனுகோரல்

### களனிப் பல்கலைக்கழகம்
### களனி

களனிப் பல்கலைக்கழகத்தின் தலுகம வளவினுள்ள பிரிவு, அலுவலகம் மற்றும் அலகுகளுக்கு சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் எதிர்வரும் வருட காலத்திற்காக புகைப்படப்பிரதி இயந்திர சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக இயைபுடைய துறையில் 03 வருட கால அனுபவம் சகிதம் சேவை நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2022-02-15ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மீளளிக்கப்படாத 1000.00 ரூபா கேள்விக் கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் சிறாப்பருக்குச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் கேள்வி மாதிரிப் படிவங்கள் மற்றும் அதற்கு இயைபான ஏனைய விபரங்களை 2022-02-14ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை உதவிப் பதிவாளர்/ பொது நிர்வாகம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

உரிய வகையில் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை முத்திரைக் குறி பொறித்து 2022-01-15ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் பல்கலைக்கழகத்தின் பிரதான பாதுகாப்பு அதிகாரி அலுவலகத்திற்கு முன்னால் வைக்கப்பட்டுள்ள பொது நிர்வாகப் பிரிவிற்குரித்தான கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். அன்றைய தினமே பி.ப. 2.30 மணிக்கு கேள்விப்படிவங்கள் திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**களனி பல்கலைக்கழகம்,**
**தலுகம, களனி.**

2022-01-23.

---

## ஆர்வத்தைத் தெரிவிப்பதற்கான அழைப்பு!

### முன்னணி சுற்றுலா கம்பெனிக்காக ஆற்றல் வளமிக்க கொள்வோருக்கானது (Potential Acquirer)

முன்னணி நிறுவனமொன்று, வெளிநாட்டு சுற்றுலா வியாபாரத்தில் ஈடுபட்டிருந்தால் தமது துணை நிறுவனத்திற்காக ஆற்றல் வளமிக்க கொள்வோர் ஒருவரை எதிர்பார்க்கின்றது.

உலகத்தின் புகழ்பெற்ற பயண முடிவிடம் வரைக்கும் நம்பத்தகுந்த, மலிவான மற்றும் வசதியான சுற்றுலா தொகுப்பை (பக்கேஜ்) வழங்குவதற்காகவும் விமான அனுமதிச்சீட்டுக்களை வழங்குவதற்காகவும் இலங்கையர்களின் கடுமையாக உணரப்பட்ட தேவையொன்றை நிறைவேற்றுவதற்காக இந்தக் கம்பெனி 1990ஆம் ஆண்டின் ஆரம்ப காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. நிறுவன மற்றும் பொழுதுபோக்கு சந்தைக்காக முழுமையான சுற்றுலா தீர்வை வழங்குவது தொடர்பில் இந்தக் கம்பெனி தனித்திறன் பெற்றுள்ளது. இந்தக் கம்பெனி சர்வதேச விமான போக்குவரத்து சங்கத்தின் (IATA) உறுப்பினராக இருப்பதோடு, உலகத்தின் எந்தவொரு பயண முடிவிடம் வரைக்கும் போட்டி ரீதியான விமான கட்டணங்களை வழங்குவதற்காக அனைத்து சர்வதேச விமான கம்பெனிகளைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. பல ஆண்டுகளாக அதன் கவர்ச்சிகரமான மற்றும் போட்டி ரீதியான உற்பத்திகள் மற்றும் சிநேகபூர்வமான வாடிக்கையாளர் சேவை என்பவற்றின் காரணமாக தாய்லாந்து, சீனா, சிங்கப்பூர், மலேசியா, மியன்மார், வியட்நாம், ஐரோப்பா, ஜப்பான். ஐக்கிய இராச்சியம், ஸ்கொட்லாந்து, பௌத்த யாத்திரைக்கு உரிய இந்தியா போன்ற நாடுகளுக்கு குழு சுற்றுலாவை ஒழுங்கு செய்து வாடிக்கையாளர்களின் மனங்களையும் இதயங்களையும் வெற்றி கொண்டுள்ளது.

கொள்ளலுக்கு ஆற்றல் வளத்தை முன்வைப்பதற்கு ஆர்வம் தெரிவிக்கின்ற கடிதத்தை சமர்ப்பித்ததன் பின்னர், தமது மதிப்பீட்டு நோக்கத்திற்காக கம்பெனியின் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளையும் ஏனைய தகவல்களையும் அணுகுவதற்காக ஆற்றல் வளத்தை கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர், கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "கொள்வதற்காக ஆர்வம் தெரிவித்தல்""" எனக் குறிப்பிட்டு, ஆர்வம் தெரிவிக்கும் கடிதத்தை முத்திரையிடப்பட்ட உறையில் இட்டு 2022.02.15ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பி.ப. 3.00 மணியளவில் சமர்ப்பிக்க வேண்டும்.

**ஆவணத்தை பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.**
**த.பெ.இலக்கம்: 2269, கொழும்பு.**

---

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

## கேள்வி அறிவித்தல்

### உணவு மற்றும் பானங்கள் வழங்கல் PR/02/01-01

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மூலம், கொரியா தொழிலாளர்களுக்கு மற்றும் வேறு விசேட சந்தர்ப்பங்களுக்காக உணவு மற்றும் பானங்களினை வழங்கல் மற்றும் உபசரணை நடவடிக்கைகளுக்காக வியாபார பெயர்ப் பதிவு சான்றிதழுடன் மேற்படி காரணம் பற்றிய மிகவும் அனுபவம் மற்றும் முகாமைத்துவம் உடைய நிறுவனத்திடமிருந்து தேசிய போட்டியுடனான கேள்வி முறைமை மூலம், 2022.02.15 ந் திகதி மு.ப.10.00 மணி வரை முத்திரையிடப்பட்ட விலைமனு கோரப்படுகின்றது.

கேள்வியுடன் கேள்வியாளரின் வியாபார பெயர்பதிவுச் சான்றிதழின் பிரதி சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அது வழங்கப்பட்ட திகதி இந்த கேள்வி ஏற்றுக் கொள்ளப்படும் திகதியில் 03 வருடங்களுக்கு முன்னரான தினமாக இருத்தல் வேண்டும். அவ்வாறே, இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட சிறந்த தயாரிப்பு பயிற்சி பற்றிய சான்றிதழின் (GMP) பிரதியும் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மீளளிக்கப்படாத ரூ.10,000/- வைப்பினை பணியகத்தின் காசாளரிடம் பணமாக செலுத்தி 2022.01.24 ந் திகதி தொடக்கம் 2022.02.14 ந் திகதி வரை பணியகத்தில் மு.ப.9.00 தொடக்கம் பி.ப.3.00 வரையான காலத்தினுள் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில், கேள்வி பிரிவிடம் கேள்வி படிவங்களினைப் பெற்றுக் கொள்ள இயலுவதுடன், அந்த படிவத்தினை பூர்த்தி செய்து இரண்டு பிரதிகளுடனான விலைமனுவினை சமர்ப்பித்தல் வேண்டும். கட்டணமின்றி உரிய கேள்வி ஆவணங்களினை பரிசீலனை செய்தல் பணியகத்தின் கேள்வி பிரிவின் கடமை நேரத்தினுள் மேற்கொள்ள இயலும். (வருகைதரும் பொழுது சுகாதார முறைமை கடைப்பிடிக்கப்படல் வேண்டும்.)

விலைமனு இடப்படும் உறையின் இடது பக்க மேல் மூலையில் “கொரியா தொழிலாளர்கள் மற்றும் வேறு விசேட சந்தர்ப்பங்களுக்காக உணவு மற்றும் பானங்கள் வழங்கல்” என குறிப்பிடப்படல் வேண்டும். சரியாக தயாரிக்கப்பட்ட விலைமனு கீழ் குறிப்பிடப்பட்ட முகவரில் வைக்கப்பட்டுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைமை அலுவலகத்தில், இரண்டாவது மாடியில் பிரதி பொது முகாமையாளர் (பணி வழங்கல்) பிரிவில், அதற்காக வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் இடல் வேண்டும்.

கேள்வி ஏற்றுக் கொள்ளல் 2022.02.15 ந் திகதி மு.ப.10.00 மணியுடன் முடிவடைவதுடன், அந்த பணி முடிவடைந்தவுடன் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். விலை மனுவினை திறக்கும் சந்தர்ப்பத்தில் பங்களிப்பதற்காக கேள்வியாளருக்கு அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அவரது பிரதிநிதிக்கு அனுமதி வழங்கப்படும்.

இந்த கேள்வி சம்பந்தமான இறுதி முடிவு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவருக்கு உரியது.

**தலைவர்,**
**திணைக்களத்தின் கேள்விக் குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,**
**இலக்கம் 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த,**
**பத்தரமுல்ல.**

SLSI ISO 9001

தொலைபேசி இல. : 011-2880500 (நீடிப்பு - 105)
மின்னஞ்சல் : mgr_procurement@slbfe.lk
வெப்தளம் : www.slbfe.lk

*‘‘அக்கரையின் சக்திக்கு இக்கரையின் கைகோர்ப்போம்”*

---

### வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

## இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

### கேள்வி இலக்கம் : PR/02/21

## சுத்திகரிப்பு சேவையினை வழங்குவதற்கான விலைமனு கோரல் – 2022 – 2023

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் 1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தினால் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாவதுடன் அது வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் கீழ் செயற்படுகின்றது. இதன் பிரதான அலுவலகம் இலக்கம் 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரியில் அமைந்துள்ளது.

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைமை அலுவலக கட்டிடத்தொகுதி மற்றும் அதன் கீழ் செயற்படும் கீழ் குறிப்பிடப்படும் சேவை நிலையங்களுக்கு 02 வருட காலத்திற்காக சுத்திகரிப்பு சேவையினை வழங்குவதற்கு வியாபார பதிவு செய்தல் சான்றிதழ் மற்றும் பொது ஒப்பந்த சட்டத்தின் 08 வது பிரிவின் கீழ் வரும் பதிவுடன் கூடிய ஏற்றுக்கொள்ளப்பட்ட சுத்திகரிப்பு சேவையினை வழங்கும் நிறுவனங்களில் முத்திரையிடப்பட்ட விலைமனு கோரப்படுகின்றது.

1) இல.234,டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள தலைமை அலுவலகம்.
2) இலக்கம் 553/1, புதிய கண்டி வீதி, தலங்கம வடக்கு, பத்தரமுல்லையில் அமைந்துள்ள அலுவலகம்.
3) மேல் மாகாணத்தின் புலம்பெயர்ந்தோர் வள மத்திய நிலையம், பண்டாரநாயக்க மாவத்தை, மத்துகமவத்த, மத்துகம.
4) ஊவா மாகாணத்தின் புலம்பெயர்ந்தோர் வள மத்திய நிலையம், இல. 202, பதுளை வீதி, ஹாலி எல.
5) சப்ரகமுவ மாகாணத்தின் புலம்பெயர்ந்தோர் வள மத்திய நிலையம், இல. 89/6, வித்தியாலய மாவத்தை, புதிய நகரம், ஹிதெல்லன, இரத்தினபுரி.
6) வடமேல் மாகாணத்தின் புலம்பெயர்ந்தோர் வள மத்திய நிலையம், இல. 235/35, விஜயபா மாவத்தை, நீர்கொழும்பு வீதி, குருநாகல்.
7) வட மத்திய மாகாணத்தின் புலம்பெயர்ந்தோர் வள மத்திய நிலையம், வான் எல இல்லம், அபய இடம், அநுராதபுரம்.
8) மத்திய மாகாணத்தின் புலம்பெயர்ந்தோர் வள மத்திய நிலையம், (கண்டி நகர எல்லைக்குள்) * முகவரி மாறுபடும்.
9) தென் மாகாணத்தின் புலம்பெயர்ந்தோர் வள மத்திய நிலையம், யாயவத்த, கொடிகமுவ, தங்காலை.
10) தம்புள்ள மாவட்ட மத்திய நிலையம், இலக்கம் 03, நிஷ்ஷங்க மாவத்தை, தம்புள்ள.
11) பொலநறுவை மாவட்ட மத்திய நிலையம், இல.63, புதிய நகரம், பொலநறுவை.
12) மட்டக்களப்பு மாவட்டத்தின் மத்திய நிலையம், பொது வியாபாரக் கட்டிடத்தொகுதி, மட்டக்களப்பு.
13) சிலாபம் மாவட்டத்தின் மத்திய நிலையம், கொழும்பு வீதி, மயிக்குளம், சிலாபம்.
14) பன்னிப்பிட்டிய பயிற்சி மத்திய நிலையம், இல. 241/1, பழைய வீதி, பண்ணிப்பிட்டிய.

மீளளிக்கப்படாத ரூ.10,000.00 தொகையினை தலைமை அலுவலகத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை முகாமையாளர்- கேள்வி இற்கு சமர்ப்பித்து ஏல ஆவணங்களினைப் பெற்றுக் கொள்ள இயலும். (பணத்தினை செலுத்துவதற்கு நிறுவனத்தின் தலைப்பில் செய்யப்பட்ட எழுத்துமூல கோரிக்கையுடன் வருகைதரல் வேண்டும்.) விலை மனுவானது இரண்டு பிரதிகளுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி ஆவணங்கள் 2022.01.24 ந் திகதி தொடக்கம் 2022.02.14 ந் திகதி வரை வார வேலை நாட்களில் மு.ப.09.00 தொடக்கம் பி.ப.03.00 வரையான காலத்தினுள் வழங்கப்படும்.

முத்திரையிடப்பட்ட விலை மனுவின் உறையின் இடது பக்க மேல் மூலையில் “சுத்திகரிப்பு சேவையினை வழங்குதல்- 2022-2023” என குறிப்பிட்டு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், இலக்கம் 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை என்னும் முகவரியில் அமைந்துள்ள தலைமை அலுவலக கட்டிடத் தொகுதியின் 02 வது மாடியில் பிரதி பொது முகாமையாளர் (பணி வழங்கல்) பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி பெட்டியில் இடல் வேண்டும். அன்றேல் விலை மனுவினை திறப்பதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவு தபாலில் அனுப்ப இயலும். விலை மனுவினை ஏற்றுக் கொள்ளல் 2022.02.15 ந் திகதி பி.ப.01.00 இற்கு முடிவடைவதுடன், அத்தினம் அந்நேரம் திறக்கப்படும். தாமதமாக கிடைக்கப்பெறும் விலை மனு தள்ளுபடி செய்யப்படும். விலை மனுவினை திறக்கும் சந்தர்ப்பத்தில் கேள்வியாளருக்கு அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட அவரது பிரதிநிதிக்கு பங்களிக்க இயலும். கேள்வியினை ஏற்றுக் கொள்ளல் அல்லது தள்ளுபடி செய்யும் உரிமை திணைக்களத்தின் கேள்வி குழுவின் தலைவருக்கு உரியது.

**தலைவர்,**
**திணைக்களத்தின் கேள்விக் குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்,**
**இலக்கம் 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**Tel/ Fax : 0112880550/ 2887585**
**இணையதளம் : www.slbfe.lk**

SLSI ISO 9001

*‘அக்கரையின் சக்திக்கு இக்கரையின் கைகோர்ப்பு’*

---

it's what you want
www.adz.lk
Login
Hotline: 0112 429 369 | Email: adzsuo@gmail.com
PLACE YOUR AD ON ADZ MAGAZINE & GET FREE AD ON WEBSITE

# பிரதமர் பதவிக்கு ஆப்பா...! சிக்கலில் பொரிஸ் ஜோன்சன்...



ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரித்தானியா வெளியேறும் (Brexit) திட்டத்தை வலியுறுத்தி பெரும்பான்மை ஆதரவுடன் பிரதமராகிய ஐக்கிய இராச்சியத்தின் இன்றைய பிரதமர் பொரிஸ் ஜோன்சன், தொடர் சர்ச்சையில் சிக்கி பதவி இழக்கும் பரிதாபத்தை எட்டியுள்ளார் என்பதே இன்றை உலகின் முக்கிய பேசுபொருள்.

Brexit தீர்மானத்தை நடைமுறைப் படுத்துவதில் எழுந்த சர்ச்சையால், இங்கிலாந்தின் பிரதான கட்சிகளில் ஒன்றான பழமைவாத கட்சியின், (Conservative Party) முன்னைய பிரதமரான திரேசா மே அம்மையார் பதவியிழக்க, கடந்த 2019 டிசம்பர் மாதம் இடம்பெற்ற தேர்தலில் அதே கட்சியின் சார்பில் போட்டியிட்ட பொரிஸ் ஜோன்சன் வெற்றியீட்டி பிரதமரானார்.

"ஐரோப்பிய யூனியனில் இருந்து வெளியேறியே தீருவோம்" (Get Brexit Done) என்கிற ஒற்றைக் கோசத்துடன் பிரதமராகிய இவர், இன்று "பிரதமர் பதவியிலிருந்து வெளியேறியே ஆக வேண்டும்" (Get Exit Done) என்கிற நாட்டு மக்களின் கோசம் பொது வெளியில் கிளம்பும் அளவுக்கு கடும் எதிர்ப்பை சம்பாதித்துள்ளார்.

கோவிட் தொற்று முடக்கநிலை (Lock down) கடந்த 2020ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட காலப்பகுதியில் பொரிஸ் ஜோன்சனும் அவரது ஊழியர்களும் முடக்க நிலை விதிகளை மீறி பெருவிருந்தொன்றை பிரதமர் அலுவலகத்தில் நடாத்தினார்கள் என்கிற, வெளியாகாத உண்மை நாட்டின் முக்கிய உளவு ஊடகங்கள் சிலவற்றால் காட்சி வடிவில் வெளிக்கொணரப் பட்டதும், இந்த குற்றச்சாட்டை ஏற்றுக்கொண்டு விருந்தை நடாத்திய அவரது ஊழியர்கள் பதவி விலகியும் அவர் எதனையும் கண்டுகொள்ளாமல் இருப்பதும் அவர் மீதான மக்கள் வெறுப்பின் ஆரம்பமாக கருதப்படுகிறது.

கொவிட் நடைமுறைகளை மீறி தனது அலுவலகத்தில் நடந்த அந்த மதுபான விருந்தில் கலந்து கொண்டதை ஆரம்பத்தில் மறுத்த ஜோன்சன் அது தொடர்பான காணொளிகள் வெளியான பின்னர் அது ஒரு விருந்து அல்ல, அவசர அரச கலந்துரையாடல் என தெரிவித்து அது தொடர்பில் தான் நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோருவதாகவும் அறிவித்தார்.

மன்னிப்பு கோரிய பிரதமர் அது தொடர்பில் பெரிதாக எதுவும் அலட்டிக்கொள்ளாமல் வழமைபோல தனது கடமைகளில் கவனம் செலுத்தி வருவது பிரித்தானிய அரசியல் அரங்கில் அவர் மீதான வெறுப்பை மேலும் அதிகரித்துள்ளது.

மன்னிப்பு பயனற்றது என்று அதனை நிகாரித்த நாட்டின் பிரதான எதிர்க்கட்சியான தொழிற்கட்சியின் தலைவரான கெய்ர் ஸ்டார்மர் (Keir Rodney Starmer),பலமாத ஏமாறறுக்குப் பின்னர் அதுவும் விருந்து தொடர்பான காணொளிகள் வெளிவந்த பின்னரான மன்னிப்பு வஞ்சம் நிறைந்தது என கேலி செய்தார்.

பொதுமக்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பது, இறுதிச் சடங்குகள் உட்பட சிறிய சமூக ஒன்றுகூடல்கள் போன்ற அனைத்தும் தடை செய்யப்பட்டு, கடுமையான கட்டுப்பாடுகள் அரசாங்கத்தால் விதிக்கப்பட்டிருந்த காலப் பகுதியில் இந்த விருந்து நிகழ்வு நடைபெற்றிருக்கிறது. மேலும் அந்த நேரத்தில் விதிகளை மீறுபவர்களுக்கு பெரும் அபராதம் விதித்த போலீசார் விதிகளை மீறிய பலரை கைது செய்து நீதிமன்ற காவலிலும் அடைத்தனர்.

தற்போது லண்டனின் பெருநகர காவல் துறை இந்த மே 2020 விருந்து, அதனை ஒட்டிய கூட்டங்கள் தொடர்பில் அமைச்சரவை அலுவலகத்துடன தொடர்பு கொண்டுள்ளதாகவும் இது தொடர்பில் தீவிரமான குற்றவியல் விசாரணைக்கான சாத்தியங்களை உயர்த்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கடுமையான சட்டங்களை அறிவித்து மக்களை வீட்டினுள் முடங்க வைத்து விட்டு விதிமுறைகளை மீறி பொரிஸ் ஜோன்சன் நடாத்திய விருந்து, அதை ஒட்டிய மதுபான கேளிக்கைகள் தொடர்பில், அவர் மீதான பலத்த விமர்சனைங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில் அவர் பிரதமர் பதவியில் தொடர்ந்து இருப்பது தவறு என்கிற அபிப்பிராயம் அவரது கன்சர்வேடிவ் கட்சி உறுப்பினர்கள் மத்தியிலேயே பரபலாக பரவ ஆரம்பித்து அந்த எதிர்ப்பலையின் வேகம் படிப்படியாக அதிகரித்து இன்று உச்சம் அடைந்துள்ளது.

பிரதமரின் மாளிகையான டவுனிங் ஸ்ட்ரீட் தோட்டத்தில் இடம்பெற்ற இந்த விருந்து நிகழ்ச்சியில் 100க்கும் மேற்பட்ட அதிகாரிகளை பிரதமர் போரிஸ் ஜோன்சனின் உதவியாளர் வரவழைத்ததாகவும்

**கோவை நந்தன் ...**

2020ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற இந்த விருந்தில் பிரதமரும் அவரது துணைவியாரும் கலந்துகொண்டதாகவும் கூறப்படுகிறது.

இதே காலப்பகுதியில் அமரத்துவம் அடைந்த பிரித்தானிய மகாராணியார் எலிசபெத் அம்மையாரின் கணவர் இளவரசர் எடின்பரோ பிலிப்ஸ் கோகனின் இறுதிசடங்குகள் கூட உள்ளிருப்பு நடைமுறைகளுக்கு அமைவாகவே நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

தனக்கு எதிரான கருத்துகளை முன்னிலைப்படுத்தும் ஆளும் கொன்சர்வேட்டிவ் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களை பதவி விலகுமாறு வெளியான பொரிஸ் ஜோன்சனின் அறிவிப்பு, சர்ச்சையை மேலும் அதிகரித்து, அதன் வெளிப்பாடாக அவரது கட்சியைச் சேர்ந்த வடஇங்கிலாந்தின்

Bury South பகுதியை பிரதிநிதித்துவப் படுத்தும் பாராளுமன்ற உறுப்பினரான கிறிஸ்டியன் வேக்ஃபோர்ட்; (Christian Wakeford)அவர்கள், பிரதான எதிர்க்கட்சியான தொழில்கட்சியில் சேரப்போவதாக அறிவித்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. 'நாட்டு மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாத ஒரு பிரதமரைக் கொண்ட அரசாங்கத்தை என்னால் இனி ஆதரிக்க முடியாது' என்று அரசில் இருந்து வெளியேறுவதாக அறிவித்த கிறிஸ்டியன் வேக்ஃபோர்ட் வெளியிட்ட ஒரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொரிஸ் ஜோன்சனுக்கு செக் மேட் (Checkmate) வைக்கப்பட்டுள்ளது என மற்றொரு கோன்சர்வேற்றிவ் உறுப்பினர் பாராளுமன்றத்தில் கிண்டலடித்து உரையாற்றினார்.

சர்ச்சைக்குரிய இந்த விருந்து நடாத்தப்பட்ட அப்போதைய உள்ளிருப்பு காலப்பகுதியில் கட்டுப்பாடுகளை மீறி டவுனிங் தெருவில் மேலும் இரண்டு கூட்டங்கள் நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவை தொடர்பில் பொதுமக்களின் கோபம் அதிகரித்துள்ளதாகவும் இதனால் பிரதமருக்கு எதிரான நம்பிகை வாக்கெடுப்பு ஒன்று நடாத்தப்படவேண்டும் எனவும் சில கொன்சர் வேட்டிவ் கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கின்றனர்.

பழமைவாத (conservative) விதிகளின்படி, அத்தகைய வாக்கெடுப்பு ஒன்று நடைபெற வேண்டுமானால், 54 நாடாளமன்ற உறுப்பினர்கள் தங்கள் குழுவின் தலைவருக்கு இது தொடர்பான வாக்குச் சீட்டு கோரி, விண்ணப்பிக்க வேண்டும். ஆனால் பழமைவாத அரசியல்வாதிகள் சிலர் பொரிஸ் ஜோன்சன் மீதான இந்த வாக்கெடுப்பை விரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

பலர் இந்த விருந்து தொடர்பில் தீர விசாரித்து உண்மையை நிலையை வெளிக்கொணரவென பிரதமரால் நியமிக்கப்பட்டுள்ள பொதுப்பணித்துறை அதிகாரியான சூ கிரே அம்மையாரின் விசாரணை அறிக்கை வெளிவருவதற்காக காத்திருக்கிறார்கள் என தெரிவிக்கப் படுகிறது.

நம்பிக்கை வாக்கெடுப்பொன்று நடாத்தப்பட்டு அதில் ஜோன்சன் தோல்வியடைந்தால், அது நாட்டினதும், கட்சியினதும் தலைமைத்துவத்துக்கு சவாலாகவே அமையும்.

அவருக்குப் பதிலாக யார் பிரதமராக வருவார் என்பதில் பல பிணக்குகள் ஏற்பட்டாலும் இயல்பாகவே கட்சியின் முன்னணியாளர்களான கருவூலத்தின் ; (Treasury) அதிபர் ரிஷி சுனக், மற்றும் வெளியுறவுச் செயலர் லிஸ்ட்ரஸ் ஆகியோரின் பெயர்கள் முன்னணி பெறுகின்றன. பிரெக்சிட்டை நடைமுறைப்படுத்தியே தீருவேன் என்கிற உறுதிமொழியுடன் இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு மகத்தான தேர்தல் வெற்றியைப் பெற்று பிரதமர் பதவியில் அமர்ந்த ஜோன்சனின் பதவியை கேள்விக்குறியாக்கும் இந்த நிலைமை ஐரோப்பிய ஒன்றிய வெளியற்றத்திற்கு ஆதரவான சக்திகளை பெரும் கவலையடைய வைத்துள்ளது. எது எப்படியோ உலகின் பல நாடுகளை கட்டி ஆண்ட பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் இன்றைய எதிர்காலம் கேள்விக்குறியுடனே தொடரப் போகிறதா...? பொரிஸ் ஜோன்சன் தனது தவறுக்கு தார்மீகப் பொறுப்பேற்று புதிய பிரதமருக்கு வழிவிடப்போகிறாரா...? மற்றொரு தேர்தலை எதிர்கொள்ளப் போகிறதா நாடு...? தொடரும் நாட்கள் பதில் சொல்லப் போகும் கேள்விகளே இவை.

# தோழர் சிவகுமார்: பிரளயத்தினூடாக பயணித்த ஓர் அற்புதம்!



37 ஆண்டுகளாக சமூக சமத்துவ பெருங்கனவுடனும் இடையறாத தேடலுமாக திரிந்த உடுத்துறை, பச்சிலை பள்ளியிலிருந்து வந்த இளைஞரின் பயணம் எதிர்பாரா வகையில் முற்றுப் பெற்றுள்ளது.

தஞ்சை, குடந்தை, சேலம் சென்னை இலங்கையின் வடக்கு கிழக்கில் நீள அகலங்கள் என விரிந்த தோழரின் பயணம். மிக நீண்ட இருள் சூழ்ந்த ஜனநாயக விரோத காலகட்டம் ஒன்றில் மிக அவசியப்பட்டிருந்தது. அவரால் வழிகாட்டபட்டவர்கள் ஊடகம் இலக்கியம் சமூக, அரசியல் தளங்களில் செயற்படுகிறார்கள். ஜனநாயக விரோத அரசியல் சமூக இலக்கிய செயற்பாடுகளுக்கு எதிராக அவருடைய பயணம் எதிர்நீச்சல் ஆக இருந்தது.

மானிட நேயம் அவரது சமூக இலக்கிய பயணத்தின் அடிநாதமாக இருந்தது. எழுத்திலும் பேச்சிலும் கவிதையிலும் பத்திரிகை சஞ்சிகை வடிவமைப்பதிலும் அவரின் நேர்த்தி மிளிரும். அசாதாரண ஆளுமையும் தன்னடக்கமுமாக வாழ்ந்தவர் தோழர் சிவகுமார்.

முற்போக்கு இலக்கிய அரசியல் சமூக தளங்களிலிருந்து கம்பன் கழகம் வரை செயற்படும் ஆளுமை அவரிடம் இருந்தது பெரும்பாலும் மாற்று ஊடகங்களே அவரை முன் நிறுத்தின. கலை இலக்கிய தளங்களில் உருவாகும் புதிய புதிய கருத்துக்களை அவர் தோழர்களுக்கும் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்தினார். சமூக செயற்பாட்டாளராக, பரந்த வாசகனாக, எழுத்தாளராக, விமர்சகராக, பத்திரிகை ஆசிரியராக, வானொலி இதர ஊடகங்களின் செயற்பாட்டாளராக, புத்தக வெளியீடு கருத்தரங்குகளின் ஆளுமைமிக்க கருத்தாளராக, அறிவும் தர்க்கமும் மிளிரும் உரையாளராக அறிவொளி வீசிய தோழரையே நாம் இழந்திருக்கிறோம்.

தத்துவம், இலக்கியம், ஓயாத தேடல் கொண்ட ஒரு அறிவுக் கருவூலமாக திகழ்ந்தார். மார்க்சியம் பொதுவுடைமை, பெரியாரியம், சாதி ஒடுக்குமுறை பெண்ணடிமைத்தனம் மொழியின் அதிகாரம் பின்நவீனத்துவம் என அவரது பார்வை விரிந்து கிடந்தது.

தோழர்களின் இன்பத்திலும் துன்பத்திலும் அவரும் ஒருவராக மிக நீண்ட பயணம் செய்தவர். ஜனநாயக விரோத அரசியலுக்கு மாற்றாக சமூக சகோதரத்துவத்தை, தோழமை நட்பை நேசித்தவர். அரசியல் இலக்கியத் தளங்களில் ஜனநாயக விரோதம் பாசிசம் பற்றிய எச்சரிக்கை உணர்வு எப்போதும் அவரது பிரக்ஞையில் இருந்து வந்தது.

அவரது தமிழக ஈழ இலக்கிய தரிசனம் ஆழமானது. எமது சமுதாயத்தில் அரிதிலும் அரிதான சமூக அரசியல் இலக்கிய செயற்பாட்டாளரையே நாம் இழந்துள்ளோம். "சுடர்மிகு அறிவுடன் திகழ்ந்தவரை கொடிய நோய் அகாலமாக அவர் உயிரை பறித்து சென்றிருக்கிறது.

எனினும் கருத்தியல் சிந்தனைத் தாக்கம் தோழர்கள் மத்தியில் மிக நீண்ட காலத்துக்கு நிலைத்திருக்கும்.

தோழர் சிவகுமார் அமீன் என்ற எமது காலத்தின்ஆளுமை விரிவாக தொடர்ந்து பேசப்பட வேண்டும். "நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்குழைத்தல் இமைப்பொழுதும் சோராதிருத்தல் "என்ற அந்த மகாகவி போல் வாழ முனைந்த சிவகுமாருக்கு தன் முழு ஒத்துழைப்பையும், இணையற்ற அன்பையும் வழங்கி அரணாக நின்றவர் அவர் துணைவியார் வாசுகி. அவரது குடும்பத்தவர்கள் வெற்றிகரமான தருணங்களிலும் துன்பகரமான தருணங்களிலும் உறுதுணையாக நின்றார்கள். தற்போது அவர் மறைந்து பத்து நாட்களுக்குள் அவரின் தாயாரின் மறைவுச் செய்தியும் வந்திருக்கிறது. தாங்கொணாத் துயருடன் எம் பிரியாவிடை. எம் இதய அஞ்சலிகள்!

**தி.சிறிதரன் ...**

# வாஸ்து, ஜோதிடம் இரு துறைகளிலும் விபூஷண பட்டம்பெறும் முதல் இலங்கையர்



களுத்துறை, புளத்சிங்கள நகரத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், இரத்தினபுரி மாவட்டம் காவத்தை நகரை பிறப்பிடமாகக் கொண்ட, சாமஸ்ரீ தர்ஜோதி, சமாதான நீதவான் சிவா பாஸ்கரராவ், இலங்கை மனிதநேய சமூகநல அமைப்பினால் ஜோதிடம்/வாஸ்து வித்யா விபூஷணம், கீர்த்தி ஸ்ரீ தேசபந்து இலங்கை புதல்வன் என்ற கௌரவ பட்டமும் சாதனையாளர் விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

மேற்படி பட்டமளிப்பு விழா அண்மையில் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில், அமரபுர ஸ்ரீ சந்தர்ம நிகாயாவின் மஹாநாயகரும், இலங்கை மனிதநேய சமூகநல அமைப்பின் பணிப்பாளர் நாயகமுமாகிய, சங்கைக்குரிய பெங்கமுவே நாலக தேரரின் பூரண ஆசிகளோடு, அவ்வமைப்பின் நிருவாக இயக்குனர் பேராசிரியர் ஏ.கே. நிரோஷன் மாதவ தலைமையில் நடைபெற்றது.

இலங்கை வரலாற்றில் தமிழர் ஒருவர் முதல் தடவையாக, ஜோதிடம் மற்றும் வாஸ்து போன்ற இரு துறைகளிலும் விபூஷண பட்டம்பெறும் முதல் சந்தர்ப்பம் இது என்பதும் குறிப்பிடத்தக்கது. சமய சமூக ஆர்வலரான இவர் இரத்தினபுரி தமிழ் தேசிய கல்லுளரியின் பழைய மாணவர் ஆவார். மேலும் கொழும்பு தேசிய கல்வியியல் கல்லூரியில் ஆங்கில உயர்நிலை டிப்ளோமா, மற்றும் தேசிய பெருந்தோட்ட முகாமைத்துவ நிறுவனத்தில் பட்டயக் கணக்காளர் மற்றும் பொருளாதாரத் துறை டிப்ளோமா பட்டதாரியும் ஆவார்.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஜோதிடம் மற்றும் வாஸ்து துறைகளில் தமது பல்வேறுபட்ட ஆய்வுகளையும் மேற்கொண்டு வரும் இவர் இந்திய வேத ஜோதிட சாஸ்திரங்களை இந்தியா மதுரை ஜோதிட ஆராய்ச்சி மையத்தின் தலைவர், ஜோதிட மகாகுரு பழனிசாமி தர்மராஜ் சண்முகராஜா அவர்களிடம் முறையாக் கற்றுக் கொண்டவர் என்பதுடன், காவத்தை, ஹவுப்பை, தலுகலையூர் சிவா நாச்சியப்பன், கோகிலா தேவி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வருமாவார்.

# துறைமுக நகரில் செல்ஃபி எடுக்கலாம் வணிக ரீதியான படப்பிடிப்புக்கே கட்டணம்





துறைமுக நகரம் அறிவிப்பு

துறைமுக நகரத்தில் எடுக்கப்படும் தனிப்பட்ட செல்ஃபிகள் அல்லது வீடியோக்களுக்கு பொதுமக்கள் கட்டணம் செலுத்த வேண்டும் என்று சமூக ஊடகப்பதிவுகளில் குறிப்பிடப்படுகின்ற குற்றச்சாட்டில் எந்த உண்மையும் இல்லை என்பதை கொழும்பு துறைமுக நகரம் பொதுமக்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறது.

இருப்பினும், புதிதாக பொது மக்களுக்காக திறக்கப்பட்ட துறைமுக நகரத்தின் கடற்கரை நடைபாதையைப் பயன்படுத்துவதற்கு பொது மற்றும் தனியார் துறையினரிடமிருந்து முன்னெப்போதும் இல்லாத அளவில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டமையால், தனிப்பட்ட நிகழ்வுகள், தொழில்சார் மற்றும் வணிக நோக்கத்திற்கான படப்பிடிப்பு மற்றும் புகைப்படம் எடுத்தல் ஆகியவற்றிற்காக கட்டண முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான படப்பிடிப்பு/புகைப்படம் எடுப்பது இடையூறாக இருப்பதாகவும், கடற்கரை நடைபாதைக்கு வரும் பிற பார்வையாளர்களின் அந்தரங்கத்தை மீறுவதாகவும் எங்கள் கவனத்திற்குக 'கொண்டுவரப் பட்டுள்ளது.

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் இடம்பெற்றுவரும் கட்டுமானப் பணிகளைக் கருத்தில்கொண்டு, துறைமுக நகரத்தில் இதுபோன்ற தொழில்முறை படப்பிடிப்பு அல்லது புகைப்படம் எடுப்பதில் ஈடுபட விரும்பும் எவருக்கும், பொதுமக்களுக்கு இடையுூறு ஏற்படாமல்இருக்கவும், தேவைப் படுபவர்களுக்கு சிறந்த சேவையை வழங்கவும் இந்த முறைமை அமைப்பு மற்றும் இதற்கென ஒதுக்கப்பட்ட கால அட்டவணை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கடற்கரை நடைபாதை தினமும் காலை 9 மணி முதல் மாலை 6 மணிவரை பொது மக்களுக்காகத் திறந்திருக்கும். கட்டணம் செலுத்திய படப்பிடிப்பையும் புகைப்படம் எடுத்தலையும் காலை 9 மணிக்கு முன் அல்லது வேண்டுகோள் விடுக்கப்படுகின்ற பிற நேரங்களில் மேற்கொள்ளலாம்.

துறைமுக நகரத்தினுள் தனிப்பட்ட மொபைல் தொலைபேசிகள் அல்லது கேமராக்களைப் பயன்படுத்தி தனிப்பட்ட படங்கள், வீடியோக்கள் மற்றும் செல்ஃபி எடுக்க விரும்புவோருக்கு கட்டணம் எதுவும் கிடையாது என்பதை வலியுறுத்த விரும்புவதாக துறைமுக நகரம் அறிவித்துள்ளது.

# சினி மஞ்சரி



# இன்ஸ்டாகிராமில் கலக்கும் பூஜா ஹெக்டே...!

2012ல் மிஸ்கின் இயக்கத்தில் ஜீவா நடிப்பில் உருவான 'முகமூடி' படத்தின் மூலம் நாயகியாக அறிமுகமானவர் பூஜா ஹெக்டே. ஹீரோயின் ஆவதற்கு முன் 2010ல் நடைபெற்ற மிஸ் யுனிவர்ஸ் அழகிப் போட்டியில் பங்கேற்று இரண்டாவது இடத்தை பிடித்திருந்தார். தமிழில் முதல் சுப்பர் ஹீரோ படமாக 'முகமூடி' உருவானது.

பெரும் எதிர்பார்ப்புகளுக்கிடையே உருவான 'முகமூடி படம்' எதிர்பார்த்த வெற்றியை பெறாததால் பூஜாவிற்கு தமிழில் வாய்ப்புகள் குறைந்தன. இதனையடுத்து தெலுங்கு, ஹிந்தி மொழிகளில் நடிக்கத் தொடங்கினார் பூஜா. ஹ்ரித்திக் ரோஷனின் 'மொஹஞ்சதாரோ' படத்தில் ஹீரோயினாக நடித்த இவர், பல ரசிகர்களை பெற்றார்.

தெலுங்கில் இவர் நடித்த படங்கள் ஹிட் அடிக்க ராசியான நடிகையாக மாறினார் பூஜா ஹெக்டே. ஜூனியர் NTR, அல்லு அர்ஜுன், மகேஷ் பாபு என்று வரிசையாக பெரிய ஹீரோக்களின் படங்களில் நடித்து ரசிகர்கள் மனதில் நீங்கா இடம்பிடித்துவிட்டார் பூஜா.

இன்ஸ்டாகிராமில் செம ஆக்டிவ்வாக இருக்கும் பூஜா தனது புகைப்படங்கள் வீடியோக்கள் பட அப்டேட்கள் என்று ஏதேனும் ஒன்றை ரசிகர்களுடன் பகிர்ந்து வருவார். தற்போது தனது புதிய செம ஹாட் பிகினி புகைப்படம் ஒன்றை பகிர்ந்துள்ளார், இந்த புகைப்படம் ரசிகர்கள் மத்தியில் செம வைரலாகி வருகிறது.



# ஆக்ஷன் நிறைந்த 'வீரமே வாகை சூடும்' டீஸர்!

'செல்லமே' என்ற படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் ஹீரோவாக அறிமுகமானவர் விஷால். இதனைத் தொடர்ந்து இவர் பல ஹிட் படங்களில் நடித்து அசத்தினார். இவரது நடிப்பில் உருவான 'எனிமி' படம் கடைசியாக வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றிருந்தது. இதனைத் தொடர்ந்து ஆனந்த் ஷங்கர் இயக்கத்தில் து.பா. சரவணன் இயக்கத்தில் 'வீரமே வாகை சூடும்' படத்தில் நடித்துள்ளார் விஷால். இப்படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார். விஷால் பிலிம் பேக்டரி இந்த படத்தினை தயாரித்துள்ளனர். டிம்பிள் ஹயாட்டி இப்படத்தின் மூலம் தமிழில் ஹீரோயினாக அறிமுகமாகிறார். யோகி பாபு, ரவீனா ரவி, பாரதி கண்ணம்மா புகழ் அகிலன் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்துள்ளனர்.

இந்த படத்தின் போஸ்டர்கள் மற்றும் தீம் பாடல் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றிருந்தது. இந்த படம் எதிர்வரும் 26ஆம் திகதி வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இப்படத்தின் டீஸர் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அன்ல் பறக்கும் இந்த டீஸர் ரசிகர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.



# நீங்கள் குண்டாகினாலும் அழகுதான்!



நடிகை ரம்யா நம்பீசன் கேரளத்தில் இருந்து வந்து தமிழ் சினிமாவில் வெற்றிநடைபோடும் நடிகைகளில் ஒருவர். பீட்சா, சேதுபதி, நட்புனா என்னானு தெரியுமா என சில படங்கள் இவரை ஹிட் நாயகி என்ற வரிசையில் இருக்க வைத்தது.

படங்களில் நடிப்பதை தாண்டி நிறைய படங்களில் பாடல்கள் பாடியுள்ளார், சில சுப்பர் டூப்பர் ஹிட்டும் ஆகியுள்ளது. கொரோனா பிரச்சினைகளில் இருந்து ரம்யா நம்பீசனின் எந்த படமும் ரிலீஸ் ஆகவில்லை.

அடிக்கடி நிறைய போட்டோ சூட்கள் நடத்தி புகைப்படங்கள் வெளியிட்ட வண்ணம் இருப்பார். அப்படி அவர் சமீபத்தில் வெளியிட்ட படங்களில் நடிகை கொஞ்சம் குண்டாகி இருப்பது தெரிகிறது.

ஆனால் ரசிகர்கள் நீங்கள் குண்டாகினாலும் எப்போதும் அழகுதான் என கமெண்ட் செய்து வருகின்றனர்.

# ஆஸ்கார் ரேஸில் சூர்யாவின் ஜெய்பீம்!

'சூரரைப் போற்று' படத்தின் மாபெரும் வெற்றியை தொடர்ந்து நடிகர் சூர்யாவின் திரைப்பயணத்தில் மிக முக்கிய படமாக வெளிவந்தது 'ஜெய்பீம்' திரைப்படம். மலைக் கிராமங்களில் வசிக்கும் பழங்குடியின மக்களின் வாழ்க்கையை மையப்படுத்தி அவர்களுக்கு நேர்ந்த கொடுமைகள் மற்றும் அநீதிகள் கொண்ட உண்மைச் சம்பவத்தை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்ட 'ஜெய்பீம்' திரைப்படத்தை இயக்குனர் T.J.ஞானவேல் இயக்கியுள்ளார். நடிகர் சூர்யா தனது 2D எண்டர்டெயின்மெண்ட் சார்பாக தயாரித்து நடித்துள்ளார்.

சர்வதேச அளவில் கவனத்தை ஈர்த்துள்ள 'ஜெய்பீம் படம்' முன்னதாக கோல்டன் க்ளோப் விருதுகளுக்கான பரிந்துரைப்பட்டியலுக்கு தேர்வானது. ஆனால் இறுதி நியமனப்பட்டியலில் இடம் பெறாமல் போனது. இதனையடுத்து சிலதினங்களுக்கு முன், இயக்குனர் T.J. ஞானவேல் 'ஜெய்பீம்' திரைப்படத்தின் கதை கருவையும், நடைபெற்ற உண்மை சம்பவத்தையும், காட்சிகளையும் விவரிக்கும் விதமாக 'ஜெய்பீம்' படக்காட்சிகள் ஒளிபரப்பாகும் வகையிலான புதிய வீடியோ ஒன்றை ஒஸ்கார் தனது அதிகாரபூர்வ யூடியூப் சேனலில் வெளியிட்டு 'ஜெய்பீம்' திரைப்படத்தை கௌரவித்துள்ளது.

இந்நிலையில் தற்போது ஒஸ்கார் விருதுகளுக்கான பரிந்துரைப்பட்டியலுக்கான தேர்வில் இடம்பெற்றுள்ளது 'ஜெய்பீம்'. உலகின் பல மொழிகளிலும் இருந்து 276 திரைப்படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 94 ஆவது ஒஸ்கார் விருதுகளின் பரிந்துரைக்கான பட்டியலில் 'ஜெய்பீம்' தேர்வாகியுள்ளது. எதிர்வரும் பெப்ரவரி 8ஆம் திகதி இந்த படங்களில் இருந்து இறுதி பரிந்துரை பட்டியல் வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே 'ஜெய்பீம்' திரைப்படம் ஒஸ்கார் விருதுக்கான இறுதி நியமனப் பட்டியலில் இடம்பெறும் என்ற எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. காத்திருப்போம் .



# படு ஹிட்டடித்த சமந்தாவின் பாடல் இரண்டாம் பாகத்திலும் வருமா...?

தெலுங்கில் சுகுமார் இயக்கத்தில் அல்லு அர்ஜுன், ரஷ்மிகா நடிக்க படு ஹிட்டாக ஓடிய திரைப்படம் 'புஷ்பா தி ரைஸ்'. தமிழ், ஹிந்தி மொழிகளிலும் படம் டப் செய்யப்பட்டு வெளியாகி இருந்தது. டிசம்பர் 17ம் திகதி வெளியாகிய இப்படம் ஹிந்தியில் மட்டுமே ரூ. 100 கோடி வசூலித்துள்ளதாக கூறப்படுகிறது. அண்மையில் நடிகை ரஷ்மிகா ஒரு பேட்டியில் புஷ்பா தி ரைஸ் இரண்டாம் பாகம் குறித்து சில தகவல்கள் வெளியிட்டுள்ளார்.

அதில் அவர், இரண்டாம் பாகத்தின் படப்பிடிப்பு மார்ச் மாதம் தொடங்க இந்த வருட இறுதியில் டிசம்பர் மாதம் படம் ரிலீஸ் ஆகிவிடும் என்றிருக்கிறார்.

முதல் பாகத்தில் படு ஹிட்டடித்த நடிகை சமந்தா இடம்பெற்ற பாடல் போல் இரண்டாம் பாகத்திலும் அவரே ஸ்பெஷல் பாடலில் வருவாரா அல்லது வேறு நாயகி இடம்பெற செம குத்து பாடல் அமையுமா என்பது ரசிகர்களின் பெரிய கேள்வியாக இப்போது இருக்கிறது.



# ஜீவாவின் முழு சொத்து எவ்வளவு தெரியுமா!

தமிழ் சினிமாவின் முன்னணி நட்சத்திரங்களில் ஒருவர் நடிகர் ஜீவா. இவர் நடிப்பில் சமீபத்தில் 83 எனும் படம் வெளிவந்தது. கிரிக்கெட் விளையாட்டையும், 1983ஆம் ஆண்டு இந்தியா உலக கோப்பை வென்ற தருணத்தையும் மையப்படுத்தி உருவாகியிருந்த இப்படத்தில் கிரிக்கெட் வீரர் ஸ்ரீகாந்த் கதாபாத்திரத்தில் ஜீவா நடித்திருந்தார்.

அண்மைக்காலமாக திரை நட்சத்திரங்களின் முழு சொத்து மதிப்பு குறித்த தகவல்கள் இணையத்தில் வெளியாகி வருகின்றன. அந்தவகையில் தற்போது நடிகர் ஜீவாவின் முழு சொத்து மதிப்பு குறித்து தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி, ரூ. 90 கோடி சொத்து சேர்த்து வைத்துள்ளாராம் நடிகர் ஜீவா.

# சுனாமியில் சிக்கிய புகையிரதம்



இலங்கை வரலாற்றில் இதுவரை காலமும் இடம்பெற்ற மிகவும் மோசமான பேரழிவு கடந்த 2004ஆம் ஆண்டு டிசம்பர் 26ஆம் திகதி இலங்கை நேரப்படி காலை 8.45 மணி முதல் 9.30 மணியளவிலான காலப்பகுதியில் இடம்பெற்ற சுனாமிப் பேரழிவாகும்.

இச்சம்பவம் இலங்கைக்கு அண்ணளவாக 1600 கடல் கிலோ மீற்றர் தூரத்தில் இந்தோனேஷியாவின் வடகிழக்கு சுமாத்திரா தீவுக்கு அண்மித்த 30 கிலோ மீற்றர் தொலைவில் அதாவது இந்தோனேசியா நேரப்படி காலை 7.58.53 மணியளவில் 9.3 ரிச்டர் (Richter scale)

## எப்படி நடந்தது? ஏன் தவிர்க்க முடியவில்லை?



அளவில் இடம்பெற்ற ஆழ்கடல் நில அதிர்வின் காரணமாக 100 அடி உயரத்தில் மேலெழுந்த சுனாமி எனப்படும் இராட்சத ஆழிப் பேரலைகள் இந்தோனேசியா இந்தியா இலங்கை உட்பட 14 நாடுகளில் நடத்திய கோரத் தாண்டவத்தால் சுமார் இரண்டு இலட்சத்து முப்பதாயிரம் பேர் காவுகொள்ளப்பட்டனர்.

இதனடிப்படையில் இலங்கையில் மட்டும் 31229 பேர் மரணமடைந்தனர். 4093 பேர் காணாமலாக்கப்பட்டனர். 21411 பேர் உடல் ரீதியாக பாதிக்கப்பட்டனர். பலர் தமது இருப்பிடங்களையும் உறவுகளையும் இழந்து உளரீதியாக பாதிக்கப்பட்டு தவித்தனர். இந்த நிகழ்வு நிகழ்ந்து இற்றைக்கு 17 வருடங்களும் 27 நாட்களும் கடந்துவிட்டன.

இத்தகைய கடல்கோளின் கோரத் தாண்டவத்தின் பிரதிபலனாக பல்வேறு சோகக்கதைகள் ஆங்காங்கே வரலாற்றில் இடம் பிடித்துள்ளன. அந்த வகையில் இலங்கையில் மட்டுமின்றி உலகளவில் இடம்பெற்ற மிகமோசமான அதி பயங்கர புகையிரத விபத்து இலங்கையின் தெற்கு கரையோர புகையிரத வீதியில் அம்பலாங்கொடை மற்றும் ஹிக்கடுவ புகையிரத நிலையங்களுக்கு இடப்பட்ட தல்வத்த, பேரலிய (Peraliya) பகுதியில் வரலாற்றில் பதிவானது.

2004 டிசம்பர் 26ஆம் திகதி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் இருந்து மாத்தறை நோக்கி புறப்பட்ட 8050 என்ற இலக்க புகையிரதத்தில் பயணித்த சுமார் 1500 தொடக்கம் 1700 வரையான பயணிகள் உயிரிழந்தனர் என ஆய்வுகளின் மூலம் கணிக்கப்பட்டு உலக புகையிரத வரலாற்றில் இதுவரை காலமும் இடம்பெற்ற கோர விபத்துகளில் முதலிடத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த சோக சம்பவத்தில் இடம்பெற்ற நீங்கள் அறிந்திராத சில உண்மை நிகழ்வுகளை இலங்கை புகையிரதத் திணைக்கள சஞ்சிகை மூலம் எமக்கு அறியக் கூடியதாக இருக்கிறது.

கொழும்பு கோட்டையிலிருந்து மாத்தறைக்கான 157 கி.மீ தூர நீண்ட பயணத்தை ஆரம்பிக்கும் நோக்கில் அதிகாலையிலேயே M2a 591 Manitoba கனடியன் புகையிரத இழுவை எஞ்சின் மாளிகாவத்த புகையிரத எஞ்சின் பராமரிப்பு நிலையத்தில் (Yard) இருந்து புறப்பட்டு புகையிரத பெட்டிகள் (Compartments) பராமரிப்பு பிரிவில் பயணத்துக்கு ஆயத்தமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இலக்கம் 8050 புகையிரதத்துக்கான முறையே 01 TV, 02 SCC, 04 TCC, 01 TV என்ற எட்டு பெட்டிகளையும் இணைத்துக் கொண்டு தெமட்டகொட புகையிரத நிலையத்தில் இருந்து புறப்பட்ட புகையிரதத்தின் பிரதான புகையிரத சாரதியாக விளங்கியவர் எம்.பீ.ஜனக்க.கே. பெர்னான்டோ. துணை சாரதி என். சிவலோகநாதனின், பிரதான தலைமை கட்டளை ரயில்வே கார்ட் டப்ளியூ. கருணாதிலக்க மற்றும் உதவி கார்ட் ஆர்.யூ.ஏ. குணரத்ன ஆகியோர் கடமையில் ஈடுபட்டிருந்தனர். இவர்களைத் தவிர மேலும் இலங்கை தபால் சேவையின் நிமித்தம் ஊழியர்கள் இருவர் பணியில் ஈடுபட்டு இருந்ததாகவும் தெரிய வருகின்றது.

மருதானை புகையிரத நிலையத்தில் காலை 6.40 மணியளவில் தனது பயணத்தை ஆரம்பித்த 8050 புகையிரதம் காலை 6.45 மணியளவில் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தை வந்தடைந்தது. இதன் போது கொழும்பு கோட்டை புகையிரத நிலைய அதிபராக சேவையில் இருந்த நிமல் குணசிறியும் தமது மகள் மற்றும் மனைவியுடன் காலியில் நடைபெறவுள்ள மத நிகழ்வு ஒன்றில் கலந்துகொள்ளும் நோக்கில் புகையிரதத்தில் ஏறுகின்றனர். 8050 புகையிரதம் காலை 7.12 மணியளவில் சரியான நேரத்தில் மாத்தறை நோக்கி தனது பயணத்தை ஆரம்பித்தது. அன்றைய தினம் உந்துவப் பௌர்ணமி போயா மற்றும் ஞாயிற்றுக்கிழமை என்பதாலும் கிருஸ்மஸ்ஸுக்கு மறுதினம் என்பதாலும் களுத்துறை போதி விகாரைக்கு செல்லும் பயணிகளாலும் நிரம்பி வழிந்து காணப்பட்டது. ஏனைய நாட்களில் 'ருஹுனு குமாரி' புகையிரத வருகைக்காக களுத்துறை புகையிரத நிலையத்தில் காத்திருக்கும் இப் புகையிரதம் சரியான நேரத்தில் பயணத்தை ஆரம்பித்ததன் காரணத்தாலும் ருஹுனு குமாரி வருகையில் ஏற்பட்ட கால தாமதம் காரணமாகவும் குறித்த இடமாற்றம் தெற்கு பயாகல புகையிரத நிலையத்தில் நிகழ்ந்தது.

இதனிடையே காலை 8.45 மணியளவில் பேருவளை புகையிரத நிலைய அதிபர் ரதம்பேகொட தனது முந்தின இரவு சேவை நிறைவடைந்தது. நேரத்துடன் வீட்டுக்கு செல்லும் ஆர்வத்துடன் பல எதிர்பார்ப்புடன் இப் பயணத்தில் இணைந்து கொண்டார். மேலும் அளுத்கமையில் நிகழவேண்டிய 'சாகரிக்கா' புகையிரத இட மாற்றம் என்றும் இல்லாதவாறு உரிய நேரத்தில் 8050 புகையிரதம் பயணித்ததன் விளைவாக இந்துருவ புகையிரத நிலையத்தில் இடம்பெற்றது. 8050 புகையிரதத்தை உரிய நேரத்தில் வரவேற்க வெகு சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்த தெற்கு கரையோர புகையிரத வலையமைப்பின் அம்பலாங்கொடை புகையிரத நிலையத்திற்கு சரியாக 9.18 மணியளவில் வந்தடைந்ததுடன் கொழும்பிலிருந்து கொண்டு வரப்பட்ட தயிர் சட்டிகளை இறக்கிவிட்டு புறப்பட ஆயத்தமானபோது குறித்த நேரத்திற்குள் இறங்கிக் கொள்ள முடியாது போன பயணியொருவர் பிரேக் சங்கிலியை இழுத்து புகையிரதத்தை நிறுத்தினார். இவையாவும் நிறைவடைந்தது

நாராயணசாமி ஜெயரட்னம் ...

பயணக் களைப்பால் நீண்ட பெருமூச்சுடன் காலை 9.21 மணியளவில் 8050 மாத்தறை நோக்கிய தனது பயணத்தை மீண்டும் ஆரம்பித்தது.

இதனிடையே கடல் நீர் நாட்டின் உள்பகுதியை நோக்கி பெருக்கெடுத்து வருவதாக மருதானை புகையிரத கட்டுப்பாடு பிரிவுக்கு தகவல்கள் கிடைத்த வண்ணம் இருந்தன. இத் தகவலின் அடிப்படையில் தற்போது ஏழு புகையிரதங்கள் கம்புறுகம, காலி, அம்பலாங்கொடை, பாணந்துறை மற்றும் அங்குலான புகையிரத நிலையங்களுக்கு அருகாமையில் பயணித்துக் கொண்டிருப்பதாக பிரதான புகையிரத கட்டுப்பாட்டு அறைக்கு மேலும் அறியக்க கிடைக்கின்றது. ஆகையால் குறித்த புகையிரத நிலையங்களுடன் தொலைபேசிகள் மூலம் தொடர்பு கொண்டு உடனடியாக புகையிரதங்களை பாதுகாப்பாக நிறுத்திக் கொள்ளுமாறு புகையிரத கட்டுப்பாட்டு பிரிவின் மூலம் பணிக்கப்பட்டது. எனினும் அம்பலாங்கொடை புகையிரத நிலைய தொலைபேசி மட்டும் தொடர்ந்து பயங்கர சத்தத்துடன் அலறிக் கொண்டே இருந்தது. ஏனெனில் அம்பலாங்கொடை புகையிரத நிலைய அதிபர் பொதிகளை (பார்சல்) பொறுப்பேற்று கொண்டிருந்த காரணத்தால் அவருக்கு தொலைபேசிக்கு பதிலளிக்க முடியாது போனது. இறுதியாக அவர்







கொடியசைக்கும் கருணாரட்ன

தொலைபேசி அழைப்பை ஏற்று பேசும்போது கடல் உள்நோக்கி பெருக்கெடுத்து வருவதால் 8050 புகையிரதத்தை முன்நோக்கி அனுப்ப வேண்டாம் என்ற அபாய எச்சரிக்கை கொழும்பில் இருந்து விடுக்கப்பட்டது. எனினும் அவ்வேளையில் புகையிரதம் புறப்பட்டு சில நிமிடங்கள் கழிந்து விட்டதால் அவர்கள் செய்வதறியாது தவித்தனர்.

காலை நேரம் 9.28 எவ்வித தங்கு தடைகளும் இன்றி வெகு சுறுசுறுப்பாகவும் சுமுகமாகவும் பயணித்துக் கொண்டிருந்த புகையிரதம் கஹவ புகையிரத நிலையத்தில் புறப்படுவதற்கான பச்சை நிறத்தில் சமிஞ்சையும் அதன் பின்னர் வழக்கத்துக்கு மாறாக புதுமையான விதத்தில் அபாய எச்சரிக்கையின் அறிகுறியாக சிவப்பு நிற சமிஞ்சைக்கு முன்னர் மஞ்சள் நிற சமிஞ்சை ஒளிர்வதை கண்டு பதற்றமடைந்த தலைமை கார்ட் என்ன நடக்கிறது என்பதை அறியும் வண்ணம் கதவருகே வந்தார். இந்த சமிக்ஞைகளை கண்ட புகையிரத சாரதியும் புகையிரதத்தை மிகவும் குறைந்த வேகத்தில் செலுத்தினார். எந்த சந்தர்ப்பத்திலும் முன்னால் புகையிரத்தை நிறுத்திக் கொள்ளும் முன் எச்சரிக்கையுடன். நினைத்ததைப் போலவே கஹாவ மற்றும் ஹிக்கடுவ புகையிரத நிலையத்திற்கு இடைப்பட்ட 582ஆம் இலக்க கைகாட்டி சமிஞ்சை சிவப்பு நிறத்தில் காணப்பட்டதால் புகையிரதத்தை இடைநடுவில் நிறுத்திக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. புகையிரதம் அவ்விடத்தில் நிறுத்திக் கொண்ட போதிலும் ஏதோவொரு அசம்பாவிதம் அப்பகுதியில் இடம்பெற்றதற்கான அறிகுறியாக மக்கள் வழமைக்கு மாறாக தலைதெறிக்க கூச்சலிட்ட வண்ணம் அங்கும் இங்கும் ஓடித் திரிவதையும் மேலும் ஏதோ ஒன்றில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள நிறுத்தி வைக்கப்பட்டுள்ள புகையிரத கதவுகள் வழியாக தொங்கி ஏறுவதையும் அவதானிக்க முடிந்தது. என்ன நடக்கின்றது என அறியாத 8050 புகையிரத சாரதிகள் மற்றும் கார்டுகள் முன்னால் அமைந்துள்ள மல்வென்ன ரயில் கடவையின் ஊடாக வாகனங்கள் அதிக வேகத்தில் கொழும்பு பகுதியை நோக்கி செல்வதை மட்டும் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருந்தனர்.

அவ்வாறு பார்த்துக் கொண்டே இருக்கும் சந்தர்ப்பத்தில் யாரும் எதிர்பாராத வகையில் புகையிரதத்தின் கதவு உயரத்திற்கு எழுந்த பாரிய ஆழிப் பேரலை ஒன்று புகையிரதத்துடன் மோதியது. இந்தப் பேரலை இரயில் பெட்டியின் உள்ளே இருப்பவர்களுக்கு பெரிய பாதிப்பை ஏற்படுத்தாத போதிலும் கீழே இருப்பவர்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

மேலும் பேரலிய பிரதேசம் கடல் மட்டத்திற்கு வெகுவாக அண்மித்து காணப்பட்டதால் அதன் தாக்கமும் சற்றே அதிகமாக காணப்பட்டது. நடந்தது என்னவென்று நினைத்துக் கூட பார்க்க முடியாத நிலையில் தலைமை கார்ட் வெளியே எட்டிப் பார்க்கும் போது புகையிரதத்தை சுற்றிலும் சுமார் நான்கு அடி உயரத்திற்கு கடல் நீர் சூழ்ந்த நிலையில் அருகில் காணப்பட்ட மரமொன்றில் 15 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுமியும் 10 வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவனும் மரத்தில் தொங்கியவாறு தங்களை காப்பாற்றுமாறு மரண ஓலம் இட்டனர். உடனடியாக செயல்பட்ட கார்ட் கருணாதிலக்க, தனது சீருடைகளை களைத்து எறிந்து விட்டு தன்னுடன் கார்ட் பெட்டியில் பயணித்த பேருவளை புகையிரத நிலைய அதிபர் ரதம்பகொட சகிதம் கீழே நீரில் இறங்கி, மரத்தில் ஏறி அந்த சிறுவர்கள் இருவரையும் காப்பாற்றி கார்ட் பெட்டியில் கொண்டுவந்து வைத்தனர். புகையிரத நிலைய அதிபர் ரதம்பேகொடவை சிறுவர்கள் இருவரையும் கவனமாக பார்த்துக் கொள்ளுமாறு கூறிவிட்டு கருணாதிலக்க மீண்டும் பெட்டியில் இருந்து இறங்கி புகையிரத எஞ்சின் பகுதியை நோக்கி மிகவும் சிரமத்திற்கு மத்தியில் செல்ல முயற்சித்தார். அவர் அவ்வாறு செல்லும் போது எஞ்சினுடன் பொருத்தப்பட்டிருந்த இரண்டாம் வகுப்பு இரண்டாவது பெட்டி முதலாவது பெட்டியில் இருந்து பிரிந்து தண்டவாளத்தில் இருந்து விலகி சுமார் 15 அடி தூரத்துக்கு அடித்துச் செல்லப்பட்டு இருந்தது.

இதனால் மரண அச்சத்தில் கலவரமடைந்து கூச்சலிட்ட பயணிகளை அமைதிப் படுத்தி தண்டவாளங்களின் மேல் காணப்படும் ஏனைய புகையிரத பெட்டிகளுக்கு சென்று ஏறுவதற்கு உதவிகளை வழங்கியதுடன் நீர்மட்டம் குறைந்ததும் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் கேட்டுக் கொண்டார். இச் சந்தர்ப்பத்தில் உதவி கார்ட் குணரத்னவும் இணைந்து இருந்தார்.

அதன் பின்னர் இருவரும் எஞ்சின் பகுதியை நோக்கி புறப்பட்டனர். அங்கே புகையிரத சாரதிகள் இருவரையும் சந்தித்து இதன்போது எடுக்க வேண்டிய முக்கிய நடவடிக்கைகள் தொடர்பில் கலந்தாலோசித்து விட்டு மீண்டும் தங்களது கட்டுப்பாட்டு பெட்டிகளுக்கு செல்ல முற்படும்போது பிரதான புகையிரத சாரதி ஜனக்க பெர்ணான்டோ கார்ட் கருணாதிலக்கவை அழைத்து நிலைமைக்கு ஏற்றவாறு "வேலையை வேலையாக செய்ய ஆயத்தமாக வந்துள்ளீர்களே" என கேலியும் செய்துள்ளார் தலைமை சாரதி ஜனக்க. அதற்கு காரணம் கருணாதிலக்க சீருடையில் இல்லாமல் உள்ளாடையுடன் மட்டுமே இருந்த காரணத்தினால் இருக்கலாம். இதுவே அவர்கள் பேசிக்கொண்ட கடைசி வார்த்தைகள் என்பதை அவர்கள் அத்தருணத்தில் அறிந்திருக்கவில்லை. முதல் அலை எழுந்து பதினைந்து நிமிடங்கள் கழித்து விட்டன.

(21ஆம் பக்கம் பார்க்க)

# கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் குற்றவியல் நீதி பீடத்தை நிறுவுகிறது

- கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் குற்றவியல் நீதி பீடம் பாதுகாப்பு செயலாளரினால் அங்குரார்ப்பணம்
- இதுபோன்ற துறை சார் பீடம் உருவாக்கப்படுவது இதுவே முதல்முறை

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் புதிதாக நிறுவப்பட்ட குற்றவியல் நீதி பீடத்தை பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன (ஜனவரி 19) வைபவ ரீதியாக திறந்து வைத்தார்.

அத்துடன் பல்கலைக்கழகத்திற்கான அச்சகமும் திறந்து வைக்கப்பட்டது.



புதிதாக நிறுவப்பட்ட பீடமானது நாட்டின் உயர்கல்வித்துறையில் முன்னணி நிறுவனமாக பரிணமித்து வரும் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 11வது பீடமாகும்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் குணரத்ன:-

2020 ஒக்டோபர் 19 ஆம் திகதி நடைபெற்ற பாதுகாப்புச் சபையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் இவ்வாறான பீடமொன்றை ஸ்தாபிப்பதற்கான தேவை தொடர்பான யோசனையை முதலில் முன்வைத்தார். அத்துடன் அதிகாரிகளை உள்ளடக்கிய தொழில்முறை பொலிஸ் படையொன்றை உருவாக்குவதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியதாக பாதுகாப்புச் செயலாளர் தெரிவித்தார். இதற்கு அவசியமாக கல்வி சூழலை உருவாக்கும் பொறுப்பு கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டது என்றும் 2021 மே மாதம் 21ஆம் திகதி அன்று குற்றவியல் நீதிக்கான முன்மொழியப்பட்ட பீடத்தை நிறுவுவதற்கு பல்கலைக்கழக முகாமைத்துவ சபை ஒப்புதல் அளித்தது என்றும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

பாடசாலை கல்வியை பூர்த்தி செய்து வெளியேறும் கணிசமான மாணவர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள் இத்துறையில் உயர்கல்வி பெற விரும்புவதால், புதிய பீடம் சரியான நேரத்தில் தேவையை பூர்த்தி செய்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் குற்றவியல் நீதி அமைப்பில் ஈடுபட்டுள்ள பணியாளர்களின் திறன்களை மேம்படுத்த வேண்டிய அவசியத்தையும் இதன்போது வலியுறுத்தினார்.

கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம் முன்னெடுத்த இந்த நடவடிக்கையின் பலனாக, குற்றவியல் நீதித்துறையில் நன்கு நிபுணத்துவம் மிக்க அதிகாரிகளை நமது தாய்நாட்டிற்கு வழங்குவதன் மூலம் சட்ட அமலாக்கம் மற்றும் அதனுடன் தொடர்புடைய அமைப்புகளுக்கு மகத்தான பங்களிப்பை வழங்கும் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார்.

இதன்போது பாதுகாப்பு செயலாளர் புதிய பீடத்தின் இணையத்தளத்தையும் அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

நாட்டிற்காக தியாகம் செய்த படைவீரர்களை நினைவுகூர்ந்து ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தும் நிகழ்வுடன்பல்கலைக்கழக பீடத்தின் அங்குரார்ப்பண வைபவம் ஆரம்பமானது.

இதன் போது குற்றவியல் விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் ஜீவா நிரியெல்ல வரவேற்புரையாற்றினார்.

இந்த வைபவத்தின் போது கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மேஜர் ஜெனரல் மிலிந்த பீரிஸ், பாதுகாப்பு செயலாளருக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் கே. ஜகத் அல்விஸ், பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன, தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் ரொஹான் குணரத்ன, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழக கல்விசார் மற்றும் நிர்வாக ஊழியர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.



தினகரன் வாரமஞ்சரி

# BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845

## NAVIN AUTO MART

வாகன பரிமாற்றம் பரிசீலனை செய்யப்படும்

No. 73, Subdrama Road, Gangodawila, Nugegoda.

077 7 315 656
071 8 560 328

ஒரே நாளில் லீசிங் வசதி

### MERCEDES BENZ CLA 200

AMG 2015 Model, CAN-xxxx, Dimo import, 38000km only, AMG Flat Bottom Staring, Automatic Trans 18" AMG Alloy's, Leather & Vinyl combination Seats with memory Package car in Brilliant Condition.



### MERCEDES BENZ C200d

2018, Diesel, AMG line silver exterior with black leather electric seats, chorme body trims with dual exhaust AMG Body styling 19" alloys, full option, automatic, cruise control, parking assist with reverse camera, 1st owner maintained by Mercstop



### MERCEDES BENZ S350 W 221

2008 Model, Carbonite Blue Exterior with Premium Tan leather Interior, KO-xxxx, 1st owner, Completely Dimo Maintained, One of the best W221 in town.



### MERCEDES BENZ E200 W212 AMG LINE

1800cc, Turbo, Six Speed, Auto/ Triptonic, 2010 Nov, 2010, Calcite White, Mint Condition, 90,000km, Available Full option



### AUDI Q7

2012, Petrol, 3 Litre, Supercharged quittro agents imported, 91,000km, Beige leather, electric seats with memory package, 7 seater, multi function, Bose sound system, automatic with paddle shift, Panoramic roof, Fully loaded, Spec agent maintains



### AUDI A4

2016 Model, CBC-xxxx, Full option, Automatic, Transmition, Fully Loaded, Single owner car



### AUDI A6

2018 Model, Petrol, CBE-xxxx, Agent Import, Fully loaded, Spec inclusive of Sun Roof, Driver/ Passenger, Electric Seats



### KIA SORENTO

Diesel, 2014 Model, Agent import, CAC-xxxx, 1-15 Options, 7 Seater, Premium Tan Leather interior, Panaromic Roof with memory package, Fully Loaded Spec, 18" alloys, completely Maintained by Agent, All records available



### TOYOTA LAND CRUISER V8 ZX

2010 Model, Petrol, Pearl White Exterior with Beige leather Interior, 136,000km only, fully loaded Spec.




### REXTON SSANGYONG / REXTON (ULTIMATE) DOUBLE CAB

2019, Brand New, Diesel, 4 WD, Sun Roof, Australian Imported, 0 KM Highest spec 4WD in Sri Lanka, Automatic transmission with triptoni, grey exterior with black leather cruise seats, Power & ECO mode, Dual Multi function, cruse control, 360 Camera, LED day time running light, HID head lamps



### TOYOTA PREMIO

G Superior, 2015 model, CAM-xxxx Grey Exterior with Beige interior with teak trims electric seat, full option, automatic transmission, rear vipers, multifunction android car sterio with reverse camera, Toyota Lanka records available, 11500km



### TOYOTA VITZ

2018, Registered, CBH-xxxx, 1st Owner, 43,000km, F/option, Automatic, Push button start, Dual Multifunction, TV, DVD, R/ Camera, Mint Condition



### MITSUBISHI MONTERO SPORT

2011, Brown Exterior with Beige Interiror, Full Option Automatic Transmission with Triptornic, TV, DVD, Reverse Camera, Done 163,000km



### MITSUBISHI MONTERO

JT-xxxx, 105,000KM, WD, F/Option automatic with triptronic, beige interior, Cruise control, TV, DVD, R/ Camera, 3rd row A/C, Jeep in Pristine condition



## போட்டோ குறும் விளம்பரம்



**De hydrator** இயந்திரம் குறைந்த விலைக்கு மற்றும் நம்பிக்கையான நிறுவனத்தில் விற்பனைக்குண்டு. N.C. இன்ஜினியரிங் (பீவிடி) எல்டிடீ, பிலியந்தல. **info@ncengineering.lk/www.ncengineering .lk**
**011 5 882 077 / 077 2 357 502 / 076 66 31 887**



**Susuki Wagon R FZ 2018.. CBC XXXX.. Safty Package. Low milage. 54/75...**
**Tel - 0727 545 800**

வாரமஞ்சரி BUDGET adz

## STUDENT VISA VISIT VISA/ TOURIST VISA

ALL KIND OF VISA CONSULTANCY
Financial Documentation Assistance
CALL US SOON
WIN WIN CONSULTANTS
0777-283385
44/1D, Highlevel Road, Delkanda Junction, Nugegoda.
Email : winwinconsultants.lk

## பொரலஸ்கமுவ

20 பேர்ச்சுக்கள், 6,200 சதுர அடி., 6 படுக்கை அறைகள் (1 ஏசி படுக்கை அறை) 4 படுக்கை அறைகள் சூடான நீர் வசதி,, பணிப்பெண்கள் விடுதிகள், சுவருக்கு சுவர் கப்போட்டுக்கள், ஓடு பதித்த கூரை 1600 சதுர அடி, கப்போட்டுக்களுடனான பான்ரி மற்றும் சமையலறை, ஸ்டோர் அறை, சோலா பவர், ஹைலெவல் பாதையிலிருந்தும் மற்றும் பிலியந்தல பாதையிலிருந்தும் வசதியான பாதை, கராஜ் 4 வாகனங்களுக்கான நிறுத்துமிடம், அமைதியான சூழல், சிநேகபூர்வமான சுற்றுச்சூழல்.



விலை 85 மில்லியன். பேசித்தீர்க்கலாம்.

**0777 733 130**


## மாத்தளை

மாத்தளை மாவட்டம், எல்கடுவ நகரத்திலிருந்து 1 கி.மீ. தூரத்தில் 10 ஏக்கர் கலப்பு பயிர்ச் செய்கையிலிருந்து 4 3/4 ஏக்கர் காணி உடனடி விற்பனைக்கு. 2 கால்வாய்கள், குளங்கள் ஆகியனவே இக்காணியாகும். மின்சாரம் உண்டு.

225 இலட்சம் ரூபா அல்லது கிட்டிய தொகை.

**0762 442 213 / 0712 741 877**




**ALLIED TRADING INTERNATIONAL (PVT) LTD**
301 Old Moor Street, Colombo 12, Sri Lanka. 011- 739 7777 011- 2435180 alliedint@eureka.lk www.allied.lk




தினகரன் வாரமஞ்சரி

## திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும

**classified@lakehouse.lk**

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு

**100/-** ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) **000000377**

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்

அனுஷா - 077 7 278 948
ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383
கயனி - 011 2 429 342

## சுனாமியில் சிக்கிய புகையிரதம் ... (19ஆம் பக்கத் தொடர்)

இந் நிலையில் உதவி கார்ட் தனக்குரிய இருப்பிடத்தில் நின்றுவிட்டார். தலைமை கார்ட் அலையினால் இழுத்துச் செல்லப்பட்ட இரண்டாவது பெட்டியை கடந்து செல்லும் வேளையில் கடல் பகுதியில் இருந்து மற்றுமோர் பாரிய சத்தத்துடன் மிகவும் வேகமாக 20 அல்லது 30 அடி உயரத்திற்கு இரண்டாவது அலை புகையிரதத்தை நோக்கி சீறிப்பாய்ந்து வருவதை அவதானித்தனர். உடனடியாக உதவி கார்ட் அருகில் இருந்த மரம் ஒன்றில் ஏறிக்கொண்டார். தலைமை கார்ட் மூன்றாவது பெட்டியில் ஏறி கடல் பக்கத்தில் காணப்பட்ட முதலாவது ஜன்னலை திறந்து வைத்துக் கொண்டார். ஏனைய பயணிகள் பயத்தால் ஜன்னல்களை முழுவதுமாக ஏற்கனவே மூடிக் கொண்டு மரண ஓலம் எழுப்பினர். சிலர் தங்களை காப்பாற்றுமாறு தெய்வங்களை கெஞ்சிக் கூத்தாடினர்.

இரண்டாம் அலை பழி தீர்த்துக் கொள்ளும் வகையில் ஆக்ரோஷமாக ரயிலுடன் மோதியதில் சிதறி சின்னா பின்னமாகிய புகையிரத பெட்டிகள் யாவும் இணைப்புகளில் இருந்து விலகி விளையாட்டு பொம்மைகளை போல நீரில் அடித்துச் செல்லப்பட்டு அருகில் இருக்கும் தென்னந் தோப்பின் மத்தியில் தென்னை மரங்களுக்கு இடையே ஆங்காங்கே சிதறின. புகையிரத வீதி இருந்த இடம் தெரியாமல் முற்றிலுமாக உருக்குலைந்து அழிந்து போனது. இதனைத் தொடர்ந்து தலைமை கார்ட் கருணாதிலக்க திறந்து இருந்த ஜன்னல் ஊடாக புகையிரத பெட்டியின் மேல் ஏறி பெட்டிக்குள் சிறைப்பட்ட பயணிகளை மேலே ஏறிக்

கொள்வதற்கு உதவி வழங்கி வரும் நிலையிலும் தன் கண் முன்னாலேயே உதவி கார்ட் குணரத்ன கடல் அலையில் அடித்துச் செல்லப்படுவதையும் தலைமை கார்ட் அவதானித்தார். இதன் போது அநேகமானோர் உயிரிழந்தனர். உயிர் தப்பிய பயணிகளை மீட்கும் நடவடிக்கைகளில் ரதம்பேகொடவும் கருணாதிலக்க உடன் இணைத்துக் கொண்டு தீவிரமாக செயல்பட்டனர். மேலும் புகையிரத வீதியில் இருந்து 100 மீட்டர் தூரம் இழுத்துச் செல்லப்பட்டு கவிழ்ந்து கிடந்த M2a 591 Manitoba புகையிரத எஞ்சினில் இருந்த ஜனக்க பெர்ணான்டோ மற்றும் சிவலோகநாதனுக்கு என்ன நடந்தது என பார்க்க எஞ்சினில் ஏற முயற்சித்த கருணாதிலக்க டீசல் மற்றும் எண்ணெய் காரணமாக வழுக்கியதால் மிகவும் சிரமப்பட வேண்டியதாயிற்று. ஒருவாறு எஞ்சினின் மேல் பகுதியை அடைந்த கருணாதிலக்க அங்கே அவர் கண்ட காட்சிகள் சில நிமிடங்கள் அவரை நிலைக் குலையச் செய்தது. ஆம் தலைமைச் சாரதி ஜனக்க பெர்ணான்டோ மற்றும் உதவி சாரதி சிவலோகநாதன் இருவரும் எஞ்சின் அடிப்பகுதியில் சிக்குண்டு உயிரிழந்து இருந்தனர். அவர்களை வெளியே எடுக்க முயற்சித்த போதிலும் அடிப்பகுதியில் சிக்குண்டு காணப்பட்டதால் அந்த முயற்சியும் தோல்வி அடைந்தது.

அதன் பின்னர் தனது இருப்பிடத்திற்கு தனது பணிக்குறிப்புகள், உடைகள் மற்றும் உடமைகளையும் தேடிச் சென்ற போதிலும் அவைகள் யாவும் கடல் நீரில்

அடித்துச் செல்லப்பட்டிருந்தன. (அந்த பெட்டியில் மட்டும் 49 சடலங்கள் மீட்கப்பட்டதாக பின்னர் அறியக் கிடைக்கின்றது) இதனிடையே உதவி கார்ட் குறித்து கவனம் செலுத்திய கருணாதிலக்க அவரை தேடிக் கொள்ள முடியாததால் உயிர் தப்பிய பயணிகளையும் அழைத்துக் கொண்டு அருகில் உள்ள பன்பலைக்கு சென்று நடந்த அசம்பாவிதங்களை தனது பணி மேலிடத்துக்கு தெரிவித்தார். அதன் பின்னர் அருகில் இருந்த மீட்டியாகொட பொலிஸ் நிலையத்திற்கு செல்லும் வழியில் அமைந்துள்ள மல்வென்ன ஆற்றின் மறு புறத்தில் காலி புகையிரத கட்டிட நிர்மாண பிரிவு மேற்பார்வையாளர் (Forman) பத்மசிறியை சந்திக்கின்றார். அவரிடமிருந்து சேர்ட் ஒன்றையும் சாரம் ஒன்றையும் வாங்கி அணிந்துகொண்ட கருணாதிலக்க அவருடனேயே மீட்டியாகொட பொலிஸ் நிலையத்திற்கு சென்று மூன்று மணியளவில் நடந்த விபரீதம் தொடர்பில் முறைப்பாட்டு வாக்குமூலம் ஒன்றையும் வழங்கினார். அங்கே அதுவரையிலும் அவரால் தேடிக்கொள்ள முடியாது இருந்த உதவி கார்ட் குணரத்னவையும் சந்திக்கின்றார்.

இலங்கை புகையிரத திணைக்களத்தின் புள்ளி விவரங்கள் மற்றும் அறிக்கைகளில் விபத்தில் 1270 பயணிகளும் 249 பிரதேச வாசிகளும் உயிரிழந்ததாக கண்டெடுக்கப்பட்ட சடலங்களின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்த போதிலும் புகையிரத டிக்கெட் விற்பனைக்கு அமைய 1700க்கும் அதிகமானோர் இதன் போது உயிரிழந்து இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. வழக்கம் போல புகையிரத திணைக்களம் 44 பேரிடம் வாக்குமூலங்களை பெற்று விபத்தை தவிர்த்துக்கொள்ள முடியாது போன காரணத்தை கண்டறிய முயற்சித்தது. இவ் விபத்தினால் பாதிக்கப்பட்ட நான்கு பாலங்கள் உட்பட 88 கி.மீ தூர புகையிரத வீதியை மீண்டும் புனரமைக்க விலை மனு கோரப்பட்ட சந்தர்ப்பத்தில் இந்திய அரசு அந்த பணிக்கு ஆறுமாத கால அவகாசம் தேவை எனவும் அதற்காக 1000 மில்லியன் ரூபாய் செலவாகும் எனவும் தெரிவித்தது. எனினும் இலங்கை புகையிரத திணைக்களத்தில் சேவை செய்த சுமத்திபால மானவடு உள்ளிட்ட ஏனைய புகையிரத திணைக்கள ஊழியர்களின் அயராத முயற்சியின் பயனாக வெறுமனே 57 நாட்களில் 400 மில்லியன் ரூபாய் செலவில் புகையிரத வீதியை உரியமுறையில் புனரமைத்து மீண்டும் வழக்கமான புகையிரத சேவைகளை ஆரம்பித்து உலகை ஆச்சரியத்தில் ஆழ்த்தினர்.

விபத்துக்குள்ளான புகையிரத எஞ்சின் மற்றும் ஐந்து பெட்டிகள் மீண்டும் தண்டவாளத்தில் ஏற்றி கொழும்புக்கு கொண்டு வரப்பட்டதுடன் மூன்று பெட்டிகள் மட்டும் நினைவுச் சின்னமாக சில காலம் பேரலியவில் அதே இடத்தில் வைக்கப்பட்டு பின்னர் ஹிக்கடுவைக்கு கொண்டு செல்லப்பட்டு 2008ஆம் ஆண்டின் இறுதியில் மீண்டும் அங்கிருந்து மாளிகாவத்தை புகையிரத பராமரிப்பு பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டது. தற்போது அங்கும் இடப்பிரச்சினை காரணமாக கொச்சிக்கடை புகையிரத நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. M2a 591 Manitoba புகையிரத எஞ்சின் பழுதுபார்த்து சீர்செய்து 2008 டிசம்பர் மாதம் 26ஆம் திகதி மீண்டும் சேவையில் இணைந்து கொண்டது மட்டுமின்றி அதன் பின்னர் ஒவ்வொரு வருடமும் டிசம்பர் 26ஆம் திகதி காலை 9.25 மணியளவில் பேரலிய பகுதிக்கு சென்று துக்க தினத்தை அனுஷ்டித்து வருகிறது. பழைய இரும்பு விலைக்கு விற்கப்படும் நிலையில் காணப்பட்ட புகையிரத எஞ்சின் உட்பட இரு பெட்டிகள் எச்.எல்.ஆர். பொன்சேகா (LFC DMT) உள்ளிட்ட குழுவினரால் சுனாமியின் நினைவலைகளை மீட்டும் வகையில் வர்ணம் பூசப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது. ஏனைய ஆறு பெட்டிகள் அண்மையில் வெட்டி துண்டாக்கப்பட்டன.

## களனி பல்கலைக்கழகம்

### பேராசிரியர்களுக்கு வீடொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெற்றுக்கொள்ளல்

களனி பல்கலைக்கழகத்தில் சேவையாற்றும் வெளிநாட்டு பேராசிரியர்களுக்கு (மகளிர்) தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக தலுகமயில் அமைந்துள்ள பல்கலைக்கழக வளவிலிருந்து ஒரு கிலோ மீற்றருக்குள் அமைந்துள்ள வீடொன்றை குறைந்தபட்சம் ஒருவருட காலத்திற்கு வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்வதற்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இந்த வீட்டில் குறைந்தபட்சம் இணைந்த குளியலறைகள் சகிதம் வளிச்சீராக்கம் செய்யப்பட்ட நான்கு (04) படுக்கையறைகளுடன் சமையலறை உபகரணங்கள் உட்பட சகல வீட்டுபகரணங்கள், நீர், மின்சாரம், தொலைபேசி வசதிகள் உட்பட முழுமைப்படுத்தப்பட்ட வீடாகவிருத்தல் வேண்டும்.

குறித்த வசதிகள் சகிதமான வீட்டு உரிமையாளர்கள் பின்வரும் தகவல்களை, அந்தத் தகவல்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘பேராசிரியர்களுக்கான வீடொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளல்’’ எனக் குறிப்பிட்டு முத்திரைக் குறியிட்டு உதவிப்பதிவாளர், பொது நிர்வாகப் பிரிவு, களனி பல்கலைக்கழகம், தலுகம, களனி எனும் முகவரிக்கு 2022-02-08ஆம் திகதிக்கு முன் பதிவுத் தபாலில் கிடைக்கச் செய்யுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1. குத்தகைக்கு வழங்கும் வீட்டின் முகவரி:
2. அந்த வீட்டிலிருந்து தலுகமயில் அமைந்துள்ள களனி பல்கலைக்கழத்திற்கு உள்ள தூரம் (கி.மீ.)
3. வழங்குவதற்கு எதிர்பார்க்கும் வீட்டுபகரணங்கள்
4. எதிர்பார்க்கும் மாதாந்த குத்தகை தொகை / வாடகைத் தொகை
5. வீட்டில் உள்ள அறைகளின் எண்ணிக்கை
6. உரிமையாளரின் பெயர் / முகவரி / தொலைபேசி இலக்கம்
7. உறுதியின் பிரதியொன்று மற்றும் திட்ட வரைபடத்தின் பிரதியொன்று.

அரச மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் வாடகைக்கு அல்லது குத்தகைக்குப் பெற்றுக்கொள்ளப்படும்.

**பதிவாளர்**
2022-01-20.

# தினகரன் வாரமஞ்சரி — சிறு விளம்பரங்கள்

THINAKARAN VAARAMANJARI

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

### வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

கண்டி பெறுமதியான கட்டிடம் விற்பனைக்கு 06 மாடிகள் (20 பேர்ச்) கண்டி குண்டசாலை குடியிறுப்பு பிரதேசம். 1800 ச.அடி பிரதான வீதிக்கு முகப்பாக 80 அடி அகலம் பிரதான வீதிக்கு சமாந்தரமாக தரை அடங்கலாக 06 கடைகள், மேல்மாடி 07 கடைகள் 02 வெவ்வேறான மண்டபங்கள் நிலக்கீழ் மாடிகள் உண்டு. 02 வெவ்வேறான மண்டபங்கள் களஞ்சியத்துடன் குடியிறுப்பு அறை பிரதேசங்கள் மாதாந்த வருமானம் 04 இலட்சம். (வங்கிக் கடனுடன்) Rs1200 மில்லியன் சகல வசதிகளுடன் தரகர்கள் வேண்டாம். 0777 438169, 0777 282147. 001222

### வேலைவாய்ப்பு



### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

தெல்கொட பிரதேசத்தில் மொத்த வியாபாரத்துடன் நவீன விற்பனை நிலையத்திற்கு விற்பனை உதவியாளர்கள் தேவை. உணவு, தங்குமிடத்துடன் தொடர்புகள் 0712906222, 011 2402405. 005048


முன்னனி கம்பனிக்கு சந்தைப்படுத்தல் அதிகாரிகளை சேர்த்துக்கொள்கிறது. கொழும்பு புறநகர் 45 வயதிற்குக் கீழ் சம்பளம் கமிஷன், போனஸ், மெடிக்கல், தொ.பேசி, வாகனங்கள் உள்ளடக்கம். இருபாளரும் விண்ணப்பிக்கலாம். இன் ஹவுஸ் மார்கடிங் 0776300429, 0773928246 003372

30 வயதிற்கு மேற்படாத ஆண்/பெண் ஊழியர்கள் தேவை. தங்குமிட வசதியும் உண்டு. Af fable arcade adve rtising Gampaha 07 7-3996955, 071-0475408. 005035



### 309 வெற்றிடங்கள் கணக்கியல்/ நிதி


Audit Trainee Secretary Trainee with A/L Commerce apply agape accounting services 89-1/2 Bank Shall Street, Colombo-11. e-mail - agapeaccservices@gmail.com whatsapp - 07 55 03 09 54 Telephone - 0777239397 005041



### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

எமது மீகொட பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தி தொழிற்சாலைக்கு இன்ஜெக் ஷன், மோல்டின் மெசின் அனுபவமுள்ள இயக்குநர்களுக்கு வெற்றிடங்கள் உண்டு. தங்குமிட வசதி உண்டு. 071 2306585, 076 6106585. 005327

பொலிதீன் PP எக்ஸ்ட்ரூடர் ஒப்பரேட்டர்ஸ்/ பேக் கட்டிங் மெசின் ஒப்பரேட்டர்ஸ் மற்றும் ஹெல்பர்ஸ் அனுபவத்துடன் நேரில் வரவும் அல்லது விண்ணப்பிக்கவும் இல. 785, நீர்கொழும்பு வீதி, மாபோல வத்தளை. 004605



### 316 வெற்றிடங்கள் ஆடை தயாரிப்பு/ புடவைகள்

எமது கூட்டு வியாபாரத்திற்கு ஜுகி மெஷின் பெண் இயக்குநர், அலுவலக பெண் சுத்திகரிப்பாளர் கொள்ளுப்பிட்டியில் தைத்த ஆடை நிறுவனத்திற்கு பெண் விற்பனை பிரதிநிதிகள் தேவை. கூடுதல் சம்பளம் மேலதிக நேர கொடுப்பனவு, ஊக்குவிப்பு கொடுப்பனவு இலவசம். தங்குமிட வசதிகள் உற்பட பல வசதிகள். 0777 709371. 005205


வத்தளையில் அமைந்திருக்கும் ஏற்றுமதி தரத்தில் துணி உற்பத்தி செய்யப்படும் கம்பனிக்கு துவாய் மற்றும் பெட்ஷீட் தைப்பதற்கு அனுபவமுள்ள தையல் இயந்திர இயக்குநர்கள் (Juki Machine Operators), பயிற்சி பெறவிரும்பும் தையல் இயந்திர இயக்குநர்கள் மற்றும் ஆண், பெண் உதவியாளர்கள் தேவை. (Sub Contract கொடுக்கப்படமாட்டாது) ஒரு நாள் சம்பளம் ரூ. 1200/ வேலை நேரம் 8.30 மு.ப. 6.30 பி.ப. வரை வருகை கொடுப்பனவுகள், தங்குமிடவசதி இலவசம். குறைந்த விலைக்கு மூன்று நேர ஆகாரம். இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ. பே. இல. 0777 800682/ 076 6200300. 005210



### 317 வெற்றிடங்கள் டெயிலர்கள்/ டிரஸ்மேக்கர்கள்

ஜுகி வெற்றிடங்கள் மெசின் ஒபரேட்டர் உற்பட சகல பிரிவுகளுக்கும் ஆண்/ பெண் ஊழியர்கள் தேவை. நிகோ காமன்ட், 218, அளுத்மாவத்த வீதி, கொழும்பு 15. 077 2254331 004814

டெயிலர் தேவை. நிகோ காமன்ட், 218, அளுத்மா வத்த வீதி, கொழும்பு15. தொ.பே. 004809



### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கனரக வாகன சாரதிகள் தேவை. ஹோமாகம, பனாகொட கைத்தொழில் பேட்டையில் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள டிலிவரி லொறி சாரதி தேவை. தங்குமிட வசதியுடன் சகல கொடுப்பனவுகளையும் பெற்றுக்கொள்ளலாம். அழையுங்கள் 0778869803 004882

சாரதிகள் தேவை! வயது 2550 இற்கு இடையில் கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரத்துடன் சாரதிகள் தேவை. சம்பளம் ரூ. 40,000/ இற்கு மேல் பெற்றுக் கொள்ளலாம். தேவைப்படும் பிரதேசங்கள் கொழும்பு, இரத்மலானை, மொறட்டுவ, பானந்துறை, களுத்துறை, நீர்கொழும்பு, வென்னப்புவ விற்கு அருகில் தேவை. உடனடியாக அழையுங்கள். 0777 263954, 076 7639155. 004522

கொழும்பில் அமைந்துள்ள நாட்டின் முதல்தர பொருட்கள் போக்குவரத்து நிறுவனமான ஏசியன் மூவர்ஸ் பிரைவட் லிமிட்டட் இற்கு சிங்களம் பேசக்கூடிய கனரக வாகன சாரதிகள் தேவை. தங்குமிடம் மற்றும் உணவுக் கொடுப்பனவுகள். கவர்ச்சிகரமான சம்பளம். தொடர்பு 071 5122036 004984



### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்


கொழும்பு முகத்துவாரம் வீடொன்றில் தங்கிப் பணியாற்றுவதற்கு பணிப்பெண் தேவை. வெளிநாடொன்றில் வீட்டுப்பணிப்பெண்ணாகப் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை தகுதியான சம்பளம் வழங்கப்படும். 0777 569058. 004566

நீர்கொழும்பு வீட்டில் தங்கி வேலை செய்ய பெண் தேவை. 077 9983907/ 031 2222057. 005342

வீட்டுப் பணிப்பெண்கள் மற்றும் அட்டென்டன்கள் தேவை. 16 இலிருந்து 35 வரையும் அனுபவம் தேவையில்லை. நல்ல சம்பளம் மற்றும் வேலை நிபந்தனைகள் தொடர்பு 75/1, W.A. சில்வா மாவத்தை, கொழும்பு 6 259 11 69, 255541 0, 07 77 452447 மற்றும் 075 5091379 ஆகிய இலக்கங்களை அழைக்கவும். 085863

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

வாரியபொல தோட்டத்திற்கு பயிர்ச்செய்கை விடயங்கள் தெரிந்த நன்றாக வேலை செய்யக்கூடிய தம்பதி தேவை. 076 6101528. 004263




### 322 வெற்றிடங்கள் மேசன் மற்றும் தச்சு தொழிலாளர்கள்

18 45 வயதிற்கிடைப்பட்ட பயிற்சி பெற்ற/பெறாத தச்சுத் தொழிலாளர்கள் உடனடியாக தேவை. பகல் உணவு, தங்குமிடம் மற்றும் பயிற்சி இலவசம். அழையுங்கள் 076 7264272, திரு. நுவன். 005201



### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

Labour - dankotuwa தங்கொடுவயில் அமைந்திருக்கும் தொழிற்சாலைக்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை. ஒரு நாள் சம்பளம் ரூ. 1200/ (மாதாந்த சம்பளம்) இலவச தங்குமிட வசதி உணவுக்கான கொடுப்பனவாக மாதம் 3500/ வழங்கப்படும். கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 08, கைத்தொழில் பேட்டை, தங்கொடுவ. தொ. பே. 077 2884959/ 077 2229947. 005213



### 325 தொழில்துறை பொது

அரசில் பதிவு செய்யப் பெற்றுள்ள ஆயுர்வேத SPA நிறுவனமொன்றிற்கு பயிற்றப்பட்ட/ பயிற்றப்படாத 1835 வயது சிங்க ளத்தில் உரையாடக் கூடிய அழகிய தோற்றமுள்ள தெரபிஸ்ட்டுகள் தேவை. தினச் சம்பளம் ரூபா 10,000/ உணவு பானங்கள் தங்குமிடம் இலவசம். பகல் அல்லது இரவு சேவையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். Full time/ Part time சேவை. தெரபிஸ்ட்டுகளை இணைத்துக் கொள்வதற்கு உதவ முடியுமானவர்களுக்கு ரூபா 10,000/ சேவைக்கட்டணம் வழங்கப்படும். Sha kya H erble (pvt) Ltd இல. 21, மாலபே, கொட்டாவ, மஹரகம, நுகேகொட, கடுவெல, தளவதுகொட. 070 4404040 005066


காசாளர் (Cashier) வத்தளையில் அமைந்துள்ள துணி உற்பத்தி செய்யும் எமது தொழிற்சாலையின் காரியாலயத்திற்கு A/L வணிகம் (Commerce) படித்த கணனி (Excel) அறிவுடைய பெண் (Female) காசாளர் (Cashier) தேவை. வயதெல்லை 30க்கு குறைந்தவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு திங்கள் முதல் வௌ்ளி வரை நேரில் வரவும். இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ. இல. 076 6200300 E mail:hr@cliftextiles.com 005209

கொழும்பு 06, ஹெவ்லொக் வீதியிலுள்ள கிளினிக் இற்கு சுத்திகரிப்புப் பெண் தேவை. தொடர்பு 077 3097803 004683

பஞ்சிகாவத்த, மோட்டார் வாகன உதிரிப் பாகங்கள் விற்பனை நிலையத்திற்கு பெண் விற்பனையாளர்கள் தேவை. பயிற்சிபெற்ற/ பெறாத கணனி அறிவு சாதாரணமாக உள்ள 18 35 வயதிற்கிடைப்பட்டவர்கள். பகல் உணவு உடன் கவர்ச்சிகரமான சம்பளம். 0112434432, 0777268607, 0714703307 004842

077 9975547, 071 8653778 நசசத்திர தர ஹோட்டலுக்கு சிவில் உடையில் பாதுகாப்பு அதிகாரிகள் உடன் சேர்த்துக் கொள்ளல் உணவு இலவசம் (12 மணி நேரம்) இற்கு 1750, 1450 கொழும்பு 071 8653780, அலுவலகம் 071 3155331/ 070 6655 331/ 076 8171 053/ 076 0989 129. 005314

### சொந்த விடயம்



### 502 தங்க ஆபரணங்கள் மாணிக்கக் கற்கள்

நீங்கள் அடகு வைத்த சட்டரீதியான நகைகளை மீட்க முடியாத சந்தர்ப்ப நிலையில் நாங்கள் மீட்டு அதற்கான பெறுமதிப்பணம் அவ்விடத்திலேயே தரப்படும். 072 1340226. 005394

### காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

16.34 காணியுடன் வீடு விற்பனைக்கு இரத்மலானையில் அழகிய குடியிறுப்புப் பிரதேசம் தொடர்பு 076 0786655, 070 2778616 003229

2 படுக்கை யறை 1 இணைந்த குளியலறை, 1 வேலையாள் கழிப்பறை, சமையலறை, பென்றி, அமர்வு பிரதேசம். பெல்கனியுடன் முழுமையாக டைல் செய்யப்பட்டுள்ளது. மின்சார உயர்த்தி தெளிவான உறுதியுடன் கொழும்பு 12 5ஆம் மாடியில் அப்பாட்மென்ட் 77 இலட்சம் பேசித்தீர்க்கலாம். சனிக்கிழமை மாத்திரம் வருகை தாருங்கள். 076 3077551/ 071 6165193. 004673

### 619 வீடு சொத்து குருணாகல் மாவட்டம் விற்பனைக்கு

பொல்காவலை ரயில் நிலையத்திற்கு அருகில், நேருக்கு நேராக சிறந்த 2 காணித்துண்டுகள். (102/ 78 பேர்ச்) கொழும்பு குருநாகல் பிரதான பாதைக்கு அருகில் தம்பொக்க அதிவேக வீதி உள்நுழைவிற்கு 20 நிமிட தூரத்தில். ஒரு பேர்ச் 98,000/ இன்றே அழையுங்கள். 0713116002 004978

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

80 பேர்ச் மிகவும் பெறுமதியான காணி விற்பனைக்கு. கண்டி குண்டசாலை கென்டோஸ் சொக்லேட் கம்பனிக்கு முன்னால் பிரதான பாதைக்கு 100 மீற்றர் தூரத்தில் சதுரவடிவ தரைமட்டமான வெற்றுக் காணி முதியோர் இல்ல கட்டிடத் தொகுதி களஞ்சியம், ஹோட்டல், வியாபாரத்திற்கு தனியார் வைத்தியசாலைக்கு மிகவும் பொருத்தமானது. 01 பேர்ச் 10 இலட்சம். விலைகளை பேசித்தீர்க்கலாம். இடைத்தரகர்கள் தேவையில்லை. வாயிற்கதவுடன் சுற்றிவர மதில். தொடர்புகள் 0777 282147, 077 5486262 001224

### 623 வீடு சொத்து நுவரெலியா மாவட்டம் விற்பனைக்கு

நுவரெலியா 27 பேர்ச் வாகனத்தில் செல்லக்கூடிய காணி சாந்திபுரவில் சகல வசதிகளுடன் நகரத்திற்கு பத்து நிமிடங்கள். 0778028828, 0773304450. உடனடி விற்பனை. 003080

### 641 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

தெஹிவளை கொங்கோட் தியெட்டருக்கு சமீபமாக இரண்டு மாடி வீடு இரண்டு அட்டச் குளியல் அறை இரண்டு சாதாரண குளியல் அறை கொண்ட நாலு படுக்கை அறை இரண்டு சமையல் அறை கொண்டது. இரண்டு சிறிய குடும்பம் பாவிக்கலாம். அஹ்மத் 0777303828. 002290

### திருமண சேவைகள்

### மணமகள்

முஸ்லிம் தெஹிவளை 23 வயதுடைய 5.2 உயரமுடைய அழகான வைத்திய மணமகளுக்கு வைத்தியர், பொறியியலாளர் மணமகனை தேடுகின்றனர் சகல வசதிகளும் மணமகனுக்கு வழங்கப்படும். தொடர்புக்கு 077 8383798. B174511



### மணமகன்

முஸ்லிம் தெஹிவளை படித்து வியாபாரம் செய்யும் 28 வயதுடைய 5.5 உயரமுடைய மகனுக்கு அழகான கொழும்பில் வசிக்கும் மணமகளை தேடுகின்றனர். தொடர்புக்கு 077 8383798. G174510

55 வயதுடைய முஸ்லிம் தாரம் இழந்தவர் தகைமையுள்ள கணக்காளர், மதிப்புக்குரிய மத்திய வகுப்பைச் சேர்ந்தவர் புரிந்துணர்வுள்ள மார்க்கமுள்ள திருமணத்திற்காக பெண்ணொருவரை தேடுகின்றார். தயவு செய்து 077 6512757/ 035 3131688. G174572




தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 சயனி - 011 2 429 342/343

## கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், இலங்கை

## உபவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள்/ பரிந்துரைகளுக்கான அழைப்பு

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரிவு 34(1) மற்றும் அதன் அடுத்தடுத்த திருத்தங்களின் அடிப்படையில் கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் ஆளுநர் சபையினால் உபவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்கள்/ நியமானங்கள் அழைக்கப்படுகின்றன. பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2020 மே 04ஆம் திகதிய ஆணைக்குழு சுற்றறிக்கை இலக்கம் 02/2020 ஐப் பார்ப்பதற்காக பல்கலைக்கழக இணையத்தளமான https://gwu.ac.lk என்பதை அணுகுமாறு உத்தேச விண்ணப்பதாரிகள்/ பரிந்துரையாளர்கள் அழைக்கப்படுகின்றார்கள்.

பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் பிரகாரம் உபவேந்தர் பல்கலைக்கழகத்தின் முழு நேர அலுவலர் ஆவார். அவர் பிரதான நிறைவேற்று அதிகாரி, கல்வித்துறைத் தலைவர் மற்றும் பல்கலைக்கழகத்தின் கணக்கீட்டு அதிகாரி ஆவார். அவர் அதிகாரப் பூர்வமாக ஆளும் குழு மற்றும் செனட்டின் உறுப்பினரும் மற்றும் தலைவரும் ஆவார்.

மேற்படி பல்கலைக்கழகங்கள் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களின் ஏற்பாடுகளின் படி உபவேந்தர் அப்பதவியில் இருந்து நீக்கப்பட்டால் அல்லது முன் கூட்டியே பதவியை இராஜினாமா செய்தாலொழிய, மூன்று ஆண்டுகள் அப்பதவியில் இருப்பதுடன் அவருக்கு அறுபத்தி ஐந்து வயது பூர்த்தியடையும் வரை அல்லது உபவேந்தரின் பதவிக்காலம் முடிவடையும் வரை ஆகிய இரண்டிலும் முன்னர் வரும் திகதி வரை பணியாற்ற வேண்டும்.

கல்வி விவகாரங்களை வழிநடத்துதல், முகாமைத்துவக் கொள்கைகளை உருவாக்குதல், வழிநடத்துதல், நிர்வாக குழுவின் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் தொடர்பில் உபவேந்தர் பொறுப்பாவதுடன் அவர் அதற்காக எப்போதும் கல்வி சிறப்புத் தேர்ச்சி, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல், சனநாயக முகாமைத்துவம் மற்றும் வெற்றிகரமான தலைமைத்துவக் கோட்பாடுகளைப் பின்பற்ற வேண்டும்.

வெற்றிகரமான வேட்பாளர், வலுவான ஆராய்ச்சி சுயவிபரம், நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ குணங்கள், பல்வேறு பங்குதாரர் குழுக்களுடன் புறநிலையாக தொடர்புகொள்வதற்கான தனிப்பட்ட திறன்கள், சிக்கல்களை பகுப்பாய்வு செய்வதற்கான கருத்தியல் திறன்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட சிக்கல்களுக்கு முகங்கொடுக்க/அவற்றைத் தீர்க்க பயனுள்ள தீர்வுகளை கண்டறிதல் உள்ளிட்ட உயர் கல்வி சாதனைகளின் பதிவையும் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் கொள்கைகள் மற்றும் அதனுடன் இணைந்த திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் மற்றும் செயல்பாடுகளை வினைத்திறனாகவும் செயற்றிறனாகவும் செயல்படுத்துவதற்கான அர்ப்பணிப்பையும் கொண்டிருக்க வேண்டும். சமூகத்திற்கான அதன் அர்ப்பணிப்பு உட்பட ஒரு பல்கலைக்கழகத்தின் நெறிமுறைகள் மற்றும் பணி பற்றிய ஆழமான புரிதலையும் அவர் கொண்டிருக்க வேண்டும்.

பல்கலைக்கழகத்தின் கல்விசார் பணிப்பாளர் குழாத்தில் சம்பளப் பிரமாணத்தில் மிக உயர்ந்த சம்பள மட்டத்தில் இடம் பெறுவதற்கு உபவேந்தருக்கு உரிமையுள்ளதுடன் குறித்த அடிப்படைச் சம்பளத்தில் 15% ஆன விருந்தோம்பல் கொடுப்பனவு உட்பட பதவிக்குரிய பிற கொடுப்பனவுகளுக்கும் அவர் தகுதியுடையவராவார்.

விண்ணப்பப்படிவம்/நியமனப் படிவத்துடன் பின்வரும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1. பிறந்த திகதி உட்பட விண்ணப்பதாரர்/பெயர் பரிந்துரைக்கப்பட்டவரின் (உரிய ஆவணங்கள் உட்பட) முழுமையான சுயசரிதைத் தகவல்கள் (விண்ணப்பதாரர்/ பெயர் பரிந்துரைக்கப்பட்டவர் இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும். மற்றும் விண்ணப்பங்கள் பெறப்படும் கடைசித் திகதியில் 63 வயதுக்கு குறைவானவராக இருக்க வேண்டும்) பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக்குழுவினால் 2020 மே 4ஆம் திகதிய ஆணைக்குழுச் சுற்றறிக்கை இல. 02/2020இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏழு (7) மதிப்பீட்டு அளவுகோல்கள் மற்றும் தொடர்புடைய கூறுகள் தொடர்பான ஆவணச சான்றுகளால் ஆதரிக்கப்படும் அபேட்சகரின் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை பண்புக் கூறுகள் மற்றும் திறன்கள் மற்றும் அனுபவம் மற்றும் சாதனைகளை எடுத்துக் காடடும் விரிவான பதிவு.
2. கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தின் ‘தொலைநோக்கு’ பற்றிய தமது தனிப்பட்ட கூற்று மற்றும் விண்ணப்பதாரர்/பரிந்துரைக்கப்பட்டவர் உபவேந்தர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டால் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காக அவர் நிறைவேற்ற உத்தேசித்துள்ள பணி பற்றிய சுருக்கமான அறிக்கை.
3. விண்ணப்பதாரர் தற்போது உபவேந்தராக பதவி வகித்து வந்தாலோ அல்லது பல்கலைக்கழகத்தில் அந்த பதவியை முன்பு வகித்திருந்தாலோ அந்த உத்தியோகபூர்வ காலத்தில் அவர் ஆற்றிய பணிகளைக் காட்டும் அறிக்கை.
4. பெயர் பரிந்துரை எனின் பரிந்துரைக்கப்பட்டவரின் ஒப்புதல் கடிதம்.
5. விண்ணப்பதாரர்/பரிந்துரைக்கப்பட்டவர் கம்பஹா விக்கிரமார்ச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தைத் தவிர வேறு ஒரு பொதுச் சேவை, கூட்டுத்தாபனம், சட்டபூர்வ சபை மற்றும் உயர்கல்வி நிறுவனமொன்றில் பணிபுரிபவராயின் இப்பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்பட்டால், சேவையிலிருந்து அவரை விடுவிக்க முடியுமென குறிப்பிடும் தொழில்தருநரது கடிதம்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2020 மே 04ஆம் திகதிய ஆணைக்குழு சுற்றறிற்கை இல. 02/2020இன் இணைப்பு 01இல் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பெண் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அளவுகோல்கள் மற்றும் கூறுகள் மற்றும் செய்முறைகளின்படி ஒவ்வொரு விண்ணப்பதாரரினதும் சுயவிபரம் மதிப்பீட்டுக் குழுவால் மீளாய்வு செய்யப்பட்டு மதிப்பீடு செய்யப்படும்.

மதிப்பீட்டுக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் பல்கலைக்கழக நிர்வாக குழுவால் அங்கீகரிக்கப்பட்ட அபேட்சகர்கள் ஒரு சிறப்பு நிர்வாக குழு கூட்டத்திற்கு முன் 10 நிமிடங்களுக்க குறையாத மற்றும் 15 நிமிடங்களை விஞ்சாத சுருக்கமான முன்னிலைப்படுத்துகைக்கு அழைக்கப்படுவார்கள்.

பல்கலைக்கழ மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 2020 மே 04ஆம் திகதிய ஆணைக்குழு சுற்றறிக்கை இல. 02/2020இல் விதிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட நடைமுறையின்படி மூன்று அபேட்சகர்களின் பெயர்களை பரிந்துரைத்த சிறப்புக் கூட்டத்தின் அறிக்கையானது நியமனங்களைப் பரிசீலிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும்.

விண்ணப்பங்கள் அல்லது பரிந்துரைகள் 2022 பெப்ரவரி மாதம் 25ஆம் திகதியன்று பிற்பகல் 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் ‘பதிவாளர்/நிர்வாகக் குழுச் செயலாளர், கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், கண்டி வீதி, யக்கலை’ என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

விண்ணப்பங்கள்/பரிந்துரைகள் அடங்கிய உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘உபவேந்தர் பதவி’ என குறிப்பிடப்பட வேண்டும். இறுதி திகதி மற்றும் நேரத்திற்கு பிறகு பெறப்படும் விண்ணப்பங்கள்/பரிந்துரைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

✷ இந்த விளம்பரம் தொடர்பில் ஏதேனும் தவறான விளக்கம் எழும் பட்சத்தில் ஆங்கில உரையே செல்லுபடியாகும்.

**பதிவாளர் மற்றும் நிர்வாகக் குழுச் செயலாளர்,**
**கம்பஹா விக்கிரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்,**
**இலங்கை,**

2022 சனவரி 20

## கல்வி அமைச்சு

## இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம் (SLIATE)

## பதவி வெற்றிடங்கள்

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனத்தின் பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களை பணிப்பாளர் நாயகம், SLIATE, “ஜனவத்து பியச”, இலக்கம் 320, டீ.பி. ஜாயா மாவத்தை, கொழும்பு-10 எனும் முகவரிக்கு 2022-02-23ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தபால் உறையின் மேல் இடது மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை தயவு செய்து குறிப்பிடவும்.

### 01) தொழில்நுட்ப அதிகாரி (சிவில்) -

**தலைமை அலுவலகம் - (01 வெற்றிடம்)**

**கல்வி மற்றும் ஏனைய தகைமைகள்:**

2 வருட அனுபவம் சகிதம் HNDE அல்லது NDT அல்லது அதற்கு சமமான தகைமை (NVQ 6ஆம் மட்டத்திற்குக் குறையாத தகைமை.)

**சம்பள அளவு:**

**MA 2-2-2016 ரூபா 30,310 - 10x300 - 7x350 - 4x600 - 20x710 - 52360**

**சேவை நிபந்தனைகள் :-**

1. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர் தமது வருவாயில் ஊழியர் சேமலாப நிதிக்கு (EPF) 10% பங்களிப்புச் செய்வதோடு SLIATE 15% பங்களிப்புக் செய்யும் அதேவேளை தமது வருவாயில் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு (ETF) 3% பங்களிப்பு செய்யும்.
2. அனைத்து பிரிவுகளுக்கும் 45 வயதுக்கு குறைந்த வயதெல்லை கொண்டவராக இருக்க வேண்டும். எவ்வாறாயினும் அரச/ பொது நிறுவனங்களின் நிரந்தர ஊழியர்கள் ஆளணியில் இருந்து விண்ணப்பிப்பவர்களுக்கு இது ஏற்புடையதல்ல.
3. அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் நிதிச்சட்டச் சபைகளின் விண்ணப்பதாரர்கள் குறித்த நிறுவனத்தில் தலைவர் ஊடாகவே தமது விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.
4. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் அரச திணைக்களத்தில் ஓய்வூதியத்திற்கு உரிய பதவியை வகிப்பவராயின் நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஊடாக தமது விடுவிப்பை பெற வேண்டும். எவ்வாறாயினும் SLIATE சேவையின்போது ஓய்வூதிய உரிமை பெற்றவராகமாட்டார்.

இறுதித் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவனம்**
**இலக்க 320**
**டீ.பி. ஜாயா மாவத்தை**
**கொழும்பு 10.**

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)
Any Single Newspaper ரூ. 300/- (Except Thinakaran Vaaramanjari)
Two Newspapers ரூ. 500/- (Except Thinakaran Vaaramanjari)
Three Newspapers ரூ. 650/-
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL: 025 22 22 370 FAX: 025 22 35 411 / Kandy - TEL: 081 22 34 200 FAX: 081 22 38 910
Kataragama - TEL: 047 22 35 291 FAX: 047 22 35 291 / Maradana - TEL: 011 2 429 336 FAX: 011 2 429 335
Matara - TEL: 041 22 35 412 FAX: 041 22 29 728 / Nugegoda - TEL: 011 2 828 114 FAX: 011 4 300 860 / Jaffna - TEL: 021 22 25 361 FAX: 021 22 25 361

## வேலை வாய்ப்பு

### சதொச
### சிரேஷ்ட முகாமையாளர் - களஞ்சியம் (HM - 1-1)
இலங்கையின் பாரிய சில்லறை வலையமைப்பிற்கு

**தகைமைகள்**

**வெளிவாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

(01). பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாட்டியல் முகாமைத்துவம்/ வழங்கல்கள் மற்றும் பொருள் முகாமைத்துவம்/ வர்த்தக முகாமைத்துவம்/ வணிகம்/ வர்த்தக நிர்வாகம்/ சந்தைப்படுத்தல்/ கணக்கியல் அல்லது வேறு ஏதேனும் தொடர்புடைய துறையில் இளமானிப் பட்டம்.

அத்துடன்

தொடர்புடைய துறையில் பட்டப்பின்படிப்பு பட்டத் தகைமை (முதுமாணி)

மற்றும்

கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் அனுபவம்.

(02). பதவியின் விடயப் பரப்புக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றில் முழு அங்கத்துவம்

மற்றும்

கூட்டுத்தாபனம், சட்டரீதியான சபை/ நிறுவனம் அல்லது புகழ்பெற்ற தனியார் நிறுவனம் ஒன்றில் "முகாமைத்துவ தரம்" ஒன்றில் குறைந்தபட்சம் 15 ஆண்டுகள் அனுபவம்.

**உள்வாரி அபேட்சகர்கள் (கீழுள்ள 1 அல்லது 2)**

(01). மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்கான தகைமை தேவைகளை பெற்றிருத்தல்.

(02). பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் தரம் 1 முகாமைத்துவ பிரிவு (MM) பதவி ஒன்றில் குறைந்தது 05 ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 35 வயதுக்கு குறையாதவராகவும் 55 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (உள்வாரி அபேட்சகர்களுக்கு உயர் வயதெல்லை பொருந்தாது)

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்:** அடிப்படைச் சம்பளம் ரூபா 80,295/= போக்குவரத்துக் கொடுப்பனவு ரூபா 50,000/= அரசாங்க சுற்றறிக்கைக்கு அமைய பதவிக்கு பொருந்தும் மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு + கையடக்க செலவு ஈடு செய்தல் ரூபா 5000/=)

**நியமனத்தின் பண்பு:** EPF மற்றும் ETF இற்கு உரித்தான ஒப்பந்த நியமனம்

**பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும்**

- மதிப்பீடு, மதிப்பாய்வு மற்றும் தரவை விளக்கும் திறனுடன் சிறந்த பகுப்பாய்வு, சிக்கல்களை தீர்க்கும் பண்பு மற்றும் ஏற்பாட்டுத் திறன்களை பெற்றவராகவும் சிறந்த சுய ஊக்கம் கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.
- வலுவான தலைமைத்துவ தகைமைகள், ஒருவருக்கு ஒருவர் தொடர்புகொள்ளும் திறன்களை கொண்டிருத்தல்.
- சிறந்த IT திறன்களை நிரூபிக்க முடியுமாக இருத்தல் வேண்டும்.
- பல தரப்புக் குழுக்களுக்கு தலைமை வகித்த மற்றும் வழிநடத்திய நிரூபிக்கப்பட்ட திறமை. மனித மற்றும் ஏனைய வளங்களை முறையாக அமர்த்திய மற்றும் திறமையாக முகாமைத்துவம் செய்த அனுபவம்.

**அனைத்து விண்ணப்பதாரர்களும்,**

I. இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும்.
II. பதவியின் கடமைகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கு மற்றும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் கடமையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
III. சிறந்த ஆளுமையுடைய நபராகவிருத்தல் வேண்டும்.

நீங்கள் சரியான தகைமைகள் மற்றும் அனுபவத்தை பெற்றவராக இருந்தால், சான்றிதழ்களின் பிரதிகளுடன் உங்களது சுய விபரக்கோவையை கீழுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது vacancies@lankasathosa.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு இந்த விளம்பரம் வெளியான 14 நாட்களுக்குள் அனுப்பவும் (கடித உறையின் இடது பக்க மேல் மூலையில்/ மின்னஞ்சலின் "Subject" பகுதியில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடுதல் வேண்டும்)

(தேர்வு செய்யப்பட்ட அபேட்சர்களுடன் மாத்திரமே நிறுவனம் தொடர்புகொள்ளும்)

தலைவர், லங்கா சதொச லிமிடட்,
இல.27, சதொச செயலகக் கட்டிடம்,
வொக்ஷோல் வீதி, கொழும்பு 02.

வர்த்தக அமைச்சு

சதொச

Trusted Marketplace of Classified Advertisers...
Sunday Observer adz Classified
Green Light for Online Transfer
Lake House Branch Acc. No. 000000377
Inquiries :- Ramani - 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067
E-mail - classified@lakehouse.lk

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer adz Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer adz it's what you want
erodua Viva Elite 2013
White, Manual Gears, Alloy Wheels, Original Fog Lamp, Crystal Headlight, Central Locking with Remote Key, Power Shutters, Power Mirrors, Reverse Sensors, Original Carpets, Power Steering, Second Owner, Home use.



- Auto Focus
adz Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 345

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | 11 | 12 | | | 13 |
| 14 | | | 15 | 16 | |
| 17 | 18 | 19 | | 20 | 21 |
| | | 22 | 23 | | 24 |

பெயர் ........................................

வகுப்பு ........................................

பாடசாலை பெயர் ........................................

பாடசாலை முகவரி ........................................

........................................

.............................. ..............................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) தண்மையான நீர் வெம்மையாக்கப்பட்டதால் இப்பெயர் வந்தது.

(08) இது செதுக்கல் உபகரணம். கல்லை இதனால் செதுக்கினால் சிலை உருவாகும்.

(10) தினமும் நாம் எங்கும் காணக் கூடிய பறவை.

(15) சிரிப்பு என்றும், ஆபரணம் என்றும் இருபொருள் தரும் சொல்.

(17) பூமிக்கு ஒத்தபொருள் சொற்கள் அதிகம். அச்சொற்களில் ஒன்று இது. (தலைகீழான சொல்)

(20) பெண்கள் அணிகின்ற ஆபரணங்களில் இதுவும் ஒன்று. ஆனால் ஆண்களில் சிலரும் நாகரிகத்துக்காக இந்த நகையை அணிந்து கொள்கின்றனர்.

(22) ஒவ்வொரு சொல்லுக்கும் ஒத்தபொருள் சொற்கள் தமிழில் அதிகம். தமிழ்மொழியின் சிறப்புகளில் அதுவும் ஒன்று. உடல் என்பதன் ஒத்தசொல் இது. (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(01) எமது உணவுக்கு சுவையூட்டுவதில் ஏராளமான பொருட்கள் உள்ளன. கறிக்கு சுவையூட்டுவதில் நாம் அன்றாடம் பயன்படுத்துகின்ற உணவுப்பொருள் இது.

(03) இது ஒரு நிறம். பகலில் ஆகாயத்தை அண்ணாந்து பாருங்கள். புரிந்து விடும்.

(05) இது வறியவர்கள் வாழ்கின்ற குடிசை அல்ல. செல்வந்தர்கள் வாழ்கின்ற ஆடம்பர வீடு.

(16) பறவைகளின் சிறப்பான அங்கம் சிறகு ஆகும். சில பறவைகளுக்கு கவர்ச்சியான சிறகுகள் உள்ளன. மயிலின் சிறகும் அழகானது. எனவேதான் அதனை சிறகு எனக் குறிப்பிடாமல் இப்பெயரில் கூறுகின்றோம். (தலைகீழான சொல்)

(19) ஞானம் படைத்தோரை இப்பெயரால் குறிப்பிடலாம்.

(21) நிறையுணவு மிக்க திரவ ஆகாரம் தருவது மட்டுமன்றி, விவசாயத்துக்கும் பல வழிகளில் உதவுகின்ற அப்பாவி மிருகம் இது. எனவேதான் 'செல்வம்' என்றொரு பொருளும் இச்சொல்லுக்கு உள்ளது. (தலைகீழான சொல்)

**போட்டி இல. 345**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834.**
**கொழும்பு**

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 344

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. தைப்பொங்கல் 09. வலை 11. துளி
14. நாம் 16. கான் 19. ஆக்கம்
24. மதம்

**மேலிருந்து கீழ்**


01. பாதை 03. பொந்து 05. கலை
06. சேவல் 12. தக்காளி 14. தாகம்
17. மகன் 19. ஆம்

தற்போதைய சூழ்நிலை காரணமாக குறுக்கெழுத்துப் போட்டிகளுக்கான பரிசில்கள் வழங்கப்படாது என்பதை எமது சிறார்களுக்கு அறியத் தருகின்றோம். ஆனாலும் ஆர்வம் கொண்ட சிறார்களுக்காக குறுக்கெழுத்துப் போட்டிகள் தொடர்ந்தும் இடம் பெறும். (ஆர்)

# அன்பை விதைப்போம்..!

இளையவர் யுகம் எழுவோம்
இழிவுகள் போக்க முயல்வோம்
கழிவுகள் வாழ்வில் கலைவோம்
கல்வியா லுலகை வெல்வோம்
இளமையின் கடமை யேற்போம்
இகமே உயர உழைப்போம்
தலக்கண முடுமை தவிர்ப்போம்
தாழ்வைக் கொண்டு சிறப்போம்
அறிவின் பெருமை உணர்வோம்
அன்பால் நாங்கள் இணைவோம்
வறுமையின் கொடுமை அழிப்போம்
வாடிய மாந்தரைக் காப்போம்
வேற்றுமைக் குணம் மறப்போம்
விருப்புடன் தின மிருப்போம்
ஒற்றுமைக் குரல் வளர்ப்போம்
ஒன்றாய ஆகி சிறப்போம்
பகைகள் மண்ணில் மறப்போம்
பாதக மெல்லாம் துறப்போம்
பகிர்ந்து மகிழ்வாய் இருப்போம்
பண்பால் பாரை நிறைப்போம்
ஒழுக்கம் தவறா தொழுகுவோம்
உயரும் வழிகளை யணுகுவோம்
அழுக்குகள் சேர்த்து புதைப்போம்
அன்பையே மண்ணில் விதைப்போம்..!

**வரக்காமுறையூர் ராசிக்**



குறளமுதம் :

**வாய்மை எனப்படுவது யாதுஎனின் யாதுஒன்றும்
தீமை இலாத சொலல்.**

***தெளிவுரை :***
வாய்மை என்று கூறப்படுவது எது என்றால், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீமை இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும்.

# உலகிலுள்ள நீளமான ஆறுகள்



*Huwang Ho / சீனாவில் அமைந்துள்ள ஹுவாங் ஹோ ஆறு 2700 மைல் நீளமானது.*

*Niger / ஆபிரிக்காவில் அமைந்துள்ள நைகர் ஆறு 2600 மைல் நீளமுடையது.*

*Mecancy / ஆபிரிக்காவில் அமைந்துள்ள மெகன்ஸி ஆறு 2525 மைல் நீளமானது.*

*Mekeng / ஆசியாவில் அமைந்துள்ள மெகன்ங் ஆறு 2500 மைல் நீளமானது.*

*Frana / தென் அமெரிக்காவில் அமைந்துள்ள ப்ரானா எனும் ஆறு 2450 மைல் நீளமுடையது.*

*Marray / அவுஸ்திரேலியாவில் அமைந்துள்ள மரே எனும் ஆறு 2310 மைல் நீளம் கொண்டது.*

*Wallga / ரஷ்யாவில் அமைந்துள்ள வோல்கா எனும் ஆறு 2300 மைல் நீளமானது.*

*Indus / இந்தியாவில் அமைந்துள்ள இந்துநதி 2000 மைல் நீளமானது.*

*Brahmaputtira / இந்தியாவில் அமைந்துள்ள பிரஹ்மபுத்திரா எனும் ஆறு 1680 மைல் நீளமுடையது.*

*Ganges / இந்தியாவில் அமைந்துள்ள கங்கை நதி 1557 மைல் நீளமானது.*

**எஸ்.எம்.எம். மொஹமட் ஷெய்ன்,**
வெலிப்பன்ன.

# வைரத்தின் வரலாறு



இந்த உலகில் வைரங்கள் பல லட்சக்கணக்கான வருடங்களாக உருவாகி வருகின்றன. அவற்றில் சில தம் பிரகாசத்தால் நம் கண்களை கவர்ந்து வியப்பில் ஆழ்த்துகின்றன. அவை செழிப்பு மற்றும் ஆடம்பரத்தின் அடையாளமாகக் கருதப்படுகின்றன. பண்டைய காலங்களில், அவை நன்மையளிக்கக் கூடியவையாகக் கருதப்பட்டன. அவற்றின் பயன்பாடு பலம் தரும் என்று கூறப்படுகிறது. இது எதிரிகள், தீமைகள் மற்றும் கெட்ட கனவுகளிலிருந்து பாதுகாப்பதாகவும் நம்பப்படுகிறது.

பண்டைய கிரேக்க பாரம்பரியத்தில் வைரம் மிகச் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது. கிரேக்கர்கள் அவற்றை கடவுளின் கண்ணீர் என்றும் விண்ணிலிருந்து விழுந்த நட்சத்திரங்களின் துண்டுகள் என்றும் கருதினர்.

வைரங்கள் உருவாகக் காரணமாக இருக்கும் தனிமமான கார்பன் உயிர்களின் அடிப்படையாகும். வைரங்கள் மிகக் கடினமான சூழலில் தான் வலிமை பெறுகின்றன. அவை உருவாகும் சூழலில் கடுமையான அழுத்தத்தைத் தாங்கும் திறன் கொண்டவை. ஹைட்ரஜன் மற்றும் வெப்பநிலையின் சரியான கலவை இருந்தால், அது கார்பன் டை ஒக்சைடாகவும் பறந்துவிடும்.

வைரங்கள் தனிப் பிரகாசமாகவும் பளபளப்பாகவும் இருக்கும். ஆனால் இது மிகவும் கடினமானது. அவை சிறந்த வெப்ப கடத்திகள். வெப்பநிலை காரணமாக அவற்றின் உருவ அளவும் மிகச் சிறியதாகிறது. இது கார மற்றும் அமில இரசாயனங்களால் இது பாதிப்படைவதில்லை. ஆழமான புற ஊதா கதிர்கள் காரணமாக, அது கண்ணாடி போல் ஆகிறது. எதிர்மறை எலக்ட்ரோநெக்டிவிட்டி கொண்ட சில அறியப்பட்ட பொருட்களில் இதுவும் ஒன்றாகும்.

நமது உலகில் உள்ள பெரும்பாலான வைரங்கள் பூமிக்கு அடியில் 150 கிலோமீட்டர் ஆழத்தில் உருவாகின்றன. அல்லது விண்கற்களின் தாக்கத்தால் உருவாகின்றன.

வைரங்கள் மிக அதிக வெடிப்புத் தன்மையுடன் தான் பூமியின் மேற்பரப்புக்கு வருகின்றன. வரலாற்றில் இதுவரை உருவான மிகப்பெரிய வெடிப்பில் உருவானவை இந்த வைரங்கள். இந்த வெடிப்புகளால் உருவாக்கப்பட்ட சில எரிமலைகளின் அடித்தளம் பூமியில் மிக ஆழமாகச் சென்றுள்ளன.

அனைத்து வைரங்களும் கண்ணாடி போன்றவை அல்ல. சில வெளிர் மஞ்சள் நிறத்திலும் சில பழுப்பு நிறத்திலும் இருக்கும். சில வைரங்கள் பல வண்ணங்களிலும் உள்ளன. அவை மிக அரிதானவை. சிவப்பு, நீலம் மற்றும் பச்சை நிற வைரங்கள் மிக அரிதானவை. ஆரஞ்சு, மஞ்சள் மற்றும் சற்று மஞ்சள் கலந்த பச்சை வைரங்கள் மிகவும் எளிதில் காணப்படுகின்றன.

**எம். மனோரஞ்சனி,**
தரம் 10S,
ஸ்ரீகதிரேசன் மத்திய மகா வித்தியாலயம்,
நாவலப்பிட்டி.

# மக்களும் மனிதர்களும்

தாவரங்களின்றி மனிதன் இப்புவியில் உயிர் வாழவே முடியாது. சிறிதளவு நேரமாவது நாம் மரங்கள், தாவரங்கள் இல்லாத வெட்ட வெளியில் நின்று பார்த்தால் இந்த உண்மை புலனாகும். மனிதன் உயிர் வாழ்வதற்கு உயிர்நாடியாக விளங்குவது மரங்களும் தாவரங்களுமேயாகும். மனிதன் காட்டுவாசிகளாக வேட்டையாடிக் கொண்டிருந்த காலம் தொடக்கம் மனிதனுக்கும் மரங்களுக்குமிடையேயான உறவு நீடிக்கிறது.

மரங்களின் காய் கனிகள், இலைகள், பூக்கள், தண்டுகள், கிழங்குகள் மனிதனுக்கு உணவாகும். பல சந்தர்ப்பங்களில் இவை மனிதனுக்கு அருமருந்தாகவும் பயன்படுகின்றன. ஆதிகால மனிதன் தொடக்கம் தற்போது அமேசான் காடுகளில் வசிக்கும் பூர்வீகக் குடிமக்கள் வரை மரங்களின் இலை குழைகள், மரப்பட்டை என்பனவற்றைத் தங்களது மானத்தைக் காக்கும் மறைப்பானாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

நாகரீகமடைந்த மனிதன் நகரமயமாக்கலை மேற்கொண்டிருந்த போதிலும் மனிதனால் மரங்களின் அனுசரணையின்றி வாழமுடியாது. தற்கால உடைகளைத் தயாரிப்பதற்கான பருத்தி, பட்டு நூலையும் மரங்களே தருகின்றன. நாம் உயிர்வாழ்வதற்குத் தேவையான சுத்தமான காற்றையும் மரங்களே உருவாக்கித் தருகின்றன.

நமக்குத் தேவையான நீரையும், விவசாய உணவு உற்பத்திக்குத் தேவையான நீரையும் மரங்களே பெற்றுத் தருகின்றன. எனவே, எம்மையும் இயற்கையையும் இப்பிரபஞ்சத்தையும் வாழவைக்கும் மரங்களை நாம் அன்புடன் பராமரித்துப் பாதுகாக்க வேண்டுமல்லவா?

**ஏ.எச். அப்துல் அலீம்,**
தரம் 8 சி,
அலிகார் தேசிய கல்லூரி,
ஏறாவூர்.

# பழமொழியும் அதன் விளக்கமும்

**கழுதை கெட்டால்
குட்டிச் சுவர்**

**விளக்கம் :** கழுதையின் தடித்த உடம்புத்தோலில் அரிப்பு அல்லது புண் போன்று ஏதாவது வந்தால் சாதாரணமாக இருக்கும் சுவர்களை விட பாதி சேதமடைந்த சுவர்களை நாடிச் சென்று தன் உடம்பை அதன்மேல் தேய்த்துக் கொள்ளும்.
காரணம் நல்ல சுவர்கள் சொரசொரப்பு அதிகம் இருக்காது. எனவே அது குட்டிச் சுவர் என்று சொல்லக் கூடிய சேதமடைந்த சுவர்களையே நாடும்.
இங்கு கெட்டால் என்பது அதன் தோல் கெட்டால் என்று அர்த்தம்.
இதுவே இந்தப் பழமொழியின் விளக்கமாகும்.

**சுஸ்மிதன் ஆனந்தன்,**
நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயம்,
நோர்வூட்.

## மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் ........................................

பிறந்த திகதி ........................................

வகுப்பு ........................................

பாடசாலை ........................................

........................................

........................................

வகுப்பாசிரியர் கையொப்பம்

**வர்ணப் புகைப்படம்**

**மாணவர் கழகம்
சிறுவர் உலகம்
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல.834 கொழும்பு.**




திருச்செல்வன் - ரேவதி
வத்தளை.






**A. தனுஷான்,**
தரம் 10, மா/கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



**ஷேன் முரளி**
தரம் 05, இரத்தினபுரி கலைமகள் வித்தியாலயம்,
இரத்தினபுரி.



**ஜி. கிஷான்,**
தரம் 10, கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயம்,
மாத்தளை.



**முகம்மட் அஷ்ரஸான்,**
வெளிமடை.

# விளையாட்டு



■ விராட் கோஹ்லியின் திடீர் பதவி விலகல்

# கிரிக்கெட் சபையுடனான முரண்பாடு காரணமா?

விராட் கோஹ்லி மூவகைக் கிரிக்கெட்டிலும் சிறந்த துடுப்பாட்ட வீரராவார். இதில் எவ்வித வாதங்களுக்கும் இடமில்லை. எனினும் கடந்த இரு வருடங்கள் அவர் துடுப்பாட்டத்தில் சற்று பின்னடைவை சந்தித்து வந்துள்ளார் என்பதும் உண்மையே. சாதனை வீரரான அவரால் கடந்த இரு வருடங்களில் ஒரு சதம் கூட விளாச முடியவில்லை. டெஸ்ட், ஒருநாள், ரி/20 என மூவகைப் போட்டியிலும் சிறந்து விளங்கும் அவர் இதுவரை 70 சதங்களை விளாசியுள்ளார். ஆனால் கடந்த இரு வருடங்களில் குறிப்பிட்டளவு ஓட்டங்களை சேர்த்தாலும் அதை சதமாகக் கொண்டு செல்வதில் சிக்கல்களை சந்தித்துள்ளார். அவர் 2014ம் ஆண்டு இந்திய அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்ற பின்பு வழமையான திறமையுடன் விளையாடி சதம், இரட்டை சதம் என திறமையாகவே செயற்பட்டு வந்துள்ளார்.

அவரின் இத் திடீர் பின்னடைவுக்கு பல காரணங்கள் கூறப்பட்டாலும் ஓய்வில்லாத போட்டிகளும், பின்னாளில் தலைமைப்பதவியினால் ஏற்பட்ட அழுத்தமும், அணிக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகளும் காரணமாக அமைந்திருக்கலாம் என விமர்சனங்கள் எழுந்துள்ளன. அதனால்தான் அவரே முதலில் பரபரப்பான ரி/20 தலைமைப்பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்தார். இப்பதவிவிலகலை எதிர்பார்க்காத இந்தியக் கிரிக்கெட் சபை அதுவரை சிறந்த தலைவர், சிறந்த வீரர் எனக் கொண்டாடிய அவரை ஒருநாள் தலைமைப் பதவியியிலிருந்து அதிரடியாகத் தூக்கியது. இதை சற்றும் எதிர்பார்க்காத கோஹ்லி இந்திய கிரிக்கெட் சபையுடன் முரண்பட்டார். அதன் எதிரொலியாகவே யாரும் எதிர்பார்க்காத வேளையில் டெஸ்ட் தலைமைப் பதவியையும் துறப்பதாக அறிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட்டின் மூன்று வகை அணிகளுக்கும் வெற்றிகரமான கப்டனாக விராத் கோஹ்லி இருந்தார். இவர் 68 டெஸ்ட் (40 வெற்றி) 95 ஒருநாள் (65 வெற்றி) 50 ரி/20 (30 வெற்றி) போட்டிகளில் இந்திய அணியை வழிநடத்தினார். கடந்த வருட ரி/20 உலகக் கிண்ணத் தோல்விக்குப் பின் ரி/20 தலைமைப்பதவியிலிருந்து விலகினார். அதன் பின்னர் இந்திய கிரிக்கெட் சபை ஒருநாள் போட்டிக்கான தலைவர் பதவியிலிருந்தும் இவரை நீக்கி ரோஹித் சர்மாவை நியமித்து அவருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது. இந்நிலையில் கோஹ்லி தலைமையில் மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட தென்னாபிரிக்க பயணமானது இந்திய அணி. இதன் போது தனிப்பட்ட காரணங்களுக்காக டெஸ்ட் அணியிலிருந்து விலகுவதாக ஒருநாள் அணிக்கு தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட ரோஹித் சர்மா அறிவித்திருந்தார். அதன் பின் தென்னாபிரிக்காவுடன் நடைபெறவுள்ள ஒருநாள் தொடரிலிருந்து தம்மை விடுவிக்க வேண்டும் என கோஹ்லி அறிவித்திருந்தார். பின்பு அவ்வறிவிப்பை விலக்கிக்கொண்டார். இப்படியாக இந்திய அணிக்குள் முரண்பாடுகள் ஏற்பட்டதும் இந்தப் பதவி மாற்றலுக்கும், பதவித்துறப்புகளுக்கும் காரணமாக அமைந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது. கப்டன் பதவியில் கோஹ்லியின் செயற்பாடுகள் தொடர்பாக பல்வேறு அதிருப்திகள் தெரிவிக்கப்பட்டன. தொடக்கத்தில் நன்றாக செயற்பட்ட அவர் பின் தனது அதிகாரப் போக்கை கடைப்பிடித்ததாகவும் அவரால் பல வீரர்கள் பாதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. மேலும் இந்திய அணியில் பிளவு இருந்ததாகவும் இதற்கு கோஹ்லியின் ஆதிக்கம் தான் காரணம் என்றும் சொல்லப்படுகிறது.

அண்மையில் ஒருநாள் தலைவர் பதவியிலிருந்தும் கோஹ்லியை நீக்கவிருப்பதாகவும் இந்திய கிரிக்கெட் சபை ஏற்கனவே அறிவித்திருந்தது. இதனால் கோஹ்லி தானாக முன்வந்து ஒருநாள் தலைமைப் பதவியிலிருந்தும் விலகுவார் என எதிர்பார்த்தது இந்தியக்கிரிக்கெட் சபை. ஆனால் அவர் முரண்டு பிடித்ததால் அவரை அப்பதவியிலிருந்து நீக்கிவிட்டு ரோஹித் சர்மாவை ஒருநாள் மற்றும் ரி/20 போட்டிகளுக்குத் தலைவராக நியமித்தது. இந்நிகழ்வும் கோஹ்லியின் இத் திடீர் முடிவுக்குக் காரணமாகலாம் எனக் கூறப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் டெஸ்ட் தொடரை 1-2 என்ற கணக்கில் இழந்தது. அதன் பின் இந்திய அணியின் டெஸ்ட் தலைமைப் பொறுப்பிலிருந்து விலகுவதாகத் திடீரென அறிவித்த கோஹ்லி, இது பற்றி கூறுகையில்: எந்த ஒரு விஷயமும் ஒரு கட்டத்தில் முடிவுக்கு வரும். என்னைப் பொறுத்தமட்டில் இந்திய டெஸ்ட் அணியின் தலைமைப் பதவி தற்போது முடிவுக்கு வந்துள்ளது. அணியை முன்னேற்றப் பாதையில் கொண்டுசெல்ல 7 ஆண்டுகள் கப்டனாகக் கடுமையாக உழைத்தேன். இதிலும் நிறைய ஏற்றத்தாழ்வுகள் இருந்தன. ஆனால் நம்பிக்கையுடன் முயற்சி செய்து இலக்குகளை அடைந்தேன். சக வீரர்களால் இப்பயணம் அழகாகவும் மறக்கமுடியாததாகவும் அமைந்தன என்று கோஹ்லி கூறியுள்ளார்.

இதற்கு முன் ஒரு நாள் போட்டிகளுக்கான தலைவர் பதவி விவகாரம் தொடர்பாக விராட் கோஹ்லிக்கும் இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் கங்குலிக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டிருந்தது. இந்த விவகாரத்தில் இருவரும் தெரிவித்த கருத்துக்கள் முன்னுக்குப் பின் முரணானதாக இருந்தன.

ரி/20 தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்த கோஹிலியை அப்படித் திடீரென விலக வேண்டாம் எனவும் பதவி விலகலை மறுபரிசீலனை செய்யுமாறும் அவரைக் கேட்டுக்கொண்டதாக இந்திய கிரிக்கெட் சபைத் தலைவர் கங்குலி ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார். ஆனால் என் பதவிவிலகலை மறுபரிசீலனை செய்யுமாறு ஒருவரும் கேட்கவில்லை என இதற்குப் பதிலளித்து கோஹ்லி அச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அதன் பின் ஒருநாள் தலைமைப் பதவியிலிருந்தும் கோஹ்லி திடீரென நீக்கப்பட்டார். இது பற்றி விராட் கோஹ்லி கூறுகையில்: தென்னாபிரிக்க சுற்றுப்பயணத்துக்கான வீரர்களைத் தெரிவு செய்வதற்கு சுமார் 1 மணி நேரத்துக்கு முன்பே தன்னை ஒருநாள் தலைமைப் பதவியிலிருந்து நீக்கியுள்ளதாக அறிவித்தார்கள். இது தொடர்பில் என்னுடன் கலந்துரையாடவில்லை என அப்போது அவர் கூறியிருந்தார். அடுத்த மாதம் இலங்கை அணியுடன் பெங்களூரில் நடைபெறவுள்ள டெஸ்ட் போட்டி விராட் கோஹ்லிக்கு 100ஆவது ஆட்டமாகும். அப்போட்டிவரை தலைமைப்பதவியில் இருக்கும்படி இந்தியக் கிரிக்கெட் சபை கேட்டுக்கொண்டதையும் கோஹ்லி நிராகரித்துள்ளார்.

கோஹ்லியின் இந்தத் திடீர் முடிவு இந்தியக் கிரிக்கெட் சபையில் பரபரப்பாகப் பேசப்பட்டது. விராட் கோஹ்லியின் வெற்றிகரமான 7 ஆண்டுகள் தலைமைப் பதவி முடிவுக்கு வந்துவிட்டது. இந்திய அணியின் சாதனைமிகு டெஸ்ட் தலைவர் விராட் கோஹ்லி ஆவார். அவரது தலைமையில்தான் இந்திய அணி அதிக வெற்றிகளைப் பெற்றுள்ளது. அவர் தலைமையில் 68 டெஸ்ட் போட்டிகளில் 40இல் வெற்றி பெற்றதுடன் 17 போட்டிகளில் மாத்திரமே தோல்வியடைந்துள்ளது இந்திய அணி. வெளிநாட்டு மைதானங்களில் இவரே அதிக வெற்றிகளைப் பெற்றுள்ளார். 2018 ஆம் ஆண்டு தென்னாபிரிக்க ஜொஹன்னஸ்பேர்க்கிலும் இங்கிலாந்து நொர்டிங்ஹாமிலும், அவுஸ்திரேலிய அடிலெய்ட் மற்றும் மெல்போர்ன் மைதானங்களில் தொடர்ச்சியாக வெற்றி பெற்று வெளிநாட்டு மண்ணில் ஒரே ஆண்டில் 4 வெற்றிகளைத் தேடித்தந்த முதல் இந்திய அணி தலைவர் இவர் ஆவார்.

### கோஹ்லியின் சாதனைகள்:

அதிக டெஸ்ட் வெற்றிகளைக் கண்ட இந்திய அணித் தலைவர்களில் விராட் கோஹ்லி 68 டெஸ்ட் போட்டிகளில் 40 வெற்றிகள், 17 தோல்விகளைப்பெற்று முதலிடத்திலுளள்ளார். தோனி 60 டெஸ்ட் போட்டிகளில் 27 வெற்றி 18 தோல்விகளுடன் 2வது இடத்திலும், கங்குலி 49 டெஸ்ட் போட்டிகளில் 21 வெற்றிகள், 13 தோல்விகளுடன் மூன்றாவது இடத்திலுமுள்ளனர்.

வெளிநாட்டு மைதானங்களில் அதிக வெற்றிகளைப் பெற்ற தலைவர்களுள் கோஹ்லி 36 போட்டிகளில் 16 வெற்றிகள் 15 தோல்விகளுடன் முதலிடத்திலும், கங்குலி 28 டெஸ்ட் போட்டிகளில் 11 வெற்றிகள், 10 தோல்விகளுடன் இரண்டாவது இடத்திலும், தோனி 30 டெஸ்ட் போட்டிகளில் 6 வெற்றிகள், 15 தோல்விகளுடன் மூன்றாவது இடத்திலுள்ளனர்.

சேனா நாடுகள் என அழைக்கப்படும் தென்னாபிரிக்கா, இங்கிலாந்து, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா நாடுகளல் அதிக டெஸ்ட் போட்டிகளில் வென்ற இந்தியத் தலைவர்களில் கோஹ்லி 23 போட்டிகளில் 8 வெற்றிகள், 14 தோல்விகளுடன் முதலிடத்திலும், தோனி 23 டெஸ்ட் போட்டிகளில் 3 வெற்றிகள் 14 தோல்விகளுடன் 2வது இடத்திலும், ராகுல் டிராவிட் 6 டெஸ்ட்கள் 2 வெற்றிகள் 2 தோல்விகளுடன் 3வது இடத்திலுமுள்ளனர்.

உள்ளூரில் 32 போட்டிகளில் 24 வெற்றிகளையும் வெளிநாட்டு மைதானங்களில் 36 போட்டிகளில் 16 வெற்றிகளையும் பெற்றுள்ள கோஹ்லி நியூசிலாந்து மண்ணில் ஒரு டெஸ்ட் வெற்றியையும் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

எம்.எஸ்.எம்.ஹில்மி...



# ஓய்வு முடிவை அறிவித்தார் சானியா மிர்சா



தற்போது நடைபெற்று வரும் அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் போட்டியில், மகளிர் இரட்டையர் பிரிவில் முதல் சுற்றுடன் வெளியேறினார்.

இந்தியாவின் நட்சத்திர டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா, சர்வதேச தொழில்முறை டென்னிஸ் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார். 2022 டென்னிஸ் பருவத்தின் முடிவில் அவர் டென்னிஸ் வாழ்க்கையில் இருந்து விடைபெற உள்ளதாக கூறியிருக்கிறார்.

டென்னிஸ் விளையாட்டின் முன்னணி வீராங்கனையாக வலம் வந்த சானியா மிர்சா, தற்போது நடைபெற்று வரும் அவுஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் போட்டியில், மகளிர் இரட்டையர் பிரிவில் முதல் சுற்றுடன் வெளியேறினார். முதல் சுற்றில் தோல்வியடைந்த பிறகு தனது ஓய்வு திட்டம் பற்றி அறிவித்தார்.

அவர் கூறுகையில், “நான் ஓய்வு பெறுவதற்கு சில காரணங்கள் உள்ளன. இனி நான் விளையாடப் போவதில்லை என்பது போல் இது எளிமையானது அல்ல. நான் காயமடைந்தால் குணமடைந்து உடற்தகுதி பெற அதிக காலம் ஆகிறது. மேலும், எனது 3 வயது மகனுடன் அதிக நேரம் பயணம் செய்வதன் மூலம் அவனுக்கும் உடல்நலக்குறைவு ஏற்படுகிறது. அதையும் நான் கணக்கில் எடுத்துக் கொள்ளவேண்டும். என் உடல் சோர்வாக இருக்கிறது. இன்று என் முழங்காலில் அதிக வலி இருக்கிறது. இன்று நாங்கள் தோற்றதற்கு அதுதான் காரணம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் வயதாகிவிட்டதால் குணமடைய அதிக காலம் ஆகிறது என நினைக்கிறேன்” என்றார்.

நடப்பு அவுஸ்திரேலிய பகிரங்கத்தில் சானியா மிர்சா, அமெரிக்காவின் ராஜீவ் ராமுடன் இணைந்து கலப்பு இரட்டையர் பிரிவில் விளையாடுகிறார். முதல் சுற்று நாளை நடக்கிறது.

சானியா மிர்சா இதுவரை 6 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். அவர் மகளிர் இரட்டையர் தரவரிசையின் உச்சநிலையை எட்டியுள்ளார். ஒற்றையர் தரவரிசையில் முதல் 30 இடங்களுக்குள் நுழைந்த முதல் இந்தியர் என்ற பெருமையை பெற்றவர். சானியாவின் ஓய்வு அறிவிப்பு இரசிகர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.





பாகிஸ்தான் மண்ணில்

# 7 தங்கம், 5 வெள்ளி பதக்கங்களை வென்ற இலங்கை அணி



பாகிஸ்தான் மற்றும் இலங்கைக்கு இடையில் நடைபெற்ற 2வது சவேட் குத்துச்சண்டை சம்பியன்ஷிப்பில் பங்கேற்ற இலங்கை அணி 7 தங்கம் மற்றும் 5 வெள்ளிப்பதக்கங்களை வெற்றி கொண்டு சம்பியனாக மகுடம் சூடியது.

பாகிஸ்தானின் தலைநகரான லாஹூரில் சவேட் கிங்பொக்ஸிங் தொடர் கடந்த 13ம் திகதி ஆரம்பித்து நடைபெற்றுவந்தது. இதில், இலங்கை சார்பில் போட்டியிட்ட 7 வீர, வீராங்கனைகள் தங்கப்பதக்கங்களை வென்றுள்ளனர்.

இதில் முல்லைத்தீவு யுவதி கணேஸ் இந்துகாதேவி பெண்களுக்கான 25 வயதுக்குட்ப்பட்ட 48-52 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்டு தங்கப்பதக்கத்தை வென்றார். இவருடன், கண்டி – ஹுலுகங்கை பகுதியைச் சேர்ந்த ஏ.எம். சாதீர் 25 வயதுக்குட்பட்ட 70-75 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்டு தங்கப்பதக்கத்தை வென்றார்.

இவர்களுடன் 30 வயதின் கீழ் 55-60 கிலோகிராம் எடைப் பிரிவில் போட்டியிட்ட நாவலப்பிட்டியைச் சேர்ந்த அக்மல் அஹமட், 10 வயதுக்குட்பட்ட 20-24 கிலோகிராம் எடைப் பிரிவில் போட்டியிட்ட கம்பளையைச் சேர்ந்த எம்.எம்.எம். மொஹவ்வியா, 30 வயதின் கீழ் 60-65 கிலோகிராம் எடைப் பிரிவில் போட்டியிட்ட ரஸ்வி பசேலா, 25 வயதுக்குட்பட்ட 56-60 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்ட எம்.எம். எம்.மிர்ஷாட் மற்றும் பிரசாத் விக்ரமசிங்க ஆகியோர் தங்கப் பதக்கங்களை வென்றனர்.

இவர்களுக்கு அடுத்தப்படியாக 5 வெள்ளிப்பதக்கங்களையும் இலங்கை அணியினர் வென்றிருந்தனர். இதில், ஆண்களுக்கான 30 வயதின் கீழ் 70-75 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்ட உலப்பனை பகுதியைச்சேர்ந்த ஹகீம் லாபீர், 20 வயதின் கீழ் 70-75 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்ட நாவலப்பிட்டியைச்சேர்ந்த சுஹைல் அக்தார், 30 வயதின் கீழ் 70-75 எடைப்பிரிவில் போட்டியிட்ட நாவலப்பிட்டியைச் சேர்ந்த எம்.என்.எம். மன்ஷில், 18 வயதின் கீழ் 48-52 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்ட கண்டி – பொல்கொலையைச் சேர்ந்த கயான் பண்டார மற்றும் பெண்களுக்கான 20 வயதுக்குட்பட்ட 40-44 கிலோகிராம் எடைப்பிரிவில் போட்டியிட்ட கம்பளையைச் சேர்ந்த எஸ்.எச்.பஹ்மா ஆகியோர் வெள்ளிப்பதக்கத்தை வென்றுள்ளனர்.

மேற்குறித்த வீர, வீராங்கனைகள் பதக்கங்களை வென்றுள்ள நிலையில், இவர்களுடன் தேசிய பயிற்றுவிப்பாளர் பிரசாத் விக்ரமசிங்க பயணித்திருந்தார். இவர் மாத்திரமின்றி, கண்டி மாவட்ட பயிற்றுவிப்பாளர் டி.எம். நவ்ஷாட், நாவலப்பிட்டி பயிற்றுவிப்பாளர் எச்.எச்.ஹுசைன் மற்றும் நிஷித டயஸ் ஆகியோரும் மேற்குறித்த வீரர்களுக்கு பயிற்சிகளை வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




### பதக்கம் வென்ற வீர, வீராங்கனைகள்

கணேஸ் இந்துகாதேவி
(U25, 4852KG, Combat) – தங்கம்
ஏ.எம். சாதீர் (U25, 7075 KG, Assault) – தங்கம்
அக்மல் அஹமட் (U30, 5560 KG, Assault) – தங்கம்
எம்.எம்.எம்.மொவ்வியா
(U10, 2024 KG, Assault) – தங்கம்
ரஸ்வி பசேலா – (U30, 6065 KG, Assault) – தங்கம்
எம்.எம்.எம்.மிர்ஷாட்
– (U25, 5660 KG, Assault) – தங்கம்
பிரசாத் விக்ரமசிங்க – தங்கம்
ஹகீம் லாபீர் – (U30, 7075 KG, Assault) – வெள்ளி
சுஹைல் அக்தார் (U20, 7075 KG, Assault) – வெள்ளி
எம்.என்.எம். மன்ஷில்
– (U30, 7075KG, Combat) – தங்கம்
கயான் பண்டார – (U18, 4852KG, Combat) – வெள்ளி
எஸ்.எச்.பஹ்மா – (U20, 4044KG, Combat) – வெள்ளி

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# மஞ்சரி களஞ்சியம்

தினகரன் வாரமஞ்சரி

## வாழ்வாதாரமா சேதாரமா 207



தமிழ்க் கவி பேசுகின்றார்

# கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான்

'எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' எமது வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய முக்கியமான நெறிகளுள் ஒன்றாக இந்த குறள் அமைந்துவிட்டது. ககனமும் வானும் நிலமும் காணாத அதிசயங்களையெல்லாம் இப்போது காண்பிக்கும் வல்லமையை இணையத் தளங்கள் கொண்டுள்ளன.

குறிப்பாக நாம் இன்றைக்கு யுரியூப் பார்க்கப் போகிறோம். எனக்கு எது தேவை என்பதை அது முன்னரே அறிந்து வைத்துக் கொண்டிருக்கிறது என்பது வியப்பாக இருந்தாலும் அது அச்சுறுத்தும் ஒரு விடயமே. நான் முகநூலை திறக்கு முன்பே எனக்கு வந்திருக்கும் அறிவித்தல்களை எனக்கே தெரியாமல் படித்து அவற்றை எனக்கு அறிவிக்கிறது முகநூல் இதில் எனக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக ஒரு விலாசமடிப் பதையும் அது தவறவிடவில்லை.

ராசிபலன் பகுதியை திறந்தால் எனது ராசிக்கான பலன்களையே பலரும் கூறிக் கொண்டிருக்கிறார்கள். ஏன் மற்ற இராசிக்காரர்களை இவர்கள் தவற விட்டார்களா என்றால் அது அவரவர் தளங்களில் வருமாம்.

போகட்டும். யூரியூப் தளம் அதனை நடத்துபவர்களுக்கு ஒரு கட்டத்தில் பணத்தை அள்ளி வழங்குவதாக சொல்கிறார்கள். இதற்காக போட்டி போட்டுக்கொண்டு தாம் கழிப்பறைக்கு போவதைத் தவிர மற்ற காட்சிகளையெல்லாம் பகிர்ந்து கொண்டிருப்பவர்கள் ஏராளம். இந்த சிறுகுறும் படங்களின் தலைவர்கள் தமது அலைவரிசைக்கென பெயர்களையும் வைத்திருக்கிறார்கள். தம்மிடம் திறமை இல்லாத போதும் திறமை உள்ளவர்களை தேடிப்பிடித்து அவர்களது திறமைகளை விற்றுக் காசாக்குபவர்களும் அதிகம்.

தமது முகமும் போனில் காட்சியாகிறது என்பதற்காக சிலர் இதைப்பற்றி அலட்டிக் கொள்வதில்லை. சமையலே தெரியாத பெண்கள் போனைப் பார்த்து சமைக்கிறார்கள்தாம். அரிசிமா திரிப்பதெப்படி என்பதாக ஒரு யூரியுப்பில் விளக்கம். ஒரு பெண் அரிசியை எடுத்து இதுதான் பச்சை அரிசி எனவும் அது எவ்வாறு உருவானது என்பதையும் அந்த அரிசியை அளைந்தவாறே விளக்கிக் கொண்டிருக்கிறார் பின்னர் அதை எப்படி கழுவ வேண்டும். என்பதை இரண்டு நிமிடங்களாக கழுவிக் காட்டியபின் அதில் எப்படி நீர் ஊற்றி ஊறவைக்க வேண்டும் என்பதையும் அதற்கான கால அவகாசத்தையும் சொல்கிறார், பின்னர் அந்த நீரை வார வைத்து அதை மிக்சியில் போட்டு முதலாம் தடவை இரண்டாம் தடவை மூன்றாம் தடவை என அரைத்து சலித்து மாவை மட்டுமல்ல பார்ப்பவர்களையும் சலித்து மாவாக்கி விடுகிறார். அதன் பின்னர்தான் அவர் இன்னுமொரு விளக்கத்தை சொல்கிறார். அதாவது இதை இப்படியே உலர்ந்த அரிசியாக வைத்தும் அரைக்கலாம்.

யூரியூப் சம்பாத்தியம் அவர்களை இந்த நிலைக்கு கொண்டு வந்திருக்கிறது.. விவசாய முயற்சிகள் கால்நடைகள் போன்றவற்றை பெருமளவில் மேற்கொள்வோர் தம்மளவில் யூரியூப் தளத்தை வைத்துக் கொள்கிறார்கள். தனது விவசாய முயற்சிகளையும் அதில் ஏற்பட்டு வரும் கஸ்ட நஸ்டங்களையும் விளக்குகிறார்கள். ஆனால் கவனம் யாரும் உண்மையை பேசுவதில்லை காரணம் தொழில் போட்டி எப்படியாவது மற்றவர்களுக்கு சேதம் ஏற்படும் போதே நாம் லாபம் பார்க்கலாம் என்பது முக்கியம். உதாரணமாக இயற்கை வேளாண் முறைகளை பார்ப்போம். இப்போது நாட்டுக் கோழிகளின் காலம். அவற்றை குறைந்த செலவில் வளர்க்க முடியும். அறியப்படவில்லை. இனி நாம் பயன்படுத்தும் தொழு உரம் உரமாகவே மக்கியபின்னர் பயன்படுத்தி வந்தோம். இப்போது அந்த தொழு உரத்தை மண்புழுக்களை விட்டு உண்ண வைத்து கழிவாக்கி தேயிலைத் தூள் போல உலர்த்தி எடுக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கான தொட்டிகள் விவசாயத் திணை க்களத்தினரால் கொடுக்கப்படவும் அதற்கான பயிற்சிகளை வழங்கவுமான வேலைகள் நடக்கிறது. மறுபடியும் நாம் சொந்தக்காசில் சூனியம் வைத்துக் கொள்ளப்போகிறோமோ என்று தெரிகிறது. நவீன முறைகளை அறிமுகப்படுத்தும் ஒவ்வொரு முறையும் எம்மிடமுள்ள பாரம்பரியப் பொருட்கள் அழிவடைந்து போகின்றன. .

துபாய் பூசனிக்காய் வந்தது. நம்மிடமிடமிருந்த அருமையான சக்கரைப் பூசனிக்காய் அழிந்து போனது. சீமை விலங்கினங்கள் எமது நாட்டு விலங்கினங்களை மோசமாக புறந்தள்ளியது. இப்ப இறந்த மண்புழு எமது புழுக்களை அழித்தால்... அந்தக்கேள்விக்கு அவர்களே பதில் சொல்கிறார்கள். அந்தப் புழுவுக்கு மூன்றடிக்குக் கீழே போகத் தெரியாதாம். அதனால் அது தொட்டிக்குள்ளேயே நிற்குமாம். இது வேடிக்கையாக இல்லை. இந்த ஆப்பிரிக்க மண்புழு இடுகின்ற முட்டைகள் எருவுடன் நிலத்துக்குப் போகிறது. ஒரு முட்டையில் தலா இரண்டு குஞ்சுகள் வருமாம். அது தொட்டிக்கு வெளியேதானே.

எந்த அலுவலகத்தாலும் அல்ல யூரியூப்பினால் மட்டுமே இவை பரப்பப்பட்டு வருகின்றன. கேள்விச் செவியன் ஊரைக் கெடுத்தான் என்றொரு பழமொழி இருக்கிறது. இந்த நவீன தொழில ரகசியங்களெல்லாம் அரைகுறையாக



அவற்றுக்கான தீவனங்களை நாமே உற்பத்தி செய்ய முடியும் ஆனால் நாம் அவற்றை உற்பத்தி செய்வதற்கான இடவசதியை கொண்டிருப்பதும் அவசியமாகிறது. அவற்றை வீட்டிலேயே மொட்டை மாடியில் அல்லது தொட்டிகளில் செய்து கொள்ளக்கூடிய முறைகள் வெகுவாக பரவி வருகின்றன.. அதில் குறிப்பாக, அசோலா எனப்படும் பாசி.

இது கறவை மாடுகளுக்கும் கோழி ஆடுகளுக்கும் தீவனமாவதுடன் நெல் வயல்களுக்கும் பயன்படுத்த முடியும் என்பதை யூரியூப் வழியாகவே அறிகிறோம். என்றாலும் எமது ஊரில் அதன் விதை கிடைப்பது மிக கஸ்டமாக உள்ளதுடன் அதை எப்படி வளர்க்கலாம் என்ற அறிவும் கிடையாது. சும்மாவல்ல பெரும் பண்ணையாளர் ஓருவர் கைவேலியில் இதை நிறையவே செய்துள்ளார் என்பதை யூரியூப்பில் பார்த்தோம். அதேபோல மகாதேவ ஆசிரமம் என்ற பெரியளவிலான ஒரு நிறுவனத்திலும் இது இருப்பதை அறிகிறோம். யாழ்ப்பாணத்தில் நாட்டுக்கோழி வளர்க்கும் எனது நண்பர் ஒருவர் தமது கிராமத்தில் பரவலாக இதை பயிரிட்டு பயன் பெறுவதாகவும் சொன்னார். ஆனால் கிளிநொச்சி வவுனியா மன்னார் போன்ற இடங்களில் அது பரவலாக அவர்களே விதம் விதமாக கதைத்துக் கொண்டிருக்கிறார்கள். நாம் வாயைப்பிளந்து பார்த்துக் கொண்டிருந்துவிட்டு அதை நாமாக செய்ய முயன்று பெரும் தோல்வியை சந்திக்கிறோம். கிருமி நாசினிகளாக இவர்கள் சொல்லும் மூலிகைகள் எதும் வேலை செய்யாது. மனித உடலுக்கே மருந்து சொல்கிறார்கள். பெரிய வைத்தியர்களையும் மிஞ்சியதாக அவர்களது தகவல்கள் அமைகின்றன. இந்த மெய்ப்பொருள் அதிர்ஸ்டவசமாக சித்திப்பதும் உண்டு.

அண்மையில் ஒரு அம்மா வீட்டுக்கு வந்தார். தனக்கு உடலில் பாடாய்ப்படுத்தும் ஒரு வலியைச் சொல்லி உங்கட போனில ஒருக்கா பாத்துச் சொல்லுங்கவன். ஏதேன் நல்ல மருந்து கிடந்தா..' என்றார். பாருங்கள் இந்த செல்பேசிகள் இப்போது சகல கலாவல்லவர்களாக உலா வருகிறார்கள் பின்னே. கலண்டர் இருக்கிறது. கடிகாரம் இருக்கிறது. கமரா இருக்கிறது. தொலைநகல் தொலைக்காட்சி தொலைபேச்சு பேனா ஞாபகக்குறிப்பு கல்குலேட்டர் போக்குவரத்தில் பாதைகாட்டி காலநிலை மாற்றம் விளையாட்டு சினிமா பாட்டு சீட்டு என்ன இல்லை. ஒரு கைபேசி கையிலிருந்தால் உலகமே கையில் இருப்பதாக அர்த்தம்.

## சிறப்பாக நடைபெற்ற வலம்புரி 76ஆவது வகவ கவியரங்கம்

வலம்புரி கவிதா வட்டத்தின் (வகவம்) 76ஆவது கவியரங்கம் பௌர்ணமியன்று கொழும்பு பழைய நகர மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. கவியரங்கினை பத்திரிகையாளரும் கவிஞருமான கே. ஈஸ் வரலிங்கம் தலைமையேற்று சுவையாக நடாத்தினார். வகவ செயலாளர் இளநெஞ்சன் முர்ஷிதீன் நிகழ்வினை நெறிப்படுத்தி தலைமையுரையும், வரவேற்புரையும் நிகழ்த்தினார். வகவ ஸ்தாபக குழு உறுப்பினர் சத்திய எழுத்தாளர் எஸ். ஐ. நாகூர்கனி முன்னிலை வகித்தார். பொருளாளர் ஈழகணேஷ் நன்றியுரை வழங்கினார். எம்மை விட்டு அண்மையில் மறைந்த முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் அரசரட்னம், மூத்த இலக்கியவாதி பன்னீர்செல்வம், கவிஞர் சிதம்பரப்பிள்ளை சிவகுமார், வகவ தேசிய அமைப்பாளர் எஸ். தனபாலனின் தங்கையின் கணவர் ஆர். எஸ். நடராஜா, கவிஞர் போருதொட்ட ரிஸ்மியின் தாயார் ஆகியோருக்கு மௌனப் பிரார்த்தனை இடம்பெற்றது. கே. ஈஸ் வரலிங்கம் தலைமை தாங்கி நடாத்திய கவியரங்கில் கவிஞர்கள் ஈழத்து நூன் எம். ஏ. எம். நிலாம், கலா விஸ்வநாதன், எம். எஸ். தாஜ்மஹான், எம். பிரேம்ராஜ், வாழைத்தோட்டம் எம். வஸீர், ஏ. கே. இளங்கோ, உணர்ச்சிப் பூக்கள் ஆதில், கம்பளை ரா. சேகர் மலாய் கவி டிவாங்ஸோ, கவிக்கமல் ரஸீம், கம்மல்துறை இக்பால் எம்.எச். எம். நௌஸர், போருதொட்ட ரிஸ்மி, எஹலியகொட முஸ்னி முர்ஷித், ஏ.எம்.எம். அனஸ், ஆகியோர் கவிதை பாடினர். எஸ். சரவணா, எம். நஸார், ஜொயேல் ஜோன்சன், ரி. என். இஸ்ரா. வை. சுசீலா போன்றோர் சபையை அலங்கரித்தனர். உணர்வு பூர்வமான கவிதைகளால் அமைந்த கவியரங்கு மனநிறைவைத் தந்தது.




(படங்கள்: முஹம்மத் நஸார்)



## நினைவின் தாழ்வாரங்கள்

– நபீல்

# உம்மாவின் கைமருந்து

ஆறு மாதக் குழந்தை போன்று சட்டையெல்லாம் அணிந்து, தொப்பி வைத்த மொட்டைத் தலைப் பொம்மையொன்று எப்போதும் என் கையில் தங்கியிருக்கும் பள்ளி விட்டு வீட்டுக்கு வந்தவுடனேயே திண்ணையில் ஊஞ்சல்போல் தொங்கும் தொட்டிலில் பொம்மையை வளர்த்தி வைப்பேன்.

ஊஞ்சலின்மேல் சிறுசிறு மணிகள் நிறைந்த நட்சத்திரப் பட்டமொன்றைக் கட்டி ஆட்டி விடுவேன். எந்தவிதக் குறுக்கீடுகளுமற்ற ரம்மியமான சூழலில் மணிகள் மாத்திரம் ஒன்றையொன்று தழுவிக்கொள்ளும் சத்தம் மனதை நிரப்பின...



சில நாட்களில் உடை மாற்றிப் படுக்கவைப்பேன் அப்போது எனக்கும் பொம்மைக்குமிடையே ஒரு தம்பி வந்துவிட்டான். பின்னர் எல்லாமே மாறிப்போய் விட்டது. இருள் கவியும் காலத்தில் லேசாகப் பெய்து கொண்டிருந்த மழையில் இருவரும் நனைந்து கொண்டே கடை வீதிக்குச் செல்வோம்.

பாதைகள் மழைநீர் சுமந்து தேங்கி நிற்கும் வெள்ளத்தில் கால்கள் நனைப்போம். அன்றிலிருந்து மூன்றாம் நாளில் கால் விரல் இடுக்குகளில் சேற்றுப் புழு கடித்துப் பொக்குளங்கள் போட்டு விரல்கள் சொறிச்சலால் வீக்கம் கண்டிருக்கும். உம்மா விளக்கெண்ணெய் தடவி அடுப்பில் சூடு பிடிப்பார். கடி இருந்த இடம் தெரியாமல் மறையும்.

இரண்டு பக்கமும் தள்ளித் தள்ளி ஓடு போட்ட வீடுகள். இடையிடையே கிடுகு வேய்ந்த உயர்ந்த இல்லங்கள். அதிலொன்று எங்களுடையது. கிழக்கு முகட்டில் கிணற்றுக்கு வலது பக்கம் குளியலறையும் இடது பக்கம் கழிப்பறையும் பின்பக்கம் நெடிதுயர்ந்த நொக்ஸ் மரமும் அமைந்ததால் பெரும்பாலும் சூரியன் நட்டுக்க நிற்கையில் மட்டுமே வெயில் பாளம் கிடைக்கும். "இந்த வெயில் சீராகப் படாததால்தான் உனக்குக் கூகக்கட்டு வந்திருக்கிறது.." என்று உம்மாவை நோக்கி மூத்தப்பா வியாக்கியானம் பேசுவார். பூமித்தம் இலை வேண்டுமென்பார். நான் ஆய்ந்து கொண்டு கொடுப்பேன். அதனை அம்மிக் கல்லில் வைத்துக் கூடவே சந்தனக் குழம்பும் சேர்த்து அரைத்தெடுத்து வீங்கிய பகுதியெங்கும் பூசுவார். பின்னேரமாகும்போது வீக்கம் அமர ஆரம்பிக்கும்...

தரையில் உட்கார்ந்திருந்து சம்மணம் போட்டு அல்லது குத்துக்கால் வைத்து இருந்தபடியே சமைத்தார்கள். "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா" என்ற பழ மொழியைப் பெண்களுக்கே உரித்தாய் ஆக்கியிருந்தது அடுப்பு. சமையல் கட்டில் மறதியாய் திறந்து கிடந்த கதவு வழியாக நுழையும் தெரு நாய் சட்டி பானைகளை இழுத்துச் சென்ற சம்பவங்களும் நடந்தன் சோத்துப் பானையை அடுப்பிலிருந்து இறக்கும் தருவாயில் வழுகிப் பானை அடுப்புக்குள் பாய்ந்தால் நெருப்புச் சிலாகித்துக் கைகளில் எகிறி விடும்.

சுதந்திரமாய்ச் சிறகடித்துப் பறந்த கைகளைப் பார்க்கப் பரிதாபம் வரும். எந்நேரமும் சொதசொதவென்று வேர்த்து ஊற்றிக் கொண்டிருக்கும் நீர்ப்பூசணிக் காயை உடைத்து அதற்கு மேல் கையை வைத்துக் கட்டி விட்டால் குளிர்ந்து, அழத்துதல் மாறி, எரிதல் அடங்கிப் போகும்...

கறுப்புக் கட்டம் போட்ட வெள்ளைச் சட்டை அணிந்து வறாந்தாவில் கிடக்கும் ஸ்ட்டூல் மீது அமர்ந்திருந்தேன். வாசலில் உம்மா அழுகை தெறிக்கப் பேசிக் கொண்டிருப்பது காதில் விழுந்தது. மிச்சமிருந்த கதையை இடையில் நிறுத்தி விட்டு, "மாமா விழுந்திட்டாராம்.." நானும் உம்மாவும் அவர் வீட்டை நோக்கி நடந்தோம். அறுத்த வாழையாய் அப்படியே தரையில் சரிந்து கிடந்தார். முழுக்கைச் சட்டையெங்கும் நிறையப் புழுதி படிந்திருந்தது. வரும் வழியிலேயே இணுங்கிக் கொண்டுவந்த, நொச்சி இலைகளைத் தண்டுடன் நெருப்பில் வாட்டி எடுத்தார். மரிக்கொழுந்துத் துளிரும் வெற்றிலையும் பறித்தார். இம் மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து அடிபட்ட இடுப்புப் பகுதியில் அணைத்து வரிந்தார். இரண்டு தினங்களில் மாமா எழுந்து நடக்கத் தொடங்கினார்...

"இந்த வன்னியனார் றோட்டாலே அரைக் கட்டை உள்ளுக்க இறங்குந் கேர் வலது பக்கம் ஒரு மலை வேம்பு நிற்கும். அதுக்குப் பக்கம் நீலக்கலர் கேற்றுப் போட்ட வீட்டில்தான் பூனை மீசை நிற்குது" இப்படி மூலிகைகளைத் தேடிச் செல்பவர்கள் எங்கள் கிராமங்கள் தோறும் இருந்தார்கள். நாட்டு வைத்தியதில் பிரசித்தி பெற்ற தம்பிக் கண்டுப் பரிகாரி மதிய உணவை முடித்துக் கொண்டு ஒரு குட்டித் தூக்கம் போடுவார். மாலை நான்கு மணிக்கெல்லாம் அவரிடம் பொது மக்கள் தேடி வர ஆரம்பிப்பார்கள்...

நெறி, பால்கட்டு, நரை மயிர், ஈறு, மலச் சிக்கல், எலும்பு நோ, மூட்டு வலி, படைத் தேமல், சிலந்தி தேள் கடி, வாதம், பித்தம், பேதி, வ்யிற்றுக் கடுப்பு, மூலம், அரையாப்பு, பாலுண்ணி, நகச் சுத்து, கல்லடைப்பு, தலைப்பொடுகு, படர்தாமரை, செருப்புக்கடி, காதுக்குத்து, ஆனைக்கால், முடியுதிர்வு, என்று வருபவர்கள் குறைந்தளவு ஒரு மாத்திரையாவது பெற்றுச் செல்வர். காணிக்கையாக ஐந்துமுதல் பத்து ஷரூபாய்வரை பெற்றுக் கொள்வார். மருந்து தீர்ந்து, நோய் தீராதவர்கள் மீண்டும் தம்பிக் கண்டைத் தேடி வந்து மீதித் தவணைக்கு மருந்து வாங்குவர்...

இவருக்குச் சோதிடச் சாஸ்திரமும் பார்க்கத் தெரியும் என்பார்கள். திருமணப் பொருத்தங்கள், குழந்தைப்பேறு, தொழில் பலன், பரீட்சைச் சித்தி, பெயர் நட்சத்திரம், சுப தினங்கள், மனிதர்கள் மாடுகள் காணாமல் போனால் திரும்புதல், களவு கொடுத்தவர்கள் மை வெளிச்சம், சூனியம் வைப்பவர்களும் இரகசியமாகத் தேடி வருவதும் வழமையில் இருக்கும். ஆறரை ஏழு மணியாகி விளக்கு வைக்கும் வேளை வரும்வரை தொழில் நடக்கும்...

ஐந்து, ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் வயல் வெளிகள் சூழ நடுவே குளம். அருகிலேயே "கரவட்டப் பிட்டி" அப் பிரதேசம் மிக அழகாக இருந்ததாம். ஓரிரு கை வைத்தியர்கள் கூட அங்கு குடிசை அமைத்து வாழ்ந்திருக்கிறார்கள். இந்த மூலக் கதையின் பல நூறு கிளைக்கதைகள் பல்வேறு பரிமாணங்களோடு அப்பச்சி சொல்ல வீட்டில் எல்லோரும் முன் விறாந்தைத் தூணுடன் ஒட்டிப் போய்ச் செவி மடுத்துக் கொண்டிருப்போம்...

ஆற்றில் தண்ணீர் வரவில்லையென்றாலும் நிறைய மாற்றங்கள். அங்கங்கே மணல் தோண்டியிருந்ததில் அம்மைத் தழும்புகள் நிறைந்ததுபோல், கும்பி தெரிந்தன் உடைந்து பாதியான கல் ஓரங்களில் புற்கள் முளைத்து மறைந்திருந்தன் நீளநீளமான கோரைகளின் மீது, சரிந்து இறங்கினேன். அப்பச்சி கூடவே வந்தார். நண்பர்களோடு வந்து தூண்டில் போட்டு விளையாடிய இடங்கள் இப்போது குழிகளாய் தெரிந்தன...

வயலை அண்மிக்கத் தூரம் அதிகமில்லை. திறந்திருந்த இமைகளுக்குள் விழிகள் உருள்வதை உணர்ந்தேன். மனம் தாளாது வலதுகை உயர்த்தி அப்பச்சியை அருகில் அழைத்தேன். காலில் முள் ஏறி முறிந்த அடையாளமாய் கெட்டித்துப் போய் இரத்தம் கசிந்தது. விரல்களால் வருடிக் குவித்து நகம் பதித்துச் சுண்டி இழுத்தார்.

வாயில் கிழிந்து ஈட்டிபோல் முள் சடக்கென்று வந்தது. ஓடிப் போய் அருகிலிருந்த பச்சிலை ஒன்றைப் பறித்து வாயில் இட்டுக் கொதுப்பி அந்தக் காயத்தின் மேல் உமிழ்ந்தார். விசம் இறங்கியபோது அப்பச்சியின் மெல்லிய குரல் காதில் விழுந்தது. "வலிக்குதா மன?".

# விக்டோரியாவில் விடுமுறை இல்லங்களை நிர்மாணிக்கும் ஜோன்கீல்ஸ் புரொப்பர்டீஸ்

திகன, Victoria Golf and Country Resort பகுதியை அண்மித்து 16 விடுமுறை இல்லங்களை நிர்மாணிக்கும் பணிகளை ஆரம்பித்துள்ளதாக ஜோன்கீல்ஸ் புரொப்பர்டீஸ் அறிவித்துள்ளது. 'Sunrise Ridge' என பெயரிடப்பட்டுள்ள இத்தொகுதியை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

அடிக்கல் நாட்டுவதற்கு முன்னதாக மொத்த மனைகளின் 60 சதவீதமானவை விற்பனையாகியிருந்தமை விசேட அம்சமாகும். கொல்∴வ் திடலை முகப்பாகக் கொண்டும், விக்டோரியா நீர்த்தேக்கம் மற்றும் கண்டி மலைக்குன்றுகள் போன்றவற்றை காட்சிகளாக கொண்டும் அமைக்கப்படும் Sunrise Ridge, புகழ்பெற்ற கட்டடக் கலைஞரான மதுர பிரேமதிலகவினால் வடிவமைக்கப்பட்டுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட மற்றும் பிரத்தியேகமான இந்த பதினாறு மனைகள் 2 படுக்கையறைகளைக் கொண்டதாக அமைந்திருக்கும் என்பதுடன் சுமார் 2000 சதுர அடியில் அமையப்பெறும். ஆரம்ப விலை ரூ. 55.5 மில்லியனாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த மனைகளின் உரிமையாளர்களுக்கு 6 வருடங்களுக்கு தமது சொத்துகளை நிர்வகிப்பதற்கான சலுகை வழங்கப்படும்.

ஜோன்கீல்ஸ் புரொப்பர்டீஸ் பிரிவு தலைமை அதிகாரியும், நிறைவேற்று உபதலைவருமான நயன மாவில்மட கருத்துத் தெரிவிக்கையில், 'பலர் தமது இரண்டாவது மனைகளை சிறந்த அமைவிடங்களில் கொண்டுள்ள போதிலும், அவற்றை பேணிப் பராமரிப்பது இலகுவான காரியமல்ல. வாடிக்கையாளர்களிடமிருந்து அந்த சுமையை இல்லாமல் செய்யும் தீர்வொன்றை வடிவமைக்க நாம் தீர்மானித்தோம். எனவே அவர்களுக்கு தமது சொந்த இருப்பிடத்திலிருந்தவாறு இனிய விடுமுறை அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். பிரத்தியேகமான சமூக கட்டமைப்பினுள் அமைந்த அழகிய இல்லங்களினூடாக, சிறந்த காட்சி அமைப்புகள், சிக்கலில்லாத பயண வசதிகள் போன்றவற்றுடன் அமைந்திருப்பதுடன், சுற்றுலா அபிவிருத்தியுடன் இலாமீட்டக்கூடிய வாய்ப்புகளும் வழங்கப்படும். இவற்றுடன் உலகத்தரம் வாய்ந்த கொல்∴வ் திடலும் அருகாமையில் அமைந்துள்ளது என்றார்.




# வருடாந்த விருதுவிழாவில் பெரெண்டினா நிறுவனத்துக்கு வெள்ளிவிருது

நுண் நிதி வாடிக்கையாளர்கள் மத்தியில் BMIC என அறியப்பட்ட பெரெண்டினா மைக்ரோ இன்வெஸ்ட்மென்ட்ஸ் நிறுவனம் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் (CA Sri Lanka) ஏற்பாடு செய்த 56ஆவது வருடாந்த அறிக்கைகள் விருது விழாவில் நிதி மற்றும் குத்தகை (மொத்த சொத்துக்கள் பெறுமதி ரூ 20 பில்லியன் வரையான) பிரிவில் வெள்ளி விருதை வென்றெடுத்துள்ளது. இம்முறை கூட்டு நிறுவனங்கள், பல் தேசிய கம்பெனிகள், இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மற்றும் சிறிய, மத்திய அளவிலான நிறுவனங்கள் அடங்கலாக 70 இற்கும் மேற்பட்ட நிறுவனங்கள் நிதி அறிக்கையிடலின் அதிதிறமையான வெளிப்படுத்தல்களுக்காக இப்போட்டியில் கலந்துகொண்டன. வருடத்தின் முக்கிய நிகழ்வான இந்த பரிசளிப்பு வைபவம் இம்முறை BMICH இல் கடந்த டிசம்பர் 09 ஆம் திகதி நடைபெற்றது. இலங்கை மத்திய வங்கியின் உரிமம் பெற்ற முதலாவது நுண் நிதி நிறுவனமான BMIC நிறுவனம் இதற்கு முன்னர் 2017ஆம் ஆண்டில் தங்கவிருதையும் 2018 ஆம் ஆண்டில் திறமைச் சான்றிதழ் விருதையும் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவகம் வழங்கிய இந்த விருது BMIC நிறுவனம் 2021ஆம் வருடத்தில் வென்றெடுத்த நான்காவது விருதாகும். ஐக்கிய இராச்சியத்தின் Global Banking and Finance Review சஞ்சிகையின், 2021 ஆம் ஆண்டிற்கான இலங்கையின் சிறந்த நுண் நிதி நிறுவனம் மற்றும் இலங்கையின் சிறந்த விவசாய நடவடிக்கைகளுக்கு கடன் அளிக்கும் நிறுவனம் எனும் இரு சர்வதேச விருதுகளையும், ஐக்கிய அமெரிக்காவின் SCALE Creative Green Adaptation Award நடாத்திய சர்வதேச போட்டியில் Donors Choice Award விருதையும் BMIC நிறுவனம் ஏற்கனவே வென்றெடுத்தமை முக்கிய அம்சமாகும்.

வறுமை ஒழிப்பை நோக்கமாகக் கொண்டு நுண் நிதி நிறுவனமாக தொழிற்படும் BMIC நிறுவனம், தமது வாடிக்கையாளர்களின் தொழில்முயற்சிகளின் நீண்டகால ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சிகருதி கடன் வசதிகளையும் வியாபார அபிவிருத்திச் சேவைகளையும் வழங்கி வருவதோடு, நாட்டின் ஏனைய நுண் நிதி நிறுவனங்களுடன் ஒப்பிடுகையில் குறைந்த வட்டிவீதத்தில் கடன்களை வழங்குகின்றது. தற்பொழுது வெளி நிற்கும் கடன் நிலுவையாக 3.1 பில்லியன் ரூபாய்களைக் கொண்டு, 11 மாவட்டங்களில் தனது 30 கிளைகள் ஊடாக 70,000 இற்கும் மேற்பட்ட நுண் நிதி வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்கும் BMIC நிறுவனத்தின் வருடாந்த புரள்வு ரூபா 900 மில்லியன்களுக்கும் அதிகமாகும்.



# Sana Commerce உடன் தந்திரோபாய கைகோர்ப்பை மேற்கொள்வதாக ISM APAC அறிவிப்பு

முன்னணி ந-வணிக தீர்வுகள் வழங்குநரான ISM APAC, நெதர்லாந்தைச் சேர்ந்த ந-வணிக நிறுவனமான Sana Commerce Global உடன் தந்திரோபாய கைகோர்ப்பை மேற்கொண்டு Sana Commerce Sri Lanka என மாற்றம் பெற்றுள்ளதாக அறிவித்துள்ளது. தொழிற்துறையில் ஏழாண்டுகள் சுயாதீனமாகவும், ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கு சேவைகளை வழங்கியிருந்ததுடன், அதன் தலைமையகத்தின் பிரதான அபிவிருத்தி நிலையமாகவும் அமைந்திருந்ததைத் தொடர்ந்து இந்த முக்கியத்துவம் வாய்ந்த நகர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

180க்கும் அதிகமான ஊழியர்களைக் கொண்டுள்ள இந்நிறுவனம், இந்த புதிய கைகோர்ப்பினூடாக பரந்தளவு பிராந்தியங்களுக்கு சேவைகளைப் பெற்றுக்கொடுக்கக்கூடிய வகையில் வியாபித்துள்ளதால், மேலும் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அத்துடன், ஒவ்வொரு ஊழியருக்கும் தற்போது சர்வதேச வெளிப்படுத்தலை பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்பதுடன், Sana Commerce இனால் முன்னெடுக்கப்படும் பரந்தளவு அறிவு, பயிலல் மற்றும் பயிற்சித்திட்டங்களில் பங்கேற்று, நிறைந்த, பரந்தளவு மற்றும் பரிபூரண அனுபவத்தைக் கொண்டிருக்கமுடியும்.

உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்கள் மற்றும் மொத்த விற்பனையாளர்களை வாடிக்கையாளர்களுடன் இணைப்பது, நிர்வகிப்பது மற்றும் நீண்டகாலம் நிலைத்திருக்கும் உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு உதவும் ந-வணிக கட்டமைப்பாக Sana Commerce அமைந்துள்ளது. வழமையான கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு அப்பால் உறவு சுழற்சியை மேம்படுத்துவதில் கவனம் செலுத்துகின்றது. Sana Commerce அண்மையில் பெற்றுக்கொண்ட கௌரவிப்புகளில், Forrester இனால் உறுதியான செயற்பாட்டாளர், E-Commerce ஜேர்மனி விருதுகள் 2021 இல் சிறந்த E-shop வெற்றியாளர் மற்றும் G2 இடமிருந்து மத்திய சந்தையில் முன்னோடி ஆகிய விருதுகளை வென்றிருந்தது.

Sana Commerce இன் பிரதம நிறைவேற்று அதிகாரியும் முகாமைத்துவ பங்காளருமான Michiel Schipperus கருத்துத் தெரிவிக்கையில், இலங்கையைச் சேர்ந்த எமது அபிவிருத்தி நிலையத்தில் திறமைவாய்ந்த நிபுணர்களைக் கொண்டுள்ளதுடன், எமது புத்தாக்கமான செயற்பாடுகளின் வெற்றிக்கு இவர்கள் முக்கிய பங்காற்றியிருந்தனர். இந்த கைகோர்ப்புடன், நாம் தொடர்ந்தும் வளர்ச்சியடைவோம் என்றார்.

Sana Commerce Sri Lanka முகாமைத்துவ பணிப்பாளர் பிரியந்த பெத்மகே கருத்துத் தெரிவிக்கையில், "Sana Commerce இன் பிரதான அபிவிருத்தி நிலையங்களில் ஒன்றாக நாம் இயங்க ஆரம்பித்திருந்தோம். ஆயினும் தற்போது இந்த கைகோர்ப்பினூடாக, உலகின் சகல பாகங்களையும் எம்மால் சென்றடையக்கூடியதாக இருக்கும். எம்மால் வழங்கக்கூடிய சேவைகளில் அபிவிருத்தி, தீர்வுகளை வழங்கல் மற்றும் பல அம்சங்கள் அடங்கியிருக்கும் என்றார்.




# நெதர்லாந்தின் FMOயிடமிருந்து நீண்டகால நிதி வசதிகளுக்காக 10 மில். டொலரை பெற்றுள்ள Alliance Finance

65 Since 1956
Alliance Finance Co. PLC
Making the world a better place through sustainable finance

அலையன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி, MSME வணிகத்தின் வளர்ந்துவரும் பிரிவுகளை விரிவுபடுத்துவதற்காக நீண்டகால அடிப்படையிலான 10 மில்லியன் டொலர் நிதியளிப்பு வசதியின் ஒரு பகுதியாக, டச்சு தொழில் முனைவோர் மேம்பாட்டு வங்கியான FMOயிடருந்து 5 மில்லியன் டொலரை இரண்டாவது கட்ட தொகையாக பெற்றுள்ளது.

2020 இலிருந்து 2021 இன் முற்பகுதியில் டச்சுதொழில் முனைவோர் மேம்பாட்டு வங்கியான FMO யிடருந்து 10 மில்லியன் அமெரிக்க டொலர் வசதியைப்பெற்ற AFC, இல் முதல் தவணையாக 5 மில்லியன் அமெரிக்க டொலர்களைப் பெற்றது. 6.3 பில்லியன் யூரோ பெறுமதியான பல்வேறு முதலீட்டு பிரிவுகளுடன், FMO ஆனது 85 நாடுகளில் முதலீடுகளைக் கொண்ட மிகப்பெரிய ஐரோப்பிய இருதரப்பு தனியார்துறை அபிவிருத்தி வங்கிகளில் ஒன்றாகும். பொருளாதாரத்தின் முதுகெலும்பாகக் கருதப்படும் நாட்டின் MSME துறைக்கும் இந்த நிதியுதவிகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சிக்கு காரணமாக அமைகின்றன.

AFC இன் பிரதித்தலைவரும் முகாமைத்துவப் பணிப்பாளருமான ரோமானி டி சில்வா இதுகுறித்து கருத்து வெளியிடுகையில், AFC இன் MSME மையப்படுத்தப்பட்ட வணிக மூலோபாயத்திற்கு இது முக்கியமான மைல்கல் என்பதுடன், எமது MSME திட்டங்களில் FMO இன்கூட்டாண்மை காரணமாக நாம் ஊக்கமும் உற்சாகமும் அடைந்துள்ளோம். நாட்டில் MSME துறையை மேம்படுத்துவது தொடர்பில் AFC-FMO கூட்டாண்மையானது, AFC இன் வளர்ந்துவரும் சர்வதேச நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துகிறது என்றார்.

கடந்தாண்டு AFC ஆனது, ஜேர்மனியின் சர்வதேச நிலைபேறுத்தன்மை தரநிலைகள் மதிப்புசார்ந்த நிதி நிறுவனங்கள் (International Council of Sustainability Standards for Value-Driven Financial Institutions -ICSSVDFI) அமைப்பின்கீழ் நிர்வகிக்கப்படும், வங்கி மற்றும் நிதித்துறையில் முழுமையான நிலைபேறான தன்மைக்காக, தெற்காசியாவில் முதலாவது சான்றளிக்கப்பட்ட நிதி நிறுவனமாக தெரிவானது.

இந்த வசதியானது, 5 ஆண்டுகளுக்கான நிலையான வட்டிவீதத்தை கொண்டுள்ளது. இதன்மூலம் AFC அதன் இருப்பு நிலைக்குறிப்பில் (balance sheet), சொத்து மற்றும் பொறுப்பை உரியவகையில் சமனிலையில் காண்பிக்கும் வகையில் நிர்வகிக்க உதவுகிறது. அத்தகைய உலகளாவிய உயர்ந்த நிதி வசதிகளை AFC உடனடியாகப் பெறுவது, நிலைபேறான நிதியுதவியில் எம்மால் நிரூபிக்கப்பட்டு அவதானம் செலுத்தப்பட்டமை தொடர்பிலான சர்வதேச அங்கீகாரத்தின் சான்றாகும். இதுமக்கள், பூமி, இலாபம் ஆகிய மூன்று அடிப்படை விடயங்களில் எமது பாரிய அர்ப்பணிப்பின் ஒரு பகுதியாகும்.

# தொழில்நுட்ப முன்னேற்றங்களை அறிவித்துள்ள vivo

ஒவ்வொரு புதிய ஸ்மார்ட்போன் வெளியீட்டின் போதும், அந்தந்த தரக்குறியீடுகள் தங்கள் போட்டியாளர்களுக்கு முன்னால் நிலைத்து நிற்பதற்காக, தொழில்நுட்பம் மற்றும் கண்டுபிடிப்புகள் மூலம் தங்கள் ஸ்மார்ட் போன்களை மேலும் மேம்படுத்துவதற்கான வழியைத் தேடுகின்றன. வேகமாக நகர்ந்து கொண்டிருக்கும் தலைமுறையின் தேவைகளுக்கேற்ப ஸ்மார்ட் போன் தொழில்நுட்பத்தின் போக்குகள் தொடர்ந்தும் உருவாகி வருகின்றன. இன்று புரட்சிகரமாக காணப்படும் ஒன்று, நாளை பெரும்பாலான சாதனங்களில் வந்துவிடலாம்.

இதை மனதில்கொண்டு, vivo அதன் சமீபத்தில் நிறைவடைந்த வருடாந்த vivo டெவலப்பர் மாநாட்டில் (VDC), பல்வேறு தொடரான தொழில்நுட்ப முன்னேற்றங்களை அறிவித்தது. இது சாதனத்தின் செயல்திறன், மென்பொருள் சேவைகள், IoT மற்றும் நிறுவனத்தின் பயனர்சார்ந்த உத்திக்கு அடித்தளமாக இருக்கும் தொழில்துறை வாய்ப்புகளின் பலத்தை வெளிப்படுத்துவனவாக அமைவதுடன், இதுவொரு விரிவான தொகுதியை கோடிட்டுக் காட்டுகிறது.

2021 vivo டெவலப்பர் மாநாட்டில், vivo வின் புத்தாக்கங்களை செயற்படுத்தும் அதன் பயனர்சார்ந்த உத்தியின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி உரையாற்றிய vivo வின் சிரேஷ்ட உபதலைவர் Shi Yujian தெரிவிக்கையில், "2021 vivo வின் முக்கியமான மாற்றங்களைக் கொண்டுவரும் ஆண்டாகும். காரணம், நாம் தரமான தயாரிப்புகளை உருவாக்கும் நிறுவனமாக இருந்து, தொழில்நுட்பம் மற்றும் எமது வடிவமைப்பு தத்துவத்தால் மேம்படுத்தப்பட்ட புரட்சிகர தயாரிப்புகளை உருவாக்கும் நிறுவனமாக மாறியுள்ளோம்" என்றார்.

"எமது பயனர்கள் vivo மீதான அவர்களின் அணுகுமுறையை "vivo தயாரிப்புகளைத் தேர்ந்தெடுத்தல்" என்பதில் இருந்து "vivo தயாரிப்புகளை விரும்புதல்" எனும் நிலைக்கு மாறுவார்கள் என்று நம்புகிறோம். திருப்தியான பயனர்கள், எமது தயாரிப்புகளை அவர்களின் நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருக்குப் பரிந்துரை செய்கின்ற, எமது தயாரிப்பின் தூதுவர்களாக மாறுவதைக் காண்பதை எதிர்பார்த்து நிற்கிறோம். எமது தயாரிப்புகள் மூலம், நாம் உயர்வாக அடையாளப்படுத்தக்கூடிய மற்றும் தனித்துவமான தரக்குறியீட்டை உருவாக்குகிறோம்," என்று அவர் மேலும் தெரிவித்தார்.




# ரோயல் நர்சிங் ஹோம் நிறுவனத்தில் 1000 தொழில் வாய்ப்புகள்





இலங்கையின் மிகப்பெரிய வீட்டு தாதியர் சேவை மற்றும் அம்புலன்ஸ் சேவை நிறுவனமான ரோயல் நர்சிங் ஹோம் தனியார் நிறுவனம் 2022 ஆம் ஆண்டில் 45 வயதுக்கு குறைந்த 400 இளைஞர் யுவதிகளுக்கு இலவச தாதியர் பயிற்சியை வழங்கிச் சேவைக்கு இணைத்துக் கொண்டு 1000 தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதற்கு அண்மையில் தீர்மானித்துள்ளது.

ரோயல் நர்சிங் ஹோம் அதிபர் kDஜ ஹேவாவசம், நிறைவேற்றுப் பணிப்பாளர் ஹேமா லிகீகியனகே, பொதுமுகாமையாளர் தனுஸ்க விஜயசிங்க ஆகியோர் நிறுவனத்தின் துறைத் தலைவர்கள் மற்றும் நிறைவேற்று அதிகாரிகளுடன் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் அண்மையில் நடாத்திய கலந்துரையாடலின் போது இத்தீர்மானம் எட்டப்பட்டுள்ளது. 2007 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட ரோயல் நர்சிங் ஹோம் தனியார் நிறுவனமானது, சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் ஒழுங்குப்படுத்தல் ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகும். தற்பொழுது இந்நிறுவனம் தொழில் தகைமைபெற்ற 600 ஊழியர்களைக் கொண்ட நிறுவனமாக வளர்ச்சி கண்டுள்ளது.

ரோயல் நர்சிங் ஹோம் தாதியர் சேவையை எதிர்பார்க்கும் சிரேஸ்ட பிரஜைகளுக்கும் நோயாளர்களுக்கும் விளைத்திறன் மிக்கதும் தரமிக்கதுமான சேவையை வழங்கும் நோக்கத்துடன் இப்புதிய தீர்மானத்தை செயற்படுத்துவதாக நிறுவனத்தின் அதிபர் திருமதி ஹேவாவசம் தெரிவித்தார். இதன்போது கருத்து தெரிவித்த பொதுமுகாமையாளர் தனுஸ்க விஜயசிங்க கடந்த கோவிட் பெருந்தொற்று காலத்தில் எந்தவொரு ஊழியரையும் சேவையிலிருந்து நீக்காமல், சம்பள குறைப்பின்றி தமது நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ரோயல் நர்சிங் ஹோம் நிறுவனத்தினால் முடிந்துள்ளதாக குறிப்பிட்டார். நிறுவனத்தின் ஊழியர் படையை விரிவுபடுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தோடு புதிதாக தொழில் எதிர்பார்ப்போருக்கு இலவச பயிற்சியை தொடர்ந்து தொழில் வழங்கப்படுமெனவும், கோவிட் காரணமாக தொழிலை இழந்தவர்களுக்கும் இது பெரும் வாய்ப்பாக அமையுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். மேலும், ஹொங்காங், மலேசியா,சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு தாதியர் சேவையை வழங்கி பெருமளவு அந்நிய செலாவணியை ஈட்டி நாட்டின் பொருளாதாரத்துக்கு அதன்மூலம் பெரும் வலுசேர்க்க முடியுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

# வாரபலன்



23.01.2022 - 29.01.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

மேஷ ராசிக்காரர்களே, உங்கள் ராசிக்கு இந்த வாரம் நவ கிரகங்களின் சாதகமாக உள்ளது. நீண்ட நாள் ஆசைகள் நிறைவேறும். வேலை, தொழிலில் மாற்றம் ஏற்படும். புதிய முயற்சிகளில் தடைகளைத் தாண்டி வெற்றி பெறுவீர்கள். பேச்சில் கவனம் தேவைஎதிர்பாராத பண வரவு வரும். சகோதர சகோதரிகளின் உதவி கிடைக்கும். பெண்களுக்கு புதிய வேலை கிடைக்கும். பாக்ய ஸ்தானத்தில் சுக்கிரன் உடன் செவ்வாய் இணையப்போவதால் தன்னம்பிக்கை அதிகரிக்கும். திடீர் திருமண யோகம் உண்டாகும்.

## ரிஷபம்

ரிஷபம் சுக்கிரனை ராசி அதிபதியாகக் கொண்ட ரிஷப ராசிக்காரர்களே, ராசியில் உள்ள ராகு சில நேரங்களில் மனக்குழப்பத்தை தருவார். உடல் ஆரோக்கியத்தில் கவனமும் நிதானமும் தேவை. சூரியன், சனி,புதன் இணைந்து ஒன்பதாம் வீட்டில் பயணம் செய்கின்றன, எட்டாம் வீட்டில் சுக்கிரன் பயணம் செய்வதால் பேச்சில் கவனம் தேவை. பயணங்களில் நிதானம் அவசியம். கணவன் மனைவி இடையே சிறு சிறு பிரச்சினைகளும் செலவுகளும் வரலாம். பண வரவில் கவனம் தேவை. குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். புதிய வாய்ப்புகள் தேடி வரும். வேலையில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். உடம்பில் மந்த நிலை ஏற்படும். சிக்கல்கள் நீங்கும்.

## மிதுனம்

மிதுனம் புதன் பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட மிதுன ராசிக்காரர்களே, இந்த வாரம் சூரியன் உங்கள் ராசி நாதன் புதனோடு இணைந்து எட்டாம் வீட்டில் சனியோடு பயணம் செய்கிறார். ஒன்பதாம் வீட்டில் குரு என கிரகங்கள் பயணம் செய்கின்றன. நீண்ட காலமாக எதிர்பார்த்த நல்ல காரியம் நடைபெறும். கடன் பிரச்சினை நீங்கும் அளவிற்கு பண வரவு அதிகரிக்கும். சொந்த தொழில் வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். சொந்த தொழில் தொடங்க முயற்சி செய்யலாம். சொந்த வீடு வாங்கும் யோகம் வரும். பெரிய அளவில் பண முதலீடுகள் செய்ய வேண்டாம். நரம்பு தொடர்பான பிரச்சினைகள் வரலாம். பிரிந்தவர்கள் ஒன்று சேர வாய்ப்பு உள்ளது. சந்தோஷம் நிறைந்த வாரமாகும்.

## கடகம்

கடகம் சந்திரனை ராசி அதிபதியாகக் கொண்ட கடக ராசிக்காரர்களே, இந்த வாரம் சந்திரன் சஞ்சாரம் சாதகமாக உள்ளதால் உங்களுக்கு சுப செலவுகள் அதிகம் இருக்கும் மறைமுக எதிரிகள் தொல்லை அதிகரிக்கும். பிள்ளைகளால் சுப செய்திகள் தேடி வரும். சிலருக்கு நல்ல வேலை கிடைக்கும். வேலையில் கவனமும் விழிப்புணர்வும் அவசியம். கடன் விவகாரங்களில் ஜாமீன் கையெழுத்து போட வேண்டாம். உணவு விசயத்தில் கவனமாக இருப்பது நல்லது. மனதில் தைரியம் தன்னம்பிக்கை கூடும். கணவன் மனைவிக்குள் இணக்கம் கூடும். தொழிலில் போட்டி பொறாமைகள் அதிகரிக்கும்.

## சிம்மம்

சிம்மம் சூரியனை ராசி அதிபதியாகக் கொண்ட சிம்ம ராசிக்காரர்களே, யோகங்களும் வெற்றிகளும் நிறைந்த அமோகமான வாரமாக அமைந்துள்ளது.எதிரிகள் தொல்லைகள் நீங்கும். தேவைக்கு ஏற்ப பண வரவு அதிகரிக்கும். வேலை வாய்ப்புகளுக்கான போட்டி தேர்வுகளில் வெற்றி கிடைக்கும். வீடு நிலம் வாங்கும் எண்ணம் நிறைவேறும். கலைத்துறையில் இருப்பவர்களுக்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும். பெண்களுக்கு திடீர் பயணங்கள் வரும். உடல் ஆரோக்கியம் நன்றாகும். பதவி உயர்வும் சம்பள உயர்வும் தேடி வரும். குரு பார்வையால் கணவன் மனைவி உறவுக்குள் நெருக்கம் கூடும். மாணவர்களுக்கு அற்புதமான வாரம்.

## கன்னி

கன்னி புதன் பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட கன்னி ராசிக்காரர்களுக்கு இந்த வாரம் நவ கிரகங்களின் சஞ்சாரம் சாதகமாக அமைந்துள்ளது. யோகங்கள் நிறைந்த வாரம். திருமணம் முடிந்து குழந்தைகளுக்காக காத்திருப்பவர்களுக்கு புத்திரபாக்கியம் கை கூடி வரும். மன நிம்மதி அதிகரிக்கும். புதிய வேலையும் இடமாற்றமும் ஏற்படும். பெண்கள் மனமகிழ்ச்சியோடு இருப்பீர்கள். கணவன் மனைவி இடையே நெருக்கம் அதிகரிக்கும். புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். சந்தோஷம் நிறைந்த வாரம். பூர்வீக சொத்தில் ஏற்பட்ட வில்லங்கம் நீங்கும். வண்டி வாகன யோகம் உண்டாகும்.

## துலாம்

துலாம் சுக்கிரனை ராசி அதிபதியாகக் கொண்ட துலாம் ராசிக்காரர்களே, சந்திரன் சஞ்சாரம் சாதகமாக உள்ளது. தொழில் வியாபாரத்தில் லாபம் வரும். குழந்தைகளால் சந்தோஷம் அதிகரிக்கும். விவசாயம் விருத்தியாகும். எதிர்பாராத வகையில் பணம் கிடைக்கும். சுபிட்சங்கள் நிறைந்த வாரம் செல்வச் சேமிப்பு அதிகரிக்கும். அம்மாவின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பண வரவு நன்றாக இருக்கும். குடும்பத்தில் சில பிரச்சினைகள் வரலாம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது பெண்கள் விட்டுக் கொடுத்து செல்லுங்கள். தந்தை வழி சொத்துக்கள் மூலம் லாபம் அதிகரிக்கும். வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளுங்கள்.

## விருச்சிகம்

விருச்சிகம் செவ்வாய் பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட விருச்சிக ராசிக்காரர்களே, கேது உடன் செவ்வாய் இணைந்து உங்கள் ராசியில் பயணம் செய்வதால் தேவையற்ற எண்ணங்களை தவிர்க்கவும். சந்திரன் சஞ்சாரம் வார துவக்கத்தில் சாதகமாக இல்லை. புதிய முயற்சிகளுக்கு வெற்றி கிடைக்கும். வேலையில் இருந்த தடைகள் தாமதங்கள் நீங்கும். தகவல் தொடர்பு சிறப்படையும். வேலையில் முன்னேற்றமும் திடீர் இடமாற்றமும் வரும். எதிரிகள் தொல்லை நீங்கும். உற்சாகமான மனநிலையில் இருப்பீர்கள். தொழில் வியாபாரம் விருத்தியாகும் முன்னேற்றம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு தன்னம்பிக்கையும் மனோதிடமும் அதிகரிக்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்து போடுவீர்கள். வேலை செய்யும் இடத்தில் விழிப்புணர்வு அவசியம். திருமண சுப காரியத்திற்கு முயற்சி செய்யவும் நல்லது நடக்கும்.

## தனுசு

தனுசு குரு பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட தனுசு ராசிக்காரர்களே, சந்திரன் சஞ்சாரம் சாதகமாக உள்ளது. இந்த வாரம் உங்களுக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன் சனி இணைந்துள்ளதால் வீட்டிலும் அலுவலகத்திலும் தேவையற்ற வீண் பேச்சினை தவிர்க்கவும். நண்பர்களிடமும் சண்டை சச்சரவினை தவிர்க்கவும், விட்டுக்கொடுத்து செல்வது நன்மையை ஏற்படுத்தும். சுப காரியங்கள் அதிகம் நடைபெறும். நீண்ட நாட்களாக தீராத பிரச்சினை நீங்கும். குடும்பத்தில் இருக்கும் குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தைரியம் தன்னம்பிக்கை அதிகரிக்கும். வேலைக்கு செல்பவர்க்கு புதிய வாய்ப்புகள் தேடி வரும் சந்தோஷமான வாரமாகும்.

## மகரம்

மகரம் சனிபகவானை ராசிநாதனாகக் கொண்ட மகர ராசிக்காரர்களே, ராசிநாதன் சனி உங்கள் ராசியில் சூரியன் புதனோடு பயணம் செய்கிறார். வேலையில் பளு கூடும், உடல் உழைப்பு அதிகரிக்கும். இந்த வாரம் பண வரவு அதிகரிக்கும் கூடவே சுப செலவுகளும் வரும். உறவினர்களால் நன்மை உண்டாகும். திடீர் பண வரவு வரும். வீண் செலவுகளில் கவனம் தேவை. பேச்சினாலேயே காரியம் சாதித்துக் கொள்வீர்கள். பொழுதுபோக்கு விஷயங்களில் ஆர்வம் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் கிடைக்கும். வீட்டிற்குத் தேவையான புதிய பொருட்கள் வாங்குவதற்காக செலவுகள் அதிகரிக்கும்.

## கும்பம்

கும்பம் சனி பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட கும்ப ராசிக்காரர்களே, நன்மைகள் நிறைந்த வாரமாக அமைந்துள்ளது. வார துவக்கத்தில் சந்திரன் சஞ்சாரம் சாதகமாக இல்லை திடீர் பண வருமானமும் சுப விரைய செலவுகளும் அதிகரிக்கும். வேலை செய்யும் இடத்தில் சம்பள உயர்வும் அதிகரிக்கும். அரசு வேலையில் இருப்பவர்களுக்கு அதிகாரப் பதவி கிடைக்கும். பெண்களுக்கு சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கும். புதிய பதவிகள் தேடி வரும். புதிய முயற்சிகள் எல்லாம் வெற்றியடையும். கணவன் மனைவி இடையே ஏற்பட்டிருந்த சின்னச் சின்ன சண்டை சச்சரவுகள் முடிவுக்கு வரும்.

## மீனம்

மீனம் குரு பகவானை ராசி அதிபதியாகக் கொண்ட மீன ராசிக்காரர்களே, முதலீடுகளில் லாபம் இரட்டிப்பாகும். சுப விரைய செலவுகளை ஏற்படுத்துவார். திடீர் மருத்துவ செலவுகள் வரலாம். குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவது அவசியம். குடும்பத்தில் பெண்களால் நன்மை உண்டாகும். புதிய வேலையும் கிடைக்கும். பண வரவு அதிகரிக்கும் பொருளாதார நிலை நன்றாக இருக்கும். செய்யும் தொழிலில் லாபம் அதிகரிக்கும். மனதில் ஏற்பட்ட குழப்பம் நீங்கி தெளிவு பிறக்கும். வார இறுதியில் சந்திரன் சஞ்சாரம் சாதகமாக இல்லை.

# 1955ம் ஆண்டிலேயே சமூக சீர்திருத்தம் பேசிய டீயெம்பியின் 'கங்காணி மகள்'

இலங்கை சுதந்திரம் பெற்ற கையோடு மலையகத் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதுடன், அவர்கள் கள்ளத்தோணிகளாவும் நாடற்றவர்களாகவும் இழிந்து நோக்கப்பட்டனர். இந்த நிலை மலையகம் சார்ந்த எழுத்தாளர்களதும் மனிதாபிமானங் கொண்டவர்களதும் நெஞ்சில் கனலை மூட்டியது.

'கள்ளத்தோணி' என்ற தலைப்பில் எம்.ஏ. அப்பாஸ் 1953களிலேயே ஒரு நூலையும், அதே தலைப்பில் சுபைர் இளங்கீரன் 1954 இல் ஒரு நாவலையும் படைத்துள்ளனர். விடத்தல் தீவிலிருந்து எம்.பி.எம். முகம்மது காசிம் புலவர் 'கள்ளத்தோணிக்குத் தீர்ப்பு' என்ற தலைப்பில் 1955இல் ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார்.

மலையக மக்களை மனங்கொண்ட இந்த படைப்புகள் வெளிவந்த காலப்பகுதியில் 1952 இல் சிதம்பரநாதபாவலர் 'சங்கு' என்ற பத்திரிகையில் 'ஜானகியின் துணிவு' என்ற நாவலைத் தொடர்கதையாக எழுதியிருக்கும் தகவலை சாரல் நாடன் தருகிறார். பதுளையிலிருந்து மு.வே.பெ. சாமி 1954இல் 'யார் கொலைகாரன்?' என்ற நாவலை வெளியிட்டிருக்கிறார். இந்தப் பின்னணியில் 1955 இல் டீயெம்பி என்ற பெயரில் அறியப்பட்ட மர்ஹூம் வு.ஆ.பீர். முகம்மது சாகிப் எழுதி வெளியிட்ட 'கங்காணி மகள்' என்ற நாவல் முக்கியம் பெறுகிறது.

பதுளையில் என்னிடமிருந்த இந்த நாவல் பிரதி தொலைந்துபோனபோது, அந்நூல் என்றுமே கிடைக்கமாட்டாத நூலாகப்போகிறது என்று அப்போது நான் நினைத்திருக்கவில்லை. மலையகத்தின் நாவல் இலக்கியம் பற்றி எழுதிய யாரும் இந்த நூலைப் பார்த்திருக்கவில்லை. சில்லையூர் செல்வராஜன் 'கங்காணி மகள்' என்ற இந்நூல்



1962 இல் கொழும்பு விவேகானந்தர் மண்டபத்தில் நடைபெற்ற பிரியாவிடை விழாவில் அட்வகேட் டி.டபிள்யூ. இராசரத்தினம் டீயெம்பிக்கு வீரவாள் பரிசளிக்கிறார்..

பற்றிய விமர்சனத்தைத் தனது 'ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி' (1967) என்ற நூலில் முன்வைத்திருக்கிறார். 'கங்காணி மகள்' என்ற இந்த நூலைப்பற்றி 'ஈழத்தின் தமிழ் நாவலியல்' என்ற நூல் விபரப்பட்டியலில் குறிப்பிடும் என். செல்வராஜா இந்நூலின் ஆசிரியர் ஹமீதா பானு என்றும் இயற்பெயர் னு.ஆ.பீர் முஹம்மது, 1955 ஆம் ஆண்டில் அதன் முதல் பதிப்பு பதுளையில் வெளியானது என்றும் தகவல் தருகிறார். இந்தத் தகவலை அவர் எங்கிருந்து பெற்றார் என்று தெரியவில்லை. ஹமீதா பானு என்ற தனது மகன்வழிப் பேத்தியின் பெயரில் பின்னாளில் 'சதியிற் சிக்கிய சலீமா' என்ற நாவலை 1964 ஆம் ஆண்டில் வெளியிட்டிருக்கிறார். நான் அநேகமாகத் தொலைந்து போன நூல் என்று கணித்திருந்த இந்த நாவலை டீயெம்பி



கல்லிடைக் குறிச்சியில் மறைந்த பன்னூல் ஆசிரியர் டீயெம்பி 1955 இல் இலங்கையில் வெளியிட்ட 'கங்காணிமகள்' நாவலின் பிரதியை டீயெம்பியின் புதல்வர் டீ.எம்.பி. மீரான் மொஹிதீன் பத்திரிகையாளரும் மலையக ஆய்வாளருமான எச்.எச். விக்கிரமசிங்கவுக்கு வழங்கியபோது...

பிறந்த கல்லிடைக்குறிச்சிக்குப் பயணித்து, அவரது புதல்வரைச் சந்தித்து அந்நூலினை அவரிடமிருந்து பெற்று , எனக்கு அனுப்பிவைத்த, ஆவணத்தேடலை முழுமூச்சாகக்கொண்டு இயங்கும் எச்.எச்.விக்ரமசிங்கவுக்கு தமிழ்கூறு நல்லுலகம் பெருங் கடமைப்பட்டிருக்கிறது.

என் கைவசம் உள்ள இந்நூல் "டீயெம்பி" அவர்களின் பெயராலேயே கொழும்பு 11, என். எஸ்.ஆர் அச்சகத்தில் 1955 ஏப்ரல் மாதம் அதன் முதல் பதிப்பு வெளியாகியிருக்கிறது. ஹமீதா பானு என்ற பெயரோ, பதுளை என்ற பெயரோ எங்கும் காணப்படவில்லை.

தமிழகத்தில் கல்லிடைக்குறிச்சியில் 1915 ஆம் ஆண்டு பெப்ரவரி 25 ஆம் திகதி பிறந்த பீர் முஹம்மது தனது 33ஆவது வயதில் 1948 ஆம் ஆண்டு இலங்கை வருகிறார். தோல்வியில் முடிந்த வியாபாரத்தின் பின்னர், பொதுநலப்பணியில் தீவிரமாக இயங்கிய இவர் இறுதிவரை திராவிட முன்னேற்றக்கழகத்தின் அணுக்கத் தொண்டராக இயங்கியிருக்கிறார். இலங்கை இந்திய காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய அமைப்புகளில் இணைந்து மலையக மக்களின் உரிமைப்போராட்டம் பற்றி தோட்டம் தோட்டமாக பிரச்சாரம் செய்து 'பிரச்சாரப் பீரங்கி' என்று பட்டத்தை சுவீகரித்தவர். பதினான்கு ஆண்டுகள் மக்கள் சேவையே உயிரெனக்கொண்டு இலங்கையில் வாழ்ந்த டீயெம்பி 1962 இல் தனது தாயகமான கல்லிடைக்குறிச்சி திரும்பினார்.

பி.ஆர். பெரியசாமி, அ.சிதம்பரநாத பாவலர், மு.வே.பெ. சாமி, வழுத்தூர் ஒளியேந்தி போன்ற மலையகக் கலைஞர்களுடன் கைகோர்த்துத் திரிந்த தொழிற்சங்கப் போராளியாகத் திகழ்ந்தவர் டீயெம்பி ஆவார்.

'கங்காணி மகள்' என்ற இந்த நாவலை டீயெம்பி, அவரது நண்பர் எல்.எம்.எஸ். செய்யிது முகம்மது ஆசிரியராக இருந்து நடத்திய 'நமது முரசு' என்ற சஞ்சிகையில் தொடர்கதையாக எழுதிவந்திருக்கிறார். சஞ்சிகை இடையில் நின்றுபோனதும், கதையை தொடர்ந்து எழுதி முடித்து நூலாக வெளியிட்டிருக்கிறார் டீயெம்பி.

" இலங்கை தேயிலைத் தோட்ட தொழிலாளரின் உண்மையான வாழ்க்கையையும், படும் அவதியையும், அவர்களைச் சுரண்டி வாழும் சூரர்களையும் கொஞ்சம் பட்டவர்த்தனமாகவே படம் பிடித்துக்காட்ட வேண்டும் என்றுதான் எண்ணி இந்தக்கதையைத் துவக்கினேன். ஆனால், அது முழு வெற்றி பெறவில்லையென்பதை நானே கூறிவிடுகிறேன்" என டீயெம்பி தனது முன்னுரையில் ஒப்புதல் வாக்கு மூலம் தந்திருக்கிறார்.

லெட்சுமி தோட்டத்துக் காதல் கதை இது. செல்லங்கங்காணி கருப்பாயி தம்பதிகளின் ஒரே மகள் கண்ணம்மாள். படித்தவள். லெட்சுமி தோட்டத்து மேல்கணக்கு கணக்கப்பிள்ளை மகன் சண்முகத்திற்கு கண்ணம்மாளைத் திருமணம் செய்துவைக்க முடிவெடுக்கிறார்கள். திருமணத்திற்கு நல்லநாள் பார்க்க ஜோஸ்யம் சுந்தரம் பிள்ளையிடம் போகிறார் கங்காணி. ஜோஸ்யரின் மகன் சாமிநாதன் எஸ்.எஸ்.ஸி. படித்துக் கொண்டிருக்கிறான். அவனது நண்பன் முத்தையா. தன் மகளுக்கு சாதகம் பார்க்கப்போன இடத்தில், கணக்கப் பிள்ளை மகன் சண்முகம் 22 வயதிற்குள் கெட்ட நடத்தையால் மேகவியாதி பீடித்தவனாய் இருப்பதை மற்றவர்கள் சொல்லக்கேட்டு குழம்பிப்போகிறான். கண்ணம்மாளுக்கும் ஜோஸ்யரின் மகன் சாமிநாதனுக்கும் காதல் மலர்கிறது. இதனை முத்தையா மூலம் அறிந்த ஜோஸ்யர் கண்ணம்மாளின் ஜாதகத்தைக் கணித்துப் பார்த்ததில், அத்திருமணம் இருவருக்கும் பொருந்தாது என்றும் திருமணம் நடந்தால் மறு ஆண்டிலேயே சாமிநாதனின் மரணம் நிச்சயம் என்று அந்த சம்பந்தத்தைத் தவிர்த்து விடுகிறார் சுந்தரம் பிள்ளை. தந்தை எடுத்த முடிவிற்குக் கட்டுப்பட்டு கண்ணம்மாளைக் கைவிட்டுவிடுகிறான் சாமிநாதன். சாமிநாதனுக்கு தனது தங்கை மகளை நிச்சயித்து விடுகிறார் ஜோஸ்யம் சுந்தரம்பிள்ளை.





கண்ணம்மாளின் குடும்பத்தில் கணக்கப் பிள்ளை வீட்டில் சம்பந்தம் செய்ய விருப்பம் இல்லாவிட்டாலும், அவரைப் பகைத்துக்கொண்டு வாழ இயலாத நிலையில் அந்தக் கல்யாணத்திற்குச் சம்



கல்லடைக் குறிச்சியில் உள்ள டீயெம்பியின் இல்லத்திற்கு எச்.எச். விக்கிரமசிங்க விஜயம் செய்தபோது...

மு. நித்தியானந்தன், ...
லண்டன்

மதம் தெரிவிக்கப்படுகிறது. ஒரே நாளில் திருமணமும் நிச்சயிக்கப்பட்டு முன்னிரவில் சாமிநாதனின் திருமணமும் பின்னிரவில் கண்ணம்மாளின் திருமணமும் என்று ஜாதக ஏற்பாடும் தீர்மானமாகிவிட்டது. சாமிநாதன் திருமணம் நிச்சயித்தபடி முடிகிறது. ஆனால் திருமண நாளன்று கண்ணம்மாள் காணாமல்போய்விடுகிறாள். தங்களை செல்லங் கங்காணி அவமதித்து விட்டதாக கணக்கப்பிள்ளை ஆட்கள் கங்காணி ஆட்களை அடித்துவிடுகிறார்கள். ஆறு ஆண்டுகள் கடக்கின்றன. காணாமல்போன கண்ணம்மாள் களுத்துறையில் பெண்கள் உயர்நிலை ப்பள்ளியின் தலைமை ஆசிரியையாயிருக்கும் அம்மையாரின் அரவணைப்பில் அப்பள்ளியின் ஆசிரியையாகப் பணி புரிகிறாள். பள்ளியின் வளர்ச்சி நிதி சேகரிக்கும் வேலையின்போது, என்ஜினியராக களுத்துறையில் பணியாற்றும் சாமிநாதனைச் சந்திக்கிறாள் கண்ணம்மாள். சாமிநாதனின் மனைவி ஒரு பெண்குழந்தையைத் தந்துவிட்டு , ஐந்து ஆண்டுகளுக்கு முன் இறந்து போகிறாள். மீண்டும் சந்தித்துக் கொண்ட சாமிநாதனும் கண்ணம்மாளும் மறுமணத்திற்கு இசைந்து, இருவருக்கும் சீர்திருத்தத் திருமணம் நடைபெறுகிறது. அத்திருமணத்தில் சாமிநாதனின் நண்பன் முத்தையா தனது மனைவியுடன் வந்து கலந்து கொள்கிறான். முத்தையாவின் மனைவி, கண்ணம்மாளின் தோழியாக லெட்சுமி தோட்டத்தில் இருந்தவள்தான். முத்தையாவின் முதல் மனைவி இறந்ததும் அவருக்கு இரண்டாம் தாரமாக கண்ணம்மாளின் தோழி மீனாட்சி அவரைத் திருமணம் செய்து கொள்கிறாள். பழைய உறவுகள் இன்பகரமாக மீள்கின்றன.


திராவிட இயக்கத்தின் சீர்திருத்தக்கருத்துகளால் கவரப்பட்டு, மலையகத்தில் சமூக மாற்றம் வேண்டிப் பேசியும் எழுதியும் வந்த டீயெம்பி, தனது 'கங்காணி மகள்' நாவலில் வரும் கதாபாத்திரங்களுக்கூடாக சீர்திருத்தக் கருத்துகளை முன்வைப்பதைக்காணலாம். திருமணத்தில் ஜாதகப்பொருத்தம் பார்த்துச் செய்யப்பட்ட திருமணங்கள், அவலத்தில் முடிந்ததை டீயெம்பி இந்த நாவலில் எடுத்துக்காட்டுகிறார். நல்ல நாள், கெட்ட நாள் என்ற பேதத்தில் ஒரு அர்த்தமும் இல்லை என்பதை நிறுவுகிறார் டீயெம்பி. மறுமணங்களை முரசுகொட்டி அறிவிக்கும் புதினமாக இந்நாவல் அமைகிறது. சமய சடங்காசாரங்கள் எதுவுமின்றி, மாலை மாற்றித் திருமணம் செய்யும் சீர்திருத்தத் திருமணம் இந்நாவலில் வலியுறுத்தப்படுகிறது.

சமயத்தின் பேரால் நடக்கும் விழாக்களிலே ஒழுக்கத்தைக் கடுகளவுகூடக் காணமுடியவில்லையே என்று ஒரு கதாபாத்திரம் பேசுகிறது.

"மாரியம்மன் விழாவிலிருந்து மாதாகோவில் திருநாள் வரை, நாராயணசாமி குறிசொல்லும் கூடத்திலிருந்து நாகூர் ஆண்டவர் கந்தூரிவரை சென்று பார்த்தாலும் அங்கு எங்கும் ஒழுக்கத்தைக் காண முடியாது, முடியவில்லை. இதிலிருந்துதான், மதத்தின்பேரால் நடைபெறும் திருநாட்கள் மக்களுக்கு நன்மை புரிவதைவிட, அதிகமான கேடுகள் தான் புரிகின்றன என்று அறிஞர்கள் ஆராய்ந்தறிந்து கூறுகின்றனர் என்று ஆசிரியர் கூற்றாகவே கருத்துகள் முன்வைக்கப்பட்டுள்ளன.'பராசக்தி' படத்தில் கல்யாணி கஞ்சிக்கு வழியின்றி, தனது கண்மணி செல்வத்திற்கும் பாலின்றி, பொருளே இல்லார்க்கு என்ற பாடலுடன் ஒரு கோயிலுக்குப் பின்புறமாக வந்துகொண்டிருக்கிறாள். கோயிலுக்குள், சாமி தலைமீது வீணாக ஊற்றப்படும் பால், சிறு ஓடையாகப்பெருகி வழிந்தோடிக்கொண்டிருக்கிறது அங்கே! இது எவ்வளவு பெரிய வேதனை நிகழ்ச்சி? நாட்டின் நிலை இப்படித்தானே இருக்கிறது என்று இந்நாவலில் ஒரு பாத்திரம் பேசுகிறது.

பெண்களின் கல்வி முன்னேற்றம், பெண்கள் பொதுவாழ்வில் ஈடுபடல் போன்றவற்றிற்கு உதாரணமாக கண்ணம்மாள், மீனாட்சி ஆகிய பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன. பாரதிதாசனின் 'குடும்ப விளக்கு', திரு வி.க.வின் 'பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை' ஆகிய நூல்களைப் பற்றி இந்நூல் பேசுகிறது. புறநானூற்றிலிருந்தும் திருக்குறளிலிருந்தும் மேற்கோள்கள் காட்டப்படுகின்றன. மலையகத்தில் திராவிட இயக்கச் சிந்தனைகள், சீர்திருத்தக் கருத்துகள் ஐம்பதுகளில் தீவிரம் கொண்டிருந்ததை 'கங்காணி மகள்' எடுத்துக்காட்டுகிறது. மலையகத்தில் மேடைப்பேச்சுகள் முக்கியம் பெற்று வருவதும் திராவிட இயக்கப்பண்பாட்டின் பிரதிபலிப்பாக நோக்கத்தக்கது.

மலையகத்தின் தொழிற்சங்கப் போராளியாக, பட்டிதொட்டியெல்லாம் முழங்கிவந்த டீயெம்பி எழுத்துவன்மையும் படைத்தவராவார். முதற்காட்சி முழக்கம், தீந்தமிழ் மேதை திரு.வி.க., சீறும் சிங்



டீயெம்பி 1962 இல் தாயகம் திரும்பிய பின்னர் தனது புதல்வன் டீ.எம்.பி.மீரான் மொஹிதீன், பேத்திகளான ஹமிதா பானு, முகைதீன் பீவி,பேரன் டீ.எம்.பீர் முஹம்மது பஹதூர்ஷா ஆகியோருடன்.

களத்திற்கு அபாய அறிவிப்பு, சிந்தனைக்கதிர், இலங்கையின் அரசியல் நிலை, உலகிற்கொரு புதுமைக்கவி, மேதின முழக்கம், எழுச்சிமுரசு, அண்ணாவின் அடிச் சுவட்டிலே!, குடி கெடுக்கும் குடி, சிறுகதைகள் 6, மொழியும் முஸ்லிம்களும், சீறும் சீனா, முனியம்மாள், காந்தி கண்ட சாந்திவழி, நற்குண நபிமணி ஆகிய பிரசுரங்கள் டீயெம்பி மக்களின் நாளாந்த வாழ்வோடு கொண்டிருந்த பிணைப்பைக் காட்டுகின்றன. ஐம்பதுகளில் மலையகத்தில் துளிர்த்த அச்சுவழி இலக்கியங்களின் பெருக்கத்திற்கு டீயெம்பியின் பிரசுரங்கள் எடுத்துக்காட்டாயுள்ளன. ஆனால், டீயெம்பியின் இந்த எழுத்துகளைத் தேடிச் சேகரிப்பதென்பது எவ்வளவு தூரம் சாத்தியம் என்று தெரியவில்லை. எனினும் 'கங்காணி மகள்' என்ற இந்த நாவலைத் தேடித்தந்த எச்.எச். விக்ரமசிங்க மலையைக இலக்கிய ஆவணக் காப்பாளராக மிளிர்கிறார். மலையகத் தொழிற்சங்கங்களிலேயே தங்கள் வாழ்வை முடித்துக்கொண்ட போராளிகளைத் தேடிப்பிடித்து இன்றைய தலைமுறைக்கு அறிமுகப்படுத்துவதில் அவர் காட்டும் தீவிரம் வரலாற்றுப் பெருமைக்குரியது.




# கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயம்

16ஆம் நூற்றாண்டில் போர்த்துக்கேயர் ஆட்சி செய்தபோதே அந்தோனியார் வழிபாடும், அந்தோனியார் ஆலயங்களும் இலங்கையில் தோன்றிவிட்டன. 1597இல் கோட்டை இராச்சியத்தையும், 1618இல் யாழ்ப்பாணத்தையும் கைப்பற்றிய பின்னர் இந்தப் பகுதிகளில் தேவாலயங்களைக் கட்டத் தொடங்கிவிட்டார்கள். குறிப்பாக அந்தோனியார் தேவாலயங்கள். புனித அந்தோனியார் பாதுவாவில் தனது இறுதிக் காலத்தைக் கழித்திருந்தாலும் அவர் போர்த்துக்கலின் லிஸ்பன் நகரத்தை பிறப்பிடமாகக் கொண்டவர். எனவே போர்த்துகேயர் கைப்பற்றிய நாடுகளில் புனித அந்தோனியார் வழிபாடு பிரசித்தம் பெற்றிருந்தது. கொழும்பு கோட்டைக்குள் இருந்த அந்தோனியார் தேவாலயமானது அந்தோனியார் வழிபாட்டை இலங்கை முழுவதும் பரப்பிவந்த பிரான்சிஸ்கன் சபை மிஷனரிகளின் தலைமையகமாக இருந்தது.

1597 இல் கோட்டை அரசன் தொன் ஜூவான் தர்மபால இறந்தபோது அவரின் உடலையும் இந்த தேவாலயத்தில் தான் அடக்கம் செய்தார்கள். 1580 ஒகஸ்ட் 12 அன்று மன்னர் தொன் ஜூவான் தர்மபால போர்த்துக்கேயரின் நிர்ப்பந்தத்தின் விளைவாக கோட்டை ராஜ்ஜியத்தை போர்த்துக்கேயருக்கு பரிசாக அளிப்பதாக உயில் (மரண சாசனம்) எழுதிக்கொடுத்த கதையை அறிவீர்கள். கத்தோலிக்க மதத்துக்கு மாறி கத்தோலிக்கப் பெயரை சூட்டிக்கொண்ட முதல் இலங்கை மன்னர் அவர். அது போல மன்னர் பரராஜசேகரனின் மனைவியையும், அவரின் மகன், இரு மகள்மாரையும், மன்னர் குடும்பத்தினர் பலரும் இந்த தேவாலயத்தில் தான் திருமுழுக்கு பெற்று கத்தோலிக்க மதத்துக்கு மாறினார்கள்.

ஒல்லாந்தர்கள் கத்தோலிக்க மதத்தவர்களைக் கொன்றார்கள். அவர்களிடம் இருந்து தப்பிய கத்தோலிக்கர்கள் இரண்டாம் இராஜசிங்கன் (1635 1687)ஆட்சி செய்த கண்டி இராச்சியத்தில் தஞ்சம் புகுந்தார்கள். வஹாகோட்டே என்கிற இடத்தில் புனித அந்தோனியாருக்கு ஒரு சிறிய சிலையை வைத்து வணங்கினார்கள். இன்றும் வஹாகோட்டேயில் அந்த அந்தோனியார் தேவாலயம் இருக்கிறது. அதன் பின்னர் கண்டி மன்னன் இரண்டாம் விமலதர்மசூரியன் பாதிரியார் ஜோசப் வாஸ்ஸுக்கு (Joseph Vaz) அந்தோனியார் வழிபாட்டுக்கு பூரண சுதந்திரம் வழங்கினார். கண்டியில் அந்தோனியாருக்காக பாதிரியார் ஜோசப் வாஸ் எந்த கெடுபிடியுமின்றி திருவிழா நடத்தினார். அதன் பின்னர் திறைசேரியில் களவு போயிருந்தவேளை மன்னர் ஸ்ரீ வீர நரேந்திரசிங்கனும் புனித அந்தோனியாரை வழிபட்டார் என பதிவுகள் உண்டு.

இலங்கையில் உள்ள புனிதர்களின் ஆலயங்களிலேயே அந்தோனியார் வழிபாடு தான் மிகப் புகழ்பெற்ற வழிபாடாக வளர்ந்திருக்கிறது என்கிறார். இலங்கையில் அந்தோனியார் வழிபாடு குறித்து ஆராய்ந்த சாகர ஜயசிங்க இவ்வாறு போர்த்துகேயரிடம் இருந்து இலங்கையை ஒல்லாந்தர் கைப்பற்றிய பின்னர் போர்த்துக்கேயரின் காலத்தில் கத்தோலிக்க மதத்தையும் கத்தோலிக்கப் பாதிரிமார்களையும் தடை செய்திருந்தார்கள். அவர்களின் பிரதான வழிபாடான அந்தோனியார் தேவாலயங்களையும் கூடவே தடை செய்திருந்தார்கள். ஒல்லாந்தர்கள் (டச்சு) புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்தவர்கள். டச்சு ஆட்சி 1796 இல் முடிவுபெற்ற போதும் ஆங்கிலேயர்கள் 1806ஆம் ஆண்டுதான் கத்தோலிக்கத் தடையை நீக்கினார்கள். ஆளுநர் தோமஸ் மெயிற்லான்ட் மத வழிபாட்டுச் சுதந்திரத்தை அதிகாரபூர்வமாக அறிவித்தார். டச்சு ஆக்கிரமிப்பின் நிறைவுக் காலத்தில், கொழும்பில் கத்தோலிக்கர்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருந்ததால், இலங்கை ஒராடோரியர்களின் தலைமைப் பதவியில் இருந்த ஜாகோம் கோன்சால்வேஸ், அங்கு நிரந்தரமாக வசிக்கும் ஒரு பாதிரியாரின் தேவையை உணர்ந்தார்.

கொச்சினியிலிருந்து அந்தோணி (Friar Antonio) என்ற கத்தோலிக்க ஒராடோரியன் முன்வந்து கொழும்பை வந்தடைந்தார். ஆனால் துன்புறுத்தல் காரணமாக அவரால் பாதிரியாராக செயல்பட முடியவில்லை. அதனால், வியாபாரி போல் மாறுவேடமிட்டு, பகலில் (இன்றைய மாலிபன் தெருவில் உள்ள) கடையில் மீன் விற்றார். இரவில் அவர் கத்தோலிக்கர்களை அடையாளம் கண்டு பூசைகளை செய்தார். ஒரு வருடம் கழிந்தது. இரகசிய கத்தோலிக்க பூசை நிகழ்வதை அறிந்த டச்சுக்காரர்கள் அந்தோணியைத் தேடினர். மீனவ சமூகத்தினர் அதிகமாக வாழ்ந்த முஹுதுபொடவத்தை என்ற பகுதியை அவர் கடந்து சென்று கொண்டிருந்தார். இந்த நேரத்தில், கடல் அரிப்பு கடற்கரையை தாக்கி மீனவர்களின் இருப்பிடங்களை சுருக்கியது. வள்ளங்கள் அலையில் அடித்துச் சென்றன.

அந்தோணியை வழியில் சந்தித்த மீனவர்கள் தமக்கு தீர்வு தேடி அந்தோணியை அணுகினார்கள். கடல் அரிப்பைத் தடுக்க பிரார்த்தனைகளை வழங்குமாறு அவர்கள் அவரிடம் கோரினார்கள். அந்தோணி அதை செய்துவிட்டால் டச்சு வீரர்களிடமிருந்து அவருக்கு பாதுகாப்பு அளிப்பதாகவும் அவர்கள் உறுதியளித்தனர். பின்னர் அந்தோணி மணலில் ஒரு சிலுவையை நட்டு, மண்டியிட்டு மூன்று நாட்களாக உண்ணா நோன்பிருந்து பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனை செய்து கொண்டிருந்தபோது, கடல் பின்வாங்கத் தொடங்கி, அரிப்பைத் தடுக்கும் மணல் அணையை உருவாக்கியது. டச்சு வீரர்களும் இதைக் கண்டு பின்வாங்க வேண்டியிருந்தது. அதைக்கண்டு வியப்படைந்த மீனவர்கள் அந்தோனியைச் சுற்றித் திரண்டனர். அவர்கள் கத்தோலிக்கத்தை ஏற்றுக்கொண்டனர். அந்த இடம் தான் இன்றைய கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம் அமைந்திருக்கும் இடம்.

'அந்தோனியின் அதிசயம்' பலராலும் அப்போது பேசப்பட்டது. டச்சு ஆளுநர் வில்லெம் மௌரிட்ஸ் ப்ஷருய்னிங்க் (Willem Maurits Bruyninck 1739 1742) அந்தோணியின் பிரார்த்தனையின் சக்தியை அறிந்தார். கத்தோலிக்கர்கள் மீதும் அவர் தாராளவாத அணுகுமுறையைக் கொண்டிருந்தார். அந்த அதிசயம் நிகழ்ந்த நிலத்தை அந்தோணிக்கு வழங்கினார். அங்கே அவர் சிறு தொழிலையும் தெய்வீகப் பணியையும் மேற்கொள்வதற்கு ஆளுனரால் அனுமதி வழங்கப்பட்டது.

1656ஆம் ஆண்டிற்குப் பின்னர் கத்தோலிக்கர்கள் கொழும்பு நகரத்திற்குள் மத நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சுதந்திரம் வழங்கப்படுவது இதுவே முதல் தடவையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது. தனது நன்றியை வெளிக்காட்டுமுகமாகவும் புனித அந்தோணியாருக்கு அர்ப்பணிக்கும் முகமாகவும் சிலுவையை நாட்டிய இடத்தில் சிறிய தேவாலயத்தை அமைத்தார் அந்தோணி. அந்த சிலுவை நட்டிய இடத்தில் தான் இன்றும் பலர் வரிசையாக சென்று வழிபடும் அந்தோனியாரின் நாவின் பகுதி வைக்கப்பட்டிருக்கிற புதுமைச் சுருவம் இருக்கிறது.

அந்தோணி முதலில் அந்த நிலத்தில் ஒரு சிறு கடையை ஆரம்பித்தார். அது கடை கடே என்றே அழைக்கப்பட்டது. கொச்சினில் இருந்து வந்தவரின் கடை என்பதால் கொச்சியாகே கடே காலப்போக்கில் 'கொச்சிக்கடை' என்று நிலை பெற்றது. இந்த நிலமனை அதிகாரப்பூர்வமாக டச்சு கிழக்கிந்திய கம்பனியால் ஜனவரி 20, 1790 அன்று, பத்திரம் இல : 31 இன் மூலம் தேவாலயத்துக்கு ஒப்படைக்கப்பட்டது. இதில் கிழக்கிந்திய கம்பனியின் உத்தியோகபூர்வ இலட்சினை பொறித்திருப்பதைக் காண்பீர்கள். பின்னர் அந்தோணி இறந்தபோது அவரின் உடலும் இந்த ஆலயத்தினுள் தான் அடக்கம் செய்யப்பட்டது.

தற்போது தேவாலயத்தில் மீண்டும் வைக்கப்பட்டுள்ள புனித அந்தோனியின் புனிதச் சிலை 1822 ஆம் ஆண்டு கோவாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட ஒன்றாகும். 1806 ஆம் ஆண்டு அடித்தளம் இடப்பட்டு 1834ஆம் ஆண்டு புதிய தேவாலயம் கட்டும் பணி தொடங்கப்பட்டது.

அந்த ஆண்டைத்தான் ஆலயத்தின் தொடக்க நாளாக இன்றுவரை கணிக்கப்பட்டு வருகிறது. 1934இல் நூற்றாண்டு கொண்டாடப்பட்டது. 1938 ஆம் ஆண்டு பெரிய ஆலயமாக பெருப்பிக்கப்பட்டது. இன்று இலங்கையில் புனித அந்தோணியார் ஆலயம் மிகப்பெரிய புனித தேவாலயமாக மாறியுள்ளது.

பாதுவா நகரிலிருந்து கொண்டுவரப்பட்ட புனித அந்தோனியாரின் நாக்கின் ஒரு சிறிய பகுதி இங்கே விசேடமாக வைத்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. நாள் தோறும் ஆயிரக்கணக்கானோர் அதனை வந்து வழிபட்டுச் செல்கிறார்கள். 1912 ஆம் ஆண்டு கவர்னர் சேர் ஹென்றி மெக்கலம் கொழும்பு துறைமுகத்திற்காக இந்த நிலத்தை கையகப்படுத்த முயற்சித்தபோது ரோமன் கத்தோலிக்க மக்களின் தெய்வீக வழிபாட்டுத் தளமெனக்கூறி அவரின் ஆலோசகர்கள் பலர் அதனை எதிர்த்ததால் அம்முயற்சி கைவிடப்பட்டது.

லலித் அத்துலத் முதலி துறைமுக அமைச்சராக இருந்த காலத்தில் துறைமுக அதிகாரசபைக்குச் சொந்தமான துறைமுகக் காணியின் ஒரு பகுதியை அந்தோனியார் தேவாலய விஸ்தரிப்புக்கு வழங்கினார். அந்தோனியார் ஆலயம் துறைமுகத்தின் எல்லையோர காப்பரண் போலவே நிலைத்து நிற்பதை நீங்கள் அறிவீர்கள்.

90 ஆம் ஆண்டு பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் அந்தோனியார் ஆலயத்தை கொழும்பு உயர் மறைமாவட்டப் பங்காக ஆக்கும்படி விடுத்த கோரிக்கை ஆயரால் எற்றுக்கொள்ளப்படாத நிலையில் ஆலய நிர்வாகம் கடும் எதிர்ப்பை வெளிக்காட்டியது. முதற் தடவையாக மூன்று மாதங்கள் ஆலயம் மூடிவைத்த கதை நாட்டின் முக்கிய பேசுபொருளாக அப்போது இருந்தது. இறுதியில் 15.08.1990 அன்றிலிருந்து சுதந்திர ஆலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. அதுவரை கொட்டாஞ்சேனை புனித லூசியா தேவாலய நிர்வாகத்தின் கீழ் தான் இது இயங்கி வந்தது.

கொழும்பில் அதிகளவிலானோர் கலந்துகொள்ளும் கிறிஸ்தவ திருவிழா அந்தோனியார் திருவிழா தான். பல தடவைகள் சன நெருக்கடியால் விபத்துக்கள் நேர்ந்திருக்கின்றன.


அந்தளவுக்கு கொச்சிக்கடை, கொட்டாஞ்சேனை ஜிந்துப்பிட்டி, விவேகானந்தா மேடு, செட்டியார் தெரு என தேவாலயத்தின் சுற்றுவட்டாரப் பகுதியெங்கும் திருவிழாக்கோலம் பூண்டு, எங்கெங்கும் விளக்கொளியில் கொண்டாட்டமாகக் காட்சித் தரும். இந்து, பௌத்த, முஸ்லிம் மக்களும் கூட ஒன்றாக கூடிக் கொண்டாடும் நிகழ்வு அது. வாரந்தோறும் செவ்வாய்க் கிழமைகளில் பொன்னம்பலவானேஸ்வரர் கோவிலுக்கு செல்லும் இந்து பக்தர்கள் பலர் கூட அங்கே சென்றுவிட்டு அப்படியே அந்தோனியார் கோவில் தமிழ்ப் பூசையில் கலந்து கொள்வதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர்.

அது மட்டுமன்றி இந்தப் பகுதியில் உள்ள புனித வியாகுல மாதா, புனித வேளாங்கன்னி, புனித அந்தோனியார், புனித லூசியாஸ் ஆகிய ஆலயங்கள் 1996 இலிருந்து ஒன்றாக இணைந்து விபூதிப் புதன் நாளில் கொழும்பு பெரிய சிலுவைப் பாதை என்கிற ஊர்வலத்தை செய்து வருகின்றனர். இதுவும் கொழும்பில் மிகப்பெரிய அளவினர் கலந்து கொள்ளும் ஒரு நிகழ்வாக ஆகியிருக்கிறது.2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் திகதி மோசமான பயங்கரவாத தற்கொலைத் தாக்குதலுக்கு அந்தோனியார் ஆலயமும் இலக்கானது. 93 பேர் இங்கே கொல்லப்பட்டார்கள். பல நூற்றுகணக்கானோர் படுகாயமுற்றார்கள். பலத்த சேதத்துக்கு உள்ளான தேவாலயம் யூன் 12 ஆம் திகதிதான் மீண்டும் திறக்கப்பட்டது.


அந்தோனியார் தேவாலயத்தின் வளவில் மிஷனரிமார்களால் கொச்சிக்கடை புனித அந்தோனியார் பாடசாலை (இப்போது கல்லூரி) 1945 இல் 40 மாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் 1958 இல் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டு இன்று ஆயிரம் மாணவர்களுக்கும் மேல் கற்கும் கல்லூரியாக இயங்கி வருகிறது.

அந்தோனியார் தேவாலயத்தின் வரலாற்றைக் கூறும் சிறு நூதனசாலையொன்று 2013 ஜனவரி 13 அன்றிலிருந்து இயங்கி வருகிறது. அங்கே இந்த வரலாற்று விபரங்களை மேலும் அறியலாம்.


இந்த கட்டுரைக்காக எனக்கு உதவிய வண. அன்புராசா அடிகள், வண ஆனந்த அடிகள் உள்ளிட்டோருக்கு மனமார்ந்த நன்றிகள். மேலும் அந்தோனியார் தேவாலயத்தோடு 48 வருடங்கள் கடமையாற்றி, தமிழ் வழிபாட்டுப் பொறுப்பாளராக இருந்து இன்று பிரான்சில் வசிக்கும் அம்புரோஸ் பீட்டர் அவர்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றிகள்.



கொழும்பு கோட்டைக்குள் இருந்த போர்த்துகேய அந்தோனியார் கோவில் தலைமையகம். அந்தோணி பாதிரியார் அதிசயம் நிகழ்த்திய நிகழ்வு



**கொழும்பு கோட்டைக்குள் இருந்த போர்த்துகேய அந்தோனியார் கோவில் தலைமையகம். 1656 ஆண்டு வரைபடம்.** *(Changing Face of Colombo – R.L.Brohier)*



**டச்சு கிழக்கிந்திய கம்பனியால் அந்தோனியார் தேவாலயம் இருந்த நிலம் எழுதிக்கொடுக்கப்பட்ட ஆவணம்**

## நூலாய்வு

# நிரோஜினியின் 'காட்டுக்குயில்'

நிரோஜினி ரொபர்ட் அவர்களின் புகைப்படங்கள், கவிதைகள் என பல வருடமாக அவரின் முகநூல் பதிவுகளை நான் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருந்தவள்/கொண்டிருப்பவள் என்ற முறையில் இன்று வரை அவரை நான் சந்தித்ததில்லை என்றாலும் அவரின் பால் எனக்கொரு ஈர்ப்பும் மரியாதையும் உண்டு. ஈர்ப்பு எதனால் என்றும் எனக்குத் தெரியும். அதற்கு பல காரணங்கள் உண்டு. முதலில் அவரின் அந்த விரிந்த, அழகான கண்கள். கண்கள் தான் ஒருவர் மனதின் சன்னல் என்றால் அது நிரோஜினியை பொருத்தவரை உண்மையே. அவர் மனதின் அழகு அந்தக் கண்களில் பிரதிபலிக்கும்.

அவர் ஒரு கவிஞர் மட்டுமல்ல, ஒரு பாடகியும் கூட. சுகமோ துக்கமோ அதின் அடி ஆழத்திற்குச் சென்று வாழ்பவர்களால் மட்டும் தான் வாழ்வு, வாழ்வாகிறது. இல்லையெனில் அது வெறும் இருப்பாகிறது. ஆனால் இங்கு பெருவாரியான மனிதர்கள் மேலோட்டமாக சஞ்சரிப்பவர்கள். அவர்கள் நடுவில் ஒருவர் வாழும்போது, கண்டிப்பாக அவர்கள் மற்றவர்களை ஈர்க்கும் தன்மையை எந்த முயற்சியும் இன்றி எளிமையாக பெற்றுவிடுகிறார்கள். அவர் பாடுகையில் உணர்வது அந்த பாட்டின் வரிகளின் மேலான அர்ப்பணிப்பு என்றால், அவர் கவிதைகளில் உணர்வது இந்த வாழ்வின் மீதான அர்ப்பணிப்பு. நீ என்னை என்ன வேண்டுமானாலும் செய்து கொள். நான் என்னை பாதிக்கும் அத்தனையையும், வலியோ, இழப்போ, மகிழ்வோ, பறத்தலோ, பிரிவோ, கூடலோ எதுவாக இருந்தாலும் அத்தனையும் முழுமனதாய் ஏற்று அதனுள் மூழ்கி அனுபவித்து, அத்தனையும் கடந்து, மீண்டும் மீண்டும் மனிதர்கள் மேலும், வாழ்வு மேலும் எந்தவிதமான காழ்ப்புணர்வும் இல்லாமல் நம்பிக்கை வைத்தே தீருவேன் என்பது அத்தனை சுலபமல்ல சாதாரண மனிதர்களுக்கு.

நிரோஜினியின் கவிதைகள் இந்த அசாதாரணத் தன்மையைத் தான் பிரதிபலிக்கின்றன. அவரின் வரிகள் இயற்கையின் மீதான அவர் காதலை, அன்பின் மீதான அபரித நம்பிக்கையை அந்த அன்பின் பெயரால் எத்தனை வலிகளுக்கு உள்ளானாலும் நம்மிடம் கடத்திக்கொண்டே போகின்றன. காடு என்பது அவருக்கு ஒரு இடமல்ல, அது அவருக்கு ஒரு வாழ்வாதாரம் போல். அமானுஷ்யமாக அவர் வரிகளின் ஊடாக பயணித்துக் கொண்டேஇருப்பதை காணலாம். அவர் வரிகளை படித்தபின் காடுகளை நேசிக்காமல் இருப்பது என்பது ஒரு வாசகருக்கு சுலபமில்லை.






அவரின் ஒவ்வொரு கவிதையும் நின்று நிதானமாக உள்வாங்கி படிக்க வேண்டியவை. ஒரு சில வரிகளை மட்டும் இங்கே பகிர்கிறேன்.

ஒரு கவிதை உள்ளம்
நீங்கள் யூகிப்பதை விட மிக விசித்திரமானது!
சிலசமயம்
பூ உதிர்வதற்கும்
பட்டாம்பூச்சியின் ரெக்கை முறிந்ததற்கும்
உடைந்து அழும்,
நேசத்தின் பெயரால் வழங்கப்படும் ஒரு கோப்பை
விஷத்தை சிரித்துக்கொண்டே விழுங்கும்!

சுதந்திரமாய் பறப்பதாய்
சொல்லிக்கொண்டு
உன் கூட்டை சுற்றித்தான் பறக்கிறேன்

மேலும் அடித்துப் பெய்யும்
இந்த மழையிரவில்
மின்னலுக்கும் இடிக்குமிடையே
எங்கோ சில பூக்கள் பூக்கும்
அதே நேரம்
ஒரு மெல்லிய நேசம்
மெதுவாய்ச் சாகும்
பின் எப்போதும் போலே
வானம்
மீண்டும் புலரும்
எத்துனை ஆழம்
இந்த வரிகளில்?
நிரோஜினி, எழுதிக்
கொண்டே இருங்கள்.
வாழ்ந்து கொண்டே
இருங்கள்!



**லதா** தமிழ் நாடு ...

# மட்டக்களப்பை உலுக்கியெடுத்த குரூரக் கொலை


செல்வி

அன்பு, பாசம், பந்தம், பக்தி, அதிஸ்டம் என்பவைகளுக்கு உதாரணமாக இருந்தவள் என் மனைவி செல்வி, அவள் குடும்பச் சுமைகளை தாங்குவதே ஒரு ரகம். அவள் பாவப்பட்ட சனங்கள்மீது காட்டிய இரக்கமே அவளுக்கு எமனாக வந்துவிட்டது. அவளது நகைகளை கொள்ளயிட்டால்கூட எனக்கு வேதனை வந்திருக்காது. தங்கக் காப்புகளுக்காக கையை வெட்டியிருக்கிறார்கள், காதிலுள்ள தோட்டுக்காக காதை வெட்டியிருக்கிறார்கள். மூக்கிலுள்ள மூக்குத்திக்காக மூக்கையே அறுத்துவிட்டார்கள். கழுத்திலுள்ள தாலிக் கொடிக்காக கழுத்தையே அறுத்திருக்கிறார்களே...! இது என்ன கொடுமை! இதுபோன்ற தொரு சம்பவம் உலகில் எவருக்குமே ஏற்படக் கூடாது என்பதே என் பிரார்த்தனை.." இப்படி புலம்புகிறார், அண்மையில் மட்டக்களப்பு அரசடியில் கொள்ளையர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட செல்வியின் கணவர் செல்வராசா.

செல்வராசா ஒரு லயன்கழக சிரேஷ்ட உறுப்பினர். அமைதியான சுபாவம் கொண்டவர். தானதருமம் வழங்குவதில் சளைக்காதவர். மொத்தமாகக் கூறினால் தர்மநெறிகளை கடைப்பிடித்துவாழும் ஒரு செல்வந்தர். சம்பவம் நடந்தகாலம் மார்கழி நோன்பின் திருவெம்பாவைக்காலம் டிசம்பர் 20. பகல்வேளை.

கொலைசெய்து கொள்ளையிட்ட இந்த ஆணையும் பெண்ணையும். அவர் தனது வீட்டு வாசலில் அன்றைய தினம் சந்தித்திருக்கிறார். அவர்களுக்கு ஏதாவது கொடுத்து அனுப்பிவிடுங்கள் என்று மனைவியிடம் கூறிவிட்டு அவர் மேல்மாடிக்கு சென்று உடல் அசதியினால் தூங்கிவிட்டதாக கூறினார்.

கொலைகாரர்களான கார்த்திகா, ரவி என பொலிஸாருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. கார்த்திகா சில தடவைகளில் தமது வீட்டுக்கு வந்து. ஏதாவது வீட்டு வேலைகள் இருந்தால் செய்து கொடுத்துவிட்டு சம்பளத்தை வாங்கிச் செல்வது வழக்கமாம். செல்வராசாவின் நினைவுக்கு எட்டிய வகையில், ஒரு ஆறுமாத காலமாக இது நடந்து வருவதாக கூறினார்.

அன்றைய தினமும் அவ்வாறுதான் நடக்கும் என அவர் எதிர்பார்த்தார். அவரது கணக்கு முற்றுமுழுதாக பிழைத்துப் போய்விட்டது. இப்படித்தான் நடக்குமென யாரறிவார்?.

இவர்களுக்கு ஒரேயொரு பெண் பிள்ளை. பெயர் தர்மிகா. அவர் பேராதனைப் பல்கலைக் கழகத்தின் விவசாயத் துறை வளாகத்தில் 2ம் வருட மாணவி. அவர் சம்பவம் பற்றி பேசினார்,

"இந்தக் கொலையாளியான பெண் 35 வயது மதிக்கத் தக்கவர். கார்த்திகா வாட்டசாட்டமான உடற்கட்டுகொண்டவள். யாரும் அவளின் மேல் சந்தேகம் கொள்ளாதவாறே நடந்துவந்தாள். ஆனால், அன்றைய தினம் ஒரு ஆணோடு வந்திருந்தாள். அவளிடம் ஒரு பரபரப்பும் இருந்தது. அது வித்தியாசமாக இருந்ததால் எனக்கு ஒரு சந்தேகம் வந்தது. அதுபற்றி பெரிதாக நான் அலட்டிக் கொள்ளவில்லை. பல்கலைக்கழக பாடங்கள் செய்ய வேண்டியிருந்தமையாலும், சூம் கிளாஸ் இருந்தமையாலும் மேல்மாடியிலுள்ள எனது அறைக்கு சென்றுவிட்டேன். வழக்கமாக அம்மா மதிய சாப்பாட்டுக்குப் பிறகு தூங்குவது வழக்கம். நான் மேல்மாடிக்கு சென்று 30 நிமிடமாகியும் அம்மா தனது அறைக்கு வராதது எனக்கு சந்தேகத்தை தோற்றுவித்தது



## நகைகளுக்காக கையையும் கழுத்து, காது, மூக்கை அரிந்த கொலையாளிகள்


மனைவியை இழந்த செல்வராசா


தாயை இழந்த தர்மிகா

நான் அம்மா, அம்மா என்று பலதடவைகள் அழைத்தேன். அம்மாவிடமிருந்து பதில் இல்லை. கீழ் தளத்திற்கு இறங்கிவந்தேன். அம்மா இரத்த வெள்ளத்தில் கிடந்ததைக் கண்டேன். கத்தியும் கிடந்தது. உடனடியாக அம்மாவை காப்பாற்ற வேண்டுமென்ற உணர்வே எனக்குள் லோங்கி நின்றது.

அம்மாவை வெட்டிவிட்டார்கள் என்று எனது முழுப் பலத்தையும் வரவழைத்து கத்தினேன். அதனைத் தொடர்ந்து அப்பாவும் கீழ் தளத்திற்கு வந்துவிட்டார்

## தப்பியோடியவர்களை அதிரடியாக மடக்கியவர்கள்


ராஜா


பரமேஸ்

ஏற்கனவே நான் கண்ட கார்த்திகாவும், அவளோடு வந்தவனும் மிக வேகமாக அருகருகாக றெயில்வே ஸ்ரேசன் பக்கம் செல்வதைக் கண்டேன். அப்போது எங்களது வீட்டுக்கு எதிரில் இருக்கும் டெயிலர் சொப்பின் அண்ணன் பரமேசும் பக்கத்து கராஜ்ஜில் இருக்கும் மெக்கானிக் அண்ணன் ராஜாவும் ஓடிவந்தார்கள். அவர்கள் அம்மாவின் உடலைக்கண்டதுமே "நான் கையால் காட்டிய திசையில் ஓடினார்கள்" என்றாள் மகள் தர்மிகா.

இதுபற்றி மெக்கானிக் ராஜா சொல்வதைக் கேட்போம். கொலையாளிகள் இருவரும் இரத்தக்கறையோடு ஒட்டமும் நடையுமாக செல்வதைக்கண்டு எனது திறீவிலரில் துரத்தினேன். என்னோடு டெயிலர் பரமேசும் இணைந்து கொண்டார். எங்களது தற்பாதுகாப்புக்காக ஆளுக்கொரு இரும்புக் கம்பியை எடுத்துக் கொண்டோம்.

ஆட்டோவின் வேகத்திற்கு அவர்களால் எதுவும் செய்ய முடியாது போய்விட்டது. இறுதியில் தாமரைக்கேணி ஒழுங்கையில் வைத்து அவர்களை மடக்கிப்பிடித்தோம். ஆட்டோவில் ஏறச் சொன்னோம் ஏறவில்லை. இதற்கு அப்பால் நாம் பலாத்காரத்தை பாவிப்பதை தவிர வேறுவழியில்லை. நன்றாக அடித்து ஓட்டோவில் ஏற்றினோம். கொள்ளையர்களின் மேலும், கொலையாளிகளின் மேலும் பலாத்காரம் பாவிப்பதில் தவறில்லையென எங்கேயோ, எப்போவோ வாசித்தது என் ஞாபகத்திற்கு வந்தது.

அவர்கள் இருவரையும் ஏற்றிக் கொண்டு வரும்போது கொலையாளியான பெண் சொப்பிங் பையை ஆட்டோவின் சீற்றுக்குப் பின்னால் வைப்பதை பார்த்தேன். அது என்ன வென்று கேட்டேன். அது என்ர சாமான் என்று கூறினாள். அதைத் தருமாறு கேட்டேன். தர மறுத்தாள். நன்றாக ஓங்கி முழங்கையால் அவளது முகத்தில் ஒரு குத்துவிட்டேன். அதன் பிறகே அதைத் தந்தாள். அதைப் பார்த்தேன். இரத்த வாடை வீசியது. அந்த சொப்பிங் பைக்குள் காதின் பாகமும் தலைமயிர் கத்தையோடு தாலிக்கொடியும் மூக்கின் பாகத்தோடு முக்குத்தி என்பனவும் இருந்தன. எமது ஆட்டோ செல்வி அக்காவின் வீட்டுக்கு வந்தபோது அவ்விடத்திற்கு பொலிஸார் வந்துவிட்டனர். அவர்களிடம் இவர்கள் இருவரையும் தடயப்பொருட்களையும் பாரம் கொடுத்தோம்.

இதற்கு ஓரிரு நாட்களின் பின்பு என்னையும், பரமேசையும் மட்டக்களப்பு சிவில் அமைப்பினர் மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் நடந்த சிவில் அமைப்பின் வருடாந்த ஒன்று கூடலுக்கு அழைத்து நாம் இந்த விடயத்தில் வெளிக்காட்டிய துணிகரத்திற்காகவும், தன்னலமின்றிய பொதுச்சேவைக்காகவும் எமக்கு பொன்னாடை, போர்த்தி மலர் மாலைசூட்டி பொன்முடிப்புத் தந்து கௌரவித்தார்கள் இந் நிகழ்விற்கு அதன் தலைவர் எஸ். மாமாங்கராஜா தலைமை தாங்கினார், பிரதம அதிதிகளாக அரசாங்க அதிபர்.கே.கருணாகரனும், இராணுவக் கட்டளைத் தளபதி கே.எல்.எம் பண்டாரவும் வந்திருந்தனர். எமது துணிகரச் செயலையும், எமது அஞ்சாமையையும் மற்றவர்களுக்கு உதவும் மனப்பானமையையும் பலர் பாராட்டிப் பேசினார்கள், எம்மை வாழ்த்தினார்கள். அவையெல்லாம் எமக்கு உரமூட்டின. எம்மை மகிழ வைத்தன. எம்மைப்போன்று தீமைகளையும் அநீதிகளையும் அனைவரும் எதிர்க்க வேண்டும் அப்போதுதான் தீய சக்திகள் சாய்ந்து விழும்! என்று கூறி முடித்தார் மெக்கானிக் ராஜா.

**எஸ்.எஸ். தவபாலன்**
படங்கள் :
**புளியந்தீவு குறூப் நிருபர்**



# போதைப் பழக்கமும் மனிதவள சீர்குலைவும்

## இலங்கையில் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் போதைப் பழக்கத்துக்கு ஆளாகியுள்ளனர்

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை 1984 ஆம் ஆண்டு 11 ஆம் இலக்க அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபைச் சட்டத்தின் கீழ் விசேடமாக உருவாக்கப்பட்ட ஒரு சபையாகும். இச்சட்டத்தின் மூலம் சட்ட விரோத போதைப் பொருட்களுக்கு எதிராக செயற்படுவதற்குத் தேவையான அதிகாரங்கள் வழங்கப் பட்டுள்ளன.

போதைப்பொருட்கள் சம்பந்தமான சட்ட உருவாக்கம், போதைப் பொருளுக்கு எதிரான தேசிய கொள்கை உருவாக்கம், போதைப்பொருள் சம்பந்தப்பட்ட சர்வதேச உடன்படிக்கைகளை இலங்கையில் செயற்படுத்தல், மருத்துவத் துறையில் பயன்படுத்தும் போதைப்பொருட்களாக துஸ்பிரயோகப்படுத்தப்படக்கூடிய இரசாயனங்களை கட்டுப்படுத்தல் மற்றும் விநியோகத்தினை மேற்பார்வை செய்தல், போதைப் பொருள் உற்பத்திக்கான மூலப்பொருட்களாக பயன்படுத்தப்படக்கூடிய இரசாயனங்களின் இறக்குமதி, விநியோகம், களஞ்சியப்படுத்தல் மற்றும் பயன்பாடு தொடர்பான கட்டுப்பாடுகளை விதித்தல் போன்ற சட்ட நடவடிக்கைகளோடு, சம்பந்தப்பட்ட தடுப்பு அதிகாரங்களைப் போன்றே போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கான சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளித்தல், போதைப்பொருள் சிகிச்சை மற்றும் புனர்வாழ்வுச் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனங்களை தரக் கட்டுப்பாடுகளுக்கு ஏற்ப மேற்பார்வை செய்தல், சமூகத்தில் பல்வேறுபட்ட தரங்களிலும் போதைப்பொருளுக்கு எதிரான அறிவூட்டல் நிகழ்வுகளை முன்னெடுத்தல், சமூக மட்டத்தில் போதைப் பொருளுக்குஅடிமையானவர்களுக்கான சிகிச்சைகளை மேற்கொள்ளல் மற்றும் சிகிச்சைக்குப் பின்னரான தொடர் கண்காணிப்புகளைச் செய்தல் போன்ற சமூகநலன் சம்பந்தப்பட்ட விடயங்களை செயற்படுத்துகின்றது.

முன்னைய காலத்தில் ஒரு சில வகையிலான போதைப்பொருட்களே பாவனையில் இருந்தாலும் தற்போது புதுப் புது போதைப்பொருட்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை காணக்கூடியதாக இருக்கின்றது. இவற்றுள் சிறு பிள்ளைகள் உண்ணக்கூடிய உணவு வகைகள் முதல் பல இலட்சக் கணக்கான பெறுமதி வாய்ந்த இரசாயனங்கள் வரைக்கும் உள்ளன.

மன அழுத்தத்தினை ஏற்படுத்தக்கூடியவை, தூண்டிகளாக செயற்படக் கூடியவை, கஞ்சா சார்ந்த உற்பத்திப் பொருட்கள், மாயத் தோற்றத்தினை உண்டு பண்ணக்கூடியவை, அபின் சார்ந்த உற்பத்திகள், தடை செய்யப்பட்ட ஊக்கமருந்துகள் என ஆறு வகைக்குள் போதைப்பொருட்களை உள்ளடக்க முடியும்.

இலங்கையைப் பொறுத்தவரை பிரதானமாக இரு வகையான போதைப் பொருட்களே பயன்பாட்டில் உள்ளன. அவை சட்ட ரீதியாகக் கட்டுப்படுத்தப் பட்ட போதைப்பொருட்கள். மற்றும் சட்ட விரோதப் போதைப்பொருட்கள். இலங்கை கலால் வரித் திணைக்களம் மற்றும் புகையிலை, மதுபானங்கள் மீதான தேசிய அதிகார சபை மற்றும் பொலிஸ்துறை போன்றவையும் சட்ட விரோத போதைப்பொருள் தொடர்பாக தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையும் செயற்படுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை ஒரு இலட்சத்திற்கும் அதிகமான போதைப்பொருள் பயன்பாட்டாளர்கள் இருப்பதாக ஆய்வு அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இப்பாவனையினால் பொருளாதார அழிவுகள் ஏற்படுத்தப்படுவது போன்றே சுகாதார சமூக ஆன்மீகப் பாதிப்புக்களும் ஏற்படுவதுடன் கலாசார சீர்குலைவும் சட்ட விரோத செயற்பாடுகளின் அதிகரிப்பும் ஏற்படுத்தப்படுகிறது.

மேலும் இளைஞர்கள் போதைப் பொருளுக்கு அடிமையாகும் போது நாட்டின் தொழிற் படையணி குறைவடைவதுடன் தங்கி வாழ்வோரின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது. போதைப் பொருளின் நீண்டகால பயன்பாட்டின் விளைவாக இளவயது உள நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து செல்கின்றது. மேலும் மலட்டுத்தன்மை, புற்று நோய் போன்ற பிரச்சினைகள் பயன்படுத்துபவருக்கு மாத்திரமன்றி பயன்படுத்தக்கூடியவர்களை அண்டி வாழக்கூடியவர்களுக்கும் ஏற்படும் வாய்ப்புக் காணப்படுகின்றது.

போதைப்பொருள் பயன்படுத்தும் ஒருவருக்கு மருத்துவச் சிகிச்சை, உளவளத்துணை, தொழில் முன்நிலைச் சிகிச்சை முறைமை, உதவிக் குழுக்களைக் கொண்டு சிகிச்சையளித்தல் அல்லது மேற்குறிப்பிட்டவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட கலப்புச் சிகிச்சை முறைகளை செய்வதன் மூலம் சிகிச்சையளிக்க முடியும். இதில் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் சிகிச்சை நிலையங்களில் உளவளத்துணை சிகிச்சை முறையே பின்பற்றப்படுகின்றது.

போதைப்பொருள் பாவனையில் இருந்து விடுபடக்கூடிய ஒருவர் உடல் நடுக்கம், காய்ச்சல், மூட்டு வலி, தசைப் பிறழ்வு, வாந்தி, வயிற்றோட்டம், பசியின்மை, தூக்கமின்மை, அதீத கோபம் போன்ற பல்வேறு அசெளகரியங்களை தான் மீண்டு வரும்போது அனுபவிப்பார்.

இத்தகைய அசௌகரியங்களை விட்டு வெளிவருவது கடினமான ஒரு விடயமல்ல. இருந்தாலும் இச்சந்தர்ப்பங்களில் வைத்திய உதவிகளை போன்றே குடும்பத்தினரின் உதவியும் குறித்த நபருக்கு தேவைப்படக்கூடிய அத்தியாவசிய விடயமாக காணப்படும். இவ் விடயங்கள் இரண்டும் சரியான முறையில் கிடைக்கப்பெறும் போது குறித்த நபர் போதைப்பொருள் பாவனையை விட்டு மீளக் கூடியதாக இருக்கும். பெரும்பாலும் போதைப் பொருள் பயன்பாட்டினை நிறுத்த முயற்சிப்பவர்கள் மீண்டும் போதைப் பாவனையின் பக்கம் செல்வதற்கான பிரதான காரணிகளுள் ஒன்றாக கருதப் படுவது சரியான உதவிகள் கிடைக் காமையே என்ற இரு வழிகளின் மூலம் மட்டுமே சாத்தியம். இதில் போதைப்பொருளுக்கான கேள்வியைக் குறைத்தல் அல்லது இல்லாது ஒழித்தல் என்பது நூறு வீதம் போதையற்ற சமூகத்தை உருவாக்குவதற்கான மிகச் சிறந்த முறையாகும்.

மேலும் இதற்கான உளவியல் ரீதியான அடித்தளம் ஆரம்பத்திலேயே அமைக்கப்பட வேண்டும். கருத்தரித்த தாய் ஒருவர் தொலைக்காட்சிகளில் காட்டப்படும் போதைப் பொருள் பயன்படுத்தக்கூடிய காட்சிகளை பார்த்து ரசிக்கும் பொழுது கருவிலே இருக்கக் கூடிய குழந்தையும் அதே விடயத்தினை கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றது.

ஆகவே அடுத்த கட்டமாக குழந்தைக்கு இரண்டு வருடங்கள் பூரணமாக தாய்ப்பால் ஊட்டுவது, அக்குழந்தை எதிர்காலத்தில் போதைப்பொருள் பாவனையை விட்டு தடுக்கக் கூடிய விடயமாக இருக்கும். அதே போன்று குழந்தைகளிடத்தில் தோல்வியை தாங்கக் கூடிய மனப்பாங்கை வளர்த்தல், பிழையானவற்றிற்கு எவ்விதப் பயமும் இன்றி இல்லை என்று சொல்லக் கூடிய தைரியத்தை வழங்கல் போன்றவற்றை பெற்றோர்களே வழிகாட்டிகளாக இருந்து வழிப்படுத்த வேண்டும்.

**மண்டூர் குறூப் நிருபர்**

# உனக்கென்ன மேலே நின்றாய்!

"அமரரிடர்தீர வமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி...". 'சன் டிவி'யில் கந்தப் பெருமானுக்கு காலைநேரப் பாலாபிஷேகம். நீராடித் தெறித்தோடிய பாலாயினும் கொஞ்சம் போராடித் தெற்கால திருப்பி விடுங்களேன் என்றது கெட்ட மனசு. இல்லை. ஒரு இலங்கைப் பிரஜையாய் பாவப்பட்ட மனசு!

"ராம்! இன்று குழலிக்கு கன்சல்ட்டிங்". மெல்லிய, மென்மையான, படித்த, ஜீன்ஸ், டொப் அணிந்தாலும் பரம்பரைப்பண்புகள் குறையாத இரண்டாயிரத்து இருபதுகளின் இளம் மனைவி சுகந்தி.

"தெரியும் சுகந்தி.. மறப்பேனா? மூன்று வருட வேதனை! இன்று தான், ஒரு வருடமாய் நாம் கலண்டரில் எண்ணி எண்ணி காத்திருந்த அந்த நாள்.. Pediatric Orthopedic Surgeon Joe E.Gordon என்ற கடவுளைக் காணும் வரம்!"

"ஆமாம்.. வைக்காத நேர்த்தி இல்லை ராம்.. இன்றோடு இவளுக்கு ஒரு விடிவு வந்திடுமென்று கடவுள் மீது அதி அபார நம்பிக்கை".

"உனக்கு மட்டுமாம்மா..? உயிரைக்கையில் பிடித்து ஓட்டிக்கொண்டிருந்தோம் surgeon Gordon ஐக் காண.. இன்று அந்த பொன்னாள்..! Dr.அஜய்யின் எக்ஸ்ப்லனேஷன் படி இவளுக்கு இன்றோடு நல்ல நாள் பிறக்கும் சுகந்தி..".

"நிச்சயமா ராம்.. மாரியம்மா காட்டி விட்டாள் என் கனவில் வந்து.. அவள் ஓடி விளையாடும் காட்சி. இரண்டு மாதங்களில் முழுமையாய் அவளால் ஓடக்கூட முடியும் என்று அஜய் வேறு, கன்போம் பண்ணிட்டார்.. சரியாகிடும்.. அடுத்த மாதம் மாரியம்மனுக்கு மண்டபம் ஒன்று கட்டிக்கொடுக்கணும் பெரிய பட்ஜெட்டில்.. எவ்வளவு செலவானாலும் சரி"

"நிச்சயமா சுகந்தி".

ப்ளேய் ஸ்கூலில் ஏனைய குழந்தைகளால் வேற்றுக்கிரக ஜந்து போலவே நடத்தப்பட்ட குழலியை ஆசிரியைகள் மட்டுமே அதீத சிரத்தையெடுத்து அரவணைத்து அவள் மனதையும் உணர்வுகளையும் முடிந்தளவு பாதுகாத்து வந்தார்கள்.

பிறந்தது முதலே அவளது வலது கால் சரியாக இயங்காது அவளுக்கு. அவளது இரு கால்களின் தசை நாண்கள் (tendons) சம நீளத்திலில்லை. அப்பம்மா, அம்மம்மா முதல், குடும்பத்தில் எல்லோருக்குமே குழலியின் ஆரோக்கியம் பற்றிய ஆலோசனைகள், கலந்துரையாடல்கள் தான் அவ்வப்போது பிரதான இடத்தை பிடித்து வருகின்றன அவளது பரிதாப அவதாரம் முதல்.

ஊராரின் அனுதாபப் பார்வை வேறு. "கதிர்காமத்துக்கும் ஒரு நேர்த்தி வையுங்கோவேன்" "நயினைக்கு ஒரு தங்கக் கால் செய்து குடுங்கோவன்.. பிள்ளையின் கால் முக்கியமா? காசு முக்கியமா?" என்றெல்லாம்.. சம்பிராதாய அக்கறை இன்றேல் சமூகம் இல்லை என்பதை அவ்வப்போது ஞாபகமூட்டும் அளவீட்டு அன்புகள் ஒருபுறம்.

அவளுக்காகவே மோட்டார் சைக்கிளில் வசதியான ஒரு இருக்கை நிரந்தரமாக பொருத்தியிருந்தார் குழலியின் தந்தை, சாப்ட் வேர் என்ஜினியர் ராம். குடும்பத்துக்கெனவே வரம் பெற்று வந்த குலமகன். ராம், சுகந்தியின் இதயத்துடிப்பு குழலி. அவ்வாறு தான் கவனித்து வளர்க்கிறார்கள் அவளை அவர்கள்.

அவளுக்கான இருக்கையில் பக்குவமாய் இருந்தப்பட்டாள் குழலி அவள் தாயால். ராம் பைக்கில் அமர்ந்து கொண்டார். குழலியின் மெடிக்கல் ரிப்போர்ட்ஸ் அடங்கிய பைலை ராமிடம் கொடுத்தாள் சுகந்தி. இந்த ரிப்போர்ட்ஸ் எல்லாமே ஈமெயில் செய்து, சர்ஜன் கொர்டோன் ஸ்ட்டடி பண்ணி, நிச்சயமாக சரியாக்க முடியும் என்று கூறிவிட்டார். கடந்த வருடமே. கோவிட் அனர்த்தம் கொர்டோனின் இலங்கை விஜயத்தை தள்ளிபோட்டது. அஜய் கூறிய அந்த நாள், கடவுளிடமிருந்து அதிஷ்டமான வட்ஸப் கோல் கிடைத்த நாள் இவர்களுக்கு.

"சுகந்தி, I'm really sorry ம்மா.. இன்று உனக்கு நீண்ட மாதங்களாய் எதிர்பார்த்திருந்த ப்ரோமஷனிற்கான நேர்முகப்பரீட்சை.. வழமையாய் நான் தான் உன்னை அழைத்துச் சென்று உனக்கு உற்சாகம் தந்து ஆதரிப்பேன்.. இன்று என்னால் அந்தக் கடமையை செய்ய முடியவில்லை..".

"ஐயோ என்ன ராம் இது.. இப்டி எல்லாம் பேசி.. மனசுக்கு கஷ்டமா இருக்கு.. உங்களை தெரியாதா எனக்கு? இன்று குழலி தானே நமக்கு முதல்..".

"ம்ம்.. நான் கூடவே வந்ததாய் நினைத்து தைரியமா பண்ணிக்கோம்மா.. கடவுள் நம்மோடு இருப்பார்.. ஆ, இன்னிக்கு எங்கம்மாக்கு வேறு செஸ்ட் க்ளினிக் செக்கப் டேட் இல்ல.. காலைலயே கோல் பண்ணி சொன்னேன்.. இன்றைக்கு த்ரீ வீலர் ஒன்று எடுத்துக்கொண்டு போயிடுங்க டைம்க்கு என்று.. என்ன பண்றாங்களோ தெரியல.. எல்லாப் பிழைகளுக்கும் கடவுள் என்னை மன்னிக்கணும் இன்று..".

"சும்மா மனச குழப்பிக்காம இவளை நேரத்துக்கு கூட்டிப்போங்க.. உங்கம்மாவும் இவளின் கன்சல்ட்டிங் பற்றித்தான் முதல் முதல் கேட்கும் வினை தீர்க்கும் விநாயகரின் வேத வாக்கானது!

குழந்தைக்கேற்ப அளவான வேகத்தில் பைக் ஓடியது."அப்பா!"

"கண்ணா"

"டொக்டர் மாமாட்ட போனப்றகு நான் நடப்பன் தானேப்பா..?"

"நடப்பியா.. துள்ளி விளையாடுவே கண்ணா..".

"அப்ப எனக்கு 'மற்ஸ் குயிஸ்' ல ப்ரைஸ் கிடைச்ச எண்ட சைக்கில் இனி நான் ஓடலாமாப்பா?".

"நிச்சயமா கண்ணா.. நீயும் நானும் சைக்கில் ஓடி அப்பம்மா வீட்டுக்கு போவோமே.." "மாரியம்மனிடம் பொடிநடையாய்ப் போய்டுவோம்".

ரோஜா பூத்தது.. "ஹை.... Thank god".



தொடர்ந்து ஓட்டோவை விலகாதவராய் அதே நடமாட்டத்தில். எப்படியாவது யாரிடமும் கொஞ்சம் பெட்ரோல் பெற்றுவிடும் அடங்காத லட்சியமாக இருக்கலாம்.

அந்த அவரது அழுத்தமான லட்சியத்தின் அருவருப்பு புரியத் தெரியாத குழந்தை குழலி, "அப்பா அந்த மாமாக்கு கொஞ்சம் பெட்ரோல் குடுப்பமே.. பாவம்.. எல்லாரும் திட்றாங்க.. அந்த அக்காக்கும் அண்ணாக்கும் ஸ்கூல் லேட் ஆகுது..".

"அது வந்து..குழலி, இன்று நாம் இதை கவனிக்க முடியாதும்மா.. டொக்டரை டைம்க்கு பார்க்கணுமா இல்லையா.. ம்ம்.. நாங்க போய்டலாம்".

"அப்பா அப்பா.. பாவமா இருக்கேப்பா.. இன்னும் எத்தின பேர்ட்ட திட்டு வாங்கப் போறாரோ..".

"இப்ப என்ன.. பெட்ரோல் குடுக்கணும்.. அவ்ளோ தானே.."

"ம்ம்.."

"நீ அப்டியே கவனமா பைக்க பிடிச்சுக்கோம்மா.. டேங்க்ல இருந்து தான் எடுத்துக் கொடுக்கணும்.."

"ம்ம்.. Ok ப்பா".

பக்கத்து கடைக்காரரிடம் வெற்றுப் போத்தலொன்று கேட்டு, கடைக்காரர் தேடி ஒருவாறு எடுத்துக் கொடுத்த போத்தலில், ராம் தன் பைக் டேங்க்கிலிருந்து எடுத்துக் கொடுத்த பெற்றோலை மிக உரிமையான தோரணையோடு வாங்கி போத்தலோடு மளமளவென்று ஓட்டோ பெட்ரோல் டேங்க்கில் ஊற்றினார் ஓட்டோக்காரர்.

"அப்பா.......!!!"

"ஸ்டாண்ட்டில் சரிந்து நின்ற பைக்கில் தொடர்ந்து இருந்த குழலி, கால் முடியாமல் வழுகி விழ.. ராம் பதறி ஓடிப்போய் ஒருவாறு குழந்தையைத் தாங்கி ஏந்தினார். ஆனாலும் லேசாக கால் மடங்கியது குழந்தைக்கு.

வேண்டியதைப் பார்க்கலாம்.. நடந்து போய் பெட்ரோல் வாங்கலாமா.. இல்லை, குழலியை விட்டுப்போகவே முடியாது.

நண்பனொருவனுக்கு போன் செய்தான். "நீங்கள் அழைத்த இலக்கம் பிறிதொரு அழைப்பிலுள்ளது".

அலுவலக ' பொஸ்'க்கு போன் செய்தான். அவர் நிச்சயம் உதவுவார்.

"The number you have dialed is switched off".

"சேர் மீட்டிங்ல.. தெய்வமே..!".

வழமையாய் ராம் ஒன்று கேட்டால் பத்து செய்யக் காத்திருக்கின்ற மேலும் பல தொடர்புகளின் முயற்சிகளுமே இன்று விதியின் வக்கிர பிடியில்.

"மகள் வலியில் கொஞ்சம் அசௌகரியப்படுவது தெரிந்தது. அவளின் காலை மீண்டும் நீவினான்.

ஓட்டோக்காரர் அந்தக் கடைக்காரரிடம், "அண்ணை, ரெண்டு ரொட்டி எடுத்தனான், இந்தாங்கோ" என்று காசைக்கொடுத்து, ஓட்டோவில் தன் பிள்ளைகளிடம் ரொட்டிகளைக் கொடுத்தார்.

"இந்த சிக்கல்ல உங்களுக்கு மீண்டும் பசியெடுத்திருக்கும். சாப்பிடுங்கோ ரெண்டு பேரும்..".

ஓட்டோக்காரரின் ஓட்டோ, அவரோடும், பிள்ளைகளோடும் பறந்து சென்றது. கடைக்காரர் அந்த ஓட்டோவையே வெறித்துப் பார்த்தார். அவரின் உள்ளம் குமுறியதை முகம் முழுதாகக் காட்டியது.

ராமின் அலைபேசி கிணுகிணுத்தது.

"என்ன மிஸ்டர் ராம்?! இப்டி செய்திட்டீங்களே?? ஆ.. கொஞ்சமாவது ஒரு பொறுப்பு.. உங்க டோட்டர் மேல ஒரு அக்கறை இருக்கா?? ஆ..?? இப்படியா கேர்லஸ்ஸா நடந்துக்கிறது?? சே, எவ்வளவு இரக்கமும் மதிப்பு மரியாதையும் வைத்திருந்தேன் உங்க மேலயும் உங்க குழந்தைக்காகவும்.. நான் எதிர்பார்க்கவே இல்லை.. இங்க வே ற பேஷண்ட் யாரும் இல்லாத போதும் உங்க டோட்டார்க்காக கால்ல விழாத குறையா கொழும்பிலிருந்து கூப்பிட்டெடுத்தன் சர்ஜன் கொர்டோனை.. அந்தாளைப்பற்றி ஏற்கனவே சொல்லியும் இருந்தன்.. Fourty five minutes wait பண்ணிட்டு, அவசரமா கோல் ஒன்று வர 'Sorry Ajai.. I'm so sorry.. I travelled from colombo particularly for you.. for your sincere request for that child.. Anyway, may god save her.. Contact me at any time over the phone.. Lemme try on my next visit to sri lanka.. But god only knows about it..' என்று.. வெளிக்கிட்டார். எத்தனை தரம் உங்களுக்கு dial பண்றது.. போன் வேறு என்கேஜ்.. Actually I'm so so confused about you Mr.Ram.. You've known well ram, he's from St.Louis, Missouri, US. நான் எதிர்பார்க்கவே இல்ல உங்களை இப்படி.. Extremely sorry.. ".துண்டிப்பு.

ராமிற்கு லேசாய் தலை சுற்றி மயக்கம் போல்.. ஒரு கை தலையைத் தாங்க.. மறுகை குழலியின் காலைத்தாங்க.. நெஞ்சாங்கூடு வெறித்து வெற்றிடமாகி.. அப்படியே தெருவோரமாய் அவனை இருத்தியது உணர்வுகள் ஒன்றாய் சிதைந்துபோன ராமின் வெற்றுயிர்!!

பெற்றோலை ஓட்டோ டேங்கில் ஊற்றிய பின் ஓட்டோக்காரர் வீசி எறிந்துவிட்ட வெற்றுப்போத்தல், அருகில் உருண்டு காற்றில் ஆடி ஆடி அவமானப்படுத்தியது ஒரு பிரபல சாப்ட் வேர் எஞ்சினியரையும், ஒரு முடமான மூன்று வயது அப்பாவிப் பெண்குழந்தையையும்!!

அவள் வாழ்க்கை மீண்டும் விடையறியாத கேள்விக்குறியாகியதை, பாவம் இன்னும் அறியாத புதுரோஜா.

"அப்பா! நாங்க குடுத்த பெட்ரோல், ஓட்டோல ரெண்டு பேரை ஏத்துறதுக்குத் தான் காணும்போல.. இல்லாட்டி அந்த மாமா எங்களையும் ஏத்திக்கொண்டு போயிருப்பாரென்ன?".

"உனக்கென்ன மேலே நின்றாய்.. ஓ நந்தலாலா..!!" கடையிலிருந்த வானொலியின் பெருமூச்சு.

நேற்று முழுக்க சொல்லிக்கொண்டே இருந்தார். நான் பார்த்து அனுப்பி வைக்கிறேன் அவரை.."

"ம்ம்.. ok ம்மா"

"குழலி அம்மாக்கு Bye சொல்லும்மா". "Bye ம்மா.." குழலியின் பிஞ்சுமுகம் பார்ப்போருக்கெல்லாம் ஆற்றலுடன் அப்பாவித்தனத்துக்கும், பரிதாபத்துக்கும் வரைவிலக்கணம் வகுத்துக் கொடுப்பது.

"போய்ட்டு வா கண்ணா.. இன்றோடு உன் வாழ்வில் விடியல்தான்..". கருப்பையின் கருவாக, உள்ளங்கையில் உயிராக வாரி முத்தமிட்டாள் சுகந்தி குழந்தையை.

"ராம்! அஜய் சொன்னது ஞாபகமிருக்கு தானே.. எக்கச்சக்கமான பிசி அந்த சர்ஜன். பேஷன்ட்ஸ் இல்லாட்டி கிளம்பிடுவார் எண்டவர். திரும்பி யு. எஸ் கிளம்பினா இனி எந்த நூற்றாண்டோ தெரியாது..".

"தெரியும் சுகந்தி.. இதை விட என்ன முக்கியம் எனக்கு.. நான் பார்க்கிறேன்மா.. இதையே போட்டு குடைஞ்சுக்காம இன்டவியூ ல கவனத்தை செலுத்துங்க.. புரியுதா? ".

"ம்ம்.. ok".

வழமையான காலை நேர நகர போக்குவரத்துக் கொடுமைகள் தெருக்களில் குறைவின்றி அன்றும். ஆனாலும் அவற்றிலும் ஒரு தெய்வீக வாடையைக் கொடுத்து ஐ.சி.யுவில் இருக்கும் ஆத்மாவுக்கு வென்ட்டிலேட்டர் போல் ஆங்காங்கே கோயில்களில் காலை நேர தெய்வீகங்களால் நகரத்துக் கடவுளர்கள் காக்கவும் தான் செய்தார்கள்.

"பிள்ளையார் சுழி போட்டு... நீ நல்லதைத் தொடங்கி விடு.."

ஒரு நாள் தவறாமல் பிள்ளையார் கோவில் சீடி தொடக்கி விடும் அலுக்காத முதல் பாடலானாலும், ராமிற்கு என்னவோ அன்று அது என்னது இவ்வளவு நெருக்கடி முன்னால்.. ஓட்டோ ஒன்று நடுத்தெருவில் நாணமற்ற பெண் போல்.. ஓட்டோக்காரர் கீழே இறங்கி நின்று பூமி தன்னைத்தானே சுற்றுவது போல் சுழல்கிறான். ஓட்டோவின் பின்சீட்டில் நகர பாடசாலையொன்றின் மேல்பள்ளி மாணவனும், மாணவியும் தெருவை வேடிக்கை பார்த்த வண்ணம்.. அவரது பிள்ளைகள் என்று தெளிவாகப் புரிந்தது.

ஏற்கனவே இருந்த போக்குவரத்துக்கு நெரிசலை இந்த ஓட்டோ பன்மடங்காக்கிய சலிப்பு தாங்க முடியாத பயணிகள் ஆளாளுக்கு ஓட்டோக்காரருக்கு சாபங்களை லொறி லொறியாய்க் கொட்டிக்கொண்டு தாண்டிச் சென்று கொண்டிருந்தார்கள்.

அவரோ தன் மானத்தை விற்ற தமிழனாய் தொடர்ந்து திணறிக்கொண்டே இப்போ சூரியனையும் சேர்த்து சுற்றுகிறார்.

"ஓட்டோவைச் சுற்றி வந்து என்ன புண்ணியம் அண்ணை.. நாப்பது மீ ட்டர் தூரத்தில தானே ஷெட் இருக்கு.. விறுவிறெண்டு நடந்து போய் பெற்றோலை வாங்கிக்கொண்டு வாங்கோ.. ".

"இதெல்லாம் இரவு பாத்து வைக்கிறேல்ல.. காலங்காத்தால மனுசற்ற உயிரெடுத்துக் கொண்டு.. சே, கொஞ்சமும் விவஸ்தையில்லாததுகள்..".

காட்சியில் குரல் கொடுத்தவர்களின் சம்பாஷணைகள்.

ஓ, இதுதான் பிரச்சனையா? மெதுவாய் பைக்கை நிறுத்தி குழப்பத்துடன் நின்றிருந்த ராம் விஷயமறிந்து தெளிந்தார்.

ஆனால் ஓட்டோக்காரர் அவர்களின் எந்த வார்த்தைகளுக்கும் எந்த வெளிப்பாடுகளுமற்றவராய் ஒரு அதீத சுயநிர்ணய பாவத்துடன், ஜனாதிபதி வருகையின் போது தீவிர கண்காணிப்பு கடமையிலுள்ள ராணுவ வீரர் போல்

"Sorry ப்பா.. கொஞ்சம் கஷ்டமா போச்சு.. Sorry".

"எதுக்குடா Sorry..? கால் வலிக்குதா?"

"பெரிசா இல்லப்பா..".

அவதானித்த கடைக்காரர் கதிரையொன்றைக் கொண்டு வந்தார். ராம் மகளை அதில் இருத்தினார் மெதுவாக.

"தம்பி, கொஞ்சம் நீவி விடுங்க பிள்ளைக்கு"

"தாங்க்ஸ் அண்ணை.."

கடைக்காரருக்கு குழலியின் பிரச்சனை தெரியாதே.

ராம் மெதுவாய் நீவி விட்டார். அவள் கஷ்டப்படுவது புரிந்தது. தாங்க முடியாமல் மனம் பதைத்தது ராமிற்கு.

எப்படியாவது போய் சேர்ந்து விடவேண்டும் டொக்டரிடம். ராம் பைக்கை ஸ்டார்ட் செய்தார். ஸ்டார்ட்.. ஸ்டார்ட்.. ஸ்டார்ட்.. ஆனால் ஓரிரு 'டுர்...' தான்.. "டுர்.." தொடரவில்லை.

"என்னாச்சு தம்பி?"

"My god... பெட்ரோல் போதாது..".

"ஈஸ்வரா...! என்ன தம்பி? பதற்றத்தில் பார்க்காமல் நிறைய குடுத்திட்டீங்களோ..? தனக்குப்பின் தான் தானம் தம்பி..".

ராம் தன் தம்பிக்கு போன் பண்ணினார். "அண்ணா, உனக்குத் தான் எடுக்க வந்தேன்.. நீயே எடுக்கிறாய்.. அண்ணி அம்மாவை க்ளினிக் ஏற்றிப்போக முடியுமா என்றார்கள். ஏற்றிப்போனேன். என்னவோ தெரியவில்லை.. இன்று கொஞ்சம் ப்ரெஷர் அதிகமாம். குழலி பற்றி டென்ஷனா இருக்கலாம். அட்மிட் பண்ண சொன்னார்கள். நான் நிக்கிறன் பக்கத்தில்..நீ யோசிக்காதே.. குழந்தையைப்பார்".

"கடவுளே...!!!" ராமின் கண்களில் அடிக்கடி வரும் நீர்த்துத்துளி தான்.. இன்று கொஞ்சம் அழுத்தம் அதிகம். என்ன செய்வது.. சரி, ஆக

**பானு சுதாகரன் ...**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 07

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | 04 | | ■ | 05 |
| 06 | | ■ | 07 | | ■ | 08 | |
| 09 | | 10 | ■ | 11 | 12 | | |
| 13 | | | ■ | 14 | | | |
| 15 | | | 16 | ■ | 17 | | |
| ■ | ■ | 18 | | 19 | | ■ | ■ |
| 20 | 21 | ■ | 22 | | | 23 | 24 |
| 25 | | ■ | 26 | | ■ | 27 | |

**திரு/திருமதி.செல்வி** ..............................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

**முகவரி** ..............................................

..............................................

..............................................

.............................. ..............................

**திகதி** **கையொப்பம்**

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :07

**இடமிருந்து வலம்**

(01) பல நாடுகள் போராடிப் பெற்றது.
(06) தோழன் திரும்பிவிட்டான்.
(07) சுவை.
(08) பிழையற்றது.
(09) மனைவி.
(11) நடுப்பகல் நேரம்.
(13) தேர்.
(14) வனம்.
(15) இராமாயணம் தந்த பெருமகன் குழம்பிவிட்டான்
(17) இதுவும் மலர்கொண்டு கட்டப்படுவதுதான். (குழம்பியுள்ளது)
(18) ஆண்டவனின் அடியார்.
(20) பல்வகைப் பயன்தரும் மரம்.
(22) ஆகாயத்தின் மத்திய பகுதி குழம்பிக் காணப்படுகிறது
(25) நீர்நிலைப் பகுதிகளில் காணப்படுவது. (திரும்பியுள்ளது)
(26) இதுவும் ஒருவகை மரம். (திரும்பியுள்ளது)
(27) விளக்கு எரிக்க உதவுவது. (வலமிருந்து இடம்)

**மேலிருந்து கீழ்**

(01) தற்போதுள்ள காலகட்டத்தில் இந்தப் பாதுகாப்பு மிகப் பிரதானம்.
(02) இராமாயண கதாபாத்திரங்களுள் ஒன்று.
(03) செல்வம்.
(04) இயலாத நிலையை இப்படியும் சொல்லலாம். (குழம்பியுள்ளது)
(05) கேலி பண்ணுதல். (குழம்பியுள்ளது)
(08) உறக்கம்.
(10) தூண் உடைந்துவிட்டது.
(12) சூரியனுக்கும் குழப்பம் வந்துவிட்டது.
(16) நித்திரைக்கு உரியது. (குழம்பியுள்ளது)
(19) இதுவும் ஒருவகை நோய்தான். (குழம்பியுள்ளது)
(20) சாப்பிடத்தூண்டும் உணர்வு.
(21) தைப்பொங்கல் காலத்தில் இதற்கு மவுசு. (தலைகீழ்)
(23) தந்திரமுள்ள மிருகம்.
(24) வழக்கு தொடுப்பவன்.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 06

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. சூரியோதயம் 06. கனிவு 07. கவி
08. சுகம் 10. தகனம் 12. மண்
14. கட்டை 15. சுருதி 17. வசீகரம்
20. மேம்பாடு 21. கபாலி 23. தைலம்
24.நாரை

**மேலிருந்து கீழ்**

01. சூட்சுமம் 02. யோகம் 03. தனி
04. தயவு 05. விட்டம் 07. கலசம்
09. கண் 11. கடை 13. திரட்டு
15. சுபாவம் 16. கரு 17. சீலம்
18. நாகம் 19. கூலி 20. மேதை
22. பாரை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 05

### பரிசு பெறுவோர்

முதலாம் பரிசு

**த. நாகையா,**
209, பாடசாலை வீதி,
சேனைக்குடியிருப்பு 1,
கல்முனை.

இரண்டாம் பரிசு

**அ. சந்தியாகு,**
34%12, செமனரிவத்த வீதி,
தென்னக்கும்புர,
கண்டி.

மூன்றாம் பரிசு

**எஸ். சத்தியவதனி,**
பிரதான வீதி,
பாலமுனை,
மண்டூர்.

### பாராட்டு பெறுவோர்

**1. என். வினோமதிவதனி,**
இல. 54A, அத்தனகொல்ல வீதி,
லுனுகலை.

**2. யுஸ்ரியா அஹமட்,**
குமாரதுங்க மாவத்தை,
மாத்தறை.

**3. எஸ். சந்திரிகா,**
மட்/மட்/அரசடி பிள்ளையார்
கனிஷ்ட வித்தியாலயம்,
கோவில் வீதி, மட்டக்களப்பு.

**4. ஏ. செபஸ்டியான்,**
இல. 24/2, உடுப்பிட்டிய,
உக்குவளை.

**5. ஏ.எல்.ஏ. அசீஸ்,**
17/A, சிறிமல்வத்த,
தெஹிவளை.

# கசப்பும்.... இனிப்பும்....



தமிழ்மணி மானா மக்கீன்

## கசப்பு 1

மாதமொன்றின் நான்கு கிழமைகளுள் ஒன்றிலாவது **'ஆப்கன் கசப்பை'** நான் வழங்கியே ஆக வேண்டிய கட்டாயத்தை அந்த முஸ்லிம் நாடாகி ஆப்கானிஸ்தான் அளித்தே தீருகிறது.

கசப்புகளை வழங்காமல் இருக்க என் மூத்த பேனையினால் இயலவில்லை. மற்றபடி 'வேறு சரக்கு எதுவும் கையிருப்பில் இல்லையோ என எண்ணி விடாதீர்கள்.



இப்பொழுது அங்கே திருமண வைபவங்களில் இசை நிகழ்ச்சிகள் எதையும் நேரிடையாக நடத்தி மகிழ முடியாது. தடை!

கடந்த வாரம் ஒரு சம்பவம் பாத்திமா மாகாணத்தில் ஸலாம்' ஆறாம் என்ற இடத்தில் ஒரு திருமண நிகழ்ச்சி ஜோராக நடந்து கொண்டிருந்தது. காரணம் இசை நிகழ்ச்சி!

ஆப்கான் ஆட்சியைக் கையில் வைத்திருக்கும் தலிபான்கள் திடீரென உட்புகுந்து இசைக்கலைஞர் ஒருவர் இசைத்துக்கொண்டிருந்த விலை மதிப்பு மிக்க இசைக்கருவியைப் பறித்து நெருப்பு வைத்துக் கொளுத்திக் கும்மாள மிட்டனர்!

கலைஞன் கண்ணீரால் குளித்தான். அவர்களோ இன்னுமின்னும் களிப்பு கொண்டு கருவி சாம்பலாகும் வரையில் எரித்துத் தீர்த்தனர்.

சமூக வலைத்தளங்களில் இந்தக் காட்சி உலக அளவில் பரவிப் போனது. கல்யாண வீட்டிலிருந்த ஓர் ஊடகவியலாளரின் கைங்கரியம் அது! நமது ஆசிரியபீடத்து நண்பர்களும் இங்கே ஒரு படம் வழங்கியுள்ளனர். பாருங்கள்.

இசைக்கும் நாடகத்திற்கும் விரோதிகளாகி விட்டவர்களின் அடுத்த கட்ட அராஜகம் என்னவாக அமையுமோ...?

## கசப்பு 2

நம் காலத்து மாமனிதருள் ஒருவர், 'அஷ்றஃப்" ஆகிய ஆளுமைத் தலைவர் உருவாக்கிய அந்தத் தென்கிழக்குப் பல்கலைக்கழகம் இப்போது பலரின் பேசுபொருள்.

அதுவும் வலைத்தள வம்பர்கள், கொம்பர்கள் வாய்மெல்ல ஒரு கசப்புச் செய்தி!

ஒரு சிரேஷ்ட விரிவுரையாளரின் 'சைத்தானியம்' ஒரு முதலாம் ஆண்டு கொழும்பு மாணவி மீது ஏறக்குறைய 5000பேர் உயர்கல்வி கற்கும் இடத்தில் 80 விழுக்காடு மாணவியரே!

இந்த நிலையில் சுத்தமான பாலில் விழக்கூடாத அசுத்தம் ஒரு துளி அளவு விழுந்து பலருக்கும் தர்மசங்கடம், தலைகுனிவு,

"பல்கலைக்கழக மூதவை உறுப்பினர்கள் அடங்கிய குழுவினரால் குற்றச்சாட்டு ஆராயப்படுகிறது. இரண்டு கிழமைகளுக்குள் விசாரணை அறிக்கைக் கிடைக்கும்" என்கிறார் துணைவேந்தர்.

இதற்கிடையில் மாணவி, கற்றுக் கொண்டிருந்ததைக் கைகழுவி விட்டு கொழும்புக்கே திரும்பி விட்டாராம். உள நலப்பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறாராம்.

நங்கை நல்லாள் நலம்பெற சிருஷ்டி கர்த்தாவிடம் கையேந்து. அதே சமயம் அவருக்கு நியாயம் கிடைக்கவும் இந்த முதிய பேனை முனைந்து நிற்கிறது.

கொழும்புப் பிள்ளைகள் உயர் கல்வியில் பின்தங்கியுள்ளவர்கள். அந்த மாணவி அதனைப் பொய்யாக்க மீண்டும் தென்கிழக்குப் புறப்பட வேண்டும்.

செய்வாரா....?

## இனிப்பு 1

தென்கிழக்குப் பல்கலைக்கழகக் கசப்பு ஒன்றைப் பகிர்ந்த அதே சமயம் ஓர் இனிப்பை வழங்கவும் வாய்ப்பு!

அந்த இனிப்பு நிகழ்வுள்ளது கடந்த செவ்வாய்க்கிழமை 18ல் கொழும்பு, பண்டாரநாயக்க நினைவு மாநாட்டு மண்டபத்தில்.

நம் காலத்தில் இஸ்லாமிய இலக்கியம் பாரம்பரியத்தை தமிழ் இலக்கியப் பண்பாட்டுக் கோலங்களுடன் இணைத்து இமாலய சாதனை புரிந்த ஒரு தென்னிலங்கை (பாணந்துறை) மூதறிஞர் பேராசிரியர் கலாநிதி **அல்லாமா ம.மு. உவைஸ்.**




அன்னவரது நூற்றாண்டுப்பூர்த்தி நினைவுகளை நெஞ்சின் அலைகளாக ஒலிக்க வைக்க அந்தத் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஒரு குழுவினர், துணை வேந்தர் **பேராசிரியர், கலாநிதி அபூபக்கர் றமீஸ்** தலைமையில் தலைநகருக்கு வந்தனர்.

அவர்களுக்கு அல்லாமா உவைஸ் குடும்ப அங்கத்தவர்களும் வரவேற்பு வழங்கி அனைத்து உதவி ஒத்தாசைகளும் புரிந்தனர்.

பிறகென்ன, கொழும்பு 07, பௌத்தாலோக மாவத்தை பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் மட்டுப்படுத்தப்பட்ட அழைப்பினரை வரவேற்று ஒரு நினைவேந்தல் நிகழ்வையும், ஆய்வுக் கருத்தரங்கத்தையும் தென்கிழக்கின் உயர்கல்வித்துறையினர் நிகழ்த்திக் காட்டிவிட்டனர்.பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் பிரதிநிதியாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன சமூகமளித்துச் சிறப்பிக்க, அவரால் அல்லாமா உவைஸ் நினைவு முத்திரை – ரூபாய் 25பெறுமதி வெளியீடும் வாழ்க்கை வரலாற்றுடன் கூடிய நினைவு மலரும் மணம் பரப்பின.

அம்முத்திரையின் ஒரு விஷேடம், அது BAR CODE கொண்டது. ஸ்கேன் செய்தால் **அல்லாமா கலாநிதியின்** அத்தனை இலக்கியப் பணிகளையும் அறியாதோர் அறிவர்!

இலங்கையில் ஒரு முத்திரை இப்படி 'ஜாலவித்தை' புரிவது இதுவு முதல் தடவை எனலாம்.

முக்கிய மற்றுமொரு நிகழ்வு **"கருத்தரங்கம்"** வர்ணிக்க வார்த்தைகள் போதாது. இந்தப்பத்தி எழுத்தில் இடமும் போதாது.எவ்வாறாயினும் பங்கு பற்றியவர்களால் காலமெல்லாம் பேசக்கூடிய ஒன்று. விவரத்தை அறிய ஏற்பாட்டாளர்களின் நிகழ்ச்சி நிரல் இங்கே அச்சொட்டாக....

**கருத்தரங்கம்**

தலைமை

பேராசிரியர் எஸ். தில்லைநாதன்

(வாழ்நாள் பேராசிரியர்

பேராதனைப் பல்கலைக்கழகம்)

**அறிமுக உரை:**

பேராசிரியர் றமீஸ் அப்துல்லா

(மொழித்துறை, தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)

**கருத்துரைகள்**

'தமிழ் இலக்கிய வரலாற்றில் ம.மு. உவைஸின் பணிகள்'

பேராசிரியர் அ. சண்முகதாஸ்

(வாழ்நாள் பேராசிரியர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

'இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்று எழுதுகையில் ம.மு. உவைஸ்: ஒரு விமர்சனப் பார்வை'

**பேராசிரியர் செ. யோகராசா**

(முன்னாள் தலைவர், மொழித்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம்

'இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்தில் உவைஸின் படைப்புக்கள்'

**பேராசிரியர் வ. மகேஸ்வரன்**

(முன்னாள் தலைவர், தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்)

என்ன, பார்த்து விட்டீங்களா?

இந்நிரலில் பார்க்கத் தவறக்கூடாத ஒன்று, தமிழ் சமூகத்தின் ஒன்று, மிகப் பிரபல அறிவுஜீவிகள் நால்வரது நாமங்கள்! அத்தனை பேருமே பேராசிரியப் பெருந்தகைகள், அதி உயர் பதவிகளை அலங்கரித்தவர்கள்.

**ஒருவர் (பேராசிரியர் தில்லைநாதன்) தலைமை. ஏனைய மூவரும் (பேராசிரியர்கள் சண்முகதாஸ், யோகராசா மகேஸ்வரன் கருத்துரைகள்.**

தவிர்க்க இயலா ஒரு சூழ்நிலையில் மகேஸ்வரனின் பங்களிப்பு இடம் பெறாது போனாலும் மூன்று அறிவு ஜீவிகளும் அல்லாமா ஆளுமையை தலைமை உரையிலும், கருத்துரைகளிலும் முத்து முத்தாகப் பரப்பினார்கள்!

முஸ்லிம் சமூக அறிவுஜீவிகளின் பங்களிப்பைத் தவிர்த்து விட்டு, தமிழ் பேராசிரியப் பெருந்தகைகளின் பணிகளைப் பெற்று காரியமாற்றியது. காலத்தைக் கடந்து நிற்கும், பேசும்.

இன்றைய காலச் சூழலில் இதனையே எதிர்பார்த்து நிற்கிறது தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட சமூகம்.

போற்றுதும்... போற்றுதும்...

## இனிப்பு 2

கடந்தாண்டு இறுதிப் பொழுதுகளில் ஒரு தமிழ்த் திரைப்படத்தைப் பற்றி நிறைய நிறையப் பேசப்பட்டது.

அது **'ஜெய்பீம்'**

கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு, மூன்று தினங்களிலும் தொலைக் காட்சிகளில் மூன்று தடவை மூத்த பேனை பார்த்துப் பார்த்துப் பரிதவித்துப் போனது.

ஏன் பரிதவிப்பு? அது தமிழகக் கடலூர்ப்பகுதியில் 30 ஆண்டுகளுக்கு முன்நடந்த உண்மைக்கதை.

ஒடுக்கப்பட்ட இனத்தார் – பழங்குடிகள் சாதி குறைந்தோர் என்றெல்லாம். நெற்றிய பொட்டில் ஒட்டப்பட்ட ஓர் **'இருளர்'** சமூகத்தின் நடந்த துயரம். 2022லும் இப்படியொரு மனிதக் கூட்டம் தமிழகக் காடு மேடுகளில் அலைந்து திரிகிறார்களா என்ற ஆதங்கம் யாருக்கும் வரும்.

இந்தக் கூட்டத்து ராஜாக்கண்ணு என்ற வாலிபன் பாம்பும் எலியும் பிடித்து, கட்டுமானங்களுக்கு செங்கற்கள் தூக்கிச் சுமக்கும் தொழிலாளி, ஒரு பொய்க்குற்றச்சாட்டில் பொலிஸ் சித்ரவதைக்குள்ளாகி பிள்ளைத் தாச்சி பெஞ்சாதி செங்கேணியைப் பரிதவிக்க விட்டு பரலோகம் போகிறான் என்ற கற்பனை கலக்காத கதை.

எதிர்காலத்தில் இப்படம் உலகளாவிய ரீதியில் பேசப்படும். கௌரவங்களைப் பெறும் தமிழ்ப்படத்துறையை உச்சிக்குக்கொண்டு போகும் என என் பேனையின் உள் மனம் பேச பலித்துப்போனது.



**திரைப்பட வழியில் ஓர் உண்மைக் கதையை மையமாகக் கொண்டு சமூகநீதியை முன்னிறுத்தி, மனித சமூகங்களை மேம்படுத்துவதில் உரிய பங்களிப்புச் செய்த 'ஜெய்பீம்' தயாரிப்பாளர்கள் சூர்யா – ஜோதிக தம்பதிக்கு அடுத்த மாதம் 19ம் திகதி அமெரிக்காவில் வழங்கப்படுகிறது.**

**★அமெரிக்க நாடாளுமன்றத்தின் "உலகளாவிய சமுதாய மேம்பாட்டு ஆஸ்கார் விருது" அவர்களுக்கு அளிக்கப்படுவதாக அமெரிக்கப் பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் டெனிகே டேவிஸ் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.**

**இந்த நல்ல செய்திக்கு ஆதாரம், தமிழகத் 'தினத்தந்தி' நாளேடு – 20/01/2022 வியாழக்கிழமை நன்றி!**

திரைப்பட ரசிகர்கள் அனைவரும் கைகோர்த்து முக்கியமாக ரஜினி, விஜய், அஜீத், ரசிகர்களும் 'லட்டு இனிப்பு'ப் பகிர்ந்து கொள்ளலாமே...!




## 12 காதல் என்பது வித்தியாசமான ஒரு கனி அதை உண்டவர்களின் ரசனையோ தனி!

இதே கோல்பேஸ் ஓட்டலுக்கு, மதுமிதா வரும் அதே நேரத்தில் இன்னுமொருவனும் இருந்தான்.

அவன்தான்,

பிரசன்னா!

கொழும்பில் உள்ள பிரபலமான கம்பெனி ஒன்றில்,

முகாமையாளராக வேலை செய்யும் அவனும்,

காலை ஆகாரத்தை எடுப்பதற்காக, கோல்பேஸ் ஓட்டலுக்குத்தான் வருவான்.

அவனுக்கும் சுமார் முப்பது வயதிருக்கும்,

இருவரும் ஒரே நேரத்தில்,

ஓட்டலுக்கு வருவதால்

இருவரது விழிகளும் அடிக்கடி சந்தித்துக் கொள்ளும்.

இரண்டு வாரங்களாகவே இந்த ,

'விழிசந்திப்பு' நடந்து கொண்டுதான் இருந்தது.

அவளுடன் பேசவேண்டும் என்று அவன் மனம் துடித்துக் கொண்டிருந்தது.

ஆனாலும்,

ஏதோ ஒருவித அச்சம் அவன் ஆழ்மனதில் ஊர்ந்து கொண்டிருந்தது!

இதே நேரம்,

ஒருநாள்,

இருவரும் முகத்துக்கு முகம் சந்தித்துக் கொண்டார்கள்.

அப்போது,

அவள் இவனைப் பார்த்து சிரிக்க,

அவன் அவளைப் பார்த்து சிரிக்க....ம்

இவனுக்கு,

உச்சி குளிர்ந்தது.

அவன், அகம் மிக மகிழ்ந்து போனது

ஆனாலும்,

அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி,

'அவளுடன் பேசாமல் இருந்து விட்டோமே' என்று,

பிரசன்னா காரில் திரும்பிச் செல்லும் போதுதான் வருந்தினான்.

மறுநாளும்

வழக்கம் போல் ஓட்டலுக்கு வந்து விட்டான் பிரசன்னா.

அங்கே,

அவனுக்கு முன்பே

மதுமிதா அங்கே வந்திருந்தாள்.

அவளைப் பார்த்ததும்,

இன்று எப்படியாவது அவளுடன் பேசிவிடவேண்டும் என்று அவன் முடிவு செய்திருந்தான்.

ஆனாலும்,

அவளுடன் பேசுவதற்கு கொஞ்சம் தயக்கமாகத்தான் இருந்தது.

ஆனாலும், அவன் சற்றும் எதிர்ப் பார்க்காமலேயே,

அப்படி ஒரு வாய்ப்பு அவனுக்கு வந்து,

வட்டமிட்டது.

ஆமாம்,

மதுமிதா சாப்பிட்டு விட்டு

பணத்தையும் கொடுத்துவிட்டு,

எழுந்து சென்று விட்டாள்.

ஆனால்,

அவளுடைய செல்போன்,

மேசையின் மீது,

அனாதையாகக்கிடந்தது.

அதை,

பிரசன்னா பார்த்துவிட்டான் ம...!

அவன் எதிர்ப்பார்த்த வாய்ப்பு வந்து விட்டது!

விடுவானா அவன்?

விரைந்து எழுந்து சென்றுதான்,

செல்போனைக் கையில் எடுத்திரும்பிப் பார்த்தான்.

மதுமிதா காரில் ஏறிவிட்டாள்.

அடுத்து,

இரண்டெட்டை,

நாலு எட்டாக வைத்து,

விரைந்து நடந்தான் பிரசன்னா!

அப்போது,

காரை ஸ்டார்ட் செய்வதற்கு

சாவியைப் போட்டாள் மதுமிதா!

விரைந்து வந்த பிரசன்னாவைப் பார்த்ததும்,

அணிந்திருந்த கறுப்புக்கண்ணாடியை உயர்த்தி,

வியப்புடன் அவனைப் பார்த்தாள்!

"மிஸ் உங்கட போன் அந்த மேசைமேல வச்சிட்டு வந்திட்டீங்க?" சொல்லியபடியே,

செல்போனை அவளிடம் கொடுத்தான் பிரசன்னா.

"ஓ... மை கோட்... நல்ல வேளை... இந்த போன் இல்லேன்னா என் கையே உடைந்தது போலிருக்கும். என்ட கஸ்டமர்மார் எல்லோருடைய போன் நம்பர்களும் அதில்தான் இருக்கு... உங்களுக்கு ரொம்ப தேங்ஸ்!" சொல்லியபடியே,

போனை வாங்கிக் கொண்டு,

கவர்ச்சியான ஒரு புன்னகையை அவனுக்கு பரிசாசக் கொடுத்தாள் மதுமிதா!

"ஓ.... உங்களுக்கு அவ்வளவு கஸ்டமர்மார் இருக்காங்களா... நீங்க என்ன பிஸ்னஸ் பண்ணுறீங்க...?"

பேசக்கிடைத்த வாய்ப்பை விடாமல் தொடர்ந்தான் பிரசன்னா. செலுன் ஒன்றை நடத்தி வருகிறேன். பாலத்துறை சந்தியில் இருக்கிறது. அது மதுபியூட்டி செலுன்' என்று அதற்கு பெயர்!"

"ஓ.... மது பியூட்டிபாளர்...அந்த இரண்டு தட்டு மாடியில் தானே அது இருக்கிறது?" அந்தப் பக்கத்தில் போகும் போது,

அதை பார்த்த ஞாபகம் பிரசன்னாவுக்கு.

"ஆமாம் கீழ்த்தட்டில் தான் எனது பாளர் இருக்கிறது... ம் எனக்கு நேரமாகிவிட்டது... நான் வருகிறேன்... மீண்டும் உங்களுக்கொரு தேங்ஸ்...!" காரை ஸ்டார்ட் செய்தாள் மதுமிதா.

"சரி... போயிட்டுவாங்க ... ம் நீங்க உங்க பெயரைச் சொல்லவில்லையே...!"

தூண்டிலைப் போட்டான் பிரசன்னா.

"ம்... பெயரெல்லாம் எதற்கு சொன்னாலும் பரவாயில்லைதான்... பியூட்டி பாளருக்கு எனது பெயரைத்தான் வைத்திருக்கிறேன்.. மது. மது என்றால் மது மிதா!"

இரையை விழுங்கிவிட்டது மீன்!

"ஓ... உங்கள் அறிமுகம் கிடைத்ததில் மகிழ்ச்சி மதுமிதா... எனது பெயர் பிரசன்னா... பிரைவட் கம்பெனி ஒன்றில் மெனேஜராக வேலைபார்க்கிறேன்.

"அப்படியா...! மகிழ்ச்சி அப்ப நான் வாறேன்... பை!"

"பை...!"

இருவரது இடது கைகளும் அசைந்தன.

காற்றைக் கிழித்துக் கொண்டு பறந்தது மதுமிதாவின் கார்.

மீணடும் ஓட்டலுக்குள் திரும்பி வந்த பிரசன்னா

காலை உணவை எடுத்து விட்டு,

சிறிது நேரத்தின் பின் அங்கிருந்து வெளியேறினான்.

மீண்டும் அவன் திரும்பிவரும் போது,

மதுமிதா சொன்ன அந்த பியூட்டி பாளரைப் பார்த்தான் பிரசன்னா

அந்த இரண்டு மாடி கட்டடத்தின் முன்னால்,

மதுமிதாவின் நீல நிறக்கார் நிறுத்தப்பட்டிருந்தது.

வாசலில் போடப்பட்டிருந்த பெயர் பலகையில் எழுதப்பட்டிருந்த தொலைபேசி எண்களை தனது செல்லில், பதிவிட்டுக் கொண்டான் பிரசன்னா.

சில சமயம்,

இது உனக்குப் பயன்படலாம் என்று அவனுடைய ஆழ்மனம் அவனுக்குச் சொன்னது!

அதிகமான வேலை காரணமாக கடந்த இரண்டு நாட்களாக, பிரசன்னாவால் கோல்பேஸ் ஓட்டலுக்கு போக முடியவில்லை.

அன்று சனிக்கிழமை,

அவள் கோல்பேஸ் ஓட்டலுக்கு போன போது, மதுமிதாவை அங்கே காணவில்லை!



அவன் சென்ற சிறிது நேரத்திற்குப் பிறகுதான்,

அவள் அங்கே வந்தாள்.

அன்று,

வழக்கத்தில் அணியும் ஆடையை விட,

மிகவும் அழகான ஓர் உடையை அவள் அணிந்து வந்திருந்தாள்.

அவள் வருவதை அவன் பார்த்து விட்டாலும்,

பார்க்காதவனைப் போல் உணவை எடுத்துக் கொண்டிருந்தான்.

தன்மீது அவளுக்கு அக்கறை இருக்கிறதா என்பதை அறியத்தான் அவன் அப்படிச் செய்தான்!

அவன் எதிர்பார்த்தது நடந்தது!

**(இளமை வளரும்)**




# படித்ததும் பகர்வதும் 80



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் **ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### பிறர் தயவில் வாழ்வது முறையா?

உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் உயிர் வாழ்வதற்காக உழைக்க வேண்டும் என்பது உலக நியதி. ஒவ்வொருவரும் தத்தமது விருப்பம், ஆற்றல், தகுதி, வசதி வாய்ப்புகளுக்கு ஏற்ப ஏதோ ஒரு வகையில், வெவ்வேறு வகையான வழிகளில் உழைக்கின்றனர். வாழ்வதற்காக உழைப்பது என்பது தவிர்க்க முடியாத மனித செயற்பாடாகும். எனினும் இந்த இயற்கை நியதிகளுக்கு மாற்றமாக ஒரு சிலர் எந்தவிதமான உழைப்பையும் மேற்கொள்ளாமல் பிறரது தயவை நாடியே வாழ்வது கவலைக்குரியது.

பெற்றோர், உற்றார், உறவினர், நண்பர்கள், பரோபகாரிகள், புரவலர்கள், கொடைவள்ளல்கள் என ஒவ்வொரு பிரிவினரும் தமது தகுதிக்கும், விருப்பத்துக்கும், வசதிக்கும் ஏற்ற வகையில் மற்றவர்களுக்கு உதவிசெய்து கொண்டே இருக்கிறார்கள். இது அத்தகையவர்களுக்கு இறைவன் அளித்த அருட்கொடையாகும்.

ஆனால், இவ்வாறு உதவி செய்பவர்களின் உதவிகளை மட்டுமே எதிர்பார்த்து, எந்த வித உழைப்பையும் செய்யாமல் இருப்பது மிகவும் கேவலமானதும், வெட்கப்பட வேண்டியதுமான செயலாகும். தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள ஒவ்வொரு தடவையும் எவராவது ஒருவர் உதவி செய்வார் எனக் காத்திருப்பது கேவலமானது. ஏனெனில், இறைவன் தான் படைத்த மனிதன் ஒவ்வொருவருக்கும் அவரது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள அவசியமான, ஏதோ ஒரு வகையிலான ஆற்றலை, திறமையை வழங்கியேயிருக்கின்றான். அவற்றை சரியாக அறிந்து, புரிந்து, உணர்ந்து செயல்பட வேண்டியது அவரவரது கடமையாகும்.



இதனை செய்யாமல், வெறுமனே படைத்தவனை குறைகூறிக்கொண்டு, சோம்பேறியாக இருந்து, வீணாக மனம் தளர்ந்து, மற்றவர்களின் உதவிகளை நாடியே வாழ்வது எவ்வகையிலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய விடயமல்ல. உழைக்கக் கூடிய பிள்ளைகள் பெற்றோர்களின் தயவை நாடியிருப்பதும், அல்லது தமது சகோதரர்களது உதவிகளை வேண்டி நிற்பதும், மற்றவர்களின் நன்கொடைகளை நாடி நிற்பதும் நல்ல விடயமல்லவே.

காலையில் தனது கூட்டிலிருந்து வெளியே சிறகடித்துப் பறக்கும் பறவை கூட எங்கெல்லாமோ அலைந்து திரிந்து, மாலையில் தன் வயிற்றை நிரப்பிக் கொண்டு கூடு திரும்பும் போது, சிந்திக்கும் திறன்மிக்க மனிதன் உழைக்காமல் வெறுமனே சோர்ந்திருப்பது முறைதானா? ஒவ்வொரு மனிதனும் இவற்றை நன்கு சிந்தித்து இறைவன் தனக்களித்துள்ள அருட்கொடைகளை முறையாகப் பயன்படுத்தி, மற்றவரின் தயவை நாடாது, ஏதேனும் நியாயமான வழியில் உழைத்து வாழவேண்டும்.


## நெஞ்சுக்கு நீதி

கொடுத்து வாழ்ந்தால் எங்கும் குதூகலம்
கொடுமை வறுமை பனிபோல் மறையும்
கெடுத்திடும் கயமை உலகினில் அழியும்
கடுமை தீமைகள் இக்காயத்தில் ஒழியும்

## பாராட்டுறோம்! வாழ்த்துகிறோம்!!

### அல்லாமா ம. மு. உவைஸ் நூற்றாண்டு நிகழ்வு!

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக மொழித்துறை, மிகச்சிறப்பான பணியொன்றை நிறைவேற்றியுள்ளது. பேராசிரியர் அல்லாமா ம. மு. உவைஸ் அவர்களின் நூறாவது பிறந்த தினத்தை முன்னிட்டு மூன்று நிகழ்வுகளை உள்ளடக்கிய சிறப்பான நிகழ்ச்சியொன்றை கடந்த 18ம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் சிறப்பாக நடத்தியது.




இஸ்லாமியத் தமிழ் இலக்கியத்துக்கென தனித்துவமான அடையாளத்தை தேடிக்கொடுத்தவர் பேராசிரியர், கலாசூரி, அல்லாமா ம. மு. உவைஸ். இலக்கியத்தோடு நின்றுவிடாமல் ஆய்வுத்துறை, மொழிபெயர்ப்புத்துறை. ஒலிபரப்புத்துறை, சமூக சேவை என பல்வேறு விடயங்களிலும் ஆக்கபூர்வமான, மறுக்கவோ, மறக்கவோ முடியாத அரும் சேவைகளை செய்தவர் அவர்.

50க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டும், பல நூல்களை தமிழ், சிங்களம், ஆங்கிலம் மொழிகளுக்கு மொழிபெயர்ப்பு செய்தும், சர்வதேச மாநாடுகளில் பெறுமதிமிக்க ஆய்வு கட்டுரைகளை சமர்ப்பித்தும் மக்களினதும், இலக்கியக் கர்த்தாக்களினதும், ஆட்சித் தலைவர்களினதும், பாராட்டுக்களை பெற்றவர். இஸ்லாமிய தமிழ் இலக்கியத்துக்கு தனித்துவமான பங்களிப்பை செய்ததுடன் அனைத்துலக இஸ்லாமிய தமிழ் இலக்கிய மாநாடுகள் வெற்றிகரமாக நிகழ பாரிய பணிகளை செய்ததோடு தானே முன்னின்று தனியான ஒரு சர்வதேச மாநாட்டை இலங்கையில் நடாத்தி இஸ்லாமியத் தமிழ் இலக்கிய உலகில் மறக்க முடியாத மாமனிதராக திகழ்பவர்.



இத்தகைய பெருமகனை கௌரவிக்கும் வகையில், அவரது நூறாவது பிறந்த தினத்தில் முத்திரை வெளியிட முயற்சி செய்தவர்களுக்கும்,அதனை வெளியிட்ட அரசாங்கத்துக்கும் சபாஷ்! நினைவு முத்திரை வெளியீடு, 'மார்க்கஸி' எனும் நூற்றாண்டு விழா மலர் வெளியீடு, நூற்றாண்டுக் கருத்தரங்கு என மூன்று நிகழ்வுகளை ஒன்றாக இணைத்து, அல்லாமாவின் குடும்ப உறப்பினர்களின் அனுசரணையோடு ஏற்பாடு செய்து அவரை சிறப்பித்துள்ளார்கள்.

உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கரின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன, ஊடக அமைச்சின் செயலாளர், தபால் மா அதிபர், பல்கலைக்கழக ஆணைக்குழு தலைவர் உட்பட பல முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தார்கள் பேராசிரியர்கள் எஸ். தில்லைநாதன், அ. சன்முகதாஸ், சே. யோகராசா கருத்தரங்கில் சிறப்பான உரைகளை நிகழ்த்தினார்கள். இங்கு மூவினப் பிரமுகர்களும் அல்லாமா உவைஸின்பெருமைகளை பேசியமை விசேடமாகும்.

மொழித்துறை, தலைவர் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லா, பேராசிரியர் எம். எம். பாசில், கலாநிதி சாதியா உட்பட்ட குழுவினர் வழிகாட்டலில் ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர். பங்குபற்றிய அனைவருக்கும் மும்மொழிகளிலும் ஆக்கங்களைத் தாங்கிய 'மர்கஸி' நூற்றாண்டு மலர், நினைவு முத்திரை தாங்கிய விஷேட ஞாபகார்த்த உரை என்பனவும் வழங்கப்பட்டன.

அல்லாமா ம. மு. உவைஸ் நூற்றாண்டு விழாவை வெற்றிகரமாக நடாத்திய இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தை பாராட்டுவதோடு இத்தகைய முக்கியமான நிகழ்ச்சிகளை காலத்துக்கு ஏற்ற வகையில் சிறப்பாக நடாத்த வாழ்த்துகிறோம்.

## பேசும் கவிதை

### கனவை நனவாக்கும் கடின உழைப்பு

உழைப்பு உயர்வுக்கு அழைப்பு
உழைப்பு ஊக்கத்தின் விழிப்பு
உழைப்பு பிறப்பின் ஓர்உறுப்பு
உழைப்பு சமுதாயப் பொறுப்பு
உழைப்பு இல்லாப் பிறப்பு, இறப்பு
உழைப்பு தருமே உடல்நலக் காப்பு

உழைப்பு இல்லாத இருப்பு, தப்பு
உழைப்பு நிறைந்தால் நிறையாது கொழுப்பு
உழையார் உடலில் நோயின் படையெடுப்பு.
உழைப்பு மலர்ந்தால் பற்பல படைப்பு.

'முடியும்.. முடியும்' என்ற நினைப்பு
எதையும் முடித்திடும் இதயத் துடிப்பு.
உழைப்போடு உண்மை கலந்த சந்திப்பு.
நிகழ்ந்தால் இன்பத்தின் விரிப்பு; பூரிப்பு.

உழைப்புக்கு உறவாகும் உலகப் பரப்பு.
இடைவிடா உழைப்பால் வாழ்வை நிரப்பு.
கிடைக்கும் சிகரத்தின் வாயில் திறப்பு.
கனவை நனவாக்கும் கடின உழைப்பு.

**பேராசிரியர் வெ. அரங்கராசன்**

## சிந்தனை செய் மனமே

### எப்போதும் மகிழ்ச்சியாயிருங்கள்

ஒவ்வொரு நிமிடமும் உலகில் எங்கோ ஒரு மூலையில், யாரோ ஒருவர் இந்த உலகத்தை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார் என்பது யதார்த்தம். நாம் அனைவரும் நமக்கே தெரியாமல் அந்த வெளியேறிக் கொண்டிருப்போர் வரிசையில் நின்றுகொண்டிருக்கிறோம். நமக்கு முன்னே எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பது எமக்குத் தெரியாது. நாம் அந்த வரிசையில் எங்கே இருக்கிறோம் என்பதும் தெரியாது. ஆனால் எந்த இடத்தில் நாம் பொருத்தப்பட்டிருக்கிறோமோ அந்த இடம் ஒருபோதும் மாறப்போவதில்லை.

நாம் வரிசையின் பின்புறம் செல்லவும் முடியாது. நாம் வரிசையிலிருந்து வெளியேறவும் முடியாது. அத்துடன் நாம் இந்த வரிசையைஎந்த வகையிலும் தவிர்க்கவும் முடியாது. எனவே நாம் நம்முடைய நேரம் வரும்வரை வரிசையில் காத்திருக்கிறோம் என்பதை உணர்ந்து வாழ்வது அவசியம்.

நாம் இவ்வுலகை பிரியும் நேரம் ஏற்கனவே குறிக்கப்பட்டுவிட்டது. அதனை மாற்ற முடியாது. இதனை புரிந்துகொண்டு,நன்குணர்ந்து, தேவையானவற்றுக்கு முன்னுரிமை கொடுங்கள். எமக்கு பிரியமானவர்களுக்காக நேரம் ஒதுக்குங்கள். உங்கள் அறிவுக்கு எட்டிய அளவில் எவரையும் பசியில் இருக்க விடாதீர்கள். நியாயத்துக்கும், சத்தியத்துக்கும் குரல் கொடுங்கள். பாவங்களை கைவிட்டு நன்மைகளை மட்டுமே செயுங்கள்.

சின்னச் சின்ன தருணங்களையும் அழகாக்குங்கள். சுற்றியுள்ளவர்களை சிரிக்க வையுங்கள். நீங்கள் நேசிப்பவர்களிடம் அதிக நேசத்தை வெளிக்காட்டுங்கள். கவலைகளை தூக்கியெறிந்துவிட்டு எப்போதும் மகிழ்ச்சியாயிருங்கள்,

## செந்தமிழ் அது தேன் தமிழ்

### பெண்களின் பருவப்பெயர்கள்

01 வயது முதல் 8 வயது வரை பேதை
09 வயது முதல் 10 வயது வரை பெதும்பை
11 வயது முதல் 14 வயது வரை மங்கை
15 வயது முதல் 18 வயது வரை மடந்தை
19 வயது முதல் 24 வயது வரை அரிவை
25 வயது முதல் 29 வயது வரை தெரிவை
30 வயதுக்கு மேல்பேரிளம் பெண்

### ஆண்களின் பருவப்பெயர்கள்

1 வயது முதல் 12 வயது வரை பாலகன்
12 வயது முதல் 24 வயது வரை விடலை.
24 வயது முதல் 36 வயது வரை காளை.
36 வயது முதல் 48 வயது வரை மீளி.
48 வயது முதல் 60 வயது வரை மறவோன்.
60 வயது முதல் 72 வயது வரை திறவோன்.
72 வயதுக்கு மேல் ஆண் முதுமகன்

## பேசும் படம்





**வீட்டில் தனிமையில் வாடும் பாட்டியின் தனிமையைப் போக்க அவரது வீட்டுக்கு வந்த குடும்ப உறுப்பினர்கள் ..! இது நவீன காலம்!!!?**

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207


# 2022 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் நடந்து கொண்டிருக்கும் விண்வெளி நிகழ்வுகள்

**James Webb எனும் Space Telescope விண்ணுக்கு அனுப்பப்பட்டது. Apollo திட்டத்தின் வெற்றிக்கு பெரிதும் காரணமாக இருந்த, 1961~1968 காலப்பகுதியில் NASAவின் நிர்வாகியாக இருந்த James Edwin Webb அவர்களை கௌரவிக்குமுகமாக அவரின் பெயர் இந்த தொலை நோக்கிக்கு சூட்டப்பட்டுள்ளது.**





விண்ணுக்கு அனுப்பப்பட்டதிலிருந்து ஆறு மாதங்கள் வரையான பயணத்தின்போது தனது உபகரணங்களை ஆயத்தப் படுத்திக்கொண்டு பூமியில் இருந்து 1.5 மில்லியன் கிலோமீட்டர் தொலைவில் உள்ள 'Earth-sun Lagrange Point 2 (L2)' எனும் இடத்தில் நிலை கொள்ளும். ஆறாம் மாதத்திலிருந்து விண்வெளித் தகவல்களை பூமிக்கு அனுப்ப ஆரம்பிக்கும். James Webb Space Telescope எதிர்வரும் 5-10 வருடங்களுக்கு இதுவரை விஞ்ஞானிகளால் அறியப்படாத விண்வெளித் தகவல்களை தேடும் என நம்பப்படுகிறது.

1990 ஆம் ஆண்டு விண்வெளிக்கு ஏவப்பட்டத்திலிருந்து இன்று வரை சுமார் கடந்த 30 வருடங்களாக மிகவும் அற்புதமான விண்வெளிக் கண்டுபிடிப்புகளுக்கு வழிவகுத்த Hubble Space Telescope (HST) ஐ விடவும் பல மடங்கு சக்தி வாய்ந்த James Webb ஆனது பிரபஞ்சம் உருவாகியது பற்றிய அரிய தகவல்களை தரும் என எதிர்பார்க்கப்படுகிறது. 10 பில்லியன் அமெரிக்க டாலர் செலவில் உருவாக்கபப்ட்டுள்ள James Webb இனது நீண்ட அலை நீளமுடைய கீழ் செந்நிறக் கதிர் (Infrared) ஆய்வகம் விண்ணின் பெரும் பரப்பை ஆய்வு செய்யக்கூடிய வல்லமையும் உணர் திறனும் கொண்டது.




### சீனாவின் செயற்கை சூரியன் புதிய சாதனை


2006 ஆம் ஆண்டிலிருந்து செயற்பட்டு வரும் China's Experimental Advanced Superconducting Tokamak (EAST) எனும் சீனாவின் செயற்கை சூரியன் 126 million degrees Fahrenheit வெப்ப நிலையை 17 நிமிடங்களுக்கு மேலாக வழங்கி உலக சாதனை படைத்துள்ளது. அதாவது சூரியனை விடவும் 5 மடங்கு மேலான வெப்பத்தை வெளியிட்டுள்ளது.


நிலக்கரி, இயற்கை எரிவாயு போன்றனவே தற்போது உலகம் முழுவதும் பயன்படுத்தப்படும் முதன்மை சக்தி மூலங்கள் ஆகும். இவ்வளங்கள் குறைந்து கொண்டே வருகின்றன. அணுக்கரு சக்தி என்பது சூரியனின் இயற்பியலைப் பிரதிபலிப்பதால், அணுக்கருக்களை ஒன்றிணைத்து (Nuclear Fusion) பெற்றுக் கொள்ளக்கூடிய பேரளவு அளவு சக்தி தூய்மையான சக்தி மூலம் ஒன்றாகும். இந்த செயல்முறைக்கு புதைபடிவ (Fossil Fuels) எரிபொருட்கள் தேவையுமில்லை, அதேபோல் இறுதியில் கதிரியக்க கழிவுகளை (Radioactive Waste) விட்டுச் செல்வதுமில்லை, "அணு இணைவு (Nuclear Fusion) சக்தியானது "அணுப்பிளவு" அணுசக்திக்கான (Nuclear Fission) சிறந்த மாற்றீடாகும்.


### சீனாவின் செயற்கை சந்திரன் புதிய சாதனை

சீன விஞ்ஞானிகள் "செயற்கை நிலவு" ஒன்றை உருவாக்கியுள்ளனர், சக்தி வாய்ந்த காந்தப்புலத்தை பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ள இந்த சூழல், குறைந்த ஈர்ப்பு தன்மையை உருவாக்கி அதில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ள பயன்படுத்தப்படும். சந்திர மேற்பரப்பைப் பிரதிபலிப்பதற்காக வேண்டி பாறைகள் மற்றும் தூசிகளால் இது நிரப்பப்பட்டுள்ளது, உலகில் இது முதல் முறையாக உருவாக்கப்பட்டுள்ளது. இது எமக்குத் தேவையான அளவு வரை புவியீர்ப்பு சக்தியை கூட்டிக் குறைக்கலாம் எனவும் சீனாவின் 'University of Mining and Technology' யின் பொறியியலாளர் Li Ruilin அவர்கள் கூறுகிறார்கள்.





நவீன தொழிநுட்பங்களை வாசிக்க, கற்க, தொழில் பெற்றுக்கொள்ள எமது எதிர்கால சந்ததியினரை உருவாக்க வேண்டிய கட்டாய பொறுப்பு எமக்கு இருக்கிறது.

**ஹரீஸ் ஸாலிஹ்,**
**முன்னாள் விஞ்ஞான பாட ஆசிரியர்**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 23 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 ஜனவரி 23 ஞாயிற்றுக்கிழமை
கே. மேகலா
அழகுக் கலை
நிபுணர்

# கறுப்புக் கார்களின் ஆர்ப்பாட்டம்

கைபேசி செயலியான ஊபர் மூலம் வாகனங்களை வாடகைக்கு அமர்த்தும் சேவை உலகெங்கும் பிரபலம். ஆனால் சொந்தமாக வாடகைக்கு வாகனம் ஓட்டுபவர்களுக்கு ஊபரைக் கண்டாலே பிடிப்பதில்லை. லண்டனில் ஒருபடி மேலே போய் ஊபருக்கு எதிராக அங்கிருக்கும் பிளக் கெப்ஸ் வாடகைக் கார்கள் பெரிய ஆர்ப்பட்டம் ஒன்றை நடத்தினார்கள். ஆனால் இது ஊபருக்குத் தான் விளம்பரம் தேடிக்கொடுத்தது.

2014 ஆம் ஆண்டு இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பிளக் கெப்ஸ்கள் லண்டன் வீதிகளை முடக்கி வாகன நெரிசலை ஏற்படுத்தின. இதனால் கேபமடைந்தவர்கள் ஊபர் செயலியை தரவிறக்கம் செய்ய ஆரம்பித்தார்கள். முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அந்தக் காலப்பகுதியில் 850 வீதம் ஊபர் தரவிறக்கம் செய்யப்பட்டது. பிளக் கெப்ஸ் வண்டிகளின் சவாரி பெரும் வீழ்ச்சி கண்டது.



# மரண வாக்குமூலம்



பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

மரண தண்டனைக்கு முன்னர் தொலைக்காட்சிக்கு பேட்டி அளிக்கும் நிகழ்ச்சி சீனாவில் மிகப் பிரபலமாக இருந்தது. 2006 தொடக்கம் 2012 வரை இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி சீனாவில் ஒளிபரப்பானது.

அதாவது மரண தண்டனைக்கு முகம்கொடுத்திருப்பவர் தனது வாக்குமூலத்தை இந்தத் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் வழங்குவார். அதுவும் இன்றைக்கோ நாளைக்கோ மரண தண்டனைக்கு முகம்கொடுக்க இருப்பவர்களே இந்த நிகழ்ச்சியில் தோன்றுவார்கள். குற்றங்களை தடுக்க இந்த நிகழ்ச்சி உதவுவதாக அப்போது கூறப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் தனது தாயைக் கொன்ற ஓரினச்சேர்க்கையாளர், பணம் பெறுவதற்காக தனது தாத்தா பாட்டியைக் கொன்ற இளைஞன் மற்றும் அவனது காதலி, கணவனைக் கொன்ற மனைவி மற்றும் மரண தண்டனை விதிக்கப்பட்ட இளம் வயதினர் ஒருவரான 18 வயதுடையவர் ஆகியோர் உட்பட பலர் பங்கேற்றிருக்கிறார்கள்.

எனினும் 2012 ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சியை பி.பி.சி தொலைக்காட்சி ஒளிபரப்பியதை அடுத்து சர்வதேச அளவில் அவதானத்தை பெற்றதால் நிறுத்தப்பட்டது.



# சிரிக்கத் தெரியாத பெண்

அமெரிக்காவில் சிரிக்காததாலேயே ஒரு பெண் பிரபலம் அடைந்திருக்கிறாள். அவளது பெயர் 'சொபர் சூ'. ஆனால் எல்லோருமே அவளை சிரிக்காத பெண் என்றே அழைக்கிறார்கள். 1900களில் அவள் ஓர் அரங்கியல் கலைஞராக இருந்துள்ளாள். நியூயோர்க்கில் இருக்கும் விக்டோரியா அரங்கில் தோன்றும் இந்தப் பெண்ணை சிரிக்க வைப்பவர்களுக்கு 100 டொலர் பரிசு அறிவிக்கப்பட்டபோதும் பல நகைச்சுவைக் கலைஞர்களின் முயற்சிகளும் தோல்வியிலேயே முடிந்தன. அந்தப் பெண் கடைசி வரை சிரிக்கவே இல்லை.

சொபர் சூ இப்படி இறுக்கமாக முகத்தை வைத்திருப்பதற்கு காரணம் என்ன என்பது இன்றும் மர்மமாகவே உள்ளது. ஒரு வேளை அந்தப் பெண் குருடாக அல்லது செவிடாக இருந்திருக்கலாம் என்று சிலர் கூறுகிறாரர்கள். ஆனால் அவளின் முகத்தின் தசைகள் செயலிழந்திருக்கக் கூடும் என்ற கூற்றுக்குத் தான் ஆதரவு அதிகம்.

இதில் உண்மையிலேயே பணம் சம்பாதித்தவர்கள் சொபர் சூவை வைத்து சவால் விட்ட அரங்கக் கலைஞர்கள் தான். சூவுக்கு வாரத்திற்கு 20 டொலர்கள் வரையே ஊதியம் செலுத்திய அரங்கு நிர்வாகம், அவரை சிரிக்க வைக்கும் நோக்கில் பிரபல நகைச்சுவை கலைஞர்களிடம் இருந்து கட்டணம் இன்றி வேலை வாங்கி இருக்கிறது.

# மரணத்தை கூறும் சிற்பம்

செப்டெம்பர் 11 தாக்குதலில் முதல் விமானம் உலக வர்த்தக மையத்தின் வடக்கு கட்டடத்தை தாக்கும்போது அதன் 92 ஆவது மாடியில் தனது கலை அரங்கில் இருந்த மைக்கல் ரிச்சட்ஸ்ும் கொல்லப்பட்டார். அவர் அமெரிக்காவின் பிரபல சிற்பிகளில் ஒருவராவார்.



செப்டெம்பர் 11 தாக்குதலில் கொல்லப்பட்ட ஒரே சிற்பி இவர் தான். விமானங்கள் மீது அதிக காதல் கொண்டவராக ரிச்சட்ஸ் இருந்தது அவரது சிற்பங்களை பார்த்தாலே தெரிந்து கொள்ளலாம். அவர் வடித்த கடைசி சிற்பத்தில் தன்னையே செதுக்கி தனது உடல் முழுவதையும் விமானங்கள் துளையிடுவது போல் சித்தரித்திருந்தார். அதனை ஒரு சாதாரண கலைப்படைப்பாக பார்க்கப்படுவதில்லை. அவரது அந்த சிற்பம் தற்போது வடக்கு கரோலினா அருங்காட்சிகத்தில் நிரந்தரமாக வைக்கப்பட்டுள்ளது.

# உலக மக்கள் தொகையை குறைத்த செங்கிஸ் கான்



செங்கிஸ் கானை ஒரு மாவீரனான சித்தரிப்பது எந்த அளவு நியாயமானது என்று கூற முடியாதுள்ளது. உலக வரலாற்றில் செங்கிஸ் கானுக்கு முன்னரோ, பின்னரோ பெரும் அழிவை ஏற்படுத்திய ஒருவர் இருப்பதற்கு சாத்தியம் குறைவுதான்.

13 ஆம் நூற்றாண்டில் மொங்கோலிய ஆக்கிரமிப்புகளில் ஏற்பட்ட அழிவுகள் கட்டுக் கதை என்று கூறிவிட முடியாது. எல்லாமே கச்சிதமாக ஆவணப்படுத்தப்பட்ட வரலாறு. பரவலான கணிப்புப்படி உலக மக்கள்தொகையில் செங்கிஸ் கான் படை 11 வீதமானவர்களை கொன்று குவித்துள்ளது.

அதாவது 40 மில்லியன் பேர் வரை கொல்லப்பட்டிருப்பதாக வரலாற்றாய்வாளர்கள் கூறுகிறார்கள்.

செங்கிஸ் கானின் வாழ்நாளில் சீன மக்கள்தொகையில் மில்லியன் கணக்கானவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். தற்கால ஈரானிய மக்கள் தொகையில் நான்கில் மூன்று பங்கினர் மொங்கோலியப் படையினால் கொல்லப்பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.

தவிர, பயிர் நிலங்கள், நகரங்களை அழித்ததால் மறைமுகமாகப் பாதிக்கப்பட்ட கணக்கு இதை விட அதிகம். செங்கிஸ் கான் நாகரீகங்களுக்குச் செய்த அழிவுகளை கணக்குப் போடப்போனால் இன்னும் பயங்கரமாக இருக்கும்.

# இலங்கை முஸ்லிம்களின் கல்விக்கு வித்திட்ட அறிஞர் சித்திலெப்பை

**திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கல்வி பயின்ற காலகட்டத்தில் மார்க்க சட்டதிட்டங்கள் பற்றிய அறிவைப் பெற்றதோடு தமிழ் மொழியிலும் சிறப்புத்தேர்ச்சி பெற்றார். ஆங்கில மொழியையும் கற்றுத் தேறினார். அரபு, தமிழ், ஆங்கிலம் எனும் மும்மொழிகளிலும் அதி திறமையாக விளங்கிய இவர், சட்டக்கல்வியிலும் சிறந்து விளங்கினார். அவர்தான் அறிஞர் சித்திலெப்பை ஆவார்.**

அரேபிய நாட்டிலிருந்து வணிக நோக்கத்தில் இலங்கைக்கு பொருள் தேடி வந்த முல்க் ரஹ்மத்துல்லாஹ் பார்பரன் முஸ்லிம்களின் இறங்கு துறையின் முக்கிய தளங்களில் ஒன்றான அளுத்கம எனும் பகுதியில் குடியேறி அங்கேயே திருமணம் புரிந்து வர்த்தகத்தில் ஈடுபட்ட அவருக்கு முஹம்மது லெப்பை எனும் மகன் பிறந்தார். அவரும் தந்தை வழியில் வர்த்தகம் புரிந்து வாழ்க்கை நடாத்தினார். இவர் ஸ்ரீவிக்கிரம ராஜசிங்க மன்னன் கண்டி ராஜ்ஜியத்தை ஆண்டு வந்த காலத்தில் வியாபார நடவடிக்கைகளுக்காக கண்டிக்கு வந்து அங்கேயே திருமணம் செய்து வாழ்ந்து வந்தார். இவருக்கு 1838 ஆம் ஆண்டு ஜூன் 11 ஆம் திகதி கண்டியில் பிறந்த ஆண் மகன்தான் அறிஞர் சித்திலெப்பை ஆவார்.

1862 இல் கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞராக நியமனம் பெற்ற அறிஞர் சித்திலெப்பை, 1864 இல் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக உயர் நியமனம் பெற்றார். இக்காலத்தில் பிரசித்த நொத்தாரிசாகவும் பணி புரிந்தார். இவரால் எழுதப்பட்ட காணி உறுதிகள் பல இன்றும் பலரிடம் உள்ளதாக அறிய முடிகிறது. கண்டி மாநகரசபை நீதிமன்றத்தில் நீதிபதியாகவும் கடமையாற்றிய இவர், சிறிது காலம் மாநகரசபை உறுப்பினராகவும் பணி புரிந்துள்ளார்.

1882 டிசம்பர் 21 ஆம் திகதி “முஸ்லிம் நேசன்” என்ற பெயரில் அரபு, தமிழ் வார இதழொன்றை ஆரம்பித்து முஸ்லிம் சமுதாயத்தை கல்வி ரீதியாக மேம்படச் செய்யும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டார். அதில் இலங்கை முஸ்லிம் சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு தாம் ஆற்றவிருந்த தொண்டுகள் பற்றி விளக்கினார். இலங்கை முஸ்லிம்களின் உரிமைகள் பற்றி உரத்துக் கூறும் பத்திரிகையாகவும் அது இருந்தது.

அறிஞர் சித்திலெப்பை சட்டத் தொழிலையும் கண்டி மாநகரசபை உறுப்பினர் பதவியையும் தூக்கி எறிந்துவிட்டு தனது பிற்கால வாழ்க்கை முழுவதையும் சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும் முன்னேற்றத்திற்கும் ஒதுக்கினார். இக்காலகட்டத்தில் ஒராபி பாஷா அவர்களுடன் சேர்ந்து சமூக பணிகளுக்கு உறுதுணை புரிந்தார்.

அறிஞர் சித்திலெப்பை அவர்கள் 15 க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். அவற்றில் “அசன்பேயின் சரித்திரம்” எனும் நூல் ஈழத்தின் முதல் தமிழ் நாவல் நூலாக இருந்தது. அறிஞர் சித்திலெப்பை அவர்கள் கொழும்பில் சாஹிரா கல்லூரியை தோற்றுவித்தார். கொழும்பிலும் பிற இடங்களிலும் முஸ்லிம் பாடசாலைகளை நிறுவுவதில் பெரும் வெற்றி ஈட்டினார்.

இலங்கை சட்ட நிர்ணய சபையில் முஸ்லிம்களுக்கு பிரதிநிதித்துவம் வேண்டி வன்மையாக போராடியதன் மூலம் 1889 இல் இலங்கை முஸ்லிம்கள் சார்பாக இருவர் நியமன உறுப்பினர்களாக அங்கத்துவம் பெற்றனர்.



*1862 இல் கண்டி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கறிஞராக நியமனம் பெற்ற அறிஞர் சித்திலெப்பை, 1864 இல் உயர் நீதிமன்ற வழக்கறிஞராக உயர் நியமனம் பெற்றார். இக்காலத்தில் பிரசித்த நொத்தாரிசாகவும் பணி புரிந்தார். இவரால் எழுதப்பட்ட காணி உறுதிகள் பல இன்றும் பலரிடம் உள்ளதாக அறிய முடிகிறது.*

அறிஞர் சித்திலெப்பை பெரும்பாலும் தனது போராட்டங்களை தனிநபராகவே எடுத்துச் சென்றார். அந்நிய ஆட்சி முறை மாற்றங்களால் இலங்கையில் முஸ்லிம்கள் நவீன கல்வி, நவீனத்துவம், பொருளாதாரம், நாகரிகம், நவீன அரசியல் போன்ற பல விடயங்களில் முன்னேற்றமின்மை காரணமாக ஒரு பாரிய பிரச்சினை உருவெடுத்தது. இக்காலகட்டத்தில் எதிர்காலத்திற்கான மாற்று திட்டங்களையும் காலத்திற்கு ஏற்ற விதமான சீர்திருத்தங்களையும் முஸ்லிம் மக்கள் மத்தியில் அறிமுகம் செய்தார்.

அறிஞர் சித்திலெப்பை இலங்கை சுதந்திரம் அடைவதற்கு முஸ்லிம்கள் சார்பாக பங்களிப்பு செய்தவர்களில் ஒரு முக்கியமானவர் என்பது குறிப்பிடத்தக்கது.

செல்வந்த குடும்பப் பின்னணியில் வந்த அறிஞர் சித்திலெப்பை நினைத்திருந்தால் கண்டியில் மிகப் பெரிய செல்வந்தர் என்ற பெயரைப் பெற்றிருக்க முடியும். மாறாக, அறிஞர் சித்திலெப்பையின் முழு எண்ணங்களும் சமூக மேம்பாட்டுக்காகவே இருந்தன. முஸ்லிம் சமூகத்தில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதிலும் அதற்கான போராட்டங்களை சாத்வீகமான முறையில் முன்னெடுப்பதிலும் அவரது வாழ்க்கையின் பெரும்பகுதி கழிந்தது. அவ்வாறே செல்வத்தின் பெரும் பகுதியை தனது இலட்சியங்களுக்காகவும் சமூக முன்னேற்றதிற்காகவும் எவ்வித தயக்கமுமின்றி செலவு செய்தார்.

அறிஞர் சித்திலெப்பை 1898 பெப்ரவரி 5 இல் காலமானார். இவர் ஆசிய கண்டத்திலேயே ஓர் ஆச்சரியமான செயல் வீரர். இவரைப் போன்ற திறமைமிக்க சமுதாய சிந்தனையுள்ள சமூக தொண்டர்கள் தோன்ற வேண்டும்.



**பரீட் இக்பால்**
**யாழ்ப்பாணம்**

# மறைந்த ஸ்ரீ சங்கரின்
# 42 வது நினைவு தினம்



இலங்கை கலைஞர்களில் மறைந்தும் மறையாமல் வாழும் கலைஞர்கள் பலர் உள்ளனர். அந்த வரிசையில் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர் தான் அமரர் "ஸ்ரீ சங்கர்". இலங்கையில் தயாரான குத்துவிளக்கு, கிங்ஸ்லி செல்லையாவின் "மஞ்சள் குங்குமம்" ஆகிய திரை காவியங்களிலும் மற்றும் தென்னிந்திய திரைப்படங்களான நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடித்த "ராஜராஜ சோழன்", "பைலட் பிரேம்நாத்" ஆகிய படங்களிலும் நடித்தவர். இதில் ராஜராஜ சோழன் படத்தில் ஈழத்துப் புலவர் ஆக தோன்றினார்.

திரைப்படக் கலைஞர்கள் மறைந்தாலும் அவர்களை ரசிகர்கள் மறவாமல் நினைவு கூருவது வழமை. தமிழ் நாட்டின் முடிசூடா மன்னர்களாக இருந்த எம்ஜிஆர், சிவாஜி போன்ற கலைஞர்களை வருடம் தோறும் ரசிகர்கள் நினைவுகூர்ந்து வருவதை நாம் அறிவோம். அதுபோன்று நம்நாட்டு கலைஞர் "ஸ்ரீ சங்கரின்" நினைவு தினமும் அனுஷ்டிக்கப்படுகின்றது. இலங்கை நாடக உலகிலும், தமிழ் சினிமா உலகிலும் தனது முத்திரையைப் பதித்து, தன் வாழ்வை திரை உலகத்திட்காகவும், நாடகத்திற்காகவும் தன் உழைப்பையும் உயிரையும் கொடுத்தவர் அமரர் ஸ்ரீ சங்கர் அவர்கள்.

மறைந்த ஸ்ரீ சங்கர் தான் நடித்த மஞ்சள் குங்குமம் படத்தை விஜயா ஸ்டூடியோவில் சிவாஜிக்குப் போட்டுக் காட்டினார். அதன் பின்னர் இலங்கை சினிமா உலகையும் அதே நேரத்தில் நாடகத்தையும் மறக்கவில்லை தொடர்ந்து நாடகங்களில் நடிக்கவும், தயாரிக்கவும் முழுமூச்சாக செயல்பட்டார்.

ஸ்ரீ சங்கர் நடித்த மேடை நாடகங்களில் கொள்ளைக்காரன், தங்கப்பதக்கம், கவரிமான் போன்ற பல நாடகங்களை மேடையேற்றி நடித்துள்ளார். அவற்றுள் அக்காலத்திலேயே கொள்ளைக்காரன் நாடகத்தை மேடை ஏற்றுவதற்கு சுமார் ஒன்றரை லட்சம் ரூபாவை செலவு செய்திருக்கிறார். மஞ்சள் குங்குமம் நாடகத்திலும் இவர் பிரதான பாத்திரத்தை ஏற்றிருந்தார். அன்னாருக்கு உருவச் சிலையும் வைக்கப்பட்டுள்ளது. இறுதிவரை தமிழ் கலை உலகத்துக்கு இவர் செய்த சேவைகள் மறப்பதற்கன்று. அன்னாரது நினைவுதினம் 20.1.2022 ஆகும். விரைவில் அன்னாரின் நினைவஞ்சலி தினம் இம்மாத இறுதியில் நடைபெற இருக்கின்றது என்பதையும் அறியத்தருகின்றோம்.

**ஸ்ரீ சங்கர் நற்பணி மன்றம்.**




## பாரூக்கே
## பா ஊற்றே!

பா அமுதை பொழிகின்ற
பாலமுனை பெருமகனே !

பொன் பொருள் பெறுமானத்தால்
அளவிடவியலா
ஆற்றலின் ஆழி நீ
பொன்விழா காணுகின்றாய் !

கண் மனம் கல்பு எல்லாம்
மண் மணம் கமழும் கவிதை
சொல் வளம் மிக்க வல்ல
நல்லுளம் கொண்ட உன்னை
நண்பனாய் தந்த அந்த
நாயனுக்கென்தன் நன்றி !

மரபது மாறா
மரபணு உனது சொத்து.

புதுக்க விதை கொண்டு
புதுக்கவிதை ஆக்குமாற்றல் ,

காலத்தின் கோரத்தை ,
கவிதையில் கோலமாக்கி
காலத்தை மீறி வாழும்
காவியமாக்குமாற்றல் ,

நயந் தரும் குறும்பா என்னும்
நகைச்சுவை வெண்பா கொண்டு
பயன்மிகு பாக்களாக்கி
பகடியாய் படைக்குமாற்றல்...

சொற்களில் வடிக்கவொண்ணா
கற்பனைக் கெட்டா
கவிதையின் இமயம் நீ ,
எளிமையின் எவரெஸ்டாகும் !

நீடு நீ வாழ வேண்டும் ,
நிறையவே எழுத வேண்டும் ,
நாடிதன் புகழுன்னாலே
நானிலம் நிறைய வேண்டும்.

**கவிஞர் ரவூப் ஹஸீர்**





காதலிச்ச உங்களைக் கைவிட முடியலை. அதனாலே?
கல்யாணம் பண்ணிகிட்டு டைவர்ஸ் பண்ணப்போறேன்.



என் கணவர் எப்போதுமே டாக்டர் அட்வைஸ்படிதான் நடப்பார்.
அட, நடக்கறதுக்குக்கூட டாக்டர் அட்வைஸ் கேட்பாரா என்ன?



ரயில் வரும் போது ஏன் கேட்டை மூடுராங்க தெரியுமா?
தெரியலயே...
இது கூட தெரியலயா, கேட்டை மூடலேனா ரயில் ஊருக்குள்ள வந்துடும்.






உங்க பையன் படிப்பில இவ்வளவு பெரிய சாதனை செஞ்சதுக்கு நீங்க ஊக்குவித்ததுதானே முதல் காரணம்?
தப்பா சொல்றீங்க, பாக்குவித்துதான் என் பையனைப் படிக்க வெச்சேன்.



உங்கள் ஊரில் பெரிய மனிதர்கள் யாராவது பிறந்திருக்கார்களா?
இல்லை, குழந்தைகள்தான் பிறந்திருக்கின்றன.



(வாகனங்களுக்கு அனுமதி இல்லை என்ற போர்டைப் பர்த்துவிட்டு ஒருவர்)
கான்ஸ்டபிள் நான் இந்த ரோடுல போகலாமா?
வாகனங்கள்தான் போகக்கூடாது, நீங்கள் போகலாமே?
என் பெயர் மயில்வாகனன் சார்!



எங்க ஸ்கூல் வாத்தியாரப்பற்றி சின்னதா ஒரு நாவல் எழுதி வெச்சிருக்கேன்.
குரு நாவல்னு சொல்லு!



காலைல தூங்கி எழுந்ததும் நான் என் மனைவி முகத்தைப் பார்ப்பேன்.
அவ்வளவு பாசமா?
அதெல்லாமில்லை, நரி முகத்துல விழிச்சா நல்லதுங்கற நம்பிக்கைதான்!




அந்த டாக்டருக்கு சொந்தக்காரங்க யாரும் கிடையாது.
ஏன்? எல்லாருக்கும் அவர்தான் ஆபரேஷன் பண்ணினாரு.

# தமிழ் மொழியின் செழிப்பைக் கண்டேன் அதன் பெருமை கண்டேன்

## எழுத்தாளரும் ஊடகவியலாளருமான கலைமாமணி உடப்பூர் வீரசொக்கன்

**இலங்கையின் இலக்கியத்துறையில் தன்னை ஆழமாக தடம் பதித்துக் கொண்ட கலைமாமணி உடப்பூர் வீரசொக்கன் அவர்கள் இலக்கிய ஆர்வலராகவும் நாடகத்துறையின் முன்னோடியாகவும் வழிகாட்டியாகவும் இருந்து வருகின்றார். உடப்பூர் வீரசொக்கன் உடப்பூரான் மற்றும் அலைமுகிலன் ஆகிய பெயர்களில் எழுதி வருகின்றார்.**






வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப்பெருக்கம் கவிப்பெருக்கம் மேவுகின்ற உடப்பூரில் ஈழத்து எழுத்தாளரும் ஊடகவியலாளருமான உடப்பூர் வீரசொக்கன் அவர்கள் தனது பெயருக்கு முன் கிராமத்தின் பெயரை அடையாளமாகக் கொண்டுள்ளமை சமூகத்தின் மீதும் கிராமத்தின் மீதும் அவருக்குள்ள அக்கறையை எடுத்துக்காட்டுகின்றது. அதனோடு நின்றுவிடாது இலக்கியத்திற்கு ஆற்றிய பணியோடு ஊருக்காகவும் சமூகத்திற்காகவும் ஆற்றி வரும் பணிகள் பல.

ஈழத்து எழுத்தாளர் என்ற அங்கீகாரத்தை பெற நீங்கள் மேற்கொண்ட முன்னெடுப்புகள் பற்றி வினவிய போது.

1929ஆம் ஆண்டு உடப்பு சொக்கலிங்க பூசாரி அவர்களின் எழுத்தாற்றலின் பின் 60 ஆண்டு காலமாக இலக்கியத்துறையில் எவ்வித நூல்களும் அச்சு வாகனம் ஏறவில்லை. 1977ஆம் ஆண்டு வீரகேசரி பத்திரிகையில் 'முத்தலச் சிறப்புப் பெற்ற முன்னேஸ்வரம்' எனும் தலைப்பில் கட்டுரை வரைந்தேன். இதிலிருந்து 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 காலப்பகுதி வரை 20க்கும் மேற்பட்ட சிறுகதைகளையும் 300க்கு மேற்பட்ட கவிதைகளையும் 500க்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளேன்.

எனது எழுத்துக்களுக்கு முக்கிய காரணம் காலத்தின் தேவை கருதி காலத்தால் மறைந்து போகும் கலைகளை எடுத்தியம்பி இளைய தலைமுறைக்கு ஊக்கமளித்து புத்தாக்கம் கொண்ட இளைய சமுதாயத்தை ஊக்குவிப்பதே ஆகும்.

எனது இம்முயற்சியை 'கங்கை நீர் வற்றவில்லை' எனும் கவிதைத் தொகுதியில் இரண்டு கவிதைகளை 1990 ஆம் ஆண்டில் அப்போதைய முஸ்லிம் சமய கலாசார இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்களால் நாடாளுமன்றம் ஒத்திவைப்பு விவாதத்தில் பாராட்டப்பட்டது. அதுமட்டுமல்லாது இக்கவிதைகள் நாடாளுமன்ற ஹன்சாட் அறிக்கையிலும் இடம்பெற்றுள்ளன.

'ஊடகத் துறையில் ஜாம்பவானாக ஜொலித்துள்ளீர்கள்' என்பது நாம் அறிந்ததே இது தொடர்பாக உங்கள் அனுபவங்கள் எவ்வளவு தூரம் ஊடகத்துறையில் சாத்தியமாகியுள்ளது எனக்கேட்ட போது

1979 ஆம் ஆண்டு வீரகேசரி பத்திரிகையின் பிரதேச செய்தியாளராக பணியாற்றி உள்ளேன். புத்தளம், குருநாகல் மாவட்ட செய்திகளை திரட்டும் பணியில் ஈடுபட்டேன். இம்மாவட்டங்களில் பிரதானமாக கலை, கலாசாரம் சார்ந்த அடையாளங்களை வெளிக்கொணரும் வகையில் எனது எழுத்துக்கள் மூலம் சேவையாற்றியுள்ளேன். வடமேல் மாகாணத்தில் சுமார் மூன்று தசாப்த காலமாக பல பத்திரிகைகளுக்கு ஆயிரத்துக்கு மேற்பட்ட செய்திகள், விமர்சனங்கள், நேர்காணல்கள் எழுதியுள்ளேன். 1984 ஆம் ஆண்டு 'அலை ஓசை' என்னும் சஞ்சிகையின் பிரதம ஆசிரியராக கடமையாற்றினேன்.

நம் தேசத்தில் கலை கலாசாரங்களை வெளிக்கொணர ஊடகத் துறையை பயன்படுத்தியதோடு அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும் கட்டுமானங்களையும் தடைகளையும் தகர்த்தெரிவதற்கு ஊடகத்துறையை பயன்படுத்துவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

இலக்கியத்துறையின் பயணம் பற்றி வினவிய போது

உடப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வரலாறு (1989) எனது முதலாவது பதிப்பாகும். அதனைத் தொடந்து கங்கை நீர் வற்றவில்லை (1990), அலைகடல் ஓரத்தில் தமிழ் மணம் (1997), வீராவின் கதம்பமாலை (2000)இ கீர்த்தி ஸ்ரீ உடப்பு திரௌபதை அம்மன் (2007), முண்டத்துண்டு (2009), உப்புக்காற்று (2009), நம்ம ஊரவர் (2010), முன்னேஸ்வர ஆலய வரலாறு (2010), உடப்பு நாட்டார் வழக்காறு (2015), ஈழத்து திருநாட்டின் திரௌபதை வழிபாடு (2017, ஊர் ஒன்றின் பேரறிமுகம் (2016), ஆற்றங்கரை (2020) ஆகிய இலக்கியங்களை படைத்துள்ளேன்.

'கலைத்துறையில் அதீத ஈடுபாடு கொண்டுள்ளீர்கள் உடப்பில் கலைத்துறையை மிளிரச் செய்வதற்கு எவ்வாறான முன்னெடுப்புக்களை மேற்கொண்டு உள்ளீர்கள்? தற்போது கலைத்துறையின் நிலை என கேட்ட போது

1983 ஆம் ஆண்டு உடப்பில் நாடகக்கலை ஆரம்பிக்கப்பட்டது. உடப்பு திரௌபதை அம்மன் ஆலயத்தின் உற்சவத்தை முன்னிட்டு உளூர் இளைஞர்களை ஒன்று திரட்டி நாடகங்களை மேடையேற்றியுள்ளேன். அவை இதிகாச, புராண ,சரித்திர நாடகங்களாக அமைந்தன. வடகிழக்கில் அரங்கேற்றப்படாத பல நாடகங்கள் உடப்பில் அரங்கேற்றப்பட்டமையை எண்ணி பெருமகிழ்ச்சி அடைகின்றேன். ஆரம்பத்தில் 'தேரோட்டி மகன், 'புலித்தேவன், 'இதுதான் முடிவு, 'பாசச்சுடர்' முதலான நாடங்களில் பாத்திரமேற்று நடித்துள்ளேன். இதைவிட எமது பிரதேசத்தில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளின் அறிவிப்பாளராகவும் பங்காற்றி உள்ளேன். தற்போது நாடகத்துறையின் நெறியாளராகவும் கடமையாற்றி வருகின்றேன்.

எனது அனுபவத்தை கொண்டு இளைஞர்களை கலைத்துறையில் ஈடுபடச் செய்கின்றேன். இருப்பினும் தற்போது இளைஞர்களின் பங்கு பற்றுதல் குறைவென்றே சொல்லலாம். இந்நாடகங்கள் சினிமா பாணியில் அமைவதால் பிற மொழி பேசுபவர்களும் ஆர்வத்தோடு இரசித்துப் பார்க்கிறார்கள். கலைஞர்களுக்கு பயிற்சி திட்டங்களும் பயிற்சி வழங்கும் நிறுவனங்களின் அனுபவங்களையும் பெற்று கொடுக்கின்றோம். எனினும் இளைஞர்களின் நவநாகரீக உலகத்திற்கான பிரவேசம் , வெளிநாட்டு மோகம், இலத்திரனியல் மயமாக்கல் காரணமாக கலைத்துறை மீதான ஈடுபாடு குறைந்து வருகின்றது.

உடப்பில் தமிழையும் சைவத்தையும் வளர்க்க பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றீர்கள். இம் முயற்சிக்கான பிரதிபலன்கள் மக்கள் மத்தியில் எவ்வாறு செல்வாக்குப் பெற்றுள்ளன என வினவிய போது.

தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் அருந்தொண்டினை எண்ணி மகிழ்ச்சி அடைகின்றேன். தமிழையும் சைவத்தையும் இரு கண்களாகக் கொண்டு வாழும் உடப்பூரில் அதன் மகத்துவத்தை மிளிரச் செய்ய வேண்டும் என்ற அவா இருக்கின்றது. மாணவர்களையும் இளைஞர்களையும் கலைஞர்களாக பரிணமிக்கச் செய்ய வேண்டும். இளந்தலைமுறையையும் நம் பாரம்பரியங்களை பின்பற்ற வேண்டும் என்ற பற்றின் காரணமாக தற்போது அதன் மகிமை பெருமை எம் இனத்தவரிடையேடையே உள்ளது என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

'கலைமாமணி' என்ற மகுட வாசகத்திற்கு ஏற்புடைய பல சான்றுகள் பற்றி கேட்ட போது..

சர்வதேச இந்து சம்மேளனம் 'கலை இளவல் 'என்ற விருதை வழங்கியது. வினவித அரச சார்பற்ற நிறுவனம் 'கீர்த்தி பாதிய' என்ற விருதையும் அகில இலங்கை சமாதான நீதிவான்கள் சங்கம் 'தேசகீர்த்தி' என்ற விருதையும் வடமேல் கலாச்சார ஒன்றியம் 'தமிழ்மணி' என்ற விருதையும் தாடகை சஞ்சிகை 'கலை தீபம' என்ற விருதையும் வழங்கி கௌரவித்தது.

உங்களால் நாளைய தலைமுறைக்கு கூறும் அறிவுரை எனக் கேட்ட போது

உடப்பு ஊரில் வாழ்ந்து வரும் கலை சைவம் தமிழ் ஆகிய மூன்றையும் நமது கண்கள் என போற்றி வாழ்ந்தால் வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப்பெருக்கும் கவிப்பெருக்கம் மேவுகின்ற இடம் உடப்பூர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. எனவே நமது மண்ணின் பெருமைகளையும் பாரம்பரியங்களையும் கைக்கொண்டு காத்தல் வேண்டும் என்பதே அவா!










**செ. ரமேஸ் மதுசங்க**
**ஊடகக் கற்கைகள் துறை**
**நான்காம் வருடம்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## சிறந்த திறனாய்வாளர் சிதம்பரபிள்ளை சிவகுமார்

**சிதம்பரபிள்ளை சிவகுமார் ஈழத்து இலக்கியப் புலத்தில் முக்கியமான ஆளுமை. தொண்ணூறுகளில் ஒலிபரப்பு ஊடகத்தில் இலக்கிய இதத்தைப் பாய்ச்சிய குரல்காரர் சிவகுமார்.**

இதய சங்கமமும், கவிதைக் கலசமும் இவரது குரலால் செழுமை பூத்தது. கவிஞர் பலரும் தமது கவிதைகளை இவர் குரல் வாசிப்பில் கேட்க ஆவல் கொண்டிருந்த காலமது. தமிழின் அழகை இவரது உச்சரிப்பு மெருகேற்றியது. கவிதை வாசிப்பு பாணி உயிரூட்டியது. உணர்வு மிகுந்த கவிதைக் கணங்கள் சிவகுமாருடையது. எழுத்தூடகத்தில் அமுது ஊடாக இவரது இலக்கிய ஆளுமை பெரிதும் வெளிப்பட்டது. லாவண்யமான சொல் நேர்த்திக்காரன் சிவகுமார்.

கவிஞராக, ஊடகவியலாளராக அவர் வெளிப்பட்ட காலத்தில் அவரது தேடல் மிக்க வாசிப்பை வாசகர் பலரும் நுகர்ந்திருந்தனர். சிதம்பரப்பிள்ளை சிவகுமார் அறிவுத்தேடலும், தன்னம்பிக்கையும், எளிமையும், நிதானமும், மானுட நேசிப்பும் கொண்டவர்.

நூல் வெளியீட்டு நிகழ்வுகளில் தவிர்க்க முடியாத உரையாடலாக அவரது பெயர் இருந்தது. அத்துணை சிறப்பாக நூல் குறித்த திறனாய்வை முன் வைக்க வல்லவர். அதிகம்





பேசிவிடக்கூடாதென்பதற்காக - உரிய விடயப்பரப்புக்கு மைய இடமளிக்க வேண்டுமென்பதற்காக திறனாய்வுப் பிரதியை எழுதி வாசிக்கும் வழக்கம் கொண்டிருந்தார். இதனால், மற்ற முன்வைப்பாளர்களிலிருந்து பெரிதும் வேறுபட்டார். அவரது வாசிப்பு முறைமை அழகானது. எளிய ஓசை நயத்துடனும், உணர்வுச்செறிவுடனும், ஆழ்ந்த மொழிக்கையாட்சியுடனும் அவரது பிரதிகள் அமைந்திருக்கும். அதனால், தேர்ந்த படைப்பாளர் பலரது மேடைகளிலும் அவர் இருந்தார். சிவகுமாரின் குரல் எழுத்துப் பிரதிகள் அழகானவை; ஆழமானவை. ஆனாலும், அவரது எந்த எழுத்துக்களும் நூல் வடிவம் பெற்றதாக காணக்கிடைக்காமையும் ஓர் இழப்புத்தான்.

சிவகுமார் - மேஜர் அமீன் என அறியப்பட்ட ஈழத்தின் ஒரு காலகட்டச் செயற்பாட்டாளர். எனினும் அவரது இலக்கிய ஆளுமைதான் அவருக்கான உயர்ந்த அறிமுகத்தைத்தந்தது. மிகச்சாதாரண மனிதனாக வாழ்ந்து அமரத்துவமடைந்த தோழர் சிதம்பரப்பிள்ளை சிவகுமாருக்கு ஆழ்ந்த அஞ்சலிகள்.

அவர் தனது உரைகள் பலதையும் இப்படி முடிப்பார். எனது இருத்தலுக்கான அழைப்பு கவிதை வெளியீட்டு நிகழ்வு 2003 மேடையிலும் இப்படித்தான் முடித்தார். "ஒரு ரஷ்யக் கவிஞன் சொன்னான் ஏனெனில் அனைத்தும் மாறவும் சுவடு தெரியாமல் மறையவும் செய்கையில் அன்பு என்ற கதிரவனோ என்றென்றும் அசையாது நிற்கும்.

## கிழக்கு மாகாண இளம் கலைஞர் விருதுக்கு ஊடகவியலாளர் என்.எம். புஹாரி தெரிவு

ஊடகத்துறைக்கான கிழக்கு மாகாண இளங்கலைஞர் விருதுக்காக தோப்பூரைச் சேர்ந்த ஊடகவியலாளர் நஹீம் முஹமட் புஹாரி தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஊடகத்துறையில் இப்பிரிவின் கீழ் இவருக்கு மாத்திரமே இவ்வருடம் இவ்விருது வழங்கப்படவுள்ளது.

தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியின் பழைய மாணவரான இவர் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை போன்றவற்றின் ஊடகவியலாளராக 14 வருடங்களாக செயற்பட்டு வருகின்றார்.

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடாத்தப்பட்ட அறிவிப்பாளர் போட்டியில் இரு தடவைகள் தேசிய மட்டத்தில் 1 ஆம் இடத்தையும் அதே ஆண்டுகளில் மாவட்ட மட்டத்தில் 1 ஆம் இடத்தையும் இவர் பெற்றுள்ளார். அத்தோடு 2009 ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கும் இவர் தெரிவு செய்யப்பட்டார். 2011 ஆம் ஆண்டு முன்னாள் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணியினால் இளம் ஊடகவியலாளருக்கான நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.



சக்தி நிவ்ஸ் பெர்ஸ்ட் மூதூர் பிராந்திய ஊடகவியலாளராக நீண்ட காலமாக பணியாற்றி வரும் முஹமட் புஹாரி 2021 ஆம் ஆண்டுக்கான இளம் கலைஞர் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டமை மூதூர்,தோப்பூர் மண்ணுக்கு பெருமை சேர்ப்பதாய் அமைவதாக ஊடக அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.

எம்.ஏ.முகமட்.

# தந்தை எனும் தாரக மந்திரம்

" ★ தந்தை இருக்கும் போது எதையும் இழந்ததாய் தெரியவில்லை !
★ தந்தையை இழந்த போது எதுவும் உடன் இருப்பதாய் தெரியவில்லை ! "

எத்தனை வலிகள் என் வாழ்வில் வந்து போனாலும் என் தந்தையின் பிரிவால் ஏற்பட்ட வலிக்கு ஈடாகாது.

வெலிகம, தெனிபிடிய, மதுராபுரையைச் சேர்ந்த சமாதான நீதவான், வெலிகம அறபா தேசிய பாடசாலையின் பிரதி அதிபருமான எனது தந்தை கடந்த வருடம் ( 2021.01.29 ஜமாதுல் ஆஹிர் பிறை 15 இல் ) இறையடி எய்தினார்.


என்னை விதைத்த விருட்சகம் அடியோடு சாய்ந்த நாள். தோள் மீது எனை தாங்கி, மார்போடு வாரி அணைத்து, நெற்றியில் பாச முத்தமிட்ட என் உயிர் தந்தை விடை பெற்று ஓராண்டு இன்று.

நாட்கள் கடந்து சென்றாலும் தந்தையின் நினைவுகள் என்றும் எம் உள்ளத்தை கனக்கச் செய்கின்றது.

ஒரு குடும்பத் தலைவனாக , தந்தையாக குடும்பத்தை அன்போடு வழிநடத்திச் சென்றவர், அகம் முழுவதும் அன்பும், அறிவும், ஆன்மீகமும் பிள்ளைகளாகிய எம் உள்ளத்தில் ஆழப் பதித்துச் சென்றவர். அத்துடன் " கல்வி " எனும் உயரிய பொக்கிசத்தையும் எம்முள் பதித்து விட்டுச் சென்றார்.

அத்துடன் தனது வாழ்நாளில் ஆசிரியப் பணியை அறப் பணியாக மேற்கொண்டு, நம்பிக்கையாகவும், நாணயமாகவும் தனது சேவையை மேற்கொண்டதோடு மட்டுமல்லாது சமூக சேவைகளாக தமது ஊர் பள்ளிவாயிலான மஸ்ஜிதுல் பலாஹ் ஜும்ஆ பள்ளிவாசலின் நம்பிக்கைப் பொறுப்பாளராகவும் நீண்ட காலம் சேவையாற்றியதோடு வெலிகமை பிரதேச இணக்க சபையின் உறுப்பினராகவும் சுமார் 21 வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றினார்.

இவ்வாறு தமது சேவைகளை செவ்வனே மேற்கொண்டு தனது சேவைக் காலத்தில் அனைவருடனும் அன்புடனும், தயாள சிந்தையுடனும் செயற்பட்டு எல்லோர் மனதிலும் நீங்காத இடத்தைப் பெற்று ஆயிரமாயிரம் கல்விக் கண்களைத் திறந்து விட்ட நல்லாசிரியராக, சமூக சேவையாளராக செயற்பட்ட எனது தந்தையின் அனைத்து சேவைகளையும், ஏனைய நற்கருமங்களையும் ஏற்று உயர்வான .ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கபதியை வாஹிபாக்கும்படி பிரார்த்திக்கின்றேன்.



தந்தையுடன் இருந்த ஒவ்வொரு கணத்தையும் நான் நினைத்துப் பார்க்கின்றேன். அவர் என்னோடு பேசிய கடைசி வார்த்தை, சிரித்த சிரிப்பு, பார்வை இவ்வாறாக அனைத்துமே தாங்க முடியாத துன்பத்தையும், மன வேதனையையுமே உண்டு பண்ணுகின்றன.

★உயிரிழந்த செய்தி கேட்டதும் நான் உணர்விழந்தே சென்றேன்.★

"உண்மைப் பாசத்தின் உறைவிடத்தை தேடுகின்றேன் இன்று."

எமது வாழ்வின் சகல விடயங்களையும் தனது அனுபவத்தாலும், அறிவாலும் எமக்கு வழிகாட்டிச் சென்ற தந்தையின் வாழ்வை ★"ஒரு அதிசயமான புத்தகம்"★ என்றே சொல்லலாம்.

என்னையும், எனது சகோதரிகளையும் நல்லொழுக்கமுள்ள ஸாலிஹான பிள்ளைகளாக வளர்த்து, சிறந்த கல்வியையும் எமக்களித்துச் சென்ற எம் பாசமிகு தந்தை எம்மை விட்டுப் பிரிந்து இன்றுடன் ஒரு வருடம் ஆகின்றது.

கருணை ரஹ்மானே!
உன்னிடமே இறைஞ்சுகின்றேன்.
படைத்த என் இறைவா!

என் தந்தையின் சகல பாவங்களையும் மன்னித்து, மண்ணறை வாழ்வை சுவனப் பூங்காவாக மாற்றி, நரகத்தை விட்டும் பாதுகாத்து, கண்மணி நாயகம் முஹம்மத் நபி (ஸல்) அவர்களது ஷபாஅத்தையும் பெற்று, மறுமை வாழ்வு இன்பகரமானதாகவும், வெற்றிகரமானதாகவும் அமைந்து, ஜன்னத்துல் பிர்தௌஸ் எனும் மேலான சுவர்க்கத்தில் ஈடேற்றத்தையும், உயர்ந்த இடத்தையும் வழங்குவாயாக யா அல்லாஹ்!

**இஷ்கா இர்ஷாத்**

## பொன்மனச் செம்மலின் பொன்னான புன்னகை பூக்கும் வாழ்த்துக்கள்

பகலவன் என்னும்
பகவானை
அஞ்சலி செய்து
புத்தம் புது கலசத்தில்,
பால் பொங்கும்
பண்டிகை தினம்தான்
தைத் திங்கள்
பொங்கல் திருநாள்.

இந்துக்களின்
இதயங்களில்
இன்பம் சிந்தும்
இனிய நாள்
அவர்களின் இல்லங்களில்
மங்களம் மலரும்
மகிழ்ச்சித் திருநாள் !



இந்நாளில்
சஞ்சலம் நீங்கி,
சந்தோஷம் பொழியட்டும்,
கவலைகள் மறைந்து
கல கலப்பு ஒளிரட்டும் !


அன்பர்களே,நண்பர்களே !
பொங்கல் பெருநாளை
கொண்டாடி மகிழ்ந்த நீங்கள்.

உங்கள் இறையோனை
புகழுங்கள் நலமும்
பலமும்,வளமும் பெற்று
நீடு வாழ என்
நல்லாசிகள்.

# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்



எம். எஸ்.ராஜு.
மன்னார்.

**கேள்வி : நயன்தாரா ஏன் இன்னும் திருமணம் செய்து கொள்ளாமல் இருக்கிறார்?**

**பதில் :** தமிழ் சினிமா நடிகர், நடிகைகள் பெரும்பாலானவர்கள் ஜோதிடத்தின் மீது அதிக நம்பிக்கை கொண்டவர்கள். படங்களை ஒப்பந்தம் செய்வதில் இருந்து தங்கள் சொந்த வாழ்க்கையில் முடிவுகளை எடுப்பது வரை ஜோதிடர்களை கலந்து ஆலோசித்துதான் முடிவுகளை எடுப்பார்கள். அப்படி, தமிழ் சினிமா உலகின் லேடி சுப்பர் ஸ்டாரான நயன்தாராவுக்கும் சமீபகாலமாக ஜோதிடத்தின்மீது நம்பிக்கை அதிகமாகி உள்ளதாம்.


தனக்கென ஜோதிடர் ஒருவரை வைத்திருக்கும் நயன் எல்லா முக்கிய விடயங்களையும் அவரின் ஆலோசனையின் படிதான் செய்வாராம்.

இந்நிலையில் அவர் நயன்தாராவிடம், "நீங்கள் இப்போது திருமணம் செய்துகொண்டால் உங்களின் இப்போதைய புகழ் மற்றும் பிரபல்யம் எல்லாம் இல்லாமல் போய்விடும்" என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட்டுள்ளார். அதனால்தான் நயனுக்கும் விக்னேஷ் சிவனுக்கும் நடக்க இருக்கும் திருமணம் தள்ளிப் போய்க்கொண்டே இருப்பதாகவும் சொல்லப்படுகிறது...!

ஆர்.முருகேசு.
சிலாபம்.

**கேள்வி: பழைய பாடல்களை 'ரீ மிக்ஸ்'செய்யும் விளையாட்டு இப்போதும் நடந்து கொண்டிருக்கிறதா?**

**பதில்:** ஆமாம்..அதுநடந்து கொண்டுதான் இருக்கிறது... சமீபத்தில் ராகவா லாரன்ஸ், பிரியா பவானி சங்கரன் ஜோடியாக நடக்கும்'ருத்ரன்'படத்திலும் ஒரு ரீமிக்ஸ் பாடல் பதிவாக்கப் பட்டுள்ளது.



கடந்த 60வருடங்களுக்கு முன்பு வெளி வந்த 'வீரத்திருமகன்'என்கிற படத்தில் இடம்பெற்ற' பாடாத பாட்டெல்லாம் பாட வந்தாள்'என்ற பாடலைத் தான் ரீமேக் செய்துள்ளார்கள்.



இதில் என்ன சவால் என்றால், அந்தப் படத்தின் நாயகன் ஆனந்தன் இந்தப்பாடலை ஒரு சாய்வு. நாற்காலியில் அமர்ந்தபடியேதான் பாடுவார். இந்தப்பாடலுக்கு பெரிதாக ஆனந்தனுக்கு நடன அசைவுகள் எதுவும் இருக்காது..அப்படிப்பட்ட ஒரு பாடலைத் தான் ராகவா லாரன்ஸை வைத்து வித்தியாசமான நடன அசைவுகளுடன் ஆடவைத்துள்ளாராம் டான்ஸ் மாஸ்டர் சிறீதர்.

இந்தப்படத்தை,தயாரிப்பாளர் ஆடுகளம் கதிரேசன் இயக்குகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

எம்.எம்.பாருக்
மாவனெல்ல.

**கேள்வி : ஹிந்தி சினிமா உலகில் கருப்பு நடிகர்களை ஒதுக்குவதாக பேசப் படுகிறதே உண்மையா...மொழி?**

**பதில் :** இந்த விஷயத்தை பகிரங்கப்படுத் தியிருப்பவர்,ரஜினி காந்தின் 'பேட்ட'படத்தில் வில்லனாக நடித்து தமிழ் ரசிகர்கள் மத்தியில் பிரபலமான நவாசுதீன் சித்திக்தான். இவர் இந்திப்பட உலகில் முன்னணி வில்லன் மற்றும் குணச்சித்திர நடிகராக இருக்கிறார். சிறந்த நடிகருக்கான விருதையும் பெற்றிருக்கிறார்.



இந்த நிலையில், திரைப்படத்துறையில் இனவெறி இருப்பதாக நாவாசுதீன் சித்திக் குற்றம் சாட்டியுள்ளார். இது குறித்து அவர் அளித்துள்ள பேட்டியில், "இந்திப்பட உலகில் எவரும் நட்புறவுடன் பழகுவதில்லை. இங்கு இனவெறி தான் அதிகமாக உள்ளது. ஒரு நடிகை கருப்பாக இருந்தால் படவாய்ப்பு அளிக்காமல் ஒதுக்கு கிறார்கள். ஒரு படம் நன்றாக வர திறமையானவர்களை நடிக்க வைக்கவேண்டும். ஆனால் இங்கு அந்த நிலைமை இல்லை. தோலின் நிறத்தைப்பார்க்கிறார்கள். நான் உயரம் குறைவாக இருந்ததால் என்னையும் பல வருடங்களாக நிராகரித்தார்கள். ஆனால் நடிப்புத்திறமையால் இப்போது எனக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஹிந்தி பட உலகில் நிலவும் இந்த இனவெறியை எதிர்த்து நான் பல வருடங்களாக போராடி வருகிறேன்.பல பெரிய நடிகர்களும் இனவெறியால் பாதிக்க பட்டுள்ளனர்."என்று கூறியுள்ளார்.

இந்த குற்றச்சாட்டு பட உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**சினி பஜார் கேள்வி பதில்,**
**தினகரன் வார மஞ்சரி,**
**லேக் ஹவுஸ், கொழும்பு-10.**

# கையில் பேனாவுடன் தனுஷ்

கார்த்திக் நரேன் இயக்கத்தில் தனுஷ் நடிப்பில் உருவாகி இருக்கும் மாறன் படத்தின் பிரமோஷன் போஸ்டர் வெளியாகி ரசிகர்களை கவர்ந்துள்ளது.

நடிகர் தனுஷ் நடிப்பில் தற்போது உருவாகி இருக்கும் படம் 'மாறன்'. கார்த்திக் நரேன் இயக்கியுள்ள இப்படத்தை சத்யஜோதி பிலிம்ஸ் நிறுவனம் தயாரித்து வருகிறது. இப்படத்தில் தனுஷுக்கு ஜோடியாக மாளவிகா மோகனன் நடித்துள்ளார்.

மேலும் ஸ்மிருதி வெங்கட், சமுத்திரக்கனி, கிருஷ்ணகுமார், மகேந்திரன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள். ஜிவி பிரகாஷ் இசையமைக்கும் இப்படத்திற்கு விவேகானந் சந்தோஷம் ஒளிப்பதிவு செய்துள்ளார். இப்படத்தின் படப்பிடிப்பு முடிந்து பின்னணி பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறன.

இந்நிலையில் பொங்கல் தினத்தை முன்னிட்டு, மாறன் படத்தின் பிரமோஷன் போஸ்டரை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். இதில் தனுஷ் கையில் பேனாவுடன் நிற்கும் காட்சி ரசிகர்களை கவர்ந்துள்ளது. மேலும் இந்த டீசர் சமூக வலைத்தளத்தில் வைரலாகி வருகிறது.



# பிகினி உடையில் கிரண்

ஜெமினி, வின்னர், வில்லன் படங்களில் நடித்து பிரபலமான கிரணின் கவர்ச்சி வீடியோ ஒன்று வெளியாகி வைரலாகி வருகிறது.


ஜெமினி படத்தின் மூலமாக ஹீரோயினாக அறிமுகமானவர் கிரண். தொடர்ந்து அஜித்துடன் 'வில்லன்', பிரஷாந்துடன் 'வின்னர்', கமல்ஹாசனுடன் 'அன்பே சிவம்', எஸ்ஜே சூர்யாவின் 'நியூ' உள்ளிட்ட படங்களில் முக்கிய வேடங்களில் நடித்துள்ளார்.

குறிப்பாக சுந்தர்.சி இயக்கத்தில் பிரசாந்த், வடிவேலுவுடன் அவர் நடித்த 'வின்னர்' படம் சூப்பர் ஹிட்டானது. இதில் அதிக கவர்ச்சியில் கிரண் நடித்திருந்தார். தற்போது பட வாய்ப்பு இல்லாமல் இருக்கும் கிரண் சமூக வலைத்தளத்தில் அடிக்கடி புகைப்படங்களை வெளியிட்டு வருகிறார்.

தற்போது பிகினி உடையில் கடற்கரையோரம் இருக்கும் வீடியோ ஒன்றை வெளியிட்டு இருக்கிறார். இந்த வீடியோவை பார்த்த ரசிகர்கள் வின்னர் படம் நியாபகம் வருகிறது என்றும், வயதானாலும் இளமை குறையவில்லை என்றும் பதிவு செய்து வருகிறார்கள்.



# இடுப்பை வளைத்து நெளித்து டான்ஸ் ஆடிய யாஷிகா



கவர்ச்சி கன்னியாக வலம் வந்து இளசுகளில் இதயத்தில் தனி இடம் பிடித்தவர் யாஷிகா ஆனந்த். இவர் விஜய் டிவியில் ஒளிபரப்பான பிக் பாஸ் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அந்த வீட்டில் குட்டி குட்டி பவுசர் போட்டுக்கு ரசிகர்களை ஏக்க பெருமூச்சுவிடவைத்தார். இதனால், யாஷிகாவுக்கு ரசிகர்கள் ஏகத்திற்கும் பெருகியது

பிக் பாஸ்வீட்டிலிருந்து வெளியே வந்த இவருக்கு பட வாய்ப்புகள் வந்த அதில் பிஸியாக நடித்துக்கொண்டு இருந்தார். புதுச்சேரியில் ஒரு பார்ட்டியில் கலந்து கொண்டுவிட்டு, சென்னை திரும்பிக்கொண்டு இருக்கும் போது கார் விபத்துக்குள்ளானது.

இந்த கோர விபத்தில் யாஷிகாவின் தோழி பவானி சம்பவ இடத்திலே உயிரிழந்தார். இந்த விபத்தில் யாஷிகாவுக்கு காலில் முறிவு ஏற்பட்டது. தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்ட அவர் உயிர் பிழைத்தார். 3 மாத ஓய்வுக்கு பிறகு தற்போது மீண்டும் ஆக்டிவாகி உள்ளார் யாஷிகா.

அல்லு அர்ஜுன், ராஷ்மிகா மந்தனா நடிப்பில் வெளியான படம் புஷ்பா படத்தில் இடம் பெற்றுள்ள 'சாமி..சாமி' பாடலுக்கு ராஷ்மிகா மந்தனா, அல்லு அர்ஜுன் அசத்தலாக நடனமாடியுள்ளனர். இந்த பாடலுக்கு ராஷ்மிகா ஆடிய ஸ்டேப் அனைவரையும் கவர்ந்துள்ளதால் சாமி சாமி பாடலுக்கு தமிழ் பிரபலங்கள் நடனமாடி தொடர்ந்து ரீல்ஸ் வீடியோ வெளிட்டு வருகின்றனர்.

நடிகை யாஷிகா ஆனந்த் பாவாடை தாவணியில், சாமி சாமி பாடலுக்கு கலக்கலாக ஸ்டேப் போட்டுள்ளார். இந்த வீடியோ இணையத்தில் வைரலாகி வருகிறது. இந்த வீடியோவை பார்த்த ரசிகர்கள் அட நம்ப யாஷிகா, ராஷ்மிகா டஃப் கொடுப்பார் போல என கருத்துக்களை பகிர்ந்து வருகின்றனர்.

# என் வாழ்வில் திருப்பமாகிய 'திரிஷ்யம்'

'திரிஷ்யம்' (மலையாளம்) படத்தின் மூலம் பிரபலமானவர் ஆசா சரத். அந்தப் படத்தில், இவர் நடுத்தர வயதுள்ள பொலிஸ் அதிகாரியாக நடித்து நடிப்புத் திறமையை வெளிப்படுத்தினார். இந்தப் படம், தமிழில் கமல்ஹாசன் நடித்து 'பாபநாசம்' என்ற பெயரில் வெளிவந்தது.

அந்தப் படத்திலும் அதே பொலிஸ் அதிகாரி வேடத்தில் ஆசா சரத் நடித்து இருந்தார். நடுத்தர வயதுள்ள பெண் கதாபாத்திரங்களில் நடித்து பாராட்டப்படுபவர்கள் வெகு சிலரே. இந்தப் பட்டியலில் ஆசா சரத்தும் சேர்ந்துள்ளார். இதுபற்றி அவர் கூறியதாவது:

''தமிழ் படஉலகில் என் நடிப்புக்கு கிடைத்து வரும் பாராட்டுக்கள் மகிழ்ச்சியை தருகிறது. 'திரிஷ்யம்' படம் என் திரைப்பட வாழ்க்கையில் ஒரு திருப்பமாக அமைந்தது. அதில் என் திறமையை வெளிப்படுத்த சந்தர்ப்பம் கிடைத்தது.

தொடர்ந்து இதுபோன்ற நடுத்தர வயதுள்ள வேடங்களில் நடிக்க தயாராக இருக்கிறேன்'' என்கிறார் ஆசா சரத்.



# வில்லி வேடத்தில் நடிப்பேன்



இனிமேல் தொடர்ந்து வில்லி வேடத்தில் நடிப்பேன்'' என்று வனிதா விஜயகுமார் கூறினார்.

'தில்லு இருந்தா போராடு' படத்தின் பாடல்கள் வெளியீட்டு விழா, சென்னையில் நடந்தது. விழாவில் வனிதா விஜயகுமார் கலந்துகொண்டு பேசியதாவது:

''சினிமாவில் எனக்கு கிடைத்த இடத்தை நான் கோட்டை விட்டுவிட்டேன். முட்டாள்தனம் பண்ணி விட்டேன். இதை மிக தாமதமாக உணர்ந்தேன். இனிமேல், விட்ட இடத்தை பிடிக்கப் போகிறேன்.

இந்த படத்தின் டைரக்டர் முரளிதரன் என்னிடம் வந்து கதை சொன்னபோது, 'பஞ்சாயத்து பரமேஸ்வரி' என்ற வில்லி வேடத்தில் நடிக்க முடியுமா? என்று தயங்கி தயங்கி கேட்டார். நடிக்கிறேன் என்று நான் சொன்னதும், அவர் முகம் மலர்ந்தது.

வில்லி வேடத்தில் நடிக்க எனக்கு எந்த தயக்கமும் இல்லை. தொடர்ந்து வில்லியாக நடிக்க முடிவு செய்து இருக்கிறேன். இந்த படத்தில் எனக்கு 'பஞ்சாயத்து பரமேஸ்வரி' என்ற வில்லி வேடம். இதற்காக மோட்டார் சைக்கிள் ஓட்ட வேண்டும் என்றார்கள்.

எனக்கு கார் ஓட்ட தெரியும். வேகமாக ஓட்டுவேன். ஆனால், 'பைக்' ஓட்ட தெரியாது. படத்துக்காக புல்லட் ஓட்ட ஒரு நண்பரிடம் கற்றுக்கொண்டேன். படத்தில் நான் புல்லட் ஓட்டி வரும் காட்சி, 'பந்தா'வாக இருக்கும். உலக மகா வில்லியாக தெரிவேன்.''

இவ்வாறு வனிதா விஜயகுமார் பேசினார்.



## பெண் எழுத்தாளர் 25

# ரிஸ்கானா




**வளர்ந்து வரும் இளம் எழுத்தாளரான ரிஸ்கானா புத்தளத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் முக்தார் , மசாயா ஆகியோரின் புதல்வியும் அஸ்ரஃப் என்பவரின் மனைவியுமாவார். ரிஸ்கானா எனும் இயற்பெயர் கொண்ட இவர் ரிஸ்கா முக்தார் என்ற பெயரிலேயே எழுத்துலகில் அறிமுகமாகியுள்ளார்.**

இவர் பு/சென் மேரிஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் பாடசாலைக்கல்வியைக் கற்று களனி பல்கலைக்கழகத்தில் சமாதானமும் முரண்பாடு தீர்த்தலும் என்ற சிறப்புத்துறையில் கலைமாணி பட்டம் பெற்றதுடன் தற்போது ஆசிரியராக கடமையாற்றிக் கொண்டிருக்கிறார்.

எழுத்துத்துறையில் ஆர்வம் எவ்வாறு ஏற்பட்டது என வினவிய போது இவ்வாறு பதிலளித்தார்.

சிறு வயதிலிருந்தே சகோதரியின் வீட்டில் வளர்ந்த இவர் தன் தனிமைக்கு தோழமையாக புத்தகங்களையே அதிகம் நாடியிருக்கிறார். இவரின் வாசிப்பின் மீதான ஆர்வமே எழுத்தின் பக்கம் ஆர்வத்தை ஏற்படுத்தியது எனவும் பாடசாலையில் கற்கும் காலத்திலிருந்தே தனக்கு எழுத ஆர்வம் ஏற்பட்டது எனவும் கூறினார்.

இவர் ஆரம்பத்தில் சிறுகதைகள் எழுதுவதிலேயே ஆர்வம் கொண்டவர். ஒரு சில சிறுகதைகளை எழுதியுமிருக்கிறார். அப்போது வாசகிகளாக இருந்தது இவரின் சக தோழிகள். பின் பல்கலைக்கழக நாட்களில்தான் வெறுமனே ஒரு பொழுதுபோக்கிற்காக முகநூலில் கவிதைகள் எழுத ஆரம்பித்தார்.

மேலும் இவரின் இலக்கியத்துறைப் பயணத்தில் இந்தியாவில் படைப்புக் குழுமம் மாதாந்திர சிறந்த படைப்புக்கான தேர்வில் இரு சான்றிதழ்களைப் பெற்றுள்ளதுடன் 2019ம் ஆண்டில் "கவிச்சுடர்" விருதும் வழங்கி கௌரவித்தது.

மேலும் கவிதை பிரசுரம் பற்றி குறிப்பிடுகையில் இவர் கவிதைகள் பல இந்திய/இலங்கை சஞ்சிகைகளிலும், மின்னிதழ்களிலும் பிரசுரிக்கப்பட்டிருப்பதுடன் இலங்கை வானொலி வர்த்தக சேவையின் இலக்கிய மஞ்சரியிலும் ஒலிபரப்பாகியுள்ளன.

இவர் நூல் வெளியீடு பற்றி குறிப்பிடுகையில்

கன்னி நூலான "நினைவுகளில் உருகும் பனிக்காடு" எனும் கவிதைத் தொகுப்பை இந்தியாவின் எழிலினி பதிப்பகம் 2020ம் ஆண்டில் சென்னை புத்தக கண்காட்சியின் போது வெளியிட்டது.

இவர் அடுத்த கவிதைத் தொகுப்பினை வெளியிடுவதற்கான ஆயத்தங்களை முன்னெடுத்துச் செல்வதுடன் ஒரு சிறுகதைத் தொகுப்பினையும் வெளியிடும் முயற்சியில் பயணித்துக் கொண்டிருக்கிறார்.

கவிதை பற்றி இவர் குறிப்பிடுகையில் கவிதைகள் என்பது யதார்த்தத்தைப் பேச வேண்டும். அவ் யதார்த்தமானது புதிர்களைக்கூட்டி வாசிப்போரை திணறடிக்கும் எழுத்துக்களின் சிடுக்குகளற்று எளிய மொழியில் அமைந்திருத்தல் வேண்டும். அதுவே கவிதைக்கான நியாயமும் கூட.

அவ்வாறான கவிதைகளே வாசகனை




கவர்ந்திழுப்பதுடன் காலம் கடந்தும் பேசப்படும்.

இவர் முகநூலில் கவிதைகள் எழுதிக்கொண்டிருந்த போதிலும் புத்தக வெளியீட்டின் பின்பு நிறையவே எதிர்மறையான விமர்சனங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. ஒரு பெண்ணாக இதைத்தான் எழுத வேண்டும் இதையெல்லாம் எழுதக்கூடாது என சமூகம் ஒரு வரையறையை விதித்து வைத்திருக்கிறது. அதைத் தாண்டுபவர்கள் வேறு கோணத்தில் பார்க்கப்படுகிறார்கள். மேலும் எழுத்துக்கள் எல்லாமே எழுதுபவரின் சொந்த அனுபவமாகவே இங்கு பார்க்கப்படுவதுதான் பிரச்சினையே. விமர்சனங்களைக்கண்டு அஞ்சி நின்றுவிட்டால் ஒருபோதும் நம்மால் முன்னோக்கி செல்லவே இயலாது. பாதை கடினமாக இருக்கிறது என்பதற்காக பயணத்தை ஒத்திவைக்க முடியுமா? வழியில் கிடக்கும் முட்களைக் கடந்து முன்னோக்கி நகர்வதில்தானே வெற்றியிருக்கிறது எனக் கூறுகிறார்.

எழுத்துக்கள் வாசிக்கப்படும் காலமெல்லாம் எழுதியவன் வாழ்ந்து கொண்டிருக்கிறான் என்பதற்கமைய எழுத்துக்கள்தான் இன்றைய நம் உணர்வுகள், கனவுகள், நம்பிக்கைகள்,கோட்பாடுகள் என ஏதோவொன்றை என்றோ ஒரு காலத்தில் எவனோ ஒருவனுக்கு கடத்தக்கூடும். எழுதுவதென்பது ஒருபோதும் வீண் வேலையல்ல. அது சிலரின் வாழ்வுக்கான ஒரு அர்த்தமாக இருக்கிறது எனக் கூறுகிறார்.

மேலும் இலக்கியத்துறையில் கவிதைகள் என்பதுடன் மட்டும் நின்றுவிடாது நூல் விமர்சனம், சம கால கட்டுரைகள் என்பனவற்றிலும் தனக்கென ஒரு தனி இடத்தினைப் பிடிக்க வேண்டும் என்பதே இவர் நோக்கம் எனக் கூறுகிறார். இறைவனின் நாட்டத்துடன் காலமும் நேரமும் கைகூட வேண்டும் என கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்திற்கும் தனது பதில்களை வழங்கியுள்ளார்.

**மஜினா உமறு லெவ்வை**
**மாவடிப்பள்ளி.**

# நிரோஜினி ரொபட்டின் காட்டுகுயில் நூல்











பவதாரணி ராஜசிங்கம், ப்ரியா வின்சென்ட் ஆகியோரின் அனுசரணையில் 17.01.2022 அன்று தமிழ் சங்கம் சங்கரம்பிள்ளை மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நூலின் முதல் பிரதியை திருமதி ஜூடி பால்ராஜ் (ஆசிரியர்) இடம் இருந்து Dr.வஜ்னா ஹனிபா (அவுஸ்திரேலியா கலை இலக்கியப் பேரவை) பெற்றுக்கொண்டர்


இங்கு Dr. வஜ்னா ஹனிபா (பிரதம விருந்தினார்) பிரதம விருந்தினர் உரையும் நடனக் கலைஞர் அபிராமி நற்குணம் ஆய்வுரையும் எல்றோய் அமலதாஸ் ( சிரேஷ்ட ஊடகவியலாளர்) சிறப்பு உரையும் சியா உல் ஹசன் ( சிரேஷ்ட ஊடகவியலாளர்) கருத்துரையும் நூலின் ஆசிரியை நிரோஜினி ரொபட் ஏற்புரையும் நிகழ்த்தினார்கள்.

Dr. வஜ்னா ஹனிபா (பிரதம விருந்தினார்), திருமதி ஜூடி பால்ராஜ் (ஆசிரியர்),. எல்றோய் அமலதாஸ் ( சிரேஷ்ட ஊடகவியலாளர்), சியா உல் ஹசன் ( சிரேஷ்ட ஊடகவியலாளர்) சிறப்பு விருந்தினர் விஷ்ணுராஜ் ஜெயராஜ் ( கொழும்பு மாநகரசபை உறுப்பினார்), காயத்ரி விக்ரமசிங்க ( கொழும்பு மாநகரசபை உறுப்பினார்) ஆகியோர் அதிதிகளாக கலந்து கொண்டார்கள். ரேடியோ பழசு குழுவினார்களும் இதில் கலந்துகொணடார்கள்

## எண்களை இணைத்து நிறம் தீட்டுங்கள்




## யானையின் உறுப்புக்களை பெயரிடுங்கள்





## வழிகாட்டுங்கள்



## தொடர்புபடுத்துங்கள்



## 05 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



# கைத்தறி ஆடை உற்பத்தித் துறை அழிந்து விடாமல் பாதுகாத்து முன்னேற்றுவது சவால் மிக்கது

## இளைய தலைமுறை உற்பத்தியாளராக மருதமுனை பதுறுஸ்மான் பஹத்ஸமான்

**மருதமுனையில் கைத்தறி ஆடை உற்பத்தி தொழில் துறை பல நூற்றாண்டு காலம் பழைமை வாய்ந்ததாகும். பருத்திப் பஞ்சை நூலாக நூற்று மரப்பட்டைகளை ஊறவைத்து அதில் நிறம் தீட்டி சூத்திரத்தில் பாவோடி குழித்தறியில் சாரம், பட்டுச்சாரி, கம்பாயம், வேஸ்டி, கைக்குட்டை, சால்வை போன்ற ஆடைகளை உற்பத்தி செய்த வரலாறு மருதமுனைக் கிராமத்திற்கு உண்டு. இதை அடியொட்டி இன்று வரை இந்த கைத்தறி உட்பத்தித் தொழில்துறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.**

அது மாத்திரமன்றி கிழக்கு மாகாணத்தில் தமிழ், முஸ்லிம் மக்களின் இன நல்லுறவுக்கு மருதமுனை கைத்தறி நெசவுத்தொழில்துறை பெரும் பங்காற்றி வருகின்றது. தமிழ் மக்களும், முஸ்லிம் மக்களும் இரண்டறக் கலந்து தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் மருதமுனைக்கு வந்து நெசவுத் தொழிலைப்பயின்று அதில் வருமானம் பெற்று வருகின்றனர். இருக்கின்ற போதிலும் அவர்களிடமும் ஆர்வம் குறைந்து வருகின்றது.

தற்பொழுது கல்லாறு,களுவாஞ்சிக்குடி,களுதாவளை, தேத்தாத்தீவு, கொக்கொட்டிச் சோலை உள்ளிட்ட பல கிராமங்களிலும் உள்ள இளைஞர், யுவதிகள் இந்தத்தொழிலை அவர்களின் கிராமங்களிலே செய்து வருகின்றனர். பயங்கரவாத காலகட்டத்தில் தமிழ்மக்களைப் பாதுகாப்பதில் இந்த கைத்தறி நெசவுத் தொழில் துறையுடன் மருதமுனை மக்களும் பெரும் பங்காற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த வரலாற்றுப் பின்னணியில் பலர் கைத்தறி உற்பத்தியில் பல



சாதனைகளைச் செய்து கைத்தறி ஆடை உற்பத்தியை மேம்படச்செய்து பலர் வாழ்ந்து மறைந்துள்ளனர். இவர்களை அடியொட்டி இன்று வரை இத்தொழிலை பலர் செய்து வருகின்றனர். இருந்த போதிலும் குறிப்பிட்ட ஒரு சிலர் மட்டுமே புது மெருகுடன் வித்தியாசமான சிந்தனையில் உற்பத்திகளைச் செய்து வருகின்றனர்.

இந்த வரிசையில் இளைய தலைமுறை உற்பத்தியாளராக மருதமுனை பதுறுஸ்மான் பஹத்ஸமான் தன்னை ஆழமாகத் தடம்பதித்து வருகின்றார். இவரது தந்தையின் தந்தை, இவரது தந்தை என 1931ஆம் ஆண்டு தொடங்கி இன்றுவரை பரம்பரை பரம்பரையாக இந்த கைத்தறி நெசவுத் தொழில் துறையை மிகவும் சிறப்பாகச் செய்து வந்திருக்கின்றனர். இதை அடியொட்டி பதுறுஸ்மான் பஹத்ஸமான் இத்தொழிலை மிகவும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றார்.

இதன் பின்னணியில் பதுறுஸ்மான் பஹத்ஸமான் இன்றைய நவீனத்திற்கேற்ப ஆடை உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தி சந்தைக்கு ஏற்றவகையில் வித்தியாசமாக தரம்மிக்கதாக உற்பத்தியில் அதிக கவனம் செலுத்தி நுகர்வோர் விரும்பும் வகையில் சாரம். சாரி, சேட், சல்வார்,லுங்கி, கைப்பை, சோள் மற்றும் துணிவகைகள் என பல உற்பத்திகளைப் பெருக்கிவருகின்றார்.

இவர் 1982.12.10ஆம் திகதி மருதமுனையில் பிறந்தவர்.



பதுறுஸ்மான், சித்தி மர்ஜானா தம்பதி இவரது பெற்றோராவர். மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரி தேசிய பாடசாலையின் பழைய மாணவராவார். இவர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் விரிவுரையாளராக கடந்த எட்டு வருடங்கள் கடமையாற்றியுள்ளார்.

மேலும் தேசிய பயிலுனர் கைத்தொழில்; பயிற்ச்சி அதிகார சபையில் வருகைதரு விரிவுரையாளராகவும்,இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபையிலும் வருகைதரு விரிவுரையாளராகவும், கடமையாற்றியுள்ளார்.அத்துடன் ஹோட்டல் முகாமைத்துவப் பட்டப்படிபையும், கலைத் துறையில் பட்டப்படிப்பையும் நிறைவு செய்துள்ளார். அத்துடன் ஐந்து நட்சத்திர ஹோட்டல்களான கொழும்பு தாஜ்சமுத்திரா, கொழும் ஹில்டன் ஆகிய பிரபல்லியமிக்க ஹோட்டல்களிலும் கடமையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரது தொழில் துறைக்காக பல சான்றிதழ்களையும், விருதுகளையும் இவர் பெற்றுள்ளார் இந்தத் தகைமைகளோடு இந்த கைத்தறி ஆடை உற்பத்தித் தொழிலை மிகவும் சிறப்பாகச் செய்து வருகின்றார்.இவரது தொழில் நிலையங்கள் மருதமுனை, பாலமுனை,மத்திய முகாம், கொளணி ஆகிய இடங்களில் இயங்கிவருகின்றது. இவர் சிரித்த முகத்தடன் எல்லோருடன் மிகவும் அன்பாகவும், பண்பாகவும் பழகுகின்ற தன்மை கொண்ட துடிப்பான இளைஞராவார்.

கிழக்கு மாகாண கைத்தொழில் அமைச்சின் வழிகாட்டலில் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண தொழில்; முயற்சியாளர்களுக்கான விருது வழங்கிய நிகழ்வு அண்மையில் சாய்ந்தமருது லீமெரிடியன் மண்டபத்தில் நடைபெற்றது. இதன் போதே பதுறுஸ்மான் பஹத்ஸமான் இந்த விருதைப் பெற்றார்.

இவரது பரம்பரையாக முப்பாட்டன் அப்துல் காதர் அஹமது லெப்பை, பாட்டன் அஹமது லெப்பை அபுபக்கர், தந்தை அபுபக்கர் பதுறுஸ்மான் ஆகியோரை அடியொட்டி பதுறுஸ்மான் பஹத்ஸமான் தனது முன்னோர் பரம்பரை பரம்பரையாக செய்த பணியை இவர் செய்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

பலர் இத்தொழிலை கைவிட்டுவருகின்ற போதிலும் பஹத்ஸமான் துணிச்சலுடன் பல சவால்களை எதிர்கொண்டு இத்தொழிலை முன்னெடுத்து வருகின்றார். நாட்டில் ஏற்படுகின்ற அசாதாரண சூழ்நிலைகள் காரணமாகவும், இயற்கை அனர்த்தம் மற்றும் கொரோனா காரணமாகவும் இந்த கைத்தறி தொழில் துறை சற்று வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் பல சவால்களுக்கு மத்தியில் இந்த கைத்தறி தொழில் துறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







தொடர்ச்சி 13 பக்கம்



**கேள்வி:எத்தனை வருடங்களாக இந்த கைத்தறித் தொழிலைச் செய்து வருகின்றீர்கள். ?**

**பதில்:** எனது தந்தையின் தந்தை, எனது தந்தை ஆகியோருக்குப் பின்னர்; கடந்த ஏழுவருடங்களாக நான் இந்த கைத்தறித் தொழிலைச் செய்து வருகின்றேன்.

**கேள்வி:எத்தனை தறிகளை வைத்து இயக்குகின்றீர்கள் ?**

**பதில்:** நாற்பத்தைந்து தறிகளை வைத்து இயக்கிவருகின்றேன். அறுபதுக்கும் மேற்பட்டவர்கள் பணிபுரிகின்றனர்.

**கேள்வி: இப்போது நெசவாளர்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக சொல்லப்படுகின்றது இது பற்றிச் சொல்லுங்கள்.?**

**பதில்:** கடந்த காலங்களில் மருதமுனை பிரதேசத்தில் எங்கு பார்த்தாலும் கைத்தறிச் சத்தம்தான் கேட்கும். குடும்பத்துடன் தாய், தந்தை, கணவன். மனைவி பிள்ளைகள் என எல்லோரும் இணைந்து இந்த தொழிலைச் செய்து வந்தனர். ஆனால் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக அனேகமானவர்கள் செல்லத் தொடங்கியதும் நெசவுத் தொழிலாளர்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுவிட்டது. தற்பொழுது இருக்கின்ற நெசவாளர்களுக்கு அதிக சம்பளம். சலுகைகளைக் கொடுத்துத்தான் செய்ய வேண்டி நிலை இருக்கின்றது.



அத்துடன் கடந்த 2004ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியின் போது அனுபவமுள்ள பல நெசவாளர்கள் இறந்து விட்டார்கள். இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மருதமுனையைப் பொறுத்தவரையில் இளைய தலைமுறையினர் கல்வியின் பக்கம் திரும்பியுள்ளதால் இந்தத் தொழில் மீது உள்ள ஆர்வம் குறைந்து விட்டது. அதுவும் இன்னும் ஒரு பாதிப்பாக மாறியிருக்கின்றது.இருக்கின்ற போதிலும் மருதமுனையின் பாரம்பரிய தொழிலை விட்டுவிடாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் இளைய தலைமுறையினருக்கு இருக்க வேண்டும். இலையென்றால் மருதமுனையின் பாரம்பரிய தொழிலை இழக்க வேண்டிய நிலை ஏற்படும்.

**கேள்வி: எதிர்காலத்திலே நெசவாளர்களுக்கு இன்னும் பெரும் தட்டுப்பாடு ஏற்படும் நிலை வந்தால் மாற்று வழி என்ன இருக்கிறது.?**

**பதில்:** நெசவுத் தொழிலுக்கு பெரும் பாதிப்பு ஏற்படலாம். அவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் மின்தறியைத்தான் நாடவேண்டிய நிலை ஏற்படும். இது ஒரு சவாலாகவே அமையும். இதற்கு பெரும் செலவிலான மின் இயந்திரங்கள் தேவைப்படும் மின் கட்டணம் அதிகரிக்கும் சேவைக்கட்டணம் என பல வழிகளிலும் செலவு அதிகரிக்கும் இதனால் உற்பத்திகளில் இலாபமீட்டுவது கடினமாகும்.





**கேள்வி:இப்போது உங்களுடைய உற்பத்திப்பொருட்களுக்கு சந்தை வாய்ப்பு எப்படி இருக்கின்றது.?**

**பதில்:** சந்தைவாய்ப்பு சிறப்பாக இருக்கின்றது. எமது உற்பத்திப்பொருட்கள் இலங்கையின் எல்லாப்பகுதிகளிலும் விற்பனை செய்யப்பட்டுவருகின்றது. எங்களைத் தேடிவந்தும் எங்களது உற்பத்திகளை வாங்கிச் செல்கின்றார்கள். அத்துடன் ஒன்லைன் முலமாகவும் விற்பனை சேவைகள் இடம்பெறுகின்றது.

**கேள்வி:உங்களுடைய எதிர்கால இலக்கு என்ன ?**

**பதில்:** மருதமுனையின்; பண்டைய கால பரம்பரைத் தொழிலாக இருந்து வருகின்ற இந்த தொழிலை அழிந்து விடாமல் பாதுகாக்க வேண்டும் என்பதே எனது அவாவாக இருக்கின்றது.அதற்கு ஏற்றவாறு காலத்திற்குக் காலம் நவீனத்திற்கு ஏற்ப உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதே எனது இலக்காகும்.

எனக்குபல வழிகாட்டல்களைச் செய்தவர். கண்டியைச் சேர்ந்தபிரபலவர்த்தகர் அப்துல் லத்தீப் இஸ்மாலெப்பைஅவர்களைக் குறிப்பிடமுடியும்.எனதுதாய்.தந்தை. மனைவிஉறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கு அடுத்தபடியாக எனக்கு நல்ல ஆலோசனைகளை வழங்கியதுடன் வாடிக்கையாளர்களை இணைதுத் தந்துஎனக்குவழிகாட்டியவர். அத்தடன் உற்பத்திகளை எவ்வாறுசெய்ய வேண்டும் என்கின்ற வழிகாட்டல்களைச் செய்தவர் எப்போதும் என்னை அன்புடன் மகன் என்றுஅழைக்கின்ற நல்லபண்பைக் கொண்டவர் எனக்குபண உதவிதேவைப்படும் போதெல்லாம் உதவிசெய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.இவருடன் எனதுபெற்றோர்களும் எனக்கு நல்லஆலோசனைகயையும்,ஊக்குவிப்புக்களையும் செய்துவருகின்றார்கள். அத்துடன் எனதுஉற்பத்திகளை கொள்வனவு செய்கின்ற வாடிக்கையாளர்களையும் நன்றிக்குரியவர்களாகநான் பார்க்கின்றேன்.







**பி.எம்.எம்.ஏ.காதர்**
**(மருதமுனை தினகரன் நிருபர்)**

# மூக்கு அழகும் முக்கியமே

**சரும வறட்சி பிரச்சினையால் நிறைய பேர் அவதிக்குள்ளாவார்கள். சிலரோ எண்ணெய் பசை தன்மை கொண்ட சருமத்தால் சிரமப்படுவார்கள். பருவநிலை மாற்றத்திற்கு ஏற்ப உடலில் நீர்ச்சத்தை தக்கவைத்துக்கொள்ளாததே அதற்கு காரணமாகும். சருமம் எப்போதும்போல் பொலிவுடன் காட்சியளிப்பதற்கு செய்ய வேண்டிய வழிமுறைகள்:**

வறண்ட சரும பிரச்சினை கொண்டவர்கள் சருமத்தில் ஈரப்பதத்தை தக்க வைத்துக்கொள்வது அவசியம். அதற்கு மாய்ச்சுரேஸர்களை பயன்படுத்தலாம். அப்படி பயன்படுத்தியும் சருமத்தில் மாற்றம் ஏற்படவில்லை என்றால் உடலில் நீர்ச்சத்தை அதிகரிக்க வேண்டியது அவசியம். போதுமான அளவு தண்ணீர் பருகி வர வேண்டும். அது சரும ஆரோக்கியத்திற்கு அவசியம். பகல் வேளையில் சருமம் எண்ணெய் பசை தன்மையோ, ஈரப்பதமான தன்மையோ கொண்டிருந்தால் மாய்ச்சுரேஸர் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும்.



குறைந்த ஈரப்பதம் காரணமாக சருமம் வறண்டு பொலிவின்றி காணப்படும். ஈரப்பதத்தை தக்கவைப்பதற்கு ஏற்ற கிரீம்களை பயன்படுத்தலாம். எண்ணெய்யை பயன்படுத்துவதும் சருமத்திற்கு நல்லது. சருமத்திற்கு நறுமணம் சேர்க்கும் எண்ணெய் வகைகளை உபயோகப்படுத்தலாம். முதலில் சருமத்திற்கு உகந்த தேங்காய் எண்ணெய், ஆலிவ் போன்றவைகளை தடவிவிட்டு அதன்பிறகு நறுமண எண்ணெய்யைப் பயன்படுத்தலாம்.

வெயிலின் தாக்கம் குறைய தொடங்கியதுமே நிறைய பேர் சன்ஸ்கிரீமை தவிர்த்து விடுகிறார்கள். கோடை காலங்களில் மட்டும்தான் சன்ஸ்கிரீமை உபயோகப்படுத்த வேண்டும் என்றில்லை. சருமத்தின் ஆரோக்கியம் காக்க எல்லா பருவ காலத்திலும் போதுமான அளவு சன்ஸ்கிரீமை உபயோகித்து வர வேண்டும்.

பருவ காலத்தில் உணவு விஷயத்திலும் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். ஆன்டி ஆக்சிடெண்டுகள் நிறைந்த சத்தான உணவுகளை அதிகம் சாப்பிட வேண்டும். அவை சருமம் பாதிப்புக்குள்ளாமல் காக்க உதவும். சருமத்திற்கு இயற்கையான பளபளப்பையும் ஏற்படுத்திக்கொடுக்கும். மழைக் காலத்தில் பழங்களையும் அதிகம் சாப்பிட வேண்டும். அவை சருமத்திற்கு தேவையான ஊட்டச்சத்துக்களை வழங்கும்.

# தமிழ்ப் பெண்களின் பாரம்பரியமாக சருமத்துக்கு மஞ்சள்

தமிழக கலாசாரத்தில் மஞ்சளின் பங்கு அளப்பரியது. தமிழ்ப் பெண்கள் பாரம்பரியமாக சருமத்துக்கு மஞ்சள் தேய்த்து குளிக்கும் பழக்கத்தை பின்பற்றி வருகிறார்கள். மஞ்சள் மிகச்சிறந்த கிருமி நாசினி. மஞ்சள் கிழங்கு தனித்துவமான நறுமணமும், வெப்பத் தன்மையும் கொண்டது.

ஏறுகொடியாக வளரும் மஞ்சள், இந்தியாவில் மேற்குத் தொடர்ச்சி மலைக் காடுகளில் அதிக அளவில் விளைகிறது. இதற்கு 'காலேயகம், தாறவி' என்று வேறு பெயர்களும் உள்ளது. இந்திய இயற்கை மருத்துவத்தில் மஞ்சளுக்கென தனி இடம் உள்ளது.

காரணம், மஞ்சளில் உள்ள எண்ணற்ற மருத்துவ குணங்கள். முகத்திற்குப் போடும் மஞ்சளில் முட்டா மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், விரலி மஞ்சள் (கறி மஞ்சள்) என மூன்று வகைகள் உள்ளன.

மஞ்சள் பூசி குளிப்பது மருத்துவ முறையில் ஒன்றாகவும் உள்ளது. இயற்கையான முறையில் விளைவித்த நாட்டு மஞ்சளை நன்றாக அரைத்து முகத்தில் பூசலாம். அல்லது மஞ்சளுடன் பயத்தம் மாவு, ஆவாரம் பூ பொடி, பூலான் கிழங்கு பொடி, கற்றாழை ஜெல் போன்றவற்றைக் கலந்தும் பூசலாம்.

ஆனால், மஞ்சள் கிழங்கை உரசி, சருமத்தில் தேய்த்துக் குளிப்பதே சரியான முறை. முகத்தில் தொடங்கி பாதம் வரை மஞ்சள் பூசி குளிக்கலாம்.

மஞ்சள் பூசி குளிப்பதால், சருமம் பளபளக்கும். முகத்தில் தேவையற்ற முடிகள் முளைக்காது. இளமையைத் தக்கவைக்கும். முகப்பருக்களால் ஏற்படும் கருமை நீங்கும். சருமம் எளிதில் சோர்வடையாமல், நீண்ட நேரம் புத்துணர்வுடன் இருக்க உதவும் என அறிவியல் ஆய்வுகளும் தெரிவிக்கின்றன.

மஞ்சளுடன் வேப்பிலையை சேர்த்து அரைத்து, சருமத்தில் தேய்த்துக் குளித்து வந்தால் அம்மை நோயினால் ஏற்பட்ட கொப்புளங்கள், சேற்றுப்புண், அழற்சி, அடிபட்ட காயங்கள், கட்டிகள் போன்ற சரும பிரச்சினைகள் குணமாகும். சரும பிரச்சினைகளுக்காக மஞ்சளைப் பயன்படுத்தும்போது, பெரும்பாலும் இரவில் பூசுவது நல்ல பலன் தரும்.

நாகரிக மாற்றத்தால் இன்றைய இளம் பெண்கள் மஞ்சள் பூசுவதைத் தவிர்த்து, செயற்கை ரசாயனங்கள் கலந்த கிரீம்களை முகத்தில் பூசுகிறார்கள். இவற்றால் நாளடைவில் முகம் பொலிவிழந்து, சருமம் வறண்டு போகும். மேலும், இது சிலருக்கு தோல் பிரச்சினைகளைக் கூட ஏற்படுத்தலாம்.

மஞ்சளை நேரடியாக பூசுவதற்கு விருப்பமில்லாதவர்கள் கற்றாழை ஜெல் அல்லது சந்தனத்துடன் சேர்த்து நன்றாகக் குழைத்து பேஸ்பேக் போன்று பயன்படுத்தலாம்.



முல்தானிமெட்டி பொடி, மஞ்சள், சந்தனம் ஆகியவற்றுடன் தண்ணீர் அல்லது பன்னீர் கலந்து பேஸ்பேக்காக தடவி, 30 நிமிடங்கள் கழித்து கழுவலாம். இதன் மூலம் முகம் பளபளப்புடன் புத்துணர்வாக இருக்கும்.

## மஜ்லிஸ்

முல்லை முஸ்ரிபா

# அல்லாமா உவைஸ்

### நூற்றாண்டு (1922 – 2022)

**அல்லாமா ம.மு. உவைஸ் நாமம் ஈழத்தின் இலக்கியத்தடத்தில் செதுக்கப்பட்டது; செழுமை பூத்தது; இஸ்லாமிய இலக்கியத்தின் மீது ஒளிபாய்ச்சியது. 1922ஆம் வருடம் ஜனவரி 15ஆம் நாள் பிறந்தவர் உவைஸ் அவர்கள். 2022 ஆம் ஆண்டுபேராசிரியர் அல்லாமா ம.ஃமூத் முஹம்மது உவைஸ் அவர்களின் நூற்றாண்டு.**

இலங்கை இலக்கியப்புலம் குறிப்பாக இஸ்லாமிய - முஸ்லிம் இலக்கியப் புலம் உவைஸின் நூற்றாண்டை எங்ஙனம் மேலெடுக்கப்போகிறது.

இரண்டாயிரத்துக்கும் அதிகமான இஸ்லாமியத் தமிழ் இலக்கிய நூல்களைத் திரட்டி ஒன்று சேர்த்த பேராசான் அல்லாமா ம.மு.உவைஸ் நூற்றாண்டு இது.

தாய்மொழி தமிழை ஆரம்பநாட்களில் தனியாக நின்று கற்றெழுந்த உவைஸ் என்பார், பின்னொரு காலத்தில் மதுரைக் காமராசர் பல்கலையில் இஸ்லாமியத் தமிழிலக்கிய இருக்கையின் முதல் பேராசிரியராக அலங்காரம் பெறுகிறார் என்பது இலங்கை மேல் மாகாணத்தில் ஹேனமுல்ல எனும் சிற்றூரில் பிறந்த உவைஸ் என்பவருக்குக் கிடைத்த உழைப்பின் மகுடமாகும்.

சுவாமி விபுலானந்தர் உவைஸிடம் “இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய ஒருகாப்பியத்தைக் குறிப்பிடுக எனக் கேட்டபோது பதிலளிக்க முடியாதுபோனது. “சீறாப்புராணம் படித்திருக்கிறீர்களா என வினவியபோது “ஆம்” என்கிறார் உவைஸ்.

“இஸ்லாமிய அடிப்படையில் தோன்றிய சிறந்த தமிழ்க் காப்பியம் சீறாப்புராணம்” என்பது உவைஸ் அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. இந்த தெரியாமையிலிருந்து உவைஸ் அவர்களின் தேடல் தொடங்குகிறது. பின்னர் இஸ்லாமியத் தமிழிலக்கிய மறுமலர்ச்சியின் மூச்சுக்காற்றாக மாறுகிறார். அவரது ஆளுமையும் இலக்கிய ஈடுபாடும் விருட்ஷிக்கிறது.

எம்.எம்.உவைஸ் 1949இல் கலைமாணிப்பட்டம் பெறுகிறார். பகுதிநிலை விரிவுரையாளராக மாறுகிறார். 1951இல் முதுமாணியாகிறார். முஸ்லிம்கள் தமிழுக்காற்றிய தொண்டு தொடர்பில் ஆய்வு தொடங்குகிறார். அவரால் சுமார் இருநூறு நூல்கள் சேகரிக்க முடிகிறது. தேடலும் இலக்கிய அறிவுப் பரப்பும் விரிகிறது. 1953இல் முதல் படைப்பு வெளிவருகிறது.

ஸாஹிராவில் ஆசிரியராகிறார். இதேகாலத்தில் இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் பகுதி நிலைதயாரிப்பாளராகப் பணிசெய்கிறார்.தினகரனில் தொடர் கட்டுரை எழுதுகிறார். “இஸ்லாமும் இன்பத்தமிழும் நூலாகிறது. உலகத்தமிழ் மற்றும் இஸ்லாமிய இலக்கிய ஆய்வுலகுகளிலும், மாநாடுகளிலும் பங்கெடுக்கிறார்.



1957இல் பரீட்சைத் திணைக்கள மொழிபெயர்ப்பாளர். 1959இல் வித்தியோதயப் பல்கலையில் இணைகிறார்.1979இல் நான்காவது சர்வதேச இஸ்லாமியத் தமிழ் இலக்கிய மாநாட்டை கொழும்பில் முன்னோடியாக நின்று நடத்துகிறார்.

1979 ஒக்டோபர் 15ஆம் நாள் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத்தில் இஸ்லாமியத் தமிழ் இலக்கியப் பேராசிரியராக நியமனம் பெறுகிறார்.

ஹேனமுல்லயில் ஒரு மூலையில் பிறந்த உவைஸ் என்பார் உலகளவில் இஸ்லாமிய இலக்கியம் வளர்த்த பெருமகனாக மாறுகிறார். இஸ்லாமியத் தமிழிலக்கிய வரலாறு எழுதுகிறார்.

ஐம்பதுக்கும் மேற்பட்ட பனுவல்களைத் தருகிறார். பதிப்பாசிரியராகிறார். மொழிபெயர்ப்பு பனுவல்களைப் படைக்கிறார். 1964 இல் மார்ட்டின் விக்கிரமசிங்கவின் “கம்பெரலியவை “கிராமப்பிறழ்வு” எனத் தமிழுக்குத் தருகிறார்.

இத்துணை ஆளுமைத் தடங்களில் பயணித்தவர் அல்லாமா ம.மு. உவைஸ் அவர்கள். 1992இல் இலங்கை அரசின் கலாசூரி கௌரவமும் 1994இல் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் ராஜாங்க அமைச்சின் “அல்லாமா பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்படுகிறார். இலங்கையின் இஸ்லாமிய இலக்கிய வடிவமாக வாழ்ந்தவர் அல்லாமா ம.மு.உவைஸ் அவர்கள்.

நாம் உவைஸ் நூற்றாண்டுக்கு வந்து சேர்ந்திருக்கிறோம். நூற்றாண்டை எவ்வாறு நினைவு கொள்ளப்போகிறோம். உவைஸ் எனும் இலக்கிய வடிவத்தை எவ்வாறெல்லாம் கொண்டாடப் போகிறோம். உவைஸ் எனும் வரலாற்றை எத்தகைய வரலாறாக இற்றைப்படுத்தப் போகிறோம்.

தென்கிழக்குப் பல்கலைக்கழகம் கடந்த பதினெட்டாம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் நடாத்திய அல்லாமா உவைஸ் நூற்றாண்டு

நினைவு நிகழ்வைத் தொடக்கமாக முன்வைப்போம்.

உவைஸ் அவர்களை முன்வைத்து அவரியங்கிய பரப்புகளை உள்ளடக்கி காத்திரமான கதையாடல்கள், பயிலரங்குகள், வெளியீடுகள், ஆய்வரங்குகள், செய்யப்படல் வேண்டும். பல்கலைக்கழகம் மற்றும் பாடசாலை மட்டத்தில் மாணவரிடையே உவைஸ் பணிகள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுவதுடன் இலக்கியத் தொடர்ச்சி குறித்த முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அவர் வானொலியில் பணியாற்றியுள்ளார். முஸ்லிம் சேவை என்ன செய்யப்போகிறது என்ற கேள்வியும் எழுகிறது. அவர் கல்விப் புலத்தில் பணிசெய்துள்ளார். பாடசாலைப் பனுவல்களில் உவைஸ் குறித்த பதிவுகள் அவரது படைப்புக்கள் சேர்த்துக்கொள்ளப்படல் வேண்டும். அவர் மொழிபெயர்ப்பில் பணிசெய்தார். அவரெழுத்துக்களையும் நூற்றாண்டு வேலைத் திட்டங்களையும் அயல் மொழிக்கு எடுத்துச் செல்லல் வேண்டும். அவர் இஸ்லாமிய இலக்கிய வரலாறு எழுதினார். அதன் தொடர் வரலாற்றை இற்றைப்படுத்துவது எவ்வாறு. இஸ்லாமிய இலக்கியம்-முஸ்லிம் இலக்கியம் குறித்த கதையாடல்களை அல்லது எதிர் வினைகளை முன்னெடுப்பது தொடர்பிலெல்லாம் நமது வினையாற்றலைக் கட்டமைப்பதனூடாக உவைஸ் எனும் இஸ்லாமிய இலக்கிய வடிவத்தின் நூற்றாண்டைக் கொண்டாடுவோம்.

## ஔவன் கவிதை


அலைவு; வரைவு; இருப்பு
எழுத முடியாச் சோகத்தின் பெருந்துயரை
முல்லைச்சிதையில் பூசிற்றுக் கறை
துயரொரு கனம்
அழுக்கேறிய விரல்கள் படர்ந்த வனந்தோறும்
பெருக்கெடுத்து நின்றதன் நிழல்
நிழலிலும் இத்துணை கொதிப்பு
நிழலிலும் இத்துணை பிரவாகிப்பு

வரைவு கடந்த தவிப்பில் நின்றாள் பெருந் தலைவி
கார்ப் பொழுதின் மாலை காத்திருப்பு ரணம்
ஐநூற்றோராவது தடவையும் சிலிர்த்தது அறு கோட்டுப்பறை

ரீங்கரித்த வண்டின் மென் சிறகசைவில்
முல்லை வெண்முகை அவிழ்ந்திற்று
வனமெழு உணர்வின் சிலிர்ப்பில்
கருங்காலியும் வெந்திற்று
கொன்றையும் அவிந்திற்று

குறுஞ்சுனையில் நனைந்திருந்த நினைபொழுதொன்றில்
ஒருவழித்தணத்தவன் அலைகிறான்
காலம் கடந்த அலைவு
அவளுள் தொலைகிறான்
காலம் மீறிய தொலைவு
அவள் தனித்தழைகிறாள் மீள்கிறாள்
காட்டாற்றில் மிதக்கிறாள்
பெருங் கார் பொழுதொன்றிற்காகக் காத்திருக்கிறாள்

## டொமினிக் ஜீவா படைப்புலகம்



டொமினிக் ஜீவாவின் படைப்புலகம் சாதாரணமானதல்ல. அது உணர்வு பூத்த நுண் இழைகளாலானது. ஐந்து தசாப்தங்களாகச் சிந்தப்பட்ட இரத்தத்தாலும் வியர்வையாலும் இலட்சியத்தாலும் கட்டமைக்கப்பட்டது ஜீவா என்கிற சாதாரண இலக்கிய ஊழியரின் மகா உழைப்பு அது.

ஈழத்து இலக்கியப் புலத்தில் ஆழமாய் வேரூன்றி அகலித்தெழுந்த விருட்ஷமொன்றின் நிழல் குறித்தும் பேசப்படுகிறது. ஜீவா அமரத்துவமடைந்த பின் அவர் குறித்து உலகின் பல திசைகளிலிருந்தும் நினைவேந்தல்கள் நிகழ்ந்தன. பனுவல்கள் பலவும் வெளிக்கொணரப்பட்டன. ஜீவா படைப்புக்கள் குறித்தும், இலக்கிய அரசியல் குறித்தும், ஒருகட்ட ஈழத்து சமூக அரசியல் இனத்துவ சாதித்துவப் பின்புலத்தில் கலகக்குரலாக ஜீவா வெளிப்பட்டமை குறித்தும் நுண் பார்வைகள் பதிவாகி வருகின்றன.

உலகத் தமிழ் இதழியல் வரலாற்றில் மல்லிகை அரை நூற்றாண்டாய் நின்றிலங்கிய பாங்கு கூர்ந்து பார்க்கப்படுகிறது. மல்லிகைப்பந்தல் வாசம் வீசிய காலத்தில் பெறுமானம் குறித்தும் கதையாளப்படுகிறது.

இந்தப் பின்புலத்தில் டொமினிக் ஜீவா படைப்புலகம் எனும் பெருந்தலைப்பின் கீழ் நினைவு மீட்டல் நிகழ்வுகள் ஒழுங்காகியுள்ளமை அவதானத்துக்குரியது.

பிம்பங்கள் வழியே, இணையவழி, இலக்கியவெளி உரையாடல் தொடர்கள் பலவற்றை நிகழ்த்தியுள்ளது. ஜீவாவின் சிறுகதைகளை முன் வைத்து இலக்கிய ஆளுமைகள் பலரும் உரையாற்றியிருந்தனர். அவற்றின் தொகுப்பு இறுவட்டு வடிவில் வருகிறது.

2022 ஆம் ஆண்டிற்கான மல்லிகை ஜீவா விருது ஈழத்துச் சிறுகதை ஆளுமை க.கோபாலப்பிள்ளைக்குக் கிடைக்கிறது. நினைவேந்தல் நினைவுப் பேருரையை ‘ஈழத்துப் புனைகதைகளும் விழிப்பு நிலை மக்களும்‘ எனும் தலைப்பில் எஸ். வன்னியர்குலம் நிகழ்த்துகிறார். டொமினிக் ஜீவாவுடனான நாற்பதாண்டு கால இலக்கிய உறவு குறித்து மேமன் கவி எழுதிய ‘டொமினிக் ஜீவாவும் நானும்‘ எனும் நூல் வெளியீடு காண்கிறது. இம்மாதம் 28ஆம் திகதி டொமினிக் ஜீவா படைப்புலகம் குறித்து இணையவழி நிகழ்வு இடம்பெறுகிறது. டொமினிக் ஜீவா படைப்புலகம் மேலும் விரிவாகவும், ஆழமாகவும் பேசப்பட வேண்டியது. ஜீவா என்ற நூற்றாண்டு மனிதனின் எழுத்தியக்கச் செயற்பாடு சாதாரணமானதல்ல.

# ஜல்லிக்கட்டு



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 ஜனவரி மாதம் 23ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.